# வேதாகம சொல் அகராதி

புரியாத வார்த்தைகள் – புரியும் அர்த்தங்கள்



பேராசிரியர் J.D. பால் ஜெயராஜ்

# வேதாகம சொல்லகராதி

புரியாத வார்த்தைகள் ..... புரியும் அர்த்தங்கள்

எழுதியவர்:

**பேராசிரியர். ஜே.டி. பால் ஜெயராஜ்**

பதிப்பாசிரியர்

**V. வீர சுவாமிதாஸ்**

வெளியீடு :

**வேதாகம நண்பன்**

எண்: 9/3, வீரசாமி 2வது தெரு, அயனாவரம், சென்னை - 23.

தொலைபேசி : 044-26471115, 98841 20603, 94454 15147

biblefriendministry@gmail.com/ www.bible2bible.com

நூல் பெயர் வேதாகம சொல் அகராதி

ஆசிரியர் **பேராசிரியர். ஜே.டி. பால் ஜெயராஜ்**

பதிப்பாசிரியர் V. வீர சுவாமிதாஸ்

பதிப்பு முதல் பதிப்பு, 2014

வெளியீடு **வேதாகம நண்பன்**

எண்.9/3, வீரசாமி 2வது தெரு,

அயனாவரம், சென்னை - 23.

போன் : 044-26471115, 98841 20603, 94454 15147

bibelfriendministry@gmail.com

நன்கொடை : ரூ. 150/-

அச்சிட்டோர் : யுனைட்டட் பைண்ட் கிராபிக்ஸ்
சென்னை

# முகவுரை

வேதத்தில் (கர்த்தரின் சட்டத்தில்) ஒரு எழுத்தின் உருப்பும் (சிறிய பகுதியும்) அவமாய்ப் போகக்கூடாது என்போர் வேதத்தை ஆர்வத்துடன் ஆதிமுதல் அந்தம்வரை பலமுறை வாசிக்கிறார்கள். ஆனால் அதை கருத்தாய் படிப்பதில்லை. மேலோட்டமாய் வாசிக்கிறார்கள். டாக்டர் பவர் மொழிபெயர்ப்பை பயன்படுத்தும் மக்கள் வேதத்தில் காணும் அதிசயங்களைக் காண இருநூறு வருடங்களுக்கு முன் அவர் உபயோகப்படுத்திய வார்த்தைகளை அறிந்துகொள்வது மிகமிக அவசியம். சில வார்த்தைகள் இப்பொழுது பழமையானதாக மாறிவிட்டன. இயற்கை சீற்றங்களால் நதிகளும் தங்கள் தடத்தை மாற்றுகின்றன. எந்த மொழியும் வருடப்போக்கில் புதியன புகுதல் என்ற மாதிரி சில மாற்றங்களைக் காணத்தான் செய்யும்.

பண்டைக்காலத் தமிழ், வாசிப்போருக்கு அறிவுக்கு எட்டாத ஒன்றாக இருக்கிறது. பாண்டி நாடு பன்னீராண்டு வற்கடம் சென்றது. (பஞ்சத்தால் பாதிக்கப்பட்டது) என்பதை விளங்கிக் கொள்ளுபவர்கள் ஒரு சிலரே. எழுத்துக்கள் கூட மாற்றம் காண்கின்றன. ஜீகன் பால்கு(சீகன் பால்கு) அவர்களின் வேதாகமத்தை வாசித்துப் பார்த்தால் எழுத்துக்களின் வித்தியாசத்தைக் காணலாம். காலப்போக்கில் சீர்திருத்தவாதிகளால் தமிழ் எழுத்து மாற்றம் கண்டது. மாற்றம் கண்டும் வருகின்றது. 'வெள்ளாட்டிகள்' என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம்?, 'காய்மகாரம்' என்றால் என்ன அர்த்தம்? என்று கேட்டால் வேதத்தைக் காலாகாலமாக வாசிக்கும் மக்களுக்கு சொல்ல இயலாது. இப்படி நூற்றுக்கணக்கான வார்த்தைகள் காணப்படுகின்றன. இவைகளின் அர்த்தத்தைப் புரிந்து வாசித்தால் எவ்வளவு பயனுள்ளதாயிருக்கும் என்பதில் கடுகளவும் சந்தேகம் கிடையாது. இது மாத்திரமல்ல, சில சொற்றொடர்களும், வாக்கியங்களும் கலங்கடிக்கின்றன. அவை நம்மைத் தாக்க வரும் ஆயுதம் தாங்கிய வீரர்களைப்போல காணப்படுகின்றன. அவர் 'தமது தலையை எடுப்பார்' என்றால் என்ன அர்த்தம்?, 'சத்தியத்தை மேய்ந்துகொள்' என்றால் என்ன அர்த்தம்?, 'கடல் வனாந்தரத்தின் பாரம்' என்றால் என்ன அர்த்தம்?. (கடற்கரையில் உள்ள பாலைநிலத்தில் இருக்கும் பாபிலோனைப் பற்றிய கர்த்தரின் செய்தி. பாரத்தைப் பளு என்று தவறாகப் புரிந்து கொண்டு வாசிப்பவர்களும் பலர். இப்படிப்பட்ட வார்த்தைகளின் வசனங்களின் அர்த்தம் தெரியாமலே வாசிப்பார்கள்.

தமிழ் ஆர்வலர் வடமொழி எழுத்துக்களைக் களையவேண்டும், சமஸ்கிருதம் கூடாது, சுத்தத்தமிழ், செந்தமிழ்தான் பேசவேண்டும், எழுத வேண்டும் என்பர். 'ஷ', 'ஸ', 'ஜ' போன்ற எழுத்துக்களைத் தவிர்ப்பார்கள். நாம் வாசிக்கும் வேதத்தில் இப்படிப்பட்ட எழுத்துக்களைக் காணமுடியும். 'ஹிந்தி' இல்லை. ஆனால் ஹிந்தி வார்த்தைகளும் காணப்படுகின்றன. 'சாவதானமாயிருங்கள்' (சாவ்தான் – கவனம்) 'சயன அறை' (படுக்கை அறை) போன்ற வார்த்தைகள் காணப்படுகின்றன. ரயில் வண்டிகளில் முன்பதிவு செய்த படுக்கைவசதி கொண்ட பெட்டிகளில் சயன அறை என்று இந்தியில் எழுதியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வார்த்தைகள் வேதத்தை வாசிப்பவர்களைக் கலக்கும். ஆனால் மக்கள் கவலைப்படாமல், புரிந்து கொள்ளாமல், வாசித்து மகிழ்ச்சி அடைவதில் கில்லாடிகள். விளையாட்டு வல்லுனர்கள் இந்தியில் கில்லாடிகள் என்று அழைக்கப்படுகின்றனர். உருமால்கள் என்ற வார்த்தையை அப்போஸ்தலர் நடபடிகளில் காண்கிறோம். இந்தியில் 'ரூமால்' (மேல் அங்கி) என்ற வார்த்தை உண்டு.

மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் இந்நூலில் இப்படிப்பட்ட பல்வேறு வார்த்தைகளுக்கு அர்த்தமும், வாக்கியங்களுக்கு விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. வேதாகமக் கல்லூரிகளில் படிப்பவர்களும் மற்றும் வேதத்தைக் கண்ணுங்கருத்துமாய்ப் படிப்பவர்களும், வேதத்தை ஆராய்பவர்களும், ஆய்வு செய்பவர்களும், பிற மொழிகளில் மொழி பெயர்ப்பவர்களும், ஏன் போதகர்களுங்கூட பயன்பெறுவார்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

**ஜே. டி. பால் ஜெயராஜ்**

# பதிப்பாசிரியர் உரை

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே" என்ற வசனத்திற்கிணங்க வேத வாக்கியங்களின் உள்ளான அர்த்தங்களை பிறர் அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் பேராசியர் ஜெ.டி. பால் ஜெயராஜ் அவர்கள் எடுத்துவரும் முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது.

நாம் பயன்படுத்தும் தமிழ் வேதாகமத்தில், தற்போது நாம் பயன்படுத்தாத அநேக வடமொழிச் சொற்களும், பழஞ்சொற்களும் இருப்பது நாம் அறிந்ததே. வேதாகமத்தின் எந்த ஒரு வார்த்தையையும், நாம் மாற்றவோ, திருத்தவோ கூடாது என்று எண்ணி அவைகளை அப்படியே கையாண்டு வந்துக் கொண்டிருக்கின்றோம். நம்மில் பலருக்கு அவ்வார்த்தைகளின் அர்த்தங்கள் என்னவென்று தெரியவில்லை, தெரிந்து கொள்ளவும் முயற்சி எடுப்பதில்லை. முயற்சி எடுப்பவர்களுக்கும் இதன் அர்த்தங்களை தெரிந்து கொள்வதற்கு சரியான வேதாகம அகராதிகள் தமிழில் இல்லை. இந்தக் குறையை நிறைவு செய்வதற்காக பேராசியர் ஜெ.டி. பால் ஜெயராஜ் அவர்கள் எளிமையான முறையில் வேதாகமத்தின் கடுமையான சொற்களையும் புரிந்துக் கொள்ளமுடியாத வார்த்தைகளையும், பெயர்களையும் அனைவரும் புரிந்து கொள்ளும் விதமாக அதன் விளக்கங்களை இந்த வேதாகம சொல் அகராதியின் வழியாக தந்திருப்பது அமிழ்தத்தை பருகியதுபோல் இருக்கிறது.

பேராசியர் ஜே.டி. பால் ஜெயராஜ் அவர்கள் மூலமாக கிறிஸ்த தமிழ் சமுதாயத்திற்கு அநேக வேதாகம விளக்க உரை புத்தகங்கள் வெளிவருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதும் வரவேற்கத்தக்கதுமாகும். வேதாக நண்பன் இலக்கியப்பணி வழியாக ஆசிரியரின் ஏசாயா விளக்கவுரை, சிறிய இறைவாக்கினர் ஒரு அறிமுகம் போன்ற புத்தகங்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. இவரின் வேதாகம சொல் அகராதி என்ற இந்நூலை வெளியிடுவதில் வேதாகம நண்பன் பெருமிதம் கொள்கிறது. இன்னும் இவர் மூலமாக ஏராளமான கிறிஸ்தவ சத்தியங்களை உள்ளடக்கியதும், வேதாகம இரகசியங்களை எளிமையாக புரிந்துக் கொள்ள செய்வதுமான சிறப்பான நூல்கள் வெளி வர வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

இப்புத்தகத்தை உங்கள் தனிநபர் ஆய்விலும், வேதபாட வகுப்புகளிலும், திருச்சபைகளிலும் பயன்படுத்தி, பயன் அடையவும் அநேகருக்கு இதனை அறிமுகப்படுத்தவும் உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இறை ஆசீர் உங்களோடு கூட இருப்பதாக!

5.8.2014 | V.வீர சுவாமிதாஸ்

சென்னை | இயக்குநர், வேதாகம நண்பன்

# ஆதியாகமம் (ஆதி ஆகமம்)

(உலக ஆரம்பத்தைப் பற்றிய நூல்)

*(வேதாகம வரலாறுபடி மனிதன் கி.மு.4000 ம் வருடம் உண்டாக்கப்பட்டான். ஏறத்தாழ கி.மு. 4000 இல் உலகம் உண்டாக்கப்பட்டது என்று எண்ணப்படுகிறது. ஆனால், சர்வலோகங்களும் கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும்.)*

| | | |
|---|---|---|
| சிருஷ்டித்தார் | 1:1 | உண்டாக்கினார், உருவாக்கினார், படைத்தார் |
| அசைவாடிக்கொண்டிருந்தார் | 1:2 | வல்லமையாய் செயல்பட்டுக் கொண்டிருந்தார். |
| ஜந்துக்கள் | 1:21 | உயிரினங்கள் |
| ஜீவ ஜந்துக்கள் | 1:24 | பிராணிகள் |
| ஜீவாத்துமா | 2:7 | உயிர் உள்ளவன் |
| பைசோன் | 2:11 | இது ஆவிலா தேசம் (பாபிலோன் எல்லை எங்கும் ஓடும்) |
| தெக்கேல் | 2:14 | (வடக்கே உள்ள) டைகிரிஸ் நதி |
| ஐபிராத்து | 2:14 | (தெற்கேயுள்ள) யூப்ரட்டீஸ் நதி |
| அரைக்கச்சை | 3:7 | இடுப்பை மறைக்கும் ஆடை |
| நசுக்குவாய் | 3:15 | காயப்படுத்துவாய் |
| குருக்கு | 3:18 | முள் இலைகள் உள்ள காட்டுச் செடி |
| ஜீவ விருட்சம் | 3:22 | வாழ்வின் மரம் |
| பட்டயம் | 3:24 | வாள் |
| ஆசாரியன் | 4:22 | ஆசான், கற்பிப்பவன் |
| எனக்குக் காயமுண்டாக | 4:23 | என்னைக் காயப்படுத்தியதற்காக |
| எனக்கு தழும்புண்டாக | 4:23 | என்னை அடித்ததற்காக அவனை |
| ஏழு பழி சுமருமானால் | 4:24 | ஏழு தடவை பழி வாங்கப்பட்டால்- என்னைப் பழிவாங்குகிறவன் 77 தடவை தண்டிக்கப்படுவான். தான் காயீனை விட நீதியுள்ளவன் என்று தேற்றிக்கொள்ளுகிறான். இது உலகில் இரண்டாம் கொலை. |
| மனஸ்தாபம் | 6:6 | மனவேதனை, மனச்சோர்வு, மனமடிவு, மனநோவு, கவலை, மனம் வருந்துதல், மனதுருகுதல் |
| நிக்கிரகம் பண்ணுவேன் | 6:7 | அழிப்பேன் |
| பேழை | 6:14 | பெரிய மரக்கலம் |

பேழையின் நீளம் 300 முழம் (6:15) (140 மீட்டர்) 450 அடி, அகலம் 50 முழம் (23 மீட்டர்) 75 அடி; உயரம் 30 முழம் (13.5 மீட்டர்) 45 அடி முழம் (6:16) பதினெட்டு அங்குலம் (0.5 மீட்டர்)

| | | |
|---|---|---|
| மேல் தட்டுக்கு ஒரு முழத் தாழ்த்தியிலே | 6:16 | கூரைக்கும் பக்கங்களுக்கும் இடையில் 18 அங்குல இடைவெளி விட்டு |
| பேழையின் கதவை அதன் பக்கத்தில் வைத்து | 6:16 | பேழையின் கதவை ஒரு பக்கத்தில் வைத்து |
| எவ்வேழு ஜோடும் | 7: 2 | ஏழு ஜோடிகளையும் |
| பேடுமாக | 7:3 | பெண்ணுமாக |
| ஜலப் பிரளயம் | 7:6 | வெள்ளப் பெருக்கு, பெரு வெள்ளம், ஜலப்பிரவாகம் |
| மூடப்பட்ட மலைகளுக்கு | 7:20 | மூழ்கிய மலைகளுக்கு |
| பதினைந்து முழ உயரம் | 7:20 | (6.9 மீட்டர்) 20 அடிக்கு மேலாக |
| நர ஜீவன்களும் | 7:21 | மனிதர்களும், மானிடரும், நரர்களும் |
| பிரவாகித்துக் கொண்டிருந்தது | 7:24 | வெள்ளப் பெருக்கெடுத்து, பாய்ந்து பெருகிற்று |
| தகனபலி | 8:20 | எரி பலி, நெருப்பு பலி |
| சீதளமும் | 8:22 | குளிரும் |
| கையளிக்கப்பட்டன | 9:2 | கீழ்ப்படுத்தப்பட்டன |
| கோத்திரம் | 10:5 | இனம் |
| சிநேயார் | 10:10 | பாபிலோனியா (யூப்ரட்டீஸ் நதியின் முகத்துவாரத்தின் அருகே ஏதேன் தோட்டம் இருந்த பிரதேசம் என்று நினைக்கப்படுகிறது) |
| அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதி ஸ்தானங்கள் | 10:10 | கூஸ் முதன் முதலில் ஆண்ட இடங்கள் |
| பகுக்கப்பட்டது | 10:25 | பிரிக்கப்பட்டது |
| ஜாதிகளிலுமுள்ள | 10:31 | கோத்திரங்களிலுமுள்ள |
| நிலக்கீல் | 11:3 | தார், கீல் |
| சவதரித்த | 12:5 | சம்பாதித்த, சேர்த்திருந்த, சேகரித்துப் பெற்ற |
| கோளிகைக் கழுதை | 12:16 | பெண் கழுதை |
| நாம் சகோதரர் | 13:8 | நான் உன் பெரியப்பா |
| ஜாதிகளின் ராஜாவாகிய | 14:1 | காமிலிருந்து தோன்றிய ஜாதிகளின் ராஜாவாகிய |
| பேலாவின் ராஜாவோடும் | 14:2 | பேலா பட்டணத்தின் ராஜாவோடும் |
| கேணிகள் | 14:10 | குழிகள் |
| கைபடிந்தவர்களாகிய | 14:14 | சண்டையில் தேர்ச்சி பெற்ற |
| ஆசாரியன் | 14:18 | மக்களுக்காக கடவுளோடு பரிந்து பேசுபவர் |
| பவிஞ்சுகளாய் | 14:15 | பல பிரிவுகளாய் |

| | | |
|---|---|---|
| பாதரட்சை | 14:22 | காலணி, மிதியடி, சப்பாத்து |
| சரட்டையாகிலும் | 14:22 | நூலையாகிலும் |
| விசாரணைக் கர்த்தனாய் இருக்கிறானே | 15:2 | என் சொத்துக்களை நிர்வாகிக்கிறவனாய் இருக்கிறானே, என் வாரிசு ஆகிவிடப் போகிறானே |
| பிள்ளை | 15:3 | அடிமைப் பிள்ளை |
| அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் | 15:6 | அதினால் அவன் கடவுளுக்கு ஏற்புடையவனாக எண்ணப்பட்டான் |
| சுதந்தரம் | 15:7 | உரிமைச் சொத்து, உரிமை, உரிமைப் பொருள், சொந்தமான பொருள், சொந்த நிலம், சொந்த தேசம், சொந்த நாடு, பெற்றுக்கொள்ளும் ஆஸ்தி, பங்கு, சொந்த ஜனம், சந்ததி, பிறப்பு உரிமை (எபி.10:34) வாசஸ்தலம் |
| ஆட்டுக்கடா | 15:9 | செம்மறி ஆடு |
| நிறைவாகவில்லை | 15:16 | இங்கே இப்பொழுது வாழும் எமோரிய மக்களின் துஷ்டத்தனத்தின் தண்டனைக்கு ஏற்ற காலம் இன்னும் நிறைவாகவில்லை |
| மறுமனையாட்டி | 16:3 | மனைவி என்ற அந்தஸ்துக்கு முழு உரிமை கொண்டாடமுடியாத வேறு மனைவி |
| நாச்சியாள் | 16:4 | எஜமானி |
| அங்கலாய்ப்பு | 16:11 | துக்கம், துயரம், கவலை, (யோபு23:2) முறையீடு |
| இஸ்மவேல் | 16:11 | கடவுள் செவிகொடுக்கிறார் |
| துரவு | 16:14 | கிணறு (1சாமு.29:1) நீரூற்று |
| விருத்தசேதனம் | 17:10 | நுனித்தோல் அறுவை, சுன்னத்து, விருத்தி செய்யும் உருப்புக்கு சேதம் |
| எழுந்தருளினார் | 17:22 | பிரிந்து சென்றார் |
| உற்பவ காலத்திட்டத்தில் | 18:10 | இன்னும் ஒன்பது மாதத்தில், அடுத்த வருடம் இதே காலத் திட்டத்தில், பிராண உற்பத்தி காலத்தில் |
| ஸ்திரீகளுக்கான வழிபாடு | 18:11 | மாதவிடாய் |
| ஆண்டவன் | 18:12 | கணவன், எஜமான், தலைவன், அதிகாரி, பிரபு (மத்.18:25) ராஜா |
| நிழலிலே | 19:8 | பாதுகாப்பிலே, நிழல் - முன்னடையாளம் (கொலோ. 2:17) |
| அனுக்கிரகம் | 19:21 | கருணை, தயவு, உதவி, சலுகை, கிருபை, வெளிப்படுத்துதல் (1கொரி.12:7) |
| சயனி | 19:32 | இன்பம் அனுபவி (2சாமு.4:5) ஓய்வு எடு |
| என்னத்தைக் கண்டு | 20:10 | எதினால் |

| | | |
|---|---|---|
| தேசாந்திரியாய் திரியும்படி | 20:13 | அந்நிய தேசங்களில் அலைந்து திரியும் படி |
| முகத்து முக்காட்டுக்காவதாக | 20:16 | முகத்தின் அழகை மறைக்கும் திரை வாங்க உதவியாயிருக்கும் |
| கடாட்சமானார் | 21:1 | ஆசீர்வதித்தார், கிருபை கூர்ந்தார், கருணை காட்டினார், இரக்கம் காட்டினார், காப்பாற்றினார், பரிதாபப்பட்டார், கண்ணோக்கினார், அருள் கூர்ந்தார் |
| நகைக்கப் பண்ணினார் | 21:6 | சிரிக்கச் செய்தார், மகிழ்ச்சி அடையச் செய்தார் |
| பரியாசம் பண்ணுகிறதை | 21:9 | கேலி செய்வதை, தொந்தரவு செய்து விளையாடிக் கொண்டிருப்பதை |
| புறம்பே தள்ளும் | 21:10 | துரத்தி விடும் |
| உன் சந்ததி விளங்கும் | 21:12 | உன் சந்ததி தோன்றும் |
| துருத்தி | 21:15 | திராட்சரசம் மற்றும் தண்ணீர் வைக்கும் தோல் பை |
| ஏக சுதன் | 22:2 | ஒரே மகன் |
| கூடிப் போனார்கள் | 22:6 | ஒன்றாகப் போனார்கள் |
| ஜனபுத்திரர் | 23:11 | இனத்தார், மற்றவர்கள், ஜனம், பொது மக்கள் |
| எவ்வளவு காரியம் | 23:15 | பெரிய காரியம் அல்ல |
| அடங்கலும் | 23:17 | சேர்த்து, அனைத்தும், முழுவதையும் |
| உச்சிதமான | 24:10 | மேலான, விலையுயர்ந்த, தலை சிறந்த, நல்ல அழகான |
| மடக்கி | 24:11 | கால் மடக்கி படுக்கச் செய்து |
| சித்திக்கப்பண்ணி | 24:12 | வாய்க்கப்பண்ணி |
| சேக்கல் | 24:22 | யூத நிறுவையாக உபயோகிக்கப்பட்ட எடை; வெள்ளி நாணயம் |
| கடகங்கள் | 24:22 | காப்புகள் |
| கட்டவிழ்த்து | 24:32 | சுமை இறக்கி |
| மொள்ள | 24:43 | எடுக்க, இறைக்க, மொண்டு கொள்ள |
| நலம் பொலம் | 24:50 | சாதகமாகவோ, பாதகமாகவோ |
| வாய்ப்பிறப்பை | 24:57 | சொல்லுவதை |
| சர்வாங்கமும் | 25:25 | சர்வமும், முழுவதும், சகல அங்கங்களும் |
| வன சஞ்சாரி | 25:27 | திறந்தவெளி மனிதன் |
| இளைத்திருக்கிறேன் | 25:30 | களைத்திருக்கிறேன், விடாய்த்திருக்கிறேன் |
| சேஷ்டபுத்திரபாகம் | 25:31 | மூத்த தலைமகன் உரிமை, தகப்பன் ஆஸ்தியில் அதிக பங்கு, குடும்பத்தில் தலைமை தாங்கும் உரிமை, சுதந்தரம், சிறப்பு உரிமை |
| கற்பனைகள் | 26:4 | கட்டளைகள், சட்டங்கள், கற்பித்தவைகள் |

| | | |
|---|---|---|
| நியமங்கள் | 26:4 | ஒழுங்குமுறைகள் |
| பிரமாணங்கள் | 26:4 | விதிமுறைகள் |
| ரெகொபோத் | 26:22 | இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் |
| ஆணை ஏற்பாடு | 2628 | உடன்படிக்கை, ஒப்பந்தம் |
| அம்பறாத்தூணி | 27:3 | அம்புகள் வைக்கும் பை, அம்புக்கூடு |
| சாரம் | 27:39 | செழிப்பு, சத்து (மத். 5:13) பெலன், லூக். 14:34 உவர்ப்பு |
| பரம்புவாய் | 28:14 | பரவிச் செல்வாய் |
| தசமபாகம் | 28:22 | பத்தில் ஒரு பகுதி |
| மருமகனென்றும் | 29:12 | இனத்தானென்றும் |
| தரித்திரு | 29:19 | தங்கியிரு |
| இவளுடைய ஏழு நாளை | 29:27 | இவளுடைய ஏழு நாள் திருமண விழாக் கொண்டாட்டங்களை |
| தூதாயீம் கனி | 30:14 | பாலுணர்வையும், இனப்பெருக்கத்தையும் உண்டாக்கும் கனி |
| ஈவு | 30:20 | வெகுமதி, வரம், கிருபை, பரிசு, வெகுமானம், நன்கொடை, அளவு, நன்மை, ஆசீர்வாதம், தயவு (எசே. 46:5) |
| பொலிவதுண்டு | 30:38 | சேர்வதுண்டு |
| ஆற்றைக் கடந்து | 31:21 | யூப்ரட்டீஸ் நதியைக் கடந்து |
| என் பிள்ளைகளையும் | 31:28 | என் பேரப்பிள்ளைகளையும் |
| உக்கிரமாய் | 31:36 | கடுங்கோபமாய் |
| தட்டுமுட்டுகளில் | 31:37 | பொருள்களில் |
| நடுத்தீர்க்கட்டும் | 31:37 | தீர்ப்புக் கூறட்டும் |
| பீறுண்டதை | 31:39 | மிருகங்களினால் கிழிக்கப்பட்டு கொல்லப்பட்டதை |
| உத்தரவாதம் பண்ணினேன் | 31:39 | இழப்பை நான் ஏற்றுக்கொண்டேன், நஷ்ட ஈடு கொடுத்தேன், கணக்கு கொடுத்தேன் |
| கண்காணிக்கக்கடவர் | 31:49 | கவனிக்கக்கடவர் |
| மிஸ்பா | 31:50 | கடவுளே எனக்கும், உனக்கும் சாட்சி |
| மக்னாயீம் | 32:2 | இது தேவனுடைய சேனை |
| பரிவாரங்களையும் | 32:10 | திரள் கூட்டங்களையும், ஏராளமான வேலைக்காரரையும் |
| கைக்கு உதவினவைகளிலே | 32:13 | சொந்தமானவற்றிலிருந்து |
| மந்தை மந்தைக்கு | 32:16 | ஒவ்வொரு மந்தைக்கும் |
| பாளயத்திலே | 32:21 | கூடாரங்கள் அடித்து தங்கும் இடத்திலே |

| | | |
|---|---|---|
| பணிவிடைக்காரிகளையும் | 32:22 | வேறு மனைவிகளையும் |
| பெனியேல் | 32:30 | கடவுளை முகமுகமாய்க் கண்டேன், உயிர் தப்பிப் பிழைத்தேன் (கடவுளின் முகம்) |
| கடையிலும் நிறுத்தி | 33:2 | கடைசியில் நிறுத்தி |
| கறவையான ஆடுகள் | 33:13 | பால் கொடுக்கும் ஆடுகள் |
| கொட்டாரம் | 33:17 | குடில், கொட்டரை, கொட்டகை, கூடாரம், மறைவு |
| ஏல் எல்லோகே | 33:20 | இஸ்ரவேலின் கடவுள் (வல்லமையானவர்) |
| பரிசம் | 34:12 | (திருமணத்திற்காக பெண்ணுக்குக் கொடுக்கப்படும்) பரிசு, ரொக்கம் |
| என் வாசனையை நீங்கள் கெடுத்ததினால் | 34:30 | என்னை அவமானத்திற்குட்படுத்தினதால் |
| ஏல் பெத்தேல் | 35:7 | கடவுள் தரிசனமான இடம், பெத்தேலின் கடவுள் |
| அல்லோன் பாகூத் | 35:8 | அழுகையின் ஓக் மரம் |
| ஜாதி | 35:11 | தேசம், ஜனம், வேற்று இனம் (லேவி.11:19) வர்க்கம் |
| பெத்தேல் | 35:15 | கடவுளுடைய வீடு |
| விருத்தாப்பியம் | 35:28 | கிழட்டு வயது, முதிர் வயது |
| சம்பத்து | 36:7 | சொத்துக்கள், உடமைகள், சம்பாத்தியம், செல்வம் |
| அரிகள் | 37:7 | கதிர்கள் |
| துரைத்தனம் | 37:8 | அதிகாரம் (அரசாங்கம், அரசாட்சி, ஆளுபவர்கள், சக்தி, வல்லமை) |
| ஷேமம் | 37:14 | சுகபத்திரம், நலம் |
| கந்த வர்க்கம் | 37:25 | நறுமணப்பொருள்கள், வாசனைத் திரவியங்கள் |
| பிசின் தைலம் | 37:25 | புண்ணை சுத்திகரித்து, வலியைக் குறைத்து, சுகமளிக்கும் அருமருந்தான பிசின் தைலம் |
| வெள்ளைப்போளம் | 37:25 | நறுமணத்துகள், மரப்பட்டையிலிருந்து எடுக்கப்படும் நல்ல வாசனையுள்ள பொருள் |
| மீதியானியர் கடந்து போகிற போது இஸ்மவேலருக்கு அவனை விற்றுப்போட்டார்கள் | 37:28 | வர்த்தகரான மீதியான் நாட்டைச் சார்ந்த இஸ்மவேலருக்கு அவனை விற்றுப்போட்டார்கள் |
| இரட்டு | 37:34 | துக்க வஸ்திரம், சாக்கு உடை |
| பிரதானி | 37:36 | ஆலோசகன், பிரத்தியேக உதவியாளன், பணியாற்றுபவன், அலுவலகன், அண்ணகன், அலி, அரண்மனைக்காவலாளிகளுக்கு தலைமை அதிகாரி, (எஸ்தர்.2:15) |
| தலையாரிகள் | 37:36 | அரண்மனைக் காவலாளிகள், மெய்க்காப்பாளர்கள் |

| | | |
|---|---|---|
| மைத்துனச் சுதந்தரமாய்ப் படைத்து | 38:8 | கணவனுடைய சகோதரன் என்னும் கடமையைச் செய்ய அவளை மணந்து |
| ஆரம் | 38:18 | கழுத்தில் மாலைபோல் தொங்கும் அணிகலன் |
| இந்த மீறுதல் உன்மேல் நிற்கும் | 38:29 | நீ, எப்பொழுதும் மீறி வந்தவன் என்று அழைக்கப்படுவாய் |
| காரிய சித்தியுள்ளவனானான் | 39:2 | செய்ததெல்லாம் வாய்த்தது |
| நித்தம் நித்தம் | 39:10 | அடிக்கடி |
| சரசம் பண்ணும் படிக்கு | 39:14 | கெடுக்கும்படி, கற்பழிக்கும்படி, தப்பிதமாக நடந்து கொள்ளும்படி |
| பானபாத்திரக்காரன் | 40:1 | திராட்ச ரசத்தை சோதித்துப் பார்ப்பவன், மது பரிமாறுபவன் |
| சுயம்பாகி | 40:1 | உணவு தயாரிப்பவன், சமையல்காரன், |
| தலையை உயர்த்தி | 40:13 | தலைநிமிரச் செய்து, மரியாதையாய் நடத்தி |
| உன் தலையை உயர்த்தி | 40:19 | உன் தலையை வெட்டி |
| தலைவன் தலையையும் | 40:20 | தலைவனையும் |
| நிறைமேனியுமான | 41:7 | முதிர்ச்சி அடைந்த |
| தீவிரமாய் | 41:14 | துரிதமாய் |
| இரட்டித்தது | 41:32 | இருமுறை வந்தது |
| வைப்பாயிருப்பதாக | 41:36 | சேமிப்பாக இருப்பதாக |
| முத்திரை மோதிரம் | 41:42 | அரச முத்திரை செதுக்கப்பட்ட மோதிரம் |
| சரப்பணி | 41:42 | சங்கிலி, கழுத்தணி, ஆபரணம் |
| தெண்டனிட்டு | 41:43 | முழங்காற்படியிட்டு |
| சாப்நாத் பன்னேயா | 41:45 | வாழ்வின்மேலும் சாவின்மேலும் அதிகாரம் உள்ளவன் |
| ஓன் பட்டணம் | 41:45 | ஹுலியோபாலிஸ் |
| நிஜஸ்தர் | 42:11 | நேர்மையானவர்கள் |
| மனவியாகுலம் | 42:21 | மன வேதனை |
| துபாசி | 42:23 | மொழி பெயர்ப்பாளன் |
| தெரபிந்து | 43:11 | பிஸ்தா |
| கைப்பிசகாய் | 43:12 | தவறுதலாய், எதிர்பாராத விதமாய் |
| சிறைகளாக்கி | 43:18 | சிறைக் கைதிகளாக்கி |
| ஞான திருஷ்டி | 44:5 | முன்னறிந்து கூறும் திறமை |
| பொதியை | 44:13 | சுமையை |
| உத்தரவாதி | 44:32 | பதில் சொல்ல வேண்டியவன் |

| | | |
|---|---|---|
| உத்தரம் | 45:3 | பதில் |
| விசனம் | 45:5 | மனக்கலக்கம், வருத்தம் |
| ஜீவரட்சணை செய்ய | 45:5 | உயிர்களைப் பாதுகாக்க |
| தட்டுமுட்டுகள் | 45:20 | பொருள்கள் |
| நன்மை | 45:20 | நல்லவைகள் |
| பரதேசி | 47:9 | அந்நியன் |
| ஆதீனமாயிருப்போம் | 47:19 | உடமைகளாயிருப்போம், அடிமைகளாயிருப்போம் |
| குடி மாறிப்போகப்பண்ணி | 47:21 | அடிமைவேலைக்கு உள்ளாக்கி |
| ஆசாரியர் | 47:22 | குருக்கள் (ஆயர்) |
| பார்வோனுக்குச் சேரும் வாரம் | 47:26 | விளைச்சலின் ஒரு பகுதி (20 சதவீதம்) பார்வோனுக்கு உரியது |
| வருத்தமாயிருக்கிறது | 48:1 | உடல் நலம் குன்றியிருக்கிறது |
| திடப்படுத்திக் கொண்டு | 48:2 | பெரு முயற்சி செய்து |
| மனமறிய | 48:14 | நன்கு தெரிந்திருந்தும், தீர்மானத்தோடு, வேண்டுமென்றே |
| சத்துவமும் | 49:3 | பலமும், வல்லமையும், சக்தியும், ஆற்றலும் |
| முதற்பலனுமானவன் | 49:3 | ஆண்மையின் முதற்கனியுமானவன், முதல் பிள்ளை |
| பிரதானமும் | 49:3 | முதன்மையும் |
| தளம்பினவனே | 49:4 | நிலையற்றவனே, உறுதியற்றவனே, குழப்பமும் கொந்தளிப்புமானவனே |
| மஞ்சம் | 49:4 | படுக்கை |
| இரை கவர்ந்து | 49:9 | பிடிபட்ட மிருகத்தை சாப்பிட்டு விட்டு |
| சமாதான கர்த்தர் | 49:10 | புகழ்ச்சிக்குரியவர், அரசுரிமை உடையவர் |
| நற்குல | 49:11 | நல்ல ஜாதி |
| இரத்தத்திலே | 49:11 | இரத்தச் சிவப்பிலே, திராட்ச ரசத்திலே |
| கடல் துறை | 49:13 | துறைமுகம் |
| பகுதி கட்டுகிறவன் | 49:15 | அடிமை வேலைக்கு இணங்குகிறவன், கப்பம் கட்டுகிறவன் |
| ராணுவக் கூட்டம் | 49:19 | கொள்ளையர் கூட்டம் |
| ருசிவர்க்கங்கள் | 49:20 | ருசியான பதார்த்தங்கள் |
| விடுதலை பெற்ற | 49:21 | கட்டவிழ்க்கப்பட்ட |
| மனமடிவாக்கி | 49:23 | சந்தோஷம் அற்றவனாக்கி, மனவேதனை அடையச் செய்து |

| | | |
|---|---|---|
| ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதம் | 49:25 | பிள்ளைகளைப் பெறும் ஆசீர்வாதம் |
| மடக்கிக் கொண்டு | 49:33 | இழுத்துப் படுத்து |
| ஜீவித்துப்போய் | 49:33 | உயிர் நீத்து, மரித்து |
| சுகந்தவர்க்கமிடும்படி | 50:2 | உடலை மருத்துவமுறையில் பாதுகாப்பு செய்யும்படி |

## யாத்திராகமம் – (யாத்திரை ஆகமம்)

( எகிப்திலிருந்த இஸ்ரவேலர் 400 வருடங்களுக்குப்பின்
விடுதலைப் பயணம் செய்தல்)

| | | |
|---|---|---|
| கர்ப்பப்பிறப்பு | 1:5 | பரம்பரையினர் |
| உபாயம் | 1:10 | யுக்தி, தந்திரம் |
| மருத்துவச்சி | 1:15 | மருத்துவப் பெண் |
| மணை | 1:16 | மகப்பேறு இருக்கை (லேவி.15:22) இருக்கை, அமரும் இடம் |
| நதியிலே | 1:22 | நைல் நதியிலே |
| வளர்த்தி | 2:3 | கிடத்தி |
| கெர்சோம் | 2:22 | அந்நிய தேசத்தில் பரதேசியாய் இருக்கிறேன் |
| ஓரேப் | 3:1 | தேவ பர்வதம், சீனாய் மலை |
| ஆளோட்டிகள் | 3:7 | அடிமைகளை இரக்கமின்றி வேலை வாங்குபவர்கள் |
| நீக்கி | 3:8 | விடுவித்து |
| பேர் பிரஸ்தாபம் | 3:15 | பேராயிருக்கும் |
| மூப்பர் | 3:16 | பெரியவர்கள், தலைவர்கள் (தீத்து.1:15), பிரஸ்பிட்டர் |
| வாதிப்பேன் | 3:20 | கொள்ளை நோயால், தொத்து நோயால் தண்டிப்பேன், அழிப்பேன், விசாரிப்பேன், உபாதிப்பேன், துன்புறுத்துவேன், தொல்லைக்கு உள்ளாக்குவேன் |
| தன் தன் வீட்டில் தங்குகிறவளிடத்திலும் | 3:22 | எகிப்திய எஜமானின் மனைவியிடத்திலும் |
| கொள்ளையிடுவீர்கள் | 3:22 | செல்வத்தை எடுத்துச் செல்வீர்கள் |
| வாக்கு வல்லவன் அல்ல | 4:10 | சிறந்த பேச்சாளன் அல்ல |
| மந்த நாவு உள்ளவன் | 4:10 | நாவன்மை அற்றவன், நாவு குழறும் பேச்சுத்திறமை இல்லாதவன், திருத்தமாக பேசும் திறமையற்றவன் |
| நீ அவனுக்குத் தேவனாய் இருப்பாய் | 4:16 | ஆரோனிடம் அவன் என்ன பேசவேண்டும் என்று சொல்லி, நீ அவனுக்கு என்னைப் போல இருப்பாய் |

| | | |
|---|---|---|
| எச்சரிக்கையாயிரு | 4:21 | கவனமாயிரு |
| கருக்கான | 4:25 | கூர்மையான, தீட்டப்பட்ட |
| இரத்த சம்பந்தமான புருஷன் | 4:25 | (நுனித்தோல் அறுவையினிமித்தம்) இரத்தசம்பந்தமான புருஷன் |
| தாளடி | 5:12 | கதிர் அறுத்த தாள் |
| இக்கட்டு | 5:19 | இக்கட்டான நிலை; பெரும் பிரச்சனை |
| விருத்தசேதனம் இல்லாத உதடுகள் உள்ளவன் | 6:12 | பேச்சு வல்லமை இல்லாதவன் |
| உற்பத்திக் கிரமப்படி | 6:16 | தலைமுறைகளின் வரிசைப்படி |
| தேவனாக்கினேன் | 7:1 | தேவன் போலாக்கினேன், கடவுளுடைய பிரதிநிதி ஆக்கினேன் |
| தீர்க்கதரிசியாயிருப்பான் | 7:1 | வாக்கினனாக இருப்பான் |
| மகா தண்டனையினால் | 7:4 | மகா தண்டனையினால் எகிப்தியரை மிகவும் தண்டித்து |
| உங்கள் பட்சத்திற்கு | 7:9 | உங்களை நம்ப |
| சாஸ்திரிகளையும் | 7:11 | ஞானிகளையும் |
| சூனியக்காரரையும் | 7:11 | பில்லி சூனியக்காரரையும் |
| அரோசிப்பார்கள் | 7:18 | அருவருப்பார்கள், வெறுப்பார்கள், கோபம் கொள்ளுவார்கள் |
| இதையும் சிந்தியாமல் | 7:23 | மனம் மாறாதவனாக |
| எல்லை அடங்கலையும் | 8:2 | எல்லை முழுவதையும் |
| இலகுவுண்டாயிற்று | 8:15 | தொல்லை தீர்ந்தது |
| தேவனுடைய விரல் | 8:19 | தேவனுடைய செயல் |
| இறைக்கக்கடவன் | 9:8 | சிதறக்கடவன், தூவக்கடவன் |
| எரிபந்தமான கொப்புளங்கள் | 9:10 | வெடித்து புண்ணாகும் கொப்புளங்கள், சீழ் வடியும், மிகுந்த வேதனைப்படுத்தும் கொப்புளங்கள் |
| வாதைகளையும் | 9:14 | தண்டனைகளையும், துன்பங்களையும் |
| நிலைநிறுத்தினேன் | 9:16 | உயர்த்தினேன் |
| கதிர்ப்பயிரும் | 9:31 | கதிர் விட்டிருந்தது |
| தாள் பயிருமாயிருந்தது | 9:31 | பூத்து இருந்தது |
| கம்பு | 9:32 | மாக்கோதுமை |
| நான் உங்களையும் .......... | 10:10 | நான் உங்கள் பிள்ளைகளை விடுவதில்லை என்று கர்த்தர் பேரில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன் |
| ஒரு குளம்பும் | 10:26 | ஒரு மிருகமும் |
| சமூலமாய் | 11:1 | முற்றிலுமாய் |

| | | |
|---|---|---|
| நாவை அசைப்பதில்லை | 11:7 | குலைப்பதில்லை |
| ஆத்துமாக்களின் | 12:4 | ஆட்களின் |
| நிலைக்கால் | 12:7 | கதவு நிலை |
| அதம்பண்ணி | 12:12 | கொன்று, அழித்து |
| ஈசோப்பு | 12:22 | ஈசோப்பு செடியின் தளிர் இலை |
| பஸ்கா பலி | 12:27 | சங்காரதூதன் இஸ்ரவேல் மக்களை அழிக்காது அவர்கள் வீடுகளைக் கடந்து சென்றதற்கான 'பாஸ்ஓவர்' பண்டிகை, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையானதைக் கொண்டாடும் பண்டிகை, புளிப்பில்லா அப்பப்பண்டிகை, பாஸ்கா பண்டிகை |
| அவன் சேர்ந்து | 12:48 | அவன் எல்லாரோடும் சேர்ந்து |
| சுதேசி | 12:49 | நாட்டுக் குடிமகன் |
| ஆபிப் மாதம் | 13:4 | (உபா.16:1) எபிரேய முதலாம் மாதம் ( மார்ச் மத்தி முதல் ஏப்ரல் மத்தி வரை) இது நிசான் மாதம் என்றும் அழைக்கப்பட்டது. எஸ்தர்.3:7 இது பஸ்கா ஆசரிக்கும் மாதம் |
| எனக்கு செய்ததற்காக | 13:8 | எனக்கு நன்மை செய்ததற்காக |
| நியாயப் பிரமாணம் | 13:9 | கடவுளின் சட்டம், மோசேயின் சட்டம், யூத சட்டம், வேத சட்டம், வேத தர்ம சாஸ்திரம் |
| பிரதானமான | 14:7 | தேர்ந்தெடுக்கப்பட்ட, முதன்மையான |
| முன்னடியிலே | 14:9 | பக்கத்திலே |
| சேனை | 14:19 | அணிவகுப்பு |
| ஸ்தம்பம் | 14:24 | தூண் |
| கிழக்கு வெளுக்கும் ஜாமத்தில் | 14:24 | கிழக்கு வெளுக்கும் கடைசி காவல் நேரத்தில் காலையில் 3மணிக்கும் 6 மணிக்கும் இடையில் |
| முக்கியத்தின் மகத்துவத்தினாலே | 15:7 | மாபெரும் மகத்துவத்தினாலே |
| பிரதிவசனமாக பாடினாள் | 15:21 | பல்லவியாகப் பாடினாள் |
| மாரா | 15:23 | கசப்பு |
| நியமத்தையும் நியாயத்தையும் | 15:25 | சட்ட திட்டத்தையும் |
| பரிகாரியாகிய கர்த்தர் | 15:26 | குணமாக்கும் கர்த்தர் |
| தாவிளை | 16:3 | நலமாக இருந்திருக்கும் |
| உருட்சியான | 16:14 | உருண்டையான |
| வஸ்து | 16:14 | பொருள் |
| ஓமர் | 16:16 | 2 கிலோ (2 லிட்டர்) |

| | | |
|---|---|---|
| வேவிக்க வேண்டியதை | 16:23 | வேகவைக்கவேண்டியதை |
| வேவித்து | 16:23 | வேகவைத்து |
| சாட்சி சந்நிதியில் | 16:34 | ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள உடன்படிக்கைப் பெட்டியில், உடன்படிக்கைப் பெட்டி இருக்கும் மகா பரிசுத்த ஸ்தலத்தில், கடவுளுடைய பிரசன்னத்துக்கு (செக்கினா மகிமைக்கு) சாட்சியாக விளங்கும் உடன்படிக்கைப்பெட்டி இருக்கும் இடத்தில்/ சாட்சியின் வாசஸ்தலத்தில் |
| எப்பா | 16:36 | 20 கிலோ, (20 லிட்டர்) |
| தவனமாயிருந்தபடியால் | 17:3 | தாகமாயிருந்தபடியால் |
| யேகோவாநிசி | 17:15 | கடவுள் என் ஜெயக்கொடியானவர், எந்நாளும் வெற்றிதரும் கடவுள் |
| எலியேசர் | 18:4 | தேவன் என் துணை |
| வருத்தத்தையும் | 18:8 | கஷ்டத்தையும் |
| இடும்பு செய்த | 18:11 | பெருமை பாராட்டின |
| காரியம் | 18:16 | வழக்கு, முக்கியமான காரியம் (1இராஜா.19:9) வேலை |
| தொய்ந்து போவீர்கள் | 18:18 | களைத்துப் போவீர்கள் |
| சம்பத்தாயிருப்பீர்கள் | 19:5 | சொத்தாயிருப்பீர்கள் |
| ஆசாரிய ராஜ்யமும் | 19:6 | குருக்களின் அரசாகவும் |
| கொடுமுடியில் | 19:20 | மலை உச்சியில் |
| தங்களுக்குள்ளே | 19:22 | தங்களை |
| எரிச்சலுள்ள | 20:5 | வைராக்கிய வாஞ்சையுள்ள, மற்ற தெய்வங்களை சகித்துக்கொள்ளாத, மகிமையை மற்ற தெய்வங்களுக்குக் கொடுக்காத, முழு பக்தியையும் முழு விசுவாசத்தையும் எதிர் பார்க்கும், நேச வைராக்கியமுள்ள |
| ஒன்றிக்காரனாய் | 21:3 | விவாகம் பண்ணாதவனாய் |
| தேவச் செயலாய் | 21:13 | எதிர் பாராமல் |
| கைக்கு நேரிட்டவனை | 21:13 | அகப்பட்டவனை |
| மினக்கெட்ட நஷ்டத்தை | 21:19 | ஏற்பட்ட இழப்பை |
| தண்டம் | 21:22 | அபராதம் |
| கொடுப்பாயாக | 22:29 | அர்ப்பணிப்பாயாக |
| வியாச்சியத்திலே | 23:3 | வழக்கிலே |
| பரிதானம் | 23:8 | லஞ்சம், கையூட்டு |
| சாவதானமாயிருங்கள் | 23:13 | கவனமாயிருங்கள் (இந்தி:சாவ்தான்) |

| | | |
|---|---|---|
| அறுப்புக்கால பண்டிகை | 23:16 | வயலின் முதற்பலனை செலுத்தும் பண்டிகை. இதை வாரங்களின் பண்டிகை என்பார்கள். (யாத்.34:22,உபா.16:10) முதற்கனிகளை கர்த்தருக்கென்று செலுத்தும் பண்டிகை என்றும் கூறுவார்கள். (எண்.28:26) |
| சேர்ப்புக்கால பண்டிகை | 23:16 | அறுவடைகால முடிவில் வயலின் பலனை சேர்த்துத் தீர்ந்தபோது கொண்டாடும் பண்டிகை |
| ஆண்டவருடைய சந்நிதியில் வரக்கடவர்கள் | 23:17 | ஆண்டவரைத் தொழுது கொள்ளும்படி அவருடைய சந்நிதியில் வரக்கடவர்கள் |
| உடன்படிக்கை புஸ்தகத்தை | 24:7 | கர்த்தர் இஸ்ரவேலரோடு செய்த உடன்படிக்கை சுருளை |
| பிரபைக்கு | 24:10 | பிரகாசத்துக்கு |
| இரத்தாம்பர நூல் | 25:4 | கருஞ் சிவப்பு நூல் |
| மெல்லிய பஞ்சு நூல் | 25:4 | லினன் நூல், நார்ப் பட்டு |
| சிவப்பு தீர்ந்த | 25:5 | சிவப்பு சாயம் ஏற்றப்பட்ட |
| தகசுத் தோல் | 25:5 | பதனிடப்பட்ட மெல்லிய ஆட்டுத்தோல் |
| ஏபோத் | 25:7 | பிரதான ஆசாரியன் (தலைமை குரு) மகா பரிசுத்த ஸ்தலத்தில் அணிந்த கையில்லாத முழங்கால் மட்டும் எட்டும் முழு நீள உடை |
| மார்ப்பதக்கம் | 25:7 | குரு ஏபோத் சட்டை மேல் அணியும் பன்னிரண்டு வைரக்கற்கள் பதிக்கப்பட்ட மார்பலங்கார துணி |
| பெட்டி | 25:10 | உடன்படிக்கைப் பெட்டி, சாட்சியாகிய கற்பலகைகள் இருக்கும் சாட்சிப் பெட்டி, தேவனுடைய பெட்டி, பரிசுத்த பெட்டி |
| திரணை | 25:11 | சித்தரிக்கப்பட்ட விளிம்பு, தோரணம் |
| தண்டுகள் | 25:13 | உருளையான தடிக் கம்புகள் |
| பாய்ச்சக்கடவாய் | 25:14 | மாட்டி வைப்பாயாக, இணைப்பாயாக,சொருகுவாயாக |
| சாட்சிப் பிரமாணம் | 25:16 | சாட்சியாகிய கற்பலகைகள், பத்து கட்டளைகள் அடங்கிய கற்பலகைகள் |
| கிருபாசனம் | 25:17 | இரக்கத்தின் இருப்பிடமாகிய கற்பலகைகள் இருக்கும் உடன்படிக்கைப் பெட்டியின் மூடி |
| ஏகவேலையாய் | 25:19 | இணைந்ததாய் |
| மேஜையை | 25:23 | அப்ப மேஜையை |
| கரகங்கள் | 25:29 | ஜாடிகள் |
| மொக்குகள் | 25:31 | மொட்டுகள் போன்ற குமிழ்கள் |
| அகல்கள் | 25:37 | அகல் விளக்குகள் |

| | | |
|---|---|---|
| பணிமுட்டுகள் | 25:39 | துணைக் கலன்கள் |
| ஒரு தாலந்து | 25:39 | 34 கிலோ |
| திரித்த மெல்லிய பஞ்சு நூலினாலும் | 26:1 | முறுக்கேற்றி நெய்த நார்ப்பட்டாலும் |
| காதுகள் | 26:5 | வளையங்கள் |
| வாசஸ்தலம் | 26:15 | கர்த்தரின் உறைவிடம், கர்த்தர் தங்கும் இடம், சந்திப்புக் கூடாரம், ஆசரிப்புக் கூடாரம், தங்கும் இடம் |
| நிமிர்ந்து நிற்கும் பலகைகள் | 26:15 | செங்குத்தான சட்டங்கள் |
| பாதங்கள் | 26:21 | பாதப் பொருத்துகள், திண்டுகள், அடிவாரம், ஆதாரம் |
| இசைக்கப்பட்டிருக்க வேண்டும் | 26:24 | இணைக்கப்பட்டிருக்க வேண்டும், இசைவாக |
| தாழ்பாள்கள் | 26:26 | குறுக்குச் சட்டங்கள் |
| திரைச்சீலை | 26:31 | தொங்கு திரை |
| பிரிவை உண்டாக்கும் | 26:33 | பிரிக்கும் |
| திரைக்குப் புறம்பாக | 26:35 | திரைக்கு வெளியே, முன்புறம், எதிரே (ரோம.2:28) சரீரத்தளவில் |
| பலிபீடம் | 27:1 | வெண்கல தகன பலிபீடம், பலி செலுத்தும் மேடை |
| ஏகமாய் | 27:2 | ஒன்றாய் சேர்ந்து |
| வெண்கல சல்லடை | 27:4 | குறுக்கும் நெடுக்குமான வெண்கலக் கம்பிகளால் ஆன சல்லடை |
| சுற்றடைப்பு | 27:5 | விளிம்பு |
| உள்வெளி விட்டு | 27:8 | உள் கூடாக |
| ஆசரிப்புக் கூடாரம் | 27:21 | (கர்த்தரின்) சந்திப்புக் கூடாரம், சாட்சியின் கூடாரம், (கர்த்தரின்) வாசஸ்தலம், கர்த்தரின் மகிமை விளங்கும் கூடாரம், மோசேயினால் பாளையத்துக்குப் புறம்பே தூரத்தில் போடப்பட்ட கூடாரம் |
| பாகை | 28:4 | தலைப் பாகை |
| அவைகளை பொன் குவளைகளில் பதிப்பாயாக | 28:11 | அவைகளுக்கு அடியில் உள்ள பொன்னால் ஆன பள்ளங்களில் பதிப்பாயாக |
| நியாயவிதி மார்ப்பதக்கத்தை | 28:15 | கடவுளுடைய தீர்ப்பைக் கூறும் மார்புப் பதக்கத்தை |
| நாலு பத்தி | 28:17 | நாலு வரிசை |
| முத்திரை வெட்டாய் வெட்டியிருக்க வேண்டும் | 28:21 | முத்திரை போல செதுக்கப்பட வேண்டும் |
| இரண்டு பக்கங்களிலே | 28:23 | இரண்டு மூலைகளிலும் |
| ஊரீம், தும்மீம் | 28:30 | ஏபோத் அங்கியின் மார்பு அலங்கார துணியில் உள்ள இரண்டு பொருட்கள்.கர்த்தரின் சித்தத்தை அறிய ஆசாரியன் இவைகளை பயன்படுத்தினான். |

| | | |
|---|---|---|
| ஒரு பட்டத்தை | 28:36 | ஒரு தகட்டை |
| சணல் நூல் சல்லடங்கள் | 28:42 | நார்பட்டு (லினன்) உள்ளாடையாகிய அரைக்கால் சட்டைகள் |
| குண்டிக்காய்கள் | 29:13 | சிறு நீரகங்கள் |
| தகித்துப்போட்டு | 29:13 | சுட்டெரித்துப் போட்டு |
| பாவநிவாரணபலி | 29:14 | பாவம் போக்கும் பலி |
| சர்வாங்க தகனபலி | 29:18 | சர்வமும், முழுவதும், சகல அங்கங்களும் ஒன்றாக எரிக்கப்படும் பலி |
| மடல் | 29:20 | காது நுனிப்பகுதி, (அடிப்பகுதி) |
| மார்க்கண்டம் | 29:26 | மார்புப் பகுதி |
| அசைவாட்டும் காணிக்கை | 29:26 | கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டிப் படைக்கும் காணிக்கை |
| ஏறெடுத்து படைக்கும் சமாதானபலி | 29:28 | உயர்த்திப் படைக்கும் சமாதான பலி, நன்றி செலுத்தும் பலி, ஸ்தோத்திர தோழமை பலி) கடவுளோடு உள்ள உறவை சரிப்படுத்த செலுத்தும் பலி |
| பிராயச் சித்தம் | 29:36 | பாவப் பரிகாரம் |
| மரக்கால் | 29:40 | 20 கிலோ (எப்பா) |
| ஒரு மரக்காலில், பத்தில் ஒரு பங்கு | 29:40 | ஏறத்தாழ 2 கிலோ |
| காற்படி | 29:40 | ஏறத்தாழ 1/2 லிட்டர் |
| போஜன பலி | 29:41 | தானிய காணிக்கை, மாவு காணிக்கை, பலகார எண்ணெய் காணிக்கை, உணவு காணிக்கை |
| பான பலி | 29:41 | திராட்ச ரச காணிக்கை |
| தூபபீடம் | 30:1 | நறு மணப்பொருள் எரிக்கும் இடம் |
| ஏகமுகமாய் இருக்கவேண்டும் | 30:2 | ஒன்றாயிருக்கவேண்டும் |
| தூபங்காட்டல் | 30:7 | நறுமணப் பொருள் எரித்தல் |
| மீட்கும் பொருள் | 30:12 | மீட்புப் பணம் |
| கூட்டப்பட்ட | 30:25 | தயாரிக்கப்பட்ட |
| பரிமள தைலம் | 30:25 | சுகந்த வாசனையுள்ள தைலம், வாசனைத் திரவியம் (ஏசா.57:9) |
| தைலம் கூட்டுகிறவன் | 30:33 | தைலம் தயார் செய்பவன், தைலக்காரன் |
| குங்கிலியம் | 30:34 | நறுமணப் பொருள் |
| பரிமளமேற்றி | 30:35 | வாசனையேற்றி |
| தூபவர்க்கமாக்கி | 30:35 | நறுமணத் தூபமாக்கி |

| | | |
|---|---|---|
| சுகந்த வர்க்க தூபவர்க்கம் | 31:11 | நறுமண தூப வகைகள் |
| ஓய்வுநாள் | 31:13 | வாரத்தில் ஏழாம் நாள், வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனத்திலிருந்து சனிக்கிழமை சூரிய அஸ்தமனம் வரை |
| பொன்னணி | 32:2 | பொற்காதணி |
| கருப்பிடித்து | 32:4 | அச்சில் வடிவம் கொடுத்து |
| நிர்வாணம் ஆக்கியிருந்தான் | 32:25 | கொண்டாட்டம் போடும்படி முட்டாள்களாக்கியிருந்தான் |
| உபாதித்தார் | 32:35 | தண்டித்தார் |
| தயை | 33:19 | மகிமை (நீதி.19:22) விரும்பத்தகுந்தது |
| சோரமார்க்கமாய் | 34:15 | வேசித்தனமாய், துரோகம் செய்து, வழிவிலகி, நெறி தவறி, துன்மார்க்கமாய், கள்ளத்தனமாய் |
| கர்ப்பந்திறந்து பிறக்கிற | 34:19 | முதலாவது பிறக்கும் |
| பிராகாரத்தின் | 35:17 | முற்றத்தின் |
| மனப்பூர்வமுள்ள | 35:22 | விருப்பமுள்ள |
| அஸ்தகடகம் | 35:22 | புஜத்தில் அணியும் காப்பு |
| ஞான இருதயமுள்ள | 35:25 | திறமையுள்ள |
| திரித்தார்கள் | 35:26 | நூலாக நெய்தார்கள் |
| விசித்திரத் தையல் வேலை | 35:35 | பூந்தையல் வேலை,பின்னல்வேலை |
| மூடியையும் | 36:19 | மேல் விரிப்பையும் |
| கழுந்துகள் | 36:22 | இருகட்டைகளை இணைப்பதற்கு ஒரு மரத்தில் துளையையும் மற்றொன்றில் கூர்முளையையும் அமைப்பது, காடிகள் |
| பலகைகளையும் | 36:28 | சட்டங்களையும் |
| உருவப் பாயும் படி | 36:33 | செல்லும்படி |
| தூண்கள் | 36:38 | கம்பங்கள் |
| வளைவாணிகள் | 36:38 | கொக்கிகள் |
| குமிழ்கள் | 36:38 | உச்சிப் பகுதிகள் |
| வளையங்களையும் | 36:38 | பூண்களையும் |
| தர்ப்பணங்கள் | 38:8 | முகம் பார்க்கும் கண்ணாடிகள் (வெண்கலத்தினால் ஆனவை) |
| என்னும் விழுக்காடு சேர்ந்தது | 38:26 | என்னும் கணக்கின்படி கிடைத்தது |
| சரிகைகளாக | 39:3 | இழைகளாக, நூல் போல |
| துறடுகளையும் | 39:33 | கொக்கிகளையும் |
| தாழ்ப்பாள் | 40:18 | குறுக்குச் சட்டம் (அடி தண்டார்) |

## லேவியராகமம் (லேவியர் ஆகமம்)

(கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேலரும் அவர்களது குருக்களும் நடந்து கொள்ள வேண்டிய சட்டங்கள் மற்றும் பாவ நிவிர்த்தி கட்டளைகள் அடங்கிய வழிகாட்டி நூல்)

| | | |
|---|---|---|
| பாகம் பண்ணப்பட்ட | 2:7 | தயாரிக்கப்பட்ட, செய்யப்பட்ட, சுடப்பட்ட |
| ஞாபகக்குறியாக | 2:9 | கர்த்தருக்கு உரியது என்று ஞாபகப்படுத்தும்படியாக |
| சாரமாக்கப்படுவதாக | 2:13 | பதம் (பாடம்)பண்ணப்படுவதாக |
| பாளையம் | 4:12 | தங்கியிருக்கும் இடம் |
| பதறி | 5:4 | அஜாக்கிரதையாய், மூடத்தனமாய்அவசரப்பட்டு |
| சேக்கல் கணக்கின்படியே | 5:15 | யூத நாணய எடையின்படியே |
| குற்ற நிவாரணபலி | 5:16 | அறியாமையினால் செய்த குற்றத்தை நிவிர்த்தி செய்கிற பலி, குற்றப் பழி நீக்கும் பலி |
| மாறாட்டம் பண்ணி | 6:2 | ஏமாற்றி, பொய் சொல்லி, திருப்பிக்கொடுக்க மறுத்து |
| இடுக்கண் செய்து | 6:2 | ஒடுக்கி |
| சணல் நூல் ஜல்லடம் | 6:10 | லினன் உள்ளாடை |
| உற்சாக பலி | 7:16 | தானாகவே மனம் உவந்து செலுத்தும் பலி, துதியுடனும் நன்றியுடனும் ஏறெடுக்கப்படும் பிரார்த்தனை |
| பிரதிஷ்டை பலி | 7:37 | ஊழியத்துக்காக பிரதிஷ்டை பண்ணப்படும்பொழுது செலுத்தப்படும் பலி |
| அடுத்த பிரமாணம் | 7:37 | உண்டாக்கப்பட்ட சட்டம் |
| விசித்திரமான கச்சையை | 8:7 | திறமையுடன் நெய்யப்பட்ட அரைக்கச்சையை |
| பாகை | 8:9 | தலைப்பாகை |
| பாதத்தையும் | 8:11 | தாங்கியையும் |
| பிராயச்சித்தம் செய்து | 8:15 | பாவப் பரிகாரம் செய்து |
| கர்த்தருடைய காவலைக் காக்கக்கடவீர்கள் | 8:35 | கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியக்கடவீர்கள் |
| அந்நிய அக்கினி | 10:1 | கர்த்தர் அவர்களுக்குக் கட்டளையிடாததினால் அந்த அக்கினி பரிசுத்த அக்கினியாயிருக்கவில்லை |
| அமைதலாயிருந்தான் | 10:20 | திருப்தியடைந்தான் |
| கடலூராஞ்சி | 11:13 | வேகமாய் பறந்து, பாய்ந்து கடல்மீனை பிடித்து செல்லும் பெரியப் பறவை |

| | | |
|---|---|---|
| வல்லூறு | 11:14 | மொட்டைத்தலை கழுகு |
| தீக்குருவி | 11:16 | தீக்கோழி |
| கூகை | 11:16 | இரவில் அலறும் ஆந்தைஇனத்தைச் சேர்ந்த பறவை |
| செம்புகம் | 11:16 | பெரிய காகம் போன்ற சிவப்பு நிறப் பறவை |
| டேகை | 11:16 | சிறு பறவைகளை வேட்டையாடும் சிறு பறவை (வில்லேத்திரம்), பைரி என்ற வைரி |
| நீர்க்காகம் | 11:17 | கடற் காகம் |
| கோட்டான் | 11:17 | பெரிய வகை ஆந்தை |
| குருகு | 11:18 | நீர்ப்பறவை |
| ராஜாளி | 11:19 | பறவைகளை வேட்டையாடும் கழுகு இன பறவை |
| தத்துகிறதற்கு | 11:21 | குதிப்பதற்கு |
| கால்களுக்கு மேல் தொடைகள் உண்டாயிருக்கிறவைகள் | 11:21 | நீண்ட கால்கள் உள்ள |
| சோலையாம் என்னும் கிளி ஜாதி | 11:22 | வெட்டுக்கிளி |
| அர்கொல் என்னும் கிளிஜாதி | 11:22 | சின்னவகை வெட்டுக்கிளி |
| ஆகாபு என்னும் கிளிஜாதி | 11:22 | துள்ளிக் குதிக்கும் விட்டில் |
| கிளி ஜாதி | 11:22 | வெட்டுக்கிளி இனம் |
| அழுங்கு | 11:30 | நத்தை |
| சூதகஸ்திரீ | 12:5 | மாதவிலக்குள்ள பெண் |
| அசறு | 13:2 | புண், சொறி, சிரங்கு |
| ரோகம் | 13:3 | புண் |
| இரண மாம்சம் | 13:10 | திறந்த புண் |
| குஷ்டம் | 13:12 | வெண் குஷ்டம் |
| இடங்கொள்ளாமலும் | 13:32 | படராமலும் |
| பஞ்சுநூல் | 13:48 | பஞ்சுநூலால் செய்யப்பட்ட ஆடை |
| ஊடையிலாவது | 13:48 | குறுக்காகச் செல்லும் நூல்களிலாவது |
| தோலிலாவது | 13:48 | தோலாடையிலாவது |
| பாவிலாவது | 13:48 | நீளமாகச் செல்லும நூல்களிலாவது |
| ஆழாக்கு | 14:10 | 250 மி.லி |
| முந்த | 14:17 | முந்தி |

| | | |
|---|---|---|
| காணியாட்சியாக | 14:34 | உடமையாக, சொந்தமாக |
| வீட்டை ஒழித்து வைக்கும்படி | 14:36 | வீட்டிலுள்ள அனைத்தையும் வெளியேற்றுமாறு, காலி செய்யும்படி |
| பிரமியம் | 15:2 | விந்து ஒழுக்கு |
| உதிர ஊறல் | 15:19 | இரத்தப் பெருக்கு |
| மணை | 15:22 | இடம் |
| இந்திரியக் கழிவினாலே | 15:32 | விந்துவை வெளியேற்றினதால் |
| கர்த்தருடைய சந்நிதியிலே சேர்ந்து | 16:1 | கர்த்தருடைய சந்நிதியை நெருங்கியதால் |
| சேரப்பண்ணி | 16:6 | கொண்டுவந்து |
| போக்காடு | 16:10 | மக்களின் பாவத்தைப் போக்குவதற்கு அடையாளமாக போகவிடும் ஆடு |
| தூப மேகம் | 16:13 | தூபப் புகை மேகம் |
| இட்டு | 16:24 | செலுத்தி |
| ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்துவதுமன்றி | 16:29 | நோம்பிருக்க வேண்டுவதுமன்றி, உபவாசிக்க வேண்டுவதுமின்றி |
| விசேஷித்த ஓய்வுநாள் | 16:31 | முழு ஓய்வெடுக்கும் நாள் |
| சோரமார்க்கமாய் | 17:7 | கள்ளத்தனமாய் |
| பேய்களுக்கு | 17:7 | வெள்ளாடு சிலைகளுக்கு |
| மாம்சத்தின் | 17:11 | உடலின் |
| நியாயங்கள், நீதிச்சட்டங்கள் | 18:4 | நியமங்கள், நீதிநெறி, |
| தீக்கடக்கும்படி | 18:21 | தீக்கிரையாக்க |
| மோளேகு | 18:21 | கானானிய தெய்வங்களில் ஒன்று, கன்றுக்குட்டிமுகம் உடையது |
| சம்யோகம் | 18:22 | பாலுறவு |
| விசாரிப்பேன் | 18:25 | தண்டிப்பேன் |
| மனோற்சாகமாய் | 19:5 | மனமுவந்து |
| தீர | 19:9 | முற்றிலும் |
| ஜனபுத்திரர் | 19:18 | இனத்தார் |
| சம்யோகமாய் | 19:20 | மோகங்கொண்டு |
| சுயாதீனம் உள்ளவள் அல்ல | 19:20 | பிரஜா உரிமை பெற்றவள் அல்ல, விடுதலை பெற்றவள் அல்ல |
| விருத்தசேதனம் இல்லாதவைகள் | 19:23 | தீட்டுப்பட்டவைகள், விலக்கப்பட்டவைகள் |

| | | |
|---|---|---|
| ஒதுக்காமலும் | 19:27 | வெட்டாமலும் |
| அடையாளமான எழுத்துக்களைக் குத்திக்கொள்ளாமலும் | 19:28 | பச்சைக் குத்திக்கொள்ளாமலும் |
| அஞ்சனம் பார்க்கிறவர்கள் | 19:31 | மரித்தவர்களின் ஆவிகளோடே பேசுபவர்கள் |
| சிறுமைப்படுத்த | 19:33 | தீங்குசெய்ய |
| சுமுத்திரையான நிறைகற்கள் | 19:36 | சரியான, நேர்மையான எடைகற்கள் |
| மோளேகுக்குக் கொடுத்தால் | 20:1 | மோளேகு தெய்வத்துக்குப் பலியிட்டால் |
| கண் சாடையாயிருந்தால் | 20:4 | கண்டு கொள்ளாமல் இருந்தால் |
| விபசார மார்க்கமாய் | 20:5 | ஒழுக்கக் கேடாய் |
| படைத்தால் | 20:14 | சேர்ந்தால் |
| அசறுள்ளவன் | 21:20 | தோல் வியாதி உள்ளவன் |
| விதை நசுங்கினவன் | 21:20 | அலி |
| நெரிசல் | 22:22 | காயமடைந்தது, பலவீனமானது (தானி.2:42) |
| கழலை | 22:22 | கட்டி |
| சொறி, புண்ணுள்ளவைகள் | 22:22 | சொறி, சிரங்கு உள்ளவைகள் |
| (விதை) நொறுங்கினதையும் | 22:24 | விதை நசுக்கப்பட்டதையும் |
| கூடாரப் பண்டிகை | 23:34 | யூதர் தங்கள் மூதாதையர் பாலைநிலத்தில் அலைந்து திரிந்ததை ஞாபகப்படுத்தி அறுவடைக்குப்பின் கூடாரங்களில் தங்கிக் கொண்டாடின பண்டிகை |
| ஆற்றலரிகள் | 23:40 | ஆற்றங்கரையோரம் வளரும் அலரிச் செடிகள், மரங்கள் |
| ஓய்விலே பயிராகிறது | 25;6 | தாணாக பயிராகிறது |
| யூபிலி வருஷம் | 25:10 | ஜுபிலி வருடம், மீட்பு வருடம், விடுதலை வருடம், ஒவ்வொறு 50ம் வருடம் |
| பரதேசிகள் | 25:23 | அந்நியர்கள் |
| அறுதியாய் | 25:23 | நிரந்தரமாய் |
| நிர்வாகம் | 25:28 | திராணி, சக்தி |
| கையிளைத்துப் போனால் | 25:35 | பிழைக்க வழியற்றுப்போனால் |
| பொலிசைக்கும் | 25:37 | லாபத்துக்கும், கூடுதல் வட்டிக்கும் |
| அரோசிப்பதில்லை | 26:11 | வெறுப்பதில்லை |
| அரோசித்தல் | 26:11 | புறக்கணித்தல் |
| ஈளை | 26:16 | எலும்புருக்கி நோய் |

| | | |
|---|---|---|
| பத்து ஸ்திரிகள் ஒரே அடுப்பில் உங்கள் அப்பத்தைச் சுட்டு | 26:26 | பத்து குடும்பங்களுக்கு உரிய சொற்ப உணவு ஒரே அடுப்பில் சமைக்கப்பட்டு |
| உக்கிரம் | 26:28 | கடுங்கோபம் |
| மேடைகள் | 26:30 | விக்கிரக மேடைகள் |
| நிர்த்தூளியாக்கி | 26:30 | பொடியாக்கி |
| நரகலான | 26:30 | அருவருக்கத் தகும் |
| விடப்புட்டு | 26:43 | கைவிடப்பட்டு, வெறுமையாக விடப்பட்டு |
| பரிசுத்தமாயிருப்பதாக | 27:10 | கடவுளுக்கு சொந்தமாயிருப்பதாக |
| ஒரு கலம் | 27:16 | 220 கிலோ |
| சாபத்தீடான வயலாக கர்த்தருக்கு நியமிக்கப்பட்ட தாயிருக்கக்கடவது | 27:21 | மீட்க இயலாத கர்த்தருக்கு நேர்ந்துக்கொள்ளப்பட்ட நிலமாகக் கருதப்படும் |
| கோலின் கீழ்ப்பட்ட | 27:32 | உன்னுடைய வீட்டில் வளர்க்கப்பட்டு எண்ணப்படுவதற்காக கோலின் கீழ் கடந்து செல்லும் |
| கர்த்தருக்குப் பரிசுத்தமானது | 27:32 | கர்த்தருக்கு சொந்தம் |

## எண்ணாகமம்

(பாலை நிலத்தில் எடுக்கப்பட்ட இஸ்ரவேல் மக்கள் எண்ணிக்கை பற்றிய நூல்-பாலை நிலத்தில் 40 வருடங்கள்)

| | | |
|---|---|---|
| தொகையேற்றுங்கள் | 1:2 | கணக்கெடுங்கள், பதிவு செய்யுங்கள் |
| சேனைகளின்படி | 1:3 | அணிவகுப்பின்படி |
| ஒவ்வொரு மனிதன் | 1:4 | ஒவ்வொரு தலைவன் |
| ஏற்படுத்தப்பட்டவர்களும் | 1:16 | முக்கியமானவர்களும் |
| நாமத் தொகையின்படிக்கும் | 1:18 | பெயர்களின் எண்ணிக்கையின் படிக்கும் |
| தலை தலையாக | 1:22 | பேர் பேராக (ஒவ்வொருவறாக) |
| சாட்சியின் வாசஸ்தலத்துக்கும் | 1:50 | பரிசுத்த கூடாரத்துக்கும் |
| விசாரிப்புக்காரராக | 1:50 | அதிகாரிகளாக |
| இறக்கிவைத்து | 1:51 | பிரித்து வைத்து |
| வம்சத்தின் விருதாகிய | 2:2 | மூதாதையர் வீட்டுச் சின்னங்களாகிய |

| | | |
|---|---|---|
| பாளையம் இறங்கக்கடவர்கள் | 2:2 | கூடாரம் அடித்து தங்கக்கடவர்கள் |
| முதற் பாளையமாய் | 2:9 | முதலில் செல்லும் அணிவகுப்பாய் |
| அந்நிய அக்கினி | 3:4 | கர்த்தரின் அனுமதியின்றி கொண்டுவரப்பட்ட அக்கினி |
| காவலையுங் காத்து | 3:7 | கடமைகளையும் செய்து |
| யாவுக்கும் பதிலாக | 3:12 | ஆண் பிள்ளைகளுக்கு ஈடாக |
| விசாரிப்புக்காரனாயிருக்க வேண்டும் | 3:32 | முக்கியஸ்தனாயிருக்க வேண்டும் |
| காவல் விசாரிப்பு | 3:36 | பொறுப்பு |
| அதற்கடுத்தவைகள்அனைத்தும் | 3:36 | அவைகளைப் பயன்படுத்த உதவும் அனைத்தும் |
| இஸ்ரவேல் புத்திரரின் காவலுக்குப் பதிலாக | 3:38 | இஸ்ரவேலருக்காக |
| மீட்கப்படவேண்டிய | 3:46 | என்னிடமிருந்து திரும்பவும் வாங்கப்படவேண்டிய |
| துப்பட்டி | 4:6 | நல்ல லினன் துணி |
| தண்டுகளைப் பாய்ச்சி | 4:6 | உருளைக்கட்டைகளை (வளையங்களில்) மாட்டி |
| தகசுத்தோல் மூடிக்குள்ளே போட்டு | 4:10 | மெல்லிய தோலால் மூடி |
| ஒரு தண்டிலே கட்டி | 4:10 | சுமக்கும் தண்டிலே வைத்து |
| இரத்தாம்பரம் | 4:13 | கருஞ்சிவப்பு நூல் |
| விசாரிக்கக்கடவன் | 4:16 | பாதுகாக்கக்கடவன் |
| வந்து | 4:20 | உள்ளே வந்து |
| விசாரணை | 4:28 | அதிகாரம் |
| காவல் விசாரிப்பாவது | 4:31 | கடமையாவது |
| சுமையின் வேலைக்கும் | 4:46 | சுமக்கும் வேலைக்கும் |
| சம்யோகமாய் | 5:13 | சோரம் போய் சந்தோஷமாய் |
| எரிச்சலின் ஆவி | 5:14 | சந்தேகத்தின் ஆவி, அவ நம்பிக்கையின் ஆவி |
| நசரேய விரதம் | 6:2 | கடவுளுக்காகத் தன்னைப் புனிதமாக்கிக் கொள்ளும் விரதம் |
| சென்ற நாட்கள் விருதாவாகும் | 6:12 | கடந்த காலம் கணக்கில் வராது |
| பொருத்தனை பண்ணின நசரேயனுக்கும் | 6:21 | நேர்ச்சை செய்து கொண்ட நசரேய விரதத்தைக் கைக் கொண்டவனுக்கும் |

| | | |
|---|---|---|
| அவன் தன் கைக்கு உதவுகிறதையல்லாமல் | 6:21 | அவன் நேர்ச்சைக்கு அதிகமாக விரும்பி செலுத்தும் காணிக்கைக்கும் |
| அடுத்த பிரமாணம் இதுவே | 6:21 | உரிய சட்டம் இதுவே |
| விசாரிப்புக்கு | 7:2 | மேற்பார்வைக்கு |
| கூண்டு வண்டில் | 7:3 | கூரையுள்ள வண்டி |
| தாலமும் | 7:13 | தட்டும் |
| கலம் | 7:13 | பாத்திரம் |
| நூற்று முப்பது சேக்கல் | 7:13 | ஏறத்தாழ 1.5 கிலோகிராம் |
| எழுபது சேக்கல் | 7:13 | 0.8 கிலோகிராம் (800 கிராம்) |
| பிரபுவாகிய | 7:18 | தலைவனாகிய |
| விளக்குத் தண்டிற்கு நேரே | 8:2 | விளக்குத் தண்டிற்கு முன்னால் |
| தத்தமாக | 8:19 | வெகுமதியாக |
| திருப்பணி சேனையை விட்டு | 8:25 | திருப்பணி சேவையிலிருந்து ஓய்வு பெற்று |
| ஆசரிப்புக் கூடாரத்தின் காவலைக் காக்கிறதற்கு | 8:26 | ஆசரிப்புக் கூடாரத்தில் சேவை செய்வதற்கு |
| கர்த்தருடைய காவலைக் காத்துக்கொள்வார்கள் | 9:23 | கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்வார்கள் |
| பூரிகைகள் | 10:2 | சின்ன எக்காளங்கள் |
| உங்களுக்கு ஞாபகக் குறியாய் இருக்கும் | 10:10 | நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்தும் |
| கொம்மட்டிக் காய்கள் | 11:5 | சுரைக்காய்கள் |
| மச்சங்கள் | 11:5 | மீன்கள் |
| ஏந்திரங்களில் | 11:8 | திரிகல்களில், மாவு அரைக்கும் கல்களில் |
| பேர் வழியில் எழுதப்பட்டிருந்தும் | 11:26 | பதிவு செய்யப்பட்டிருந்தும் |
| அரணிப்பானவைகள் | 13:28 | பலத்த கோட்டைகள் உள்ளவைகள், பாதுகாப்பானவை |
| ஏனாக்கின் குமாரர் | 13:28 | அரக்கர்கள், ராட்சதர் |
| சமஸ்த சபையையும் | 14:7 | சபையார் எல்லாரையும் |
| என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள் | 14:34 | நான் உங்களுக்கு விரோதமாக இருந்தால் எப்படியிருக்கும் என்பதை உணருவீர்கள் |

| | | |
|---|---|---|
| பத்தில் இரண்டு பங்கானதும் | 15:6,9 | மரக்காலிலே பத்தில் இரண்டு பங்கானதும் |
| சுதேசத்தில் பிறந்தவர்கள் | 15:13 | இஸ்ரவேல் புத்திரர் |
| முறைமையும் | 15:16 | ஒழுங்குமுறையும் |
| தீர்க்கமான | 15:34 | திட்டவட்டமான |
| இளநீல நாடா | 15:38 | இளநீல காப்பு நாடா |
| குமாரனாகிய | 16:1 | பேரனாகிய |
| மிஞ்சிப் போகிறீர்கள் | 16:3 | உங்களைப்பற்றி அளவுக்குமீறி எண்ணுகிறீர்கள் |
| சாட்சிப்பெட்டி | 17:1 | உடன்படிக்கைப் பெட்டி |
| அக்கிரமத்தை சுமக்கவேண்டும் | 18:1 | தூயகத்தின் தூய்மை கெட்டுப்போனால் அதைப்பற்றிய குற்றத்தை சுமக்கவேண்டும் |
| காவலையும் காக்கக்கடவர்கள் | 18:3 | கடமையையும் செய்யுக்கடவர்கள் |
| உச்சிதமான | 18:12 | உயர்தரமான |
| அகத்தியமாய் | 18:15 | நிச்சயமாய் |
| ஐந்து சேக்கல் | 18:16 | 55 கிராம் |
| களத்தின் தானியத்தைப்போலும் ஆலையின் இரசத்தைப்போலும் | 18:27 | களத்தின் வரத்திலும், திராட்ச இரச ஆலையின் வரத்திலிருந்து எடுத்துச் செலுத்துவது போலும் |
| நியமப்பிரமாணம் | 19:2 | சட்ட விதிமுறை, நியாயப்பிரமாணம் |
| ஈசோப்பையும் | 19:6 | ஈசோப்பு தளிரையும் |
| காத்து வைக்கப்பட வேண்டும் | 19:9 | பிரித்து வைக்கப்படவேண்டும் |
| ஊற்று ஜலம் | 19:17 | ஊற்றுத் தண்ணீர் |
| பரிகரிக்கும் | 19:19 | போக்கும் |
| ராஜ பாதை | 20:17 | அரசு நெடுஞ்சாலை, ராஜவீதி |
| நடப்பான பாதையில் | 20:19 | முக்கியமான பாதையில் |
| ஆற்றுக்கால்களும் | 21:14 | சிற்றாறுகளும் |
| நியாயப்பிரமாணிக்கன் | 21:18 | சட்டங்கள் கொடுத்தவன் (மோசே) |
| தண்டாயுதங்கள் | 21:18 | கடப்பாறைகள் |
| வனாந்தரம் | 21:19 | பாலை நிலம் |
| கட்டிக் கொண்டார்கள் | 21:24 | பிடித்தார்கள், கைப்பற்றினார்கள் |

| | | |
|---|---|---|
| கவிகட்டுகிறவர்கள் | 21:27 | கவிஞர்கள், புலவர்கள் |
| ஆண்டவன்மார்கள் | 21:28 | தலைவர்கள் |
| எய்து போட்டோம் | 21:30 | அழித்துப்போட்டோம் |
| பாகாலுடைய மேடுகளில் | 22:41 | கானானியர் பாகால் மலையில் (இந்த அருவருப்பை (வெட்கக்கேட்டை) வணங்கினவர்கள். இதை ஆண்டவன்(எஜமான்) என்று அழைத்தனர், அவன் மனைவி அஸ்தரோத். |
| வாக்கியத்தை | 23:7 | தீர்க்கத்தரிசனத்தை |
| திருப்பக்கூடாது | 23:20 | மாற்ற முடியாது |
| நிமித்தம் | 24:1 | சகுனம் |
| நீர்ச்சால்கள் | 24:7 | நீர்க்கால்கள், நீர்நிலைகள் |
| என் மனதாய் | 24:12 | என் விருப்பப்படி |
| சித்தீம் | 24:24 | சீப்ரு தீவு (சைப்ரஸ் தீவு) |
| அசூரைச் சிறுமைப்படுத்தி ---- வருத்தப்படுத்தும் | 24:24 | அசீரியாவையும் ஏபேரையும் மேற்கொள்ளும் |
| பாகால் பேயோர் | 25:3 | மோவாபியரின் தெய்வமாகிய பாகால் |
| சூரியனுக்கு எதிரே | 25:4 | பட்டப்பகலில் |
| நெருக்கினார்களே | 25:18 | அழித்தார்களே |
| குத்துண்ட | 25:18 | கொல்லப்பட்ட |
| சர்ப்பனைகளால் | 25:18 | தந்திரங்களால் |
| இப்பாலே | 26:3 | சமீபத்திலே |
| குடும்பத்துக்கு தகப்பன் | 26:5 | குலத்துக்கு மூதாதை |
| கிட்டின | 27:11 | நெருங்கின |
| அவனை வளர்த்தி | 16:14 | அவனைக் கிடத்தி |
| கர்த்தருடைய வேத புஸ்தகத்தை | 17:9 | கர்த்தருடைய சட்டங்களை, திருச்சட்ட ஏட்டை |
| யோசபாத்-ஆகாபோடே சம்பந்தம் கலந்து | 18:1 | யோசபாத் தன் மகனாகிய யோராமுக்கு இஸ்ரவேல் அரசனாகிய ஆகாபினுடைய மகளை மணமுடித்து அவனோடே சம்பந்தங்கலந்தான் |
| 400 தீர்க்கத்தரிசிகளை | 18:5 | விக்கிரகங்களை வணங்கின 400 கள்ளவாக்கினரை |
| அநுசாரியாயிருந்தார் | 18:31 | உதவி செய்தார் |
| பிரமாணம் | 19:10 | விதி |
| கற்பனை | 19:10 | உத்தரவு |
| நேரஸ்தராகாதபடி | 19:10 | குற்றவாளிகளாகாதபடி |
| தரித்து நின்று | 20:17 | அணிவகுத்து நின்று |
| நிலைப்படுவீர்கள் | 20:20 | வெற்றி பெறுவீர்கள், சித்தி பெறுவீர்கள் |
| சாமக்கூண்டு | 20:24 | காவற் கோபுரம் |
| பெராக்கா | 20:26 | புகழ்ச்சியின் பள்ளத்தாக்கு |
| இஸ்ரவேலின் ராஜாவாகிய யோசபாத் | 21:2 | யூதாவின் அரசனாகிய யோசபாத் |
| இற்று விழுமட்டும் | 21:15 | அழுகி விழுமட்டும் |
| அறுநூறு சேக்கல் நிறைபொன் | 21:25 | எழுநூற்று ஐம்பது கிலோ எடை பொன்னை |

| | | |
|---|---|---|
| லபித்தது | 22:7 | முடிந்தது |
| நேராக வெளியே போனான் | 22:7 | எதிராக யுத்தத்திற்குப் போனான் |
| சயன வீட்டில் | 22:11 | படுக்கை அறையிலே |
| முறைப்படி வருகிறவர்கள் | 23:8 | கடமையைச் செய்ய, அவர்களுக்கென்று குறித்த நேரப்படி வருகிறவர்கள் |
| முறைதீர்ந்து போகிறவர்கள் | 23:8 | கடமை ஆற்றி முடித்தவர்கள் |
| சாட்சியின் ஆகமம் | 23:11 | உடன்படிக்கை சுருள் |
| வரிசைக்குப் புறம்பே | 23:14 | காவலாளர்கள் நிற்கும் சுற்று மதிலுக்கு வெளியே |
| வேலையை விசாரிக்கிறவர்கள் | 24:13 | புதுப்பிக்கும் பணிக்கு பொறுப்பானவர்கள் |
| முந்தின சீருக்கு | 24:13 | முந்தின நிலைக்கு |
| முறை வரிசைக்காக | 25:8 | தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற |
| சாமர்த்தியத்தைப் பார்த்தார்கள் | 25:21 | நேருக்கு நேர் மோதினார்கள் |
| ஆதிக்கக்காரன் | 26:11 | அதிகாரி |
| யந்திரங்கள் | 26:15 | தற்கால ஏவுகணைகளுக்கு முன்னோடியாக விளங்கிய அக்காலத்து யுத்த கருவிகள் |
| உமக்கு அடுத்ததல்ல | 26:18 | உம்முடைய வேலை அல்ல |
| மேன்மையாக லபியாது | 26:18 | மேன்மையாக அமையாது |
| சாரியரில் ஒருவனாகிய | 27:11 | சாரியர் குலத்தில் ஒருவனாகிய |
| ஆயுதபாணியானவர்கள் | 28:14 | யுத்த வீரர் |
| பலட்சயமானவர்கள் | 28:15 | பலவீனமானவர்கள் |
| கோடிகள் | 26:9 | மூலைகள் |
| காந்தியுள்ள கற்கள் | 29:2 | உயர்ந்த கற்கள் |
| முஸ்திப்பாக்கி | 29:19 | மீண்டும் பிரதிஷ்டை பண்ணி, முந்தின நிலையில் வைத்து, ஒழுங்குப்படுத்தி, மீண்டும் அர்ப்பணித்து |
| ராஜ்யபாரத்திற்காகவும் | 29:21 | அரசுக்காகவும் |
| சுரமண்டலம் | 29:25 | யாழ் |
| திட்டம் பண்ணப்பட்டது<br>இந்த காரியத்தைச் செய்யும்படியான | 29:35 | மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| யோசனை சடுதியாய் உண்டாயிற்று | 29:36 | ஏனெனில் இவை யாவும் மிகவும் விரைவாக நடந்தேறின |
| காரியத்தை விசாரித்தார்கள் | 30:17 | காரியத்துக்கு பொறுப்பு ஏற்றார்கள் |
| சுத்தாங்கம் | 30:19 | தூய்மை |
| பங்கிடும்படிக்கு | 31:14 | ஆசாரியர்களுக்குப் பங்கிடும்படிக்கு |
| வகுப்புகளின் படியே | 31:16 | பிரிவுகளின்படியே |
| எழுதப்பட்ட | 31:17 | பதிவு செய்யப்பட்ட |
| மனமேட்டிமை | 32:25 | பெருமை |
| இரண்டாம் வகுப்பிலே | 34:22 | இரண்டாம் தொகுதியிலே |
| தேசங்கள் | 34:33 | பிரதேசங்கள் |
| முறை வரிசைகளில் வைத்து | 35:2 | (ஆசாரியருக்கு), குருக்களுக்கு பணிமுறையை வகுத்துக்கொடுத்து |
| திடப்படுத்தி | 35:2 | திடப்படுத்தி, ஊக்குவித்து |
| நியாய முறைமையின்படியே | 35:13 | திருச்சட்ட முறைமைப்படியே |
| ஆயத்தப்படுத்தினார்கள் | 35:15 | பஸ்காவை ஆயத்தப்படுத்தினார்கள் |
| திட்டப்படுத்தின | 35:20 | ஒழுங்குபடுத்தின |
| எதிரிடை செய்வதை | 35:21 | எதிர்ப்பதை |
| தண்டத்தை | 36:3 | கப்பத்தை |
| திவ்வியமான | 36:10 | விலையுயர்ந்த |
| கழுத்தை அழுத்தமாக்கி | 36:13 | இறுமாப்படைந்து |
| தேவன்பேரில் தன்னை ஆணையிடுவித்துக்கொண்ட | 36:13 | உண்மையுள்ளவனாயிருப்பேன் என்று கர்த்தர் பேரில் ஆணையிடுவித்துக்கொண்ட |
| விருத்தாப்பியரையும் | 36:17 | மிகவும் அதிக வயது முதிர்ந்தவர்களையும் |
| அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ அவன் போகட்டும் | 36:23 | உங்களில் யாரெல்லாம் கடவுளுடைய ஜனங்களோ அவர்கள் போகட்டும் |

# எஸ்றா

(தேவாலயம் மீண்டும் கட்டப்படுதல்)

| | | |
|---|---|---|
| பூர்வோத்தரம் | 2:59 | மூதாதையாரின் வழி மரபு |
| எல்லாரும் ஏகத்திற்கு | 2:64 | மொத்த எண்ணிக்கைக்கு |
| ஸ்தாபித்து | 3:3 | மீண்டும் எடுப்பித்து/ புதுப்பித்து |
| அவத்தமாக்கும்படி | 4:5 | ஒன்றுமில்லாமல் போகும்படி |
| பிரியாது | 4:6 | குற்றச்சாட்டு, பிராது |
| ஆலோசனைத் தலைவன் | 4:8 | ஆளுனர் |
| அவர்கள் வகையராவாகிய | 4:9 | அவர்களைச் சார்ந்த |
| தீனாவியர் | 4:9 | நீதிபதிகள் |
| அபற்சாத்தியர் | 4:9 | அதிகாரிகள் |
| தர்பேலியர் | 4:9 | திரிப்போலி மனிதர் |
| அப்பார்சியர் | 4:9 | பாரசீக மக்கள் |
| அற்கேவியர் | 4:9 | ஏரேக்கியர் |
| சூஷங்கியர் | 4:9 | சூசான் மக்கள் |
| தெகாவியர் | 4:9 | பிராந்தியத் தலைவர்கள் |
| ஏலாமியரானவர்கள் | 4:9 | ஏலாமித்தியர் |
| அஸ்னாப்பார் | 4:10 | அசீரிய ராஜா |
| நதிக்கு இப்பாலே | 4:10 | யூப்ரட்டீஸ் நதிக்கு மேற்கே |
| பகுதியையும் | 4:13 | சுங்கத்தையும் |
| ஆயத்தையும் | 4:13 | வரியையும் |
| அடாத காரியம் | 4:14 | தகாத காரியம் |
| நடபடி புஸ்தகங்கள் | 4:15 | வரலாறு ஏடுகள் |
| சீமைகள் | 4:15 | மாநிலங்கள் |
| கலாதி | 4:15 | கலகம் மிகுந்த நகர் |
| பாழ்க்கடிக்கப்பட்டது | 4:15 | அழிக்கப்பட்டது |
| தீர்க்கமாய் வாசிக்கப்பட்டு | 4:18 | தெளிவாய் மொழி பெயர்க்கப்பட்டு |
| தேசாதிபதி | 5:6 | ஆளுனர் |

| | | |
|---|---|---|
| அப்பற்சாகியர் | 5:6 | பாரசீக அலுவலர்கள் |
| வகையரா | 5:6 | சார்ந்தவர்கள் |
| துரிசாய் நடந்து | 5:8 | விரைவாய் நடந்து |
| தஸ்திர அறை | 6:1 | தஸ்தாவேஜ் அறை, பத்திரங்கள் பாதுகாக்கும் அறை ஏட்டுச் சுருள்கள் உள்ள அறை |
| சீமை | 6:2 | மாகாணம் |
| மச்சு வரிசை | 6:4 | மேல்வரிசை |
| நீங்களும் | 6:6 | நீங்கள் இரண்டுபேரும் |
| தாழ்ச்சியில்லாமல் | 6:9 | குறைவில்லாமல் |
| ஆதார் | 6:15 | எபிரேய 12ம் மாதம். (பெப்ரவரி மத்தி முதல் மார்ச் மத்தி வரை) |
| தீர்க்கமாய் வாசிக்கப்பட்டது | 6:18 | தெளிவாய் மொழிபெயர்க்கப்பட்டது |
| வேத பாரகன் | 7:6 | வேதத்தில் அறிவாளி, வேத நிபுணன், வேத அறிஞன், மதத்தலைவன், வேத பண்டிதன், வேதத்தை கற்றறிந்தவன், வேதத்தை (சட்டத்தைப்) போதிப்பவன் |
| சன்னதின் | 7:11 | கடிதத்தின் |
| கஜான்சிகள் | 7:21 | கருவூல அதிகாரிகள் |
| நிதனீமியர் | 7:24 | ஆலயத்தின் வேலையாட்கள் |
| பகுதியாகிலும் | 7:24 | கப்பமாகிலும் |
| கர்த்தருக்குப் பரிசுத்தமானவர்கள் | 8:28 | கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் |
| சன்னதுகளை | 8:36 | கட்டளைக் கடிதங்களை |
| ராஜாவின் தேசாதிபதிகள் | 8:36 | சிற்றரசர்கள் |
| கையும் | 9:2 | பங்கும் |
| முந்தினதாயிருக்கிறது | 9:2 | முக்கியம் வகிக்கிறது, முதற்காரணமாயிருக்கிறது |
| எங்களுக்கு ஒரு குச்சைக் கொடுக்கவும் | 9:8 | எங்களுக்கு பாதுகாப்பான ஒருசிறிய இடத்தைக் கொடுக்கவும் |
| உயிர் கொடுக்கவும் | 9:8 | புது வாழ்வு கொடுக்கவும் |
| எங்களிலே தப்பின சிலரை மீதியாக வைக்கவும் | 9:8 | எங்களிலே சிலரை அடிமைத்தனத்திலிருந்து எருசலேமுக்குத் திரும்பி வரவும் |
| உம்பிளிக்கையாக பின்வைக்கும்படி | 9:12 | சுதந்தரமாக வைத்துப்போகவும் |

# நெகேமியா

(எருசலேமின் மதில்கள் கட்டப்படுதல்)

| | | |
|---|---|---|
| இருபதாம் வருஷம் | 1:1 | அர்த்தசஷ்டா பாரசீக பேரரசனாக இருந்த இருபதாம் வருடம் |
| கிஸ்லேயு மாதம் | 1:1 | எபிரேய ஒன்பதாம் மாதம். (நவம்பர் மத்தி முதல் டிசம்பர் மத்தி வரை) |
| ராஜா கட்டளையிட்டார் | 2:8 | கி.மு.444ம் வருடம் ராஜா கட்டளையிட்டார் |
| ஊருணி வாசல் | 2:14 | நீரூற்று வாசல் |
| பாத்தியம் | 2:20 | உரிமை |
| கொம்மை | 3:1 | கோபுரம் |
| வேலைக்கு தங்கள் கழுத்தைக் கொடுக்கவில்லை | 3:5 | வேலை செய்ய மறுத்துவிட்டனர் |
| மாகாணத்து பிரபு | 3:15 | மாவட்ட ஆட்சியர் |
| தட்டான் | 3:31 | பொற் கொல்லன் |
| மிப்காத் வாசல் | 3:31 | கணக்கெடுப்பவன் வாசல் ,வேலையாட்களின் வரவை பதிவு செய்யும் வாசல் |
| மளிகைக்காரர் | 3:31 | வியாபாரிகள் |
| சக்கந்தம் பண்ணி | 4:1 | கேலி செய்து |
| சிறையிருப்பின் தேசத்திலே | 4:4 | அந்நிய தேசத்துக்கு சிறைபிடிக்கப்பட்டு |
| சூறைக்கு ஒப்புக்கொடும் | 4:4 | கொள்ளையடிக்கப்பட ஒப்புக்கொடும் |
| கொலைக்கப்படாதிருப்பதாக | 4:5 | அகற்றப்படாதிருப்பதாக |
| பத்துவிசை எங்களுக்குச் சொன்னார்கள் | 4:12 | மீண்டும் மீண்டும் எங்களுக்குச் சொன்னார்கள் |
| இராமாறு, பகல்மாறு | 4:22 | இரவு பகல் |
| முறையிடுகிற | 5:1 | பிராது சொல்லும், குறை கூறும் |
| தண்டி வருகிற | 5:11 | கட்டாயமாக வசூலித்து வருகிற |
| கற்பித்த | 5:14 | நியமித்த |
| முயன்று நின்றேன் | 5:16 | முழு மூச்சுடன் ஈடுபடுத்திக் கொண்டேன் |
| மினக்கட்டுப் போவானேன் | 6:3 | நின்று போவானேன், முடங்கிப் போவானேன் |

| | | |
|---|---|---|
| மனோராஜ்யம் | 6:8 | கற்பனை |
| பாவங்கட்டிக் கொள்ளுகிறதற்கும் | 6:13 | பாவத்திற்குள்ளாக்குவதற்கும் |
| எலூல் | 6:15 | எபிரேய 6ம் மாதம், (ஆகஸ்ட் மத்தியிலிருந்து செப்டம்பர் மத்தி வரை) |
| ஆணையிட்டு கொடுத்து இருந்தார்கள் | 6:18 | வாக்குறுதி கொடுத்திருந்தார்கள்,விசுவாசமாய் இருந்தார்கள் |
| நீங்கள் நிற்கும்போதே | 7:3 | நீங்கள் காவல் வேலை முடிந்து போகுமுன்னே |
| பூர்வோத்தரத்தையும் சொல்லமாட்டாமல் இருந்தார்கள் | 7:61 | வம்சவரலாறையும் நிரூபிக்கமுடியாமல் இருந்தார்கள் |
| மிருதுச்செடி | 8:15 | நறுமணமுள்ள வெள்ளைப் பூக்களையும் வாசனையுள்ள இலைகளையும் உள்ள, எப்பொழுதும் பச்சைப்பசேரென்று இருக்கும் செடி, 'மிர்டில்' செடி |
| ஒரு ஜாமமட்டும் | 9:3 | ஒரு நாளின் கால் பகுதிமட்டும் |
| பின்பு ஒரு ஜாமமட்டும் | 9:3 | இன்னும் ஒரு கால் பகுதியில் |
| திடசாட்சியாய் | 9:29 | திட்டவட்டமாய் |
| முரண்டுத்தனமாய் | 9:29 | முரட்டாட்டமாய், பிடிவாதமாய் |
| ஆகாமியம் பண்ணினோம் | 9:33 | துஷ்டத்தனமாய் நடந்து கொண்டோம் |
| துர்க்கருமங்கள் | 9:35 | தீச்செயல்கள், தீயச்செயல்கள் |
| பிசைந்த மாவில் முதற் பாகத்தையும் | 10:37 | வருடா வருடம் முதலில் அறுவடை செய்யப்பட்ட தானியத்தின் பிசைந்த மாவையும் |
| காணி பூமி | 11:3 | சொந்த நிலம் |
| காவல் வீட்டு வாசல் | 12:39 | காவலர் வாசல் |
| ஊழியஞ்செய்து நிற்கிற | 12:44 | பணிபுரிகிற |
| தங்கள் தேவனுடைய காவலையும் சுத்திகரிப்பின் காவலையும் | 12:45 | கர்த்தரின் சேவையையும் சுத்திகரிப்பின் சேவையையும் |
| அன்றாடக திட்டமாகிய பங்குகளை | 12:47 | தினசரி தேவைகளுக்குக் கொடுக்கவேண்டியபடியை |
| திடசாட்சியாய் | 13:15 | எல்லாருக்கும் முன்பாக/ திட்டவட்டமாய் |

# எஸ்தர்
# (யூதர்களை அழிவிலிருந்து காத்த பெண்)

(வேதாகமத்தில் உள்ள புத்தகங்களில் இந்த புத்தகத்தில் மாத்திரம் கர்த்தரின் நாமம் சொல்லப்படவில்லை)

| | | |
|---|---|---|
| இந்து தேசம் | 1:1 | இந்தியா |
| எத்தியோப்பியா | 1:1 | சூடான் |
| பிரதாபம் | 1:4 | கௌரவம், பெருமை |
| விளங்கச் செய்துகொண்டிருந்தான் | 1:4 | விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தான் |
| விதானித்திருந்தது | 1:6 | மாட்டப்பட்டிருந்தது |
| ராஜமேன்மை | 1:19 | அரசன் அளிக்கும் மேன்மை |
| அட்சரத்திலும் | 1:22 | எழுத்துக்களிலும் |
| கன்னிமாடம் | 2:3 | அந்தப்புரம், அரசனின் மனைவிகள் இருக்கும் இடம் |
| அபிமான ஸ்திரீகள் | 2:14 | மறுமனையாட்டிகள், வேறு மனைவிகள் |
| பிரதானி | 2:15 | வேலைக்காரன் |
| நியமித்த காரியமேயல்லாமல் | 2:15 | புத்திமதியைத்தவிர, அவளுக்கென்று கொடுக்கப்பட்ட பொருள்களேயல்லாமல் |
| கேட்கவில்லை | 2:15 | விரும்பவில்லை |
| தேபேத் மாதம் | 2:16 | எபிரேய 10ம் மாதம்,(டிசம்பர் மத்தியிலிருந்து ஜனவரி மத்தி வரை) |
| சலக்கரணை உண்டாக்கி | 2:18 | விடுமுறை அறிவித்து |
| ராஜஸ்திதிக்குத்தக்க | 2:18 | ராஜாவின் அந்தஸ்துக்குத் தகுதியான |
| குலம் | 2:20 | இனம் |
| கைபோட | 2:21 | கொலை செய்ய |
| சொற்கள் | 3:4 | நடத்தை |
| நிலை நிற்குமோ | 3:4 | சகித்துக் கொள்ளப்படுமோ |
| ஆதார் மாதம் | 3:7 | எபிரேய பன்னிரண்டாம் மாதம் (பிப்ரவரி மத்தியிலிருந்து மார்ச் மத்திவரை) |
| நிசான் மாதம் | 3:7 | எபிரேய முதலாம் மாதம் (ஆபிப்) மார்ச் மத்தியிலிருந்து ஏப்ரல் மத்தி வரை |

| | | |
|---|---|---|
| விகற்பம் | 3:8 | வித்தியாசம் |
| காரியக்காரர் | 3:9 | வேலையைச் செய்வோர் |
| அட்சரத்திலும் | 3:11 | எழுத்திலும் |
| சம்பிரதிகள் | 3:12 | எழுத்தர்கள் |
| அகத்தியமாய் | 4:8 | அவசரமாய் |
| அல்லும் பகலும் | 4:16 | இரவும் பகலும் |
| வெள்ளாட்டிகளாகவும் | 7:4 | கொத்தடிமைகளாகவும், அடிமைப் பெண்களாகவும் |
| உத்தரவாதம் பண்ணமுடியாது | 7:4 | நஷ்ட ஈடு செய்ய முடியாது |
| 50 முழ உயரமான | 7:9 | ஆமான் செய்த தூக்குமரம் எழுபத்து ஐந்து அடி (23மீட்டர்) உயரமாக இருந்தது |
| பரிகரிக்க | 8:3 | நிராகரிக்க, நிறுத்த, முடிவுக்கு கொண்டுவர, அழிக்க, வல்லமையை முறிக்க, தோற்கடிக்க |
| சீவான் மாதம் | 8:9 | எபிரேய மூன்றாம் மாதம், மே மத்தி முதல் ஜூன் மத்தி வரை |
| அமைந்தார்கள் | 8:17 | சேர்ந்தார்கள் |
| வரிசைகளை | 9:19 | வெகுமதியாக அனுப்பப்படும் ஆகாரங்கள், அன்பளிப்புகளை |
| பூர் | 9:24 | பகடைக்காய் குலுக்கிப்போடுதல் என்று பாரசீக மொழியில் சொல்லப்படுகிறது |
| கடனாக | 9:28 | கடமையாக |
| திடப்படுத்தும்படிக்கு | 9:29 | உறுதிப்படுத்தும்படி |
| உறுதிப்பாடு பண்ணினதும் | 9:30 | உறுதி பண்ணினதும் |
| திடப்படுத்தினது | 9:32 | உறுதிப்படுத்தியது |
| பகுதி ஏற்படுத்தினான் | 10:1 | தீர்வை விதித்தான் |
| விர்த்தாந்தமும் | 10:2 | முழு விபரமும், வரலாறும் |

## யோபு

(பாடுகள் பாவத்தால் வரும் என்ற கருத்தை மையமாக வைத்து யோபின் நண்பர்கள் அவனோடு பேசுகிறார்கள்)

| | | |
|---|---|---|
| சன்மார்க்கன் | 1:1 | நேர்மையானவன் |
| சம்பத்து | 1:10 | செல்வம் |
| சபேயர் | 1:15 | கொள்ளையடிக்கும் நாடோடிக் கும்பல் |

| | | |
|---|---|---|
| சாய்த்துக்கொண்டு | 1:15 | விரட்டிக்கொண்டு |
| எல்லாவற்றையும் மனிதன் கொடுத்து விடுவான் | 2:4 | தான் உயிருடன் இருக்க மனிதன் எதையும் கொடுப்பான் |
| பருக்களால் | 2:7 | புண்களால், கொப்புளங்களால் |
| விசாரியாமலும் | 3:4 | நினையாமலும் |
| அருக்களிப்பாக்குவதாக | 3:5 | அருவருப்பாக்குவதாக, பயங்கரமாக்குவதாக |
| லிவியாதானை எழுப்புகிறவர்களும் சபிப்பார்களாக | 3:8 | வல்லமையான அநேக தலைகள் உள்ள பாம்பு போன்ற டைநோசார் ஆகிய கடல் தெய்வம் லிவியாதானை கடலிருந்து எழும்பப்பண்ணி சந்திரனை விழுங்கச்செய்து சந்திரகிரகணத்தை உண்டுபண்ணும், சபிப்பதில் பேர்போன மந்திரவாதிகள் அதை சபிப்பார்களாக |
| விடாய்த்துப்போனவர்கள் | 3:17 | களைத்துப் போனவர்கள் |
| கட்டுண்டிருந்தவர்கள் | 3:18 | கைதிகள் |
| அமைந்திருக்கிறார்கள் | 3:18 | இளைப்பாறுகிறார்கள், ஓய்வெடுக்கிறார்கள், அமைதியை அனுபவிக்கிறார்கள் |
| நிர்ப்பாக்கியருமான | 3:22 | ஆசீர்வாதம் பெறாதவருமான, பாக்கியமற்றவர்கள், பாக்கியமில்லாதவர்கள் |
| ஆயாசப்படுவீரோ | 4:2 | எரிச்சல் அடைவீரோ |
| சிலிர்த்தது | 4:15 | நேராக நின்றது |
| பொட்டுப் பூச்சியால் | 4:19 | அரிக்கும் பூச்சியால் |
| நிர்மூடனை | 5:2 | மூடனை |
| திரியாவரக்காரன் | 5:13 | தந்திரக்காரன், சூழ்ச்சிக்காரன், சதித்திட்டம் செய்கிறவன், நேர்மாறானவன், மாறும் மனம் கொண்டவன், சலனபுத்தியுள்ளவன், முறை கேடாய் நடப்பவன் |
| வெளியின் கல்லுகளோடும் உமக்கு உடன்படிக்கை இருக்கும் | 5:23 | நீர் உழும் நிலத்தில் கல்லுகள் இருக்காது |
| உம்முடைய வாசஸ்தலத்தை விசாரிக்கும்போது | 5:24 | உம்முடைய பொருட்களை நீர் கணக்குப் பார்க்கும்போது |
| நிர்பந்தம் | 6:2 | கஷ்டங்கள், பாடுகள் |
| தொடமாட்டேன் என்கிறது | 6:7 | அருவருக்கிறது |
| அரோசிகமான போஜனம் | 6:7 | ருசியற்ற உணவு/ விரும்பத்தகாத உணவு |

| | | |
|---|---|---|
| மரத்திருப்பேன் | 6:10 | வேதனையை மறந்து இருப்பேன் |
| மறைத்து வைக்கவில்லை | 6:10 | நிராகரிக்கவில்லை, எதிர்க்கவில்லை |
| வல்லடிக்காரர் | 6:23 | கொடூரர் |
| காரியம் என்ன | 6:25 | பிரயோஜனம் என்ன |
| பிரத்தியட்சமாய் | 6:28 | திட்டவட்டமாய் |
| நீங்கள் திரும்புங்கள், அக்கிரமம் காணப்படாதிருக்கும் | 6:29 | நிறுத்துங்கள், அநீதியாய் பேசுவதை நிறுத்துங்கள் |
| நான் என் உமிழ்நீரை விழுங்குமட்டும் | 7:19 | என் எச்சிலை விழுங்கும் படிகூட என்னை விடமாட்டீரா |
| என்னை நெகிழாமலும் | 7:19 | எத்தனைகாலம் தான் என்னை தொடர்ந்து பிடியாமலும் விடாமலும் இருப்பீர் |
| மன்னுயிரை | 7:20 | மானிடரை |
| ஏற்கனவே தேடி | 8:5 | நன்றாய்த் தேடி |
| சாங்கோ பாங்கமாக்குவார் | 8:6 | ஆசீர்வதிப்பார் |
| அவருக்கு உத்தரவு சொல்லமாட்டானே | 9:3 | அவருக்கு பதில் அளிக்க முடியாதே |
| துருவச் சக்கர நட்சத்திரங்கள் | 9:9 | வடதுருவ விண்மீன் குழு |
| மிருகசீரிஷம் | 9:9 | மார்கழி விண்மீன் குழு |
| அறுமீன் | 9:9 | கண்களுக்குக் காணப்படும் ஆறு நட்சத்திரங்களை கொண்ட கார்த்திகை விண்மீன் குழு |
| தட்சண மண்டலங்கள் | 9:9 | தென்திசை விண்மீன் குழுக்கள் |
| அசுப்பிலே | 9:23 | சடுதியிலே, திடீரென, மிக வேகமாக |
| அங்கலாய்பை | 9:27 | முறையிடுதலை, பிராது சொல்லுதலை, குறை கூறுதலை |
| வருத்தங்கள் | 9:28 | பாடுகள், சஞ்சலங்கள் |
| யோசனையை | 10:3 | சூழ்ச்சியை |
| பால்போல் வார்த்து, தயிர்போல் உறையப் பண்ணினீர் அல்லவோ? | 10:10 | வார்த்த பால், பாலாடைக் கட்டியாக மாறுவதுபோல், என் தாயின் கருவில் என்னை உருவாக்கினீர் அல்லவோ? |
| என் ஆவியை | 10:12 | என் உயிரை |

| | | |
|---|---|---|
| என் தலையை நான் எடுக்கமாட்டேன் | 10:15 | எனக்குக் கௌரவம் இல்லை, நான் தலைதூக்க முடியவில்லை |
| மரணாந்தகாரமுமான | 10:21 | மரண இருள் சூழ்ந்த |
| வாய்ச் சாலகன் | 11:2 | வாயாடி, வாயால் சிலம்பம் அடிப்பவன், வாய் சொல்லில் வீரன் |
| மாயத்தை | 11:11 | ஒன்றுமில்லாமையை, வஞ்சகத்தை |
| புத்தியில்லாத மனிதன் காட்டுக்கழுதைக்கு ஒப்பாகப் பிறந்திருந்தாலும் பெருநெஞ் சுள்ளவனாயிருக்கிறான் | 11:12 | முட்டாளை மூளையுள்ளவனாக மாற்றுவதைப் பார்க்கிலும் காட்டுக்கழுதையை அடக்குவது இலகுவானது, மூடனாக இருந்தாலும் மனிதன் பெருமையுள்ளவனாக இருக்கிறான் |
| காலிடறினவர்களுக்கு | 12:5 | தத்தளிக்கும் ஏழைகளுக்கு |
| கீழது மேலதாக்கும் | 12:15 | பாழாக்கும், நாசமாக்கும் (பூமியை புரட்டிப் போடும்) |
| இடுப்புகளைக் கச்சை கட்டுகிறார் | 12:18 | கைதிகளாக்குகிறார் |
| மந்திரிகளை | 12:19 | குருக்களை |
| சிறைபிடித்து | 12:19 | அடிமைகளாக்கி |
| நம்பிக்கையுள்ளவர்கள் | 12:20 | நம்பப்படுகிற மனிதர் |
| வாக்கை விலக்கி | 12:20 | நம்பப்படாதவர் ஆக்கி |
| வாங்கிப் போடுகிறார் | 12:20 | அபகரிக்கிறார் |
| கச்சையை | 12:21 | ஆயுதபலத்தை |
| நெஞ்சை | 12:24 | அறிவை |
| வழக்காடுவீர்களோ | 13:8 | வாதாடுவீர்களோ |
| பரியாசம் பண்ணு | 13:9 | முட்டாளாக்கு |
| ரூபகாரம் பண்ணுவேன் | 13:15 | வாதாடுவேன், எடுத்துரைப்பேன் |
| மாயக்காரன் | 13:16 | கடவுள் பக்தியற்றவன் |
| பலிக்கப்பண்ணுகிறீர் | 13:26 | சொந்தமாக்குகிறீர் |
| தொழுவடித்துப்போட்டு | 13:27 | தண்டனைக்காக கால் அசைக்கக்கூடாதபடி அரைவட்டம் வெட்டப்பட்டு இணைக்கப்படும், இரண்டு பலகைகளில் மாட்டி |
| இரம்மியப்படுமட்டும் | 14:6 | மகிழ்ச்சி அடையும்வரை |
| சுவறிப் போகிறதுபோல | 14:11 | வறண்டு போகிறதுபோல |

| | | |
|---|---|---|
| கொண்டல் காற்றினால் | 15:2 | வறண்ட கீழ்காற்றினால் |
| நெறித்துப் பார்க்கிறதென்ன | 15:12 | கோபமாய்ப பார்க்கிறதென்ன |
| பரிசுத்தவான்களையும் அவர் நம்புகிறதில்லை | 15:15 | பரிசுத்தவான்களும் அவருக்கு பரிசுத்தமாய் தோன்றுவதில்லை |
| அந்நியர் அவர்கள் நடுவே கடந்துபோக இடமில்லை | 15:19 | அந்நிய உபதேசத்தால் அவர்கள் கவரப்படவில்லை |
| பலவந்தம் பண்ணுகிறவன் | 15:20 | கொடூரன் |
| அவன் வருஷங்களின் தொகை மறைக்கப்பட்டிருக்கிறது | 15:20 | அவனுக்கு ஒரு சில வருடங்களே கொடுக்கப்பட்டிருக்கிறது |
| அவன் பலனாயிருக்கும் | 15:31 | அவனுடைய வெகுமதியாக அமையும் |
| அலட்டுண்டாக்கும் தேற்றரவாளர் | 16:2 | பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டில் ஆட்டுபவர்கள், வார்த்தைகளினால் துன்புறுத்தி தேற்றுபவர்கள் |
| கூட்டம் | 16:7 | குடும்பம் |
| வில்லாளர் | 16:13 | வில்வீரர் |
| இரட்டுச்சேலை | 16:15 | துக்க உடை |
| மேல் போட்டுக் கொண்டு | 17:3 | கவனித்து |
| பிணைப்படுவீராக | 17:3 | ஜாமீன் எடுப்பீராக, உறுதியளிப்பீராக, பணையமாய் இருப்பீராக |
| பிரமிப்பார்கள் | 17:8 | திகைப்பார்கள் |
| தீழ்ப்பானவர்கள் | 18:3 | தீண்டத்தகாதவர்கள் |
| கூடாரத்தில் | 18:14 | வீட்டில் |
| பயங்கர ராஜா | 18:14 | சாவு |
| கந்தகம் தெளிக்கப்படும் | 18:15 | எரியும் கந்தகம் அதில் விழுந்து அது சாம்பலாகும் |
| தண்டுப்படைகள் | 19:12 | படைகள் |
| உள்ளிந்திரியங்கள் | 19:27 | நெஞ்சம் |
| காரியத்தின் மூலம் எனக்குள் கண்டுபிடிக்கப்படுகையில் | 19:28 | எனக்கு நேர்ந்த தீமைக்கு நானே மூலகாரணம் என்று கண்டுபிடிக்கப்படுகையில் |
| விடாமல் பதனம் பண்ணி | 20:13 | இடைவிடாமல் ரசித்து வாய்க்குள்ளே ஊறும்படி |

| | | |
|---|---|---|
| பிச்சாய்ப் போகும் | 20:14 | பித்த நீரான நஞ்சாய் மாறிப்போம் |
| விருத்தராகி | 21:7 | வயதுள்ளவர்களாகி வயது சென்றவர்களாகி |
| நிர்வாகத்தோடும் | 21:23 | மதிப்போடும் |
| கோரி | 21:32 | கல்லறை |
| கோரி | 21:32 | கல்லறை |
| நிலைவரப்படும் | 22:28 | நடக்கும் |
| நிலைமை | 22:19 | ஆஸ்தி |
| வேதப்பிரமாணம் | 22:22 | கடவுளின் அறிவுரை |
| நிருணயம் பண்ணினால் | 22:28 | நினைத்தால் |
| திடப்படக்கடவர்கள் | 22:29 | விடுவிக்கப்படட்டும் |
| முரண்டுத்தனம் | 23:2 | அடங்காதிருத்தல் |
| *அங்கலாய்ப்பு* | *23:2* | *முறையிடுதல்* |
| *என் தவிப்பைப் பார்க்கிலும்* | *23:2* | *என் குற்றத்திற்காக நான் படும்பாட்டைப் பார்க்கிலும்* |
| *என் வாதை கடினமானது* | *23:2* | *என் தண்டனை அதிகமாக இருக்கிறது* |
| ரூபிக்கும் | 23:4 | நிரூபிக்கும் |
| என் இருதயத்தை இளக்கரிக்கப்பண்ணினார் | 23:16 | நான் என் தைரியத்தை இழந்துபோகும்படி செய்தார் |
| பட்சிக்கும் | 24:19 | விழுங்கும் |
| பாரிசமாக்குகிறான் | 24:22 | பக்கமாக்குகிறான் |
| அடக்கப்படுகிறார்கள் | 24:24 | அடக்கம் பண்ணப்படுகிறார்கள் |
| வியர்த்தமாக்கத்தக்கவன் | 24:25 | நடக்காதபடி செய்பவன், அபத்தமாக்குகிறவன், பொய்யாக்கத்தக்கவன் |
| உசாவுதுணையாயிருந்து | 26:3 | பக்க பலமாயிருந்து |
| மெய்ப்பொருளை | 26:3 | ஞானத்தை |
| பாதாளம் | 26:6 | மரித்தவர் உலகம் |
| உத்தர மண்டலத்தை | 26:7 | வடக்கு வானத்தை |
| வெட்ட வெளியிலே | 26:7 | வெற்றிடத்திலே |

| | | |
|---|---|---|
| சக்கர வட்டம் தீர்த்தார் | 26:10 | வட்டம் வரைந்தார் |
| கண்டிதத்தால் | 26:11 | கண்டிப்பால் |
| நெளிவான | 26:13 | நெளிந்து காணப்படும் |
| பங்கும் | 27:13 | தண்டனையும் |
| ஆகாரத்தினால் திருப்தியாவதில்லை | 27:14 | பட்டினி கிடந்து சாவார்கள் |
| புலம்புவதில்லை | 27:15 | அழமாட்டார்கள் |
| அக்கினியால் மாறினதுபோலிருக்கும் | 28:5 | அக்கினிக்குழம்பால் மாறினது போலிருக்கும் |
| ஒரு வழியுண்டு | 28:7 | அதற்கு செல்லும் பாதை |
| வல்லூரு | 28:7 | மொட்டைத்தலை கழுகு |
| ஸ்படிகம் | 28:18 | (கிறிஸ்டல்) பளிங்கு |
| புஷ்பராகம் | 28:19 | மஞ்சள் நிற இரத்தினக்கல் |
| ஜலத்துக்கு | 28:25 | கடலுக்கு |
| பிரமாணித்து | 28:25 | தீர்மானித்து |
| அதைப் பார்த்து | 28:27 | ஞானத்தைப் பார்த்து |
| கணக்கிட்டார் | 28:27 | வரையறுத்தார் |
| அதை ஆராய்ந்து | 28:27 | அறிவை ஆராய்ந்து |
| ஆயத்தப்படுத்தி | 28:27 | விளக்கி |
| புத்தி | 28:28 | அறிவு |
| என் கூட்டிலே | 29:18 | என் வீட்டிலே |
| நகைக்கும்போது | 29:24 | புன்முறுவல் செய்தபோது |
| அவர்கள் துணிகரங்கொள்ளவில்லை; என் முகக்களையை மாறச்செய்யவும் இல்லை | 29:24 | அவர்கள் துணிகரங்கொள்ளாமல், உற்சாகம் அடைந்தார்கள். நானும் சந்தோஷம் அடைந்தேன் |
| காஞ்சொறிகள் | 30:7 | புதர்கள் |
| கடிவாளத்தை எனக்கு முன்பாக உதறி விட்டார்கள் | 30:11 | கடிவாளம் இல்லாத குதிரைகள் போல, மிகுந்த மூர்க்கத்துடன் என்னை எதிர்க்கிறார்கள் |
| என் பாதையைக் கெடுத்து | 30:13 | என்னை வழிமறித்து |

| | | |
|---|---|---|
| ஆபத்தை வர்த்திக்கப்பண்ணுகிறார்கள் | 30:13 | ஆபத்தை அதிகரிக்கப்பண்ணுகிறார்கள் |
| பெரிதான திறப்புண்டாக்கி | 30:14 | கோட்டையில் பெரிய உடைப்பை உண்டாக்கி |
| தாங்கள் கெடுத்த வழியில் புரண்டு வருகிறார்கள் | 30:14 | தாங்கள் உண்டாக்கின இடிபாடுகளுக்கு இடையே முன்னேறும் சேனையைப் போல என்னை நோக்கி வருகிறார்கள் |
| துன்னாள் | 30:25 | கஷ்ட காலம் |
| சுமுத்திரையான | 31:6 | சரியாக நிற்கும், சரியான |
| அவன் இடை | 31:20 | அவன் |
| கைப்பட்டை | 31:22 | முழங்கை |
| ஆக்கினையிடுவார் | 31:23 | தண்டிப்பார் |
| உத்தரிக்கக் கூடாது | 31:23 | தாங்கிக்கொள்ள முடியாது |
| இரகசியமாய் மயக்கப்பட்டு | 31:27 | தந்திரமாய் வஞ்சிக்கப்பட்டு |
| என் வாய் என் கையை முத்தி செய்ததுண்டானால் | 31:27 | அவைகளை வணங்கும்படி என் கைகளை ஏறெடுத்ததுண்டானால் |
| என் நடைகளை தொகை தொகையாய்க் காண்பித்து | 31:37 | நான் செய்த யாவற்றையும் மறைக்காமல் சொல்லி, |
| என் காணி பூமி கூப்பிடுகிறதும் | 31:38 | என் நிலம் எனக்கு விரோதமாக கூக்குரல் இடுவதும் |
| அதின் படைச்சால்கள் கூட அழுகிறதும் | 31:38 | நான் நிலத்தையும், பண்ணையையும் உழுத நிலங்களையும் அபகரித்ததுண்டானால் அவைகள் அழுகிறதும் |
| பீறப்பண்ணுகிற | 32:19 | உடைத்துப்போடுகிற, கிழித்துப்போடுகிற |
| முத்திரை போட்டு | 33:16 | எச்சரித்து |
| சாமாசி பண்ணுகிற | 33:23 | விளக்கிக் கூறும் |
| நிதானத்தை | 33:23 | நீதியை, நேர்மையை, சரியாய் ஆராய்ந்தறிதலை |
| அநுசாரியாயிருந்தாரேயாகில் | 33:23 | உதவியாயிருந்தால் |
| பாதி ஜாமம் | 34:20 | நடு இரவு |
| காணாத கையினால் | 34:20 | கடவுளால் |
| பலவந்தர் | 34:20 | கொடியவர், ஆற்றல் உள்ளவர்கள் |
| சமாதானத்தை அருளினால் | 34:30 | பேசாதிருந்தால், அமைதியாயிருந்தால் |

| | | |
|---|---|---|
| யார் கலங்கப்பண்ணுவான் | 34:30 | யார் அவரில் குற்றம் கண்டுபிடிக்க முடியும் |
| இலச்சையானவர்கள் | 36:14 | அவமானம் அடைந்தவர்கள் |
| கையையும் முத்திரித்துப்போடுகிறார் | 37:7 | எல்லா வேலையையும் ஸ்தம்பிக்கச் செய்கிறார் |
| அந்தகாரத்தினிமித்தம் | 37:19 | அறிவீனத்தினிமித்தம், முட்டாள்தனத்தினிமித்தம் |
| பெருத்தவர் | 37:23 | உயர்ந்தவர் |
| விசாலம் | 38:18 | நீள, அகல, ஆழம் |
| பிரயோகிக்கும்படி | 38:23 | உபயோகிக்கும்படி |
| சுகிர்த சம்பந்தத்தை | 38:31 | அழகிய கண் சிமிட்டல்களை, அழகை |
| கட்டுகளை அவிழ்ப்பாயோ | 38:31 | மூன்று பெரிய நட்சத்திரங்களை தன் பெல்ட்டில் கட்டிக்கொண்டு மார்கழி நட்சத்திர மண்டலத்தில் காணப்படும் வேட்டைக்கார அரக்கன் அரையனின் பெல்டை நீ அவிழ்க்கக்கூடுமோ? |
| அந்தகரணங்களில் | 38:36 | (உடம்பின்) உட்பகுதிகளில் |
| கொடிமாசிகள் | 38:37 | மேகங்கள் |
| ஏகபாளமாகவும் | 38:38 | ஒரே கட்டியாகவும் |
| ஆகாயத்துருத்திகள் | 38:38 | மழை மேகங்கள் |
| முன்னணை | 39:9 | தொழுவத்திலுள்ள தீனித்தொட்டி |
| செருக்கு | 39:20 | சீற்றம் |
| தாளடித்து | 39:21 | பரண்டி |
| அம்பறாத் தூணியும் | 39:23 | அம்புக்கூடும் |
| உன் புத்தியினாலே ராஜாளி பறந்து, தெற்குக்கு எதிராக தன் செட்டைகளை விரிக்கிறதோ? | 39:26 | குளிர்காலத்தின் கடுங்குளிரிலிருந்து தப்ப தெற்கு நோக்கிப் பறக்கும்படி, கழுகுக்கு நீ படித்துக் கொடுத்தாயோ? |
| பிகமோத் | 40:15 | ஒருவித டைனோசார் |
| அஸ்திகள் | 40:18 | அவயவங்கள் |
| கவிந்து | 40:22 | மறைத்து |
| மூக்கணாங்கயிறு | 40:24 | மாட்டு மூக்கைத் துளைத்துப்போடும் கயிறு |
| லிவியாதான் | 41:1 | பாம்பு போன்றும், முதலை போன்றும் தோன்றிய, நிலத்திலும் நீரிலும் வாழ்ந்த ஒருவகை டைனோசார் |

| | | |
|---|---|---|
| நார்க்கயிறு | 41:2 | நாரிலிருந்து செய்யப்பட்ட கயிறு |
| எனக்குக் கொடுத்தவன் | 41:11 | எனக்குக் கடன்கொடுத்தவன் |
| பரிசைகளின் அரணிப்பு | 41:15 | அதின் முதுகு கேடகங்களின் வரிசைகள் போல் காணப்படுகிறது |
| நிர்ப்பயமாய் | 41:33 | பயமின்றி |
| சுதந்தரம் கொடுத்தான் | 42:15 | நிலத்தில் உரிமை கொடுத்தான் |

## சங்கீத புஸ்தகம்

(இஸ்ரவேலருடைய பாட்டுப் புத்தகம், ஜெப புத்தகம்)

| | | |
|---|---|---|
| ஜாதிகள் கொந்தளித்து | 2:1 | நாடுகள் கலகம் பண்ணி |
| விருதாக் காரியத்தைச் சிந்திப்பானேன் | 2:1 | பிரயோஜனமற்ற சதித்திட்டங்களை கர்த்தருக்கு விரோதமாக சிந்திப்பானேன் |
| அவர் அபிஷேகம் பண்ணின வருக்கு விரோதமாகவும் | 2:2 | கர்த்தர் அபிஷேகம் பண்ணின மேசியாவுக்கு விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் |
| தீர்மானத்தின் விபரம் | 2:7 | வாக்குத்தத்தின் விபரம் |
| நான் உம்மை ஜநிப்பித்தேன் | 2:7 | நான் உம்மை என்னுடைய மகனாக மகிமைப்படுத்தினேன், இன்று உம்முடைய மகிமையை உமக்குக் கொடுக்கிறேன் |
| சேலா | 3:2 | சத்தத்தை உயர்த்துங்கள், கீத வாத்தியங்களை முழுங்குங்கள், சத்தத்தை, கண்களை, கைகளை உயர்த்தி ஜெபியுங்கள், தாழ குனிந்து பணிந்து வணங்குங்கள், சதா காலமும் ஆமென், அல்லேலுயா, ஆசீர்வாதம், சற்று நிறுத்திப் பொருளைக் கவனிக்க |
| நெகினோத் | 4சங். | நரம்பு வாத்தியம் |
| நெகிலோத் | 5சங். | புல்லாங்குழல் |
| வீம்புக்காரர் | 5:5 | பெருமைக்காரர் |
| இச்சகம் பேசுகிறார்கள் | 5:9 | (ஆனால்) இனிமையாகப் பேசுகிறார்கள் |
| காருணியம் | 5:12 | அன்பு |
| சிகாயோன் | 7சங் | மிகுந்த உற்சாகத்துடன், சிகாயோன் என்னும் இராகத்தில் பாடவேண்டிய பாடல் |
| இதைச் செய்ததும் | 7:3 | இப்படிப்பட்டவைகளில் எதையாவது நான் செய்திருந்தால் |
| உன்னதத்திற்கு எழுந்தருளும் | 7:7 | உன்னதத்திலிருந்து அவர்களை அரசாளும் |

| | | |
|---|---|---|
| கித்தீத் வாத்தியத்தில் | 8சங். | கித்தீத் ராகத்தில் |
| பெலன் | 8:2 | துதி |
| பழிகாரனையும் | 8:2 | பழி வாங்குபவனையும் |
| விசாரிக்கிறதற்கும் | 8:4 | அக்கரை உள்ளவராயிருக்கிறதற்கும் |
| பின்னாகத் திரும்பும்போது | 9:3 | உமது சமுகத்துக்கு முன்பாக முதுகு காட்டும்போது |
| இகாயோன் | 9:16 | பயபக்தியுள்ள இசை |
| மனுஷர் பெலன் கொள்ளாத படி செய்யும் | 9:19 | மனிதர் உம்மை எதிர்த்து நிற்காதபடி பார்த்துக் கொள்ளும் |
| அவன் பார்வைக்கு எட்டாமல் மிக உயரமாயிருக்கிறது | 10:5 | அவன் புரிந்து கொள்ளுவதில்லை |
| ஆகாமியம் காணாமற்போகு மட்டும் அதைத்தேடி விசாரியும் | 10:15 | துஷ்டத்தனம் அழியுமட்டும் அவனைத் தண்டியும் |
| புறஜாதியார் | 10:16 | மற்ற தெய்வங்களை வணங்குபவர்கள் |
| கொந்தளிப்பும் | 11:6 | அனல் காற்றும் |
| பாத்திரத்தின் பங்கு | 11:6 | பானம் |
| ஆண்டவன் | 12:4 | அதிகாரி |
| நித்தம் | 13:2 | எப்பொழுதும் |
| மதிகெட்டவன் | 14:1 | முட்டாள் |
| மிகவும் பயந்தார்கள் | 14:5 | நடுங்கும் நேரம் வரும் |
| அவனுடைய ஆலோசனையை அலட்சியம் பண்ணினீர்கள் | 14:6 | அவனுடைய திட்டங்களை முறியடிக்கிறீர்கள் |
| எடுக்காமலும் | 15:3 | பரப்பாமலும் |
| ஆகாதவன் | 15:4 | கடவுளுக்கு ஆகாதவன் |
| மிக்தாம் | சங்.16 | தலைப்பு-எபிரேய ராகம் ஒன்றின் பெயராக இருக்கலாம் |
| பொற்பணதிக் கீதம் | சங்.16 | கர்த்தரிடம் முழு நம்பிக்கை வைக்கும் பற்றுறுதி கீதம் |
| சுதந்தரம் | 16:5 | உரிமைச் சொத்து |
| உள்ளிந்திரியங்கள் | 16:7 | மனச்சாட்சி |

| | | |
|---|---|---|
| என் பாத்திரத்தின் பங்குமானவர் | 16:5 | நான் பருகும் பானமுமானவர் |
| நம்பிக்கையோடே தங்கியிருக்கும் | 6:9 | பாதுகாப்பாயிருக்கும் |
| என் வாய் மீறாதபடிக்கு | 17:3 | என் வாய் குற்றத்திற்கு ஆளாகாதபடிக்கு |
| செய்கைகளைக் குறித்து | 17:4 | செய்கைகளைப் பொறுத்த மட்டும் |
| நிணந்துன்னியிருக்கிறார்கள் | 17:10 | கொழுப்படைத்தவர்களாயிருக்கிறார்கள் |
| தங்கள் பங்கைப் பெற்றிருக்கிற | 7:14 | தாங்கள் விரும்பினதையெல்லாம் பெற்றிருக்கிற |
| துருகமும் | 18:2 | அரணும் |
| இரட்சணியக் கொம்பும் | 18:2 | உயர்ந்த அடைக்கலமும் |
| துர்ச்சனப்பிரவாகம் | 18:4 | பெரும் எண்ணிக்கையான தீயவர்கள் |
| கரும்புனல்கள் | 18:11 | இருண்ட தண்ணீர்கள் |
| விசாலமான இடத்தில் | 18:19 | பாதுகாப்பான இடத்திலே |
| மான்களுடைய கால்களைப் போலாக்கி | 18:33 | செங்குத்தான கன்மலைகளில் அடிசறுக்காத மான்களின் கால்களைப் போலாக்கி |
| நிறுத்துகிறார் | 18:33 | பத்திரமாக வழி நடத்துகிறார் |
| முனை விழுந்துபோய் | 18:45 | தைரியம் இழந்து |
| தத்தளிப்பாய் | 18:45 | நடுங்கி |
| பகலுக்கு பகல் வார்த்தைகளை பொழிகிறது | 19:2 | ஒவ்வொரு நாளும் அவருடைய மகத்துவமான செயல்களை அடுத்த நாளுக்கு அறிவிக்கிறது |
| இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது | 19:2 | ஒவ்வொரு இரவும் அதை அடுத்த இரவுக்கு அறிவிக்கிறது |
| அதின் காந்திக்கு | 19:6 | அதின் ஒளிக்கு, வெப்பத்திற்கு |
| பிரீதியாயிருப்பதாக | 19:14 | ஏற்றதாயிருப்பதாக |
| ஆலோசனை | 20:4 | விருப்பம் |
| இரட்சியும் | 20:9 | ராஜாவுக்கு வெற்றி கொடும் |
| எங்களுக்கு செவிகொடுப்பாராக | 20:9 | எங்களுக்கு பதிலளியும் |
| இராகத்தலைவனுக்கு | சங்.21 | பாடகர் தலைவனுக்கு |
| அக்கினி சூளையாக்கிப்போடுவீர் | 21:9 | நெருப்பினால் அழிப்பீர் |

| | | |
|---|---|---|
| கனி | 21:10 | தலைமுறை |
| உமது சார்பில் விழுந்தேன் | 22:10 | உம்மைச் சார்ந்திருந்தேன் |
| மரணத் தூள் | 22:15 | மரணப் புழுதி |
| நாய்கள் | 22:16 | துஷ்டர்கள் |
| எனக்கு அருமையானதை | 22:20 | என் உயிரை |
| நினைவு கூர்ந்து | 22:27 | கர்த்தரை நினைவு கூர்ந்து |
| ஆத்துமா | 22:29 | உயிர் |
| ஒரு சந்ததி | 22:30 | இந்த சந்ததி |
| தாழ்ச்சியடையேன் | 23:1 | குறைவுபடேன், குறைந்து போவதில்லை |
| என் பாத்திரம் | 23:5 | எனக்கு கிடைத்த ஆசீர்வாதம் |
| உங்கள் தலைகளை உயர்த்துங்கள் | 24:7 | நன்றாகத் திறவுங்கள் |
| உயருங்கள் | 24:7 | முழுமையாகத் திறவுங்கள் |
| நன்மையில் தங்கும் | 25:13 | கர்த்தரின் ஆசீர்வாதக் கோட்டைக்குள் சுக பத்திரமாகத் தங்கும் |
| வருத்தத்தையும் | 25:18 | வேதனையையும் |
| உள்ளிந்திரியங்களையும் | 26:2 | விருப்பங்களையும் எண்ணங்களையும் |
| வீணர் | 26:4 | பொய்யர், தந்திரக்காரர், கீழ்த்தரமானவர்கள் |
| செம்மையான இடத்தில் | 26:12 | சமமான தளத்தில் |
| ஆனந்த பலிகளையிட்டு | 27:6 | நன்றியால் ஸ்தோத்திர பலிகளை செலுத்தி |
| என்னை நெகிழவிடாமலும் | 27:9 | என் கைகளை நழுவ விடாமலும் |
| கெட்டுப் போயிருப்பேன் | 27:13 | சோர்ந்து போயிருப்பேன் |
| சீரியோனை | 29:6 | எர்மோன் மலையை |
| | சங் - 30 | தலைப்பு. கிரகப்பிரதிஷ்டையின் பாட்டு. தாவீது ஓர்னான் களத்தை வாங்கி, கர்த்தருடைய வீடு இருக்கும் இடம் இதுவே என்று சொல்லி, சாலொமோன் கட்டப்போகும் கர்த்தரின் வீட்டுப் பிரதிஷ்டைக்காக பாடின துதிப்பாடல். (நாளாகமம். 22:1) |
| கீர்த்தனம் பண்ணும்படி | 30:11 | புகழ்ந்து பாடும்படி |
| அருக்களிப்பு | 31:11 | அருவருப்பு, பயப்படும் பொருள் |

| | | |
|---|---|---|
| இடும்பு செய்கிறவனுக்கு | 31:23 | பெருமை பாராட்டகிறவனுக்கு |
| பதிலளிப்பார் | 31:23 | பதிலடி கொடுப்பார் |
| மஸ்கீல் | சங்.32 | ஞானம் நிறைந்த, மஸ்கீல் ராகத்தில் பாடும் பாடல் |
| அடக்கி வைத்த மட்டும் | 32:3 | பாவத்தை அறிக்கையிடாத மட்டும் |
| இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்து கொள்ளும்படி செய்வீர் | 32:7 | நீர் என்னை மீட்டுக்கொண்டதால் நன்றியால் துதி பாடுவேன் |
| சொல்ல ஆகும் | 33:9 | உலகம் உண்டாகும் |
| கட்டளையிட நிற்கும் | 33:9 | நிலை பெறும் |
| சவுரியவான் | 33:16 | போர் வீரன் |
| அபேட்சிக்கிற மனுஷன் யார்? | 34:12 | விரும்புகிற மனிதன் யார்? |
| கபட்டு வசனிப்புக்கும் | 34:13 | பொய் பேசுவதற்கும் |
| என் ஜெபமும் என் மடியிலே திரும்ப வந்தது | 35:13 | ஆனால் கடவுள் எனக்கு செவிசாய்க்கவில்லை |
| எங்கள் கண் கண்டது | 35:21 | அவன் தீமை செய்வதை எங்கள் கண்கள் கண்டன |
| சத்தியத்தை மேய்ந்துகொள் | 37:3 | தேசத்தில் நல்ல மேய்ச்சல் நிலத்தை சுதந்தரித்து பத்திரமாய் குடியிரு |
| அமர்ந்து | 37:7 | அமைதியுடன் |
| காரியசித்தியுள்ளவன் மேலும் | 37:7 | தன் வழியில் வெற்றி அடைபவன் மேலும் |
| கோபத்தை நெகிழ்ந்து | 37:8 | கோபத்தைக் களைந்து |
| நினைவு கூறுதலுக்காக | சங்.38 | கடவுளுக்கு நினைப்பூட்டும் விண்ணப்பமாக |
| இருத்துகிறது | 38:2 | அழுத்துகிறது |
| மதிகேடு | 38:5 | பாவ வாழ்க்கை |
| விசாரப்படுகிறேன் | 38:18 | கவலைப்படுகிறேன் |
| எதுதூன் இடத்தில் | சங்.39 | பாடகர் தலைவன் எதுதூனிடம் |
| வடிவு | 39:11 | அழகு |
| பொட்டரிப்பைப் போல் | 39:11 | பூச்சி அரித்துப் போடுவது போல |
| பின்னிட்டு | 40:14 | தோல்வியடைந்து |

| | | |
|---|---|---|
| என் பேரில் ஆஆ!ஆஆ! என்று சொல்லுகிறவர்கள் | 40:15 | என்னைக் கிண்டல் பண்ணுகிறவர்கள் |
| அக்கிரமம் | 41:6 | அவதூறு |
| சிறுமலை | 42:6 | மிசார் மலை (எர்மோன் மலை அருகில் உள்ள) |
| மதகுகளின் | 42:7 | நீர்வீழ்ச்சிகளின் |
| திரைகள் | 42:7 | பெரிய அலைகள் |
| இடைந்து | 44:10 | பயந்து |
| சக்கந்தம் | 44:13 | இகழ்ச்சி |
| பரியாசம் | 44:13 | கிண்டல், கேலி |
| நேசப்பாட்டு | சங்.45 | அரச மாளிகை திருமண வாழ்த்துப்பா |
| பொங்குகிறது | 45:1 | நிரம்புகிறது |
| என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தாணி | 45:1 | என் நாவு திறமை வாய்ந்த கவிஞனின் பேனா |
| சத்தியத்தினிமித்தமும், நீதியுடன் கூடிய சாந்தத்தினிமித்தமும் | 45:4 | உண்மையை காத்திட, நீதியை நிலைநாட்டிட |
| ஜனசதளங்கள் | 45:5 | ஜனக் கூட்டங்கள் |
| உமது தோழரைப் பார்க்கிலும் | 45:7 | மற்ற அரசர்களைவிட |
| ஆனந்த தைலத்தினால் | 45:7 | அதிக ஆசீர்வாதத்தால் |
| அரசரின் குமாரத்திகள் உண்டு | 45:9 | அரச வம்சத்தில் பிறந்தவர்கள் உண்டு |
| சிந்தித்துக்கொள் | 45:10 | நான் சொல்வதைக் கேள் |
| தீரு குமாரத்தி | 45:12 | உலகத்தின் பெரிய செல்வந்தர்களாகிய தீரு மக்கள் |
| உமது பிதாக்களுக்குப் பதிலாக .........இருப்பார்கள் | 45:16 | உமது மூதாதையர் ஆண்டஇடத்தில் ராஜாக்கள் ஆவார்கள் |
| பிரபுக்களாக | 45:16 | அரசாளுபவர்களாக |
| கொந்தளித்தது | 46:6 | கலக்கமுற்றன |
| வடிப்பமான | 48:2 | அழகான |
| கர்த்தரின் நகரத்தில் கண்டோம் | 48:8 | கர்த்தரின் நகரத்தின் மகிமையைக் கண்டோம் |
| சீயோன் பர்வதம் மகிழ்வதாக | 48:11 | சீயோன் மக்கள் மகிழ்வார்களாக |

| | | |
|---|---|---|
| கொத்தளங்களை | 48:12 | காவல் கோபுரங்களை |
| உணர்வை | 49:3 | விவேகமானவற்றை |
| உவமை மொழிக்குச் சாய்த்து | 49:4 | நீதிமொழிக்கு செவிசாய்த்து |
| என் மறை பொருளை | 49:4 | அதின் புதிரை |
| வெளிப்படுத்துவேன் | 49:4 | விடுவிப்பேன் |
| தொடருகிறவர்களுடைய அக்கிரமம் | 49:5 | தொடருகிறவர்களால் வரும் ஆபத்து |
| அழிவைக் காணாமல் | 49:7 | நரகத்தில் தள்ளப்படாதபடி |
| என்றைக்கும் உயிரோடிருக்கும்படி | 49:7 | பரலோகத்தை சுதந்தரிக்கும்படி |
| அவர்கள் ஆத்தும மீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது | 49:9 | சகல செல்வத்தையும் கொடுத்து ஆத்துமாவை மீட்டுக்கொள்வது ஒருபோதும் முடியாத காரியம் |
| பைத்தியம் | 49:13 | மதியீனம் |
| வசனித்து | 50:1 | பேசி |
| அந்தகரணத்தில் | 51:6 | ஆழ் மனதில் |
| ஈசோப்பினால் | 51:7 | ஈசோப் தளிர் இலையின் நறுமணத்தினால் |
| என்னை கழுவியருளும் | 51:7 | என் பாவத்தைப் போக்கும் |
| நிலைவரமான | 51:10 | உறுதியாய் நிலைத்து நிற்கும் |
| இரட்சணியம் | 51:12 | இரட்சிப்பு |
| பாதகருக்கு | 51:13 | பாவிகளுக்கு |
| பாவிகள் | 51:13 | என்னைப்போன்ற பாவிகள் |
| நொறுங்குண்டதும் நறுங்குண்டதும் | 51:17 | தாழ்மையானதும், உடைந்த, மனந்திரும்பினதுமான, குற்றம் உணர்ந்த, நைந்த |
| எருசலேமின் மதில்களை கட்டுவீராக | 51:18 | எருசலேமுக்கு நன்மைசெய்யும் |
| நீதியின் பலிகளில் | 51:19 | சுத்த இருதயம் உள்ளவர்கள் செலுத்தும் பலிகளில் |
| யதார்த்தம் | 52:3 | உண்மை |
| உம்முடைய பரிசுத்தவான்களுக்கு | 52:9 | உம்முடைய பரிசுத்தவான்களுக்கு முன்பாக உம்முடைய |

| | | |
|---|---|---|
| முன்பாக அது நலமாயிருக்கும் | | நாமம் எவ்வளவு நல்ல நாமம் என்று புகழுவேன் |
| நீ | 53:5 | (இஸ்ரவேல்) |
| நிகனோத் | சங்.55 | மெல்லிய கம்பிகளால் இசை மீட்டும் கருவி |
| அருக்களிப்பு | 55:5 | சாவின் பயம் |
| பிரிந்து போகப் பண்ணும் | 55:9 | தாறுமாறாக்கும் |
| அலைச்சல்கள் | 56:8 | கவலைகள், புலம்பல்கள் |
| துருத்தியில் | 56:8 | (பாட்டிலில்) திராட்ச இரசம் வைக்கும் தோல் பையில் |
| வெளிச்சத்திலே | 56:13 | தேசத்திலே |
| மௌனமாயிருக்கிறவர்களே | 58:1 | ஆட்சிபீடத்தில் இருக்கிறவர்களே, நீதியையும், நியாயத்தையும் எதிர்ப்பதற்கு மாத்திரம் தான் வாயைத் திறப்பீர்களோ? |
| பேதலிக்கிறார்கள் | 58:3 | வழி தவறுகிறார்கள் |
| பால சிங்கங்கள் | 58:6 | அதிக பலம்வாய்ந்த எதிரிகள் |
| பச்சையானதையும் எரிந்து போனதையும் | 58:9 | வாலிபரையும், கிழவரையும் |
| திரும்பி வந்து | 59:6 | வேவு பார்க்க திரும்பி வந்து |
| ஊளையிட்டு | 59:6 | பதுங்கி |
| நீதி சரிக்கட்டுதலை | 59:10 | நியாயமான தண்டனை |
| மறந்து போவார்களே | 59:11 | படிப்பினைகளை மறந்து போவார்களே |
| நெருக்கமுண்டான | 59:16 | நெருக்கடி உண்டான (ஆபத்து) |
| பிரியர் | 60:5 | பிரியமானவர்கள் |
| பரிசுத்தத்தைக் கொண்டு | 60:6 | பரிசுத்த பர்வதத்திலிருந்து |
| எப்பிராயீம் என் தலையின் பலன் | 60:7 | எப்பிராயீமிலிருந்து வீரர்கள் தோன்றுவார்கள் |
| யூதா என் நியாயப்பிரமாணிகன் | 60:7 | யூதாவிலிருந்து ராஜாக்கள் எழும்புவார்கள் |
| பாத பாத்திரம் | 60:8 | பாதம் கழுவும் பாத்திரம்; தாழ்மையுள்ள வேலைக்காரர் |
| பெலிஸ்தியாவே என்னிமித்தம் ஆர்ப்பரித்துக்கொள் | 60:8 | பெலிஸ்தியாவே என்னைவென்று சந்தோஷப்பட நினைத்தாயோ? நான் உன்னை வென்று ஆர்ப்பரிப்பேன் |

| | | |
|---|---|---|
| ஏதோமின் மேல் என் பாதரட்சையை எறிந்துபோடுவேன் | 60:8 | ஏதோமியரை அடிமைகள் ஆக்குவேன் |
| மேன் மக்கள் | 62:9 | பேரும் புகழும் பெற்றவர்கள் |
| தேவன் ஒரு தரம்விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன் | 62:11 | வல்லமை தேவனுடையது என்று (தேவன்) ஒரு தடவைக்கும் மேலாக சொல்லக் கேட்டிருக்கிறேன் |
| விடாய்த்ததும் | 63:1 | உலர்ந்ததும் |
| நிலத்திலே | 63:1 | நிலத்தைப் போல |
| கையெடுப்பேன் | 63:4 | கும்பிடுவேன் |
| நிணத்தையும் | 63:5 | ஊனையும் |
| அமைந்து | 65:1 | அமைதியாக |
| பூமியை விசாரித்து | 65:9 | பூமியின் மேல் அக்கரை காட்டி, கண்காணித்து |
| படைச்சால்கள் | 65:10 | உழப்பட்ட நிலம் |
| நெய்யாய் பொழிகிறது | 65:11 | நல்ல அறுவடை கொண்டு வருகிறது |
| வனாந்தர தாபரங்களிலும் பொழிகிறது | 65:12 | பாலைநிலமும் செழிப்படைகிறது |
| மேடுகள் | 65:12 | மலைகள் |
| இச்சகம் பேசி | 66:3 | நடுங்கி |
| இடுப்புகளின்மேல் வருத்தமான | 66:11 | முதுகுகளின்மேல் பளுவான |
| இரட்சணியமும் விளங்கும்படியாய் | 67:1 | நீர் கொடுக்கும் விடுதலையை உணரும்படியாய் |
| யேகோவா | 68:4 | ஆண்டவராகிய கடவுள் |
| விசாரிக்கிறவர் | 68:5 | நம்மில் அக்கரை காட்டுகிறவர் |
| அவாந்தரவெளி | 68:7 | பாலைநிலம் |
| வானமும் பொழிந்தது | 68:8 | மழை பெய்தது |
| சம்பூரண மழையை | 68:9 | ஏராளமான மழையை |
| ஆண்டவர் வசனம் தந்தார் ......................... பங்கிட்டாள் | 68:11-12 | ஆண்டவர் பேசினார். நம்மைத் தாக்க வந்த ராஜாக்களும் படை வீரரும் தத்தளித்து ஓடினர். அந்த சந்தோஷமானசெய்தியை பிரசித்தப் படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி. இஸ்ரவேலின் பெண்கள் கொள்ளைப் பொருட்களைப் பங்கிட்டனர். |

| | | |
|---|---|---|
| வெள்ளியால் அலங்கரிக்கப் பட்ட புறாசிறகுகள் | 68:13 | நீங்கள் வீட்டிலே வேலைசெய்தாலும், புறாக்களின் சிறகுகள் புறாக்களை மூடுவது போல, வெள்ளியும் பொன்னுமான அணிகலன்களை உடம்பு முழுவதும் அணிந்து ஜொலிப்பீர்கள். |
| ஏன் துள்ளுகிறீர்கள் | 68:16 | இனி நீங்கள் பெருமையாய் துள்ளமுடியாது |
| இந்தப் பர்வதத்தில் | 68:16 | சீயோன் மலையிலே |
| துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் | 68:18 | ஒரு காலத்தில் கலகம் பண்ணின மனிதருக்காகவும் |
| வரங்களைப் பெற்றுக்கொண்டீர் | 68:18 | வரங்களை அளித்தீர் (எபே.4:8) |
| நாணலிலுள்ள மிருக கூட்டத்தையும் | 68:30 | எகிப்தையும் |
| ரிஷப கூட்டத்தையும் | 68:30 | காளைகள் போன்று தோன்றும் கூட்டத்தையும் |
| சத்துவத்தையும் | 68:35 | சக்தியையும், ஊக்கத்தையும், பலனையும் |
| ஆத்துமா மட்டும் | 69:1 | கழுத்து மட்டும் |
| நிமித்தமில்லாமல் | 69:4 | காரணமில்லாமல் |
| நான் எடுத்துக்கொள்ளாததை நான் கொடுக்கவேண்டியதாயிற்று | 69:4 | காரணமில்லாமல் நான் எடுத்துக்கொள்ளாததை திருப்பித்தா என்கிறார்கள் |
| என் நிமித்தம் நாணம் அடையாதிருப்பார்களாக | 69:6 | என்னால் அவமானம் அடையாதிருப்பார்களாக |
| அனுக்கிரக காலத்திலே | 69:13 | கருணை காட்டும் காலத்திலே, ஆதரவு காட்டும் காலத்திலே,தயவு காட்டும் காலத்திலே |
| ஆழம் | 69:15 | ஆழமான கடல் |
| பாதாளம் | 69:15 | படு குழி |
| கடாட்சித்தருளும் | 69:16 | இரக்கம் காட்டும் |
| ஆ,ஆ,ஆ,ஆ,என்பவர்கள் | 70:3 | என்னைக் கேலி பண்ணுபவர்கள் |
| புதுமை | 71:7 | அதிசயப் பிறவி |
| இலச்சை | 71:13 | அவமானம் |
| நியாயத்தீர்ப்புகளையும் | 72:1 | நீதியின்படி நியாயம் வழங்கும் திறமையையும் |
| நீதியையும் | 72:1 | தெய்வ பக்தியையும் |
| அவர் பிழைத்திருப்பார் | 72:15 | அவர் நீடுழி வாழ்க |

| | | |
|---|---|---|
| நரர் | 73:5 | மனிதர் |
| உபாதி | 73:5 | வாதை |
| சரப்பணி | 73:9 | கழுத்தில் அ ணியும் அணிகலன் |
| தங்கள் வாய் வானமட்டும் எட்ட பேசுகிறார்கள் | 73:9 | அவர்கள் கடவுளுக்கு விரோதமாக பேசுகிறார்கள் |
| பூமியெங்கும் உலாவுகிறது | 73:6 | உலகமெங்கும் கட்டளை கொடுக்கிறார்கள் |
| அவருடைய ஜனங்கள் | 73:10 | கர்த்தரின் மக்கள் |
| இந்த வழியாகவே | 73:10 | அவர்கள் வழியாகவே |
| தண்ணீர்கள் அவர்களுக்குப் பரிபூரணமாய் சுரந்து வரும் | 73:10 | தண்ணீரைப் பருகுவதுபோல் அவர்கள் பேச்சை ஆவலுடன் கேட்கிறார்கள் |
| விருதாவாகவே | 73:12 | வீணாகவே |
| இவ்விதமாய் பேசுவேனென்று நான் சொல்வேனானால் | 73:15 | இவ்விதமாய் நான் பேசியிருந்தால் (வசனங்கள்.13,14) |
| இதை அறியும்படிக்கு | 73:16 | கர்த்தரை வெறுப்பவர்கள் ஏன் சுபிட்சமாக வாழ்கிறார்கள் என்று அறியும்படிக்கு |
| அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது | 73:17 | அதை என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை |
| வேஷத்தை இகழுவீர் | 73:20 | கனவில் வரும் மாயத் தோற்றத்தைப் போன்ற அவர்கள் வாழ்க்கையை மறையச் செய்வீர் |
| நீர் விழிக்கும்போது | 73:20 | நீர் எழும்பும் போது |
| என் பங்கு | 73:26 | என்னுடையவர், நான் விரும்புபவர் |
| சுதந்தரமான | 74:2 | சொந்தமாக்கிக் கொண்ட |
| கோத்திரத்தையும் | 74:2 | ஜனத்தையும் |
| வெட்டுகிறவன் பேர்பெற்றவனானான் | 74:5 | காடுகளை வெட்டி மரங்களை அழிப்பவர்கள் போல ஆலயத்தை அழித்தவர்கள் பேர்பெற்றவர்களானார்கள் |
| வாச்சி | 74:6 | உளி |
| சம்மட்டிகளாலும் | 74:6 | உடைக்கும் இரும்பாலும் |
| அடையாளங்களையும் | 74:9 | அதிசயங்களையும் |

| | | |
|---|---|---|
| முதலைகளின் தலைகளை | 74:14 | கடல் கடவுளாகிய லிவியாதானின் தலைகளை (அழிவையும் தீமையையும் கொண்டுவரும் சக்திகளை) |
| திட்டப்பண்ணினீர் | 74:17 | நிர்ணயித்தீர் |
| காட்டுப்புறாவின் ஆத்துமாவை | 74:19 | உமது ஜனங்களை |
| கரைந்து போகிறது | 75:3 | நடுங்குகிறது |
| கொம்பை உயர்த்தாதிருங்கள் | 75:4 | பெருமை பாராட்டாதிருங்கள் |
| சாலேமில் | 76:2 | எருசலேமில் |
| கொள்ளையுள்ள | 76:4 | எதிரிகளை முறியடித்த |
| அமர்ந்தது | 76:9 | அமைதியானது |
| மனுஷனுடைய கோபம் | 76:10 | உமக்கு விரோதமான மனிதனின் அற்பகோபம் உமது மகிமையை அதிகரிக்கும் |
| வலதுகரத்திலுள்ளவருஷங்களை நினைவுகூறுவேன் | 77:10 | கர்த்தருடைய பலத்த கைகள் நன்மை செய்த வருடங்களை நினைவு கூறுவேன் |
| என் வாயை உவமைகளால் திறப்பேன் | 78:2 | ஞானமுள்ள வார்த்தைகளால் நான் படித்துக் கொடுப்பேன் |
| வெளியிலே | 78:12 | சமவெளியிலே |
| கொழுத்தவர்களை | 78:31 | பலசாலிகளை |
| அவருக்கு இச்சகம்பேசி | 78:36 | அவரைப் புகழ்ந்து |
| நிலைவரப்படவில்லை | 78:37 | உறுதியாக இல்லை |
| மட்டுப்படுத்தினார்கள் | 78:41 | எரிச்சல் அடையச் செய்தார்கள், செயலாற்றவிடாமல் செய்தார்கள் |
| தலைச்சன்கள் | 78:51 | தலைப்பேறுகள் |
| காமின் கூடாரங்கள் | 78:51 | எகிப்தின் (காமின் சந்ததியார்) வீடுகள் |
| மோசம் போக்கும் வில்லைப் போல் துவண்டு | 78:57 | குறி தவறிய அம்பைப் போல் துரோகம் பண்ணி |
| மகிமையை | 78:61 | மகிமையின் சின்னமாகிய உடன்படிக்கைப் பெட்டியை |
| சாட்சி விளங்கும்படி | சங்:80 | சொந்த தேசத்தில் உமது நாமம் மகிமைப்படும்படி ஏறெடுத்த விண்ணப்பம்எப்பிராயீம், பென்யமீன், |
| மனாசே என்பவர்களுக்கு | 80:2 | எப்பிராயீம், பென்யமீன், மனாசே கோத்திரங்களுக்கு |
| வழக்காக வைக்கிறீர் | 80:6 | சர்ச்சை உண்டுபண்ணும் மக்களாக வைக்கிறீர் |

| | | |
|---|---|---|
| சமுத்திரமட்டாகவும் | 80:11 | மத்திய தரைக்கடல் மட்டும் |
| நதிமட்டாகவும் | 80:11 | யூப்ரட்டீஸ் நதி வரைக்கும் |
| விசாரித்தருளும் | 80:14 | கவனித்தருளும் |
| திடப்படுத்தின | 80:15 | பலப்படுத்தின |
| கடாட்சித்தருளும் | 80:15 | காப்பாற்றும் |
| உமது வலதுபாரிசத்துப் புருஷன் | 80:17 | நீர் தெரிந்து கொண்டு நேசிக்கும் மனிதன் |
| திடப்படுத்தின மனுஷகுமாரன் | 80:17 | நீர் பலப்படுத்தின அந்த மனிதன் |
| யோசேப்பிலே சாட்சியாக ஏற்படுத்தினார் | 81:5 | யோசேப்பின் வழி மரபினரான இஸ்ரவேலர் கடைபிடிக்கும்படி ஏற்படுத்தினார் |
| கூடைக்கு | 81:6 | செங்கல்கள் நிறைந்த கூடைக்கு |
| உன் வாயை விரிவாய்த் திற | 81:10 | என்னை சோதித்துப் பார். அதை நான் நிரப்புவேனா இல்லையா என்று பார் |
| தேவர்கள் நடுவிலே விசாரிக்கிறார் | 82:1 | வானலோக நீதி மன்றத்தில் நீதிபதிகளை அவர் நியாயம் விசாரிக்கிறார் |
| லோக பிரபுக்கள் | 82:7 | தலைவர்கள், அதிபதிகள் |
| மறைவிலிருக்கிறவர்கள் | 83:3 | பாதுகாப்பிலிருக்கிறவர்கள் |
| சமமாக்கும் | 83:11 | நீர் செய்தது போல செய்யும் (நியா.7:25; 8:21) |
| வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது | 84:2 | விருப்பமும் ஏக்கமுமாய் இருக்கிறது |
| அடைக்கலான் குருவிக்கு | 84:3 | சிட்டுக்குருவிக்கு |
| தகைவிலான் குருவிக்கு | 84:3 | ஸ்வாலோ பறவைக்கு |
| அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள் | 84:6 | அதை ஆசீர்வாதத்தால் நிரம்பும் குளங்கள் ஆக்கிக் கொள்ளுகிறார்கள் |
| பிரகாரம் | 84:10 | ஆலய முற்றம் |
| ஆகாமியக் கூடாரங்கள் | 84:10 | துஷ்டரின் கூடாரங்கள் |
| அவர் அஸ்திபாரம் | 87:1 | எருசலேம் |
| சொல்லப்படும் | 87:5 | பெருமை பாராட்டப்படும் |
| ஊற்றுகள் எல்லாம் | 87:7 | ஆசீர்வாதத்தின்ஊற்றுகளெல்லாம் |

| | | |
|---|---|---|
| நெகிழப்பட்டிருக்கிறேன் | 88:5 | கைவிடப்பட்டிருக்கிறேன் |
| வருத்தப்படுத்துகிறீர் | 88:7 | தத்தளிக்கப் பண்ணுகிறீர் |
| ராகாபை | 89:10 | கடலில் வாழந்த பெரிய பூதத்தை, அழிவையும் தீமையையும் கொண்டு வரும் சக்தியை |
| கொம்பு உயரும் | 89:17 | ஆற்றல் அதிகரிக்கும், வெற்றி மேல் வெற்றி அடைவோம் |
| வல்லடிக்கு | 89:48 | பலத்தபிடிக்கு |
| விலக்கிவிடுகிறவன் | 89:48 | விடுவிக்கிறவன் |
| நிர்த்தூளியாக்கி | 90:3 | புழுதியாக்கி |
| மனுபுத்திரரே திரும்புங்கள் என்கிறீர் | 90:3 | மனிதரே மீண்டும் புழுதிக்குத் திரும்புங்கள் என்கிறீர் |
| உறுதிப்படுத்தும் | 90:17 | ஆசீர்வதியும் |
| வேடனுடைய | 91:3 | பிசாசினுடைய |
| சத்தியம் | 91:4 | உண்மையுள்ள வாக்குத்தத்தங்கள் |
| பரிசையும் கேடகமும் ஆகும் | 91:4 | பெரிய கேடகமும், சின்ன கேடகமும் ஆகும், பாதுகாப்பாகும் |
| தாபரம் | 91:9 | புகலிடம் |
| புது எண்ணெய் | 92:10 | ஆசீர்வாதம் |
| எழும்பின | 93:3 | எழும்பி உம்மைப் புகழ்கின்றன |
| துன்மார்க்கனுக்கு குழி வெட்டப்படும் வரை | 94:12 | துன்மார்க்கனை நீர் அழிக்கும் வரை |
| தீங்கு நாட்களில் அமர்ந்து இருக்கப்பண்ணுகிறீர் | 94:12 | நீர் எங்களுக்கு தீங்கு நாட்களில் அமைதியைக் கொடுக்கிறீர் |
| நியாயம் நீதியினிடமாகத் திரும்பும் | 94:15 | நியாயம் நீதியின் அடிப்படையில் அமையும் |
| மவுனத்தில் | 94:17 | மரித்தவர்கள் உலகத்தில் |
| விசாரங்கள் | 94:19 | கவலைகள் |
| அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற | 95:10 | வெறுத்து, அவர்கள் வழிதவறிச் செல்லுகிற |
| இளைப்பாறுதலில் | 95:11 | இளைப்பாற ஏற்பாடு செய்த தேசத்தில் |

| | | |
|---|---|---|
| சுவிசேஷம் | 96:2 | நற்செய்தி |
| சாட்சிப் பிரமாணங்கள் | 99:7 | ஒழுங்கு முறைகள், சட்டங்கள் |
| அவரது உண்மை தலைமுறை தலை முறைக்குமுள்ளது | 100:5 | அவர் சதாகாலமும் நம்பத்தக்கவர் |
| மாறுபாடான இருதயம் | 101:4 | வஞ்சகநெஞ்சம் |
| வனாந்தர நாரை | 102:6 | பாலைவனப் பறவை |
| பேர் பிரஸ்தாபம் | 102:12 | புகழ் |
| அதின் கல்லுகள்-மண்ணுக்கு பரிதபிக்கிறார்கள் | 102:14 | அது சர்வ நாசம் அடைந்தாலும் அதற்காக பரிதபிக்கிறார்கள் |
| கட்டி | 102:15 | மீண்டும் கட்டி |
| தாபரித்திருப்பார்கள் | 102:28 | பத்திரமாக இருப்பார்கள் |
| அழிவுக்கு | 103:4 | நரகத்துக்கு |
| குமுறலின் சத்தத்தால் | 104:7 | கட்டளையினால் |
| அவைகள் மலைகளில் ஏறி | 104:8 | அவைகள் மலைகளின் வழியாய் ஓடி |
| தன் பிரபுக்களை அவன் மனதின்படி கட்டவும் | 105:21 | அரசு அலுவலரைப் பயிற்றுவிக்கவும் |
| பூண்டுகள் | 105:35 | பயிர்கள் |
| திறப்பின் வாயிலே | 106:23 | பிரிவினை என்னும் பிளவில் |
| நின்றான் | 106:23 | மன்றாடினான் |
| நியாயஞ் செய்தான் | 106:30 | வாதைக்குக் காரணமானவர்களைக் கொன்று போட்டான் |
| அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது | 106:31 | அவன் நினைக்கப்படுவான் |
| ஜாதிகளிலிருந்து சேர்த்தருளும் | 106:47 | நாடுகளிலிருந்து திருப்பிக் கொண்டு வாரும் |
| வசனம் | 107:20 | போதனை |
| குத்துண்டிருக்கிறது | 109:22 | காயமடைந்திருக்கிறது |
| பராக்கிரமத்தின் நாளிலே | 110:3 | யுத்த நாளிலே |
| யௌவன ஜனம் உமக்குப்பிறக்கும் | 110:3 | பலசாலிகளான உம்முடைய வாலிபர் உமது பரிசுத்த பர்வதங்களுக்கு வருவார்கள் |
| மெல்கிசேதேக்கின் முறைமையின்படி | 110:4 | மெல்கிசேதேக்கின் ஸ்தானத்தில் |

| | | |
|---|---|---|
| ஆகையால் அவர் தமது தலையை எடுப்பார் | 110:7 | ஆகையால் அவர் இளைப்பாறி புது பலம் அடைந்து, தலைநிமிர்ந்து நிற்பார் |
| அவன் கொம்பு | 112:9 | அவன் வலிமை |
| பிள்ளைத் தாய்ச்சியாக்கி | 113:9 | பிள்ளைகளுக்குத் தாயாக்கி |
| விசாலத்திலே வைத்தார் | 118:5 | விடுதலை வாழ்வு கொடுத்தார் |
| இரட்சிப்பின் | 118:15 | விடுதலைச் செய்தியின் |
| நீதியின் வாசல்கள் | 118:19 | தேவாலயத்து வாசல்கள் |
| மூலைக்குத் தலைகல்லாயிற்று | 118:22 | அஸ்திபாரக் கல்லாயிற்று |
| கர்த்தர் உண்டுபண்ணின நாள் | 118:24 | கர்த்தர் உண்டுபண்ணின வெற்றியின் நாள் |

(119ம் சங்கீதம் எபிரேய எழுத்துகளின் முதல் எழுத்து (ஆலெப்) அகர வரிசைப்படி எட்டு வசனங்கள் வீதம் 22 பகுதிகளைக் கொண்டுள்ளது)

| | | |
|---|---|---|
| சாட்சிகளின் | 119:14 | கட்டளைகளின் |
| நடுக்கம் என்னைப்பிடித்தது | 119:53 | எனக்குக் கோபம் உண்டாயிற்று |
| நிதானிப்பையும் | 119:66 | ஞானத்தையும் |
| விசுவாசமாயிருக்கிறேன் | 119:66 | நம்பிக்கையாயிருக்கிறேன் |
| நிணந்துன்னிக் கொழுத்திருக்கிறது | 119:70 | அறிவில்லாமலிருக்கிறது |
| புகையிலுள்ள துருத்தி | 119:83 | புகைபடிந்த தோல் பை |
| சமஸ்தமும் | 119:91 | சகலமும் |
| கற்பனையோ | 119:96 | கட்டளையின் நிறைவோ |
| களிம்பைப் போல | 119:119 | உலோகம் உருக்கப்படும் போது வரும் கழிவைப்போல |
| பிரசித்தம் | 119:130 | விளக்கம் |
| நீர்த்தாரை | 119:136 | கண்ணீர் அருவியாக |
| குறித்த ஜாமங்களுக்கு முன்னே | 119:148 | இரவில் அடிக்கடி |
| கொள்ளையுடமை | 119:162 | பொக்கிஷம் |
| ஆரோகண சங்கீதங்கள் | 120-134 | கர்த்தரை ஆராதிக்க சீயோன் மலைக்குப் போகும்போது பாடும் பாட்டுகள் |

| | | |
|---|---|---|
| மேசேக், கேதார் கூடாரங்கள் | 120:5 | காட்டுமிராண்டிகளின் இடங்கள் |
| உறங்குவது | 121:4 | கண்ணயர்வது, |
| இசை விணைப்பான | 122:3 | பலமான, அழகான, செம்மையான |
| தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவது போல | 126:4 | தெற்கேயுள்ள நெகேப் பாலைவனத்தின் வறண்ட ஓடைக்கு மழையானது மீண்டும் தண்ணீரைக் கொண்டுவருவது போல எங்களை பழைய நல்ல நிலைக்குத் திருப்பும் |
| நேரப்பட வேலையிலே தரித்து | 127:3 | ஒரு ஜாண் வயிற்றுக்காக அதிகாலையில் இருந்தே வேலை செய்து |
| ஒலிவமரக் கன்றுகளைப் போல இருப்பார்கள் | 128:3 | செழிப்பாக இருப்பார்கள் |
| உழுகிறவர்கள் | 129:3 | என் எதிரிகள் |
| தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள் | 129:3 | (உழுத இடத்தில் உண்டாகும் பள்ளங்கள்) என் முதுகை மிகவும் காயப்படுத்தினார்கள் |
| வழிப்போக்கர்சொல்லுவதுமில்லை | 129:8 | வழிப்போக்கர் சொல்ல மறுப்பார்களாக |
| ஆழங்களிலிருந்து | 130:1 | துயரத்தில் மூழ்கி |
| வார்த்தையை | 130:5 | உதவி செய்வதாக கொடுக்கப்பட்ட வார்த்தையை |
| தாயின் பால்மறந்த குழந்தையைப்போல் | 131:2 | தாயின் மடியில் திருப்தியுடனும், பாதுகாப்புடனும் இருக்கும் குழந்தையைப் போல |
| அடக்கி அமரப்பண்ணினேன் | 131:2 | அமைதியாக இருக்கப்பண்ணினேன் |
| எப்பிராத்தா | 132:6 | பெத்லேகேம் |
| எப்பிராத்தாவிலே அதின் செய்தியைக் கேட்டு | 132:6 | முதலாவது, நாம் உடன்படிக்கைபெட்டி எப்பிராத்தாவிலே இருப்பதாகக் கேள்விப்பட்டு |
| வனத்தின் வெளிகளில் அதைக் கண்டோம் | 132:6 | தூரத்தில் உள்ள கீரியாத் யாரீமின் வனத்தின் வெளியில் அதைக் கண்டோம் |
| உமது தாசனாகிய தாவீதின் நிமித்தம் புறக்கணியாதிரும் | 132:10 | உமது மக்களுக்காக நீர்தெரிந்துகொண்ட தாவீதைப் புறக்கணியாதிரும் |
| ஒரு கொம்பை | 132:17 | பலம் பொருந்திய ஒரு ராஜாவை |
| பூக்கும் | 132:18 | பிரகாசிக்கும் |
| பண்டசாலை | 135:7 | கிடங்குகள் |

| | | |
|---|---|---|
| அல்லேலுயா | 135:21 | ஆண்டவரைப் போற்றுங்கள் |
| பிரஸ்தாபம் | 138:2 | மகிமை |
| மேட்டிமையானவன் | 138:6 | பெருமைக்காரன் |
| நெகிழவிடாதிருப்பீராக | 138:8 | கைவிடாதிரும் |
| உமது கரத்தை என்மேல் வைக்கிறீர் | 139:5 | என்னை பாதுகாக்கிறீர் |
| கடையாந்தரங்கள் | 139:9 | கடைசி எல்லைகள் |
| இருள் என்னை மூடிக் கொள்ளுமென்றாலும் | 139:11 | இருளிலே நான் போய் மறைந்து கொள்ள முயற்சித்தாலும் |
| என் தலையை மூடினீர் | 140:7 | என் தலையைப் பாதுகாத்தீர் |
| சார்புகளிலிருந்து | 141:6 | உச்சிகளிலிருந்து |
| உமது நாமத்தினிமித்தம் என்னை உயிர்ப்பியும் | 143:11 | உமது இரட்சிக்கும் வல்லமையினால் என்னை உயிர்ப்பியும் |
| தயாபரரும் | 144:2 | தயவாய் பாதுகாப்பவரும், அன்பு காட்டுபவரும் |
| சித்திரந்தீர்ந்த அரமனை மூலைக்கற்களைப் போலவும் | 144:12 | அரமனையின் மூலையிலுள்ள அழகான தூண்களைப் போலவும் |
| குடியோடிப் போகுதலும் | 144:14 | கைதிகளாகப் பிடிபட்டுப்போகுதலும் |
| வார்த்தை | 147:15 | கட்டளை |
| துணிக்கைகளாக | 147:17 | கூழாங்கற்களாக |
| தண்ணீர்கள் | 148:4 | மேகங்கள் |
| ஒரு கொம்பை உயர்த்தினார் | 148:14 | வல்லமையைக் கொடுத்தார் |
| தீங்குழல் | 150:4 | புல்லாங்குழல் |

## நீதிமொழிகள்

(அறிவுரைகள்)

| | | |
|---|---|---|
| வினா | 1:4 | புத்திக்கூர்மை |
| ஒளி வைத்திருக்கிறார்கள் | 1:18 | கண்ணி வைத்திருக்கிறார்கள் |
| சரப்பணி | 1:9 | மணிமாலை |
| ஒலிமுகவாசல் | 1:21 | பட்டணத்து வாசல் |

| | | |
|---|---|---|
| ஆகடியம் | 1:27 | கேலி |
| யோசனைகளினால் | 1:31 | சூழ்ச்சிகளினால் |
| பேதைகளின் மாறுபாடு | 1:32 | முட்டாள்களின் கீழ்ப்படியாமை |
| நிர்விசாரம் | 1:32 | கவலையின்மை, திருப்தி |
| விக்கினமின்றி | 1:33 | தீங்கு இல்லாமல் |
| நாபிக்கு | 3:8 | உடலுக்கு ( தொப்புளுக்கு) |
| இரகசியம் | 3:32 | உறவு |
| ஆகாமியம் | 4:17 | துஷ்டத்தனம் |
| வாயின் தாறுமாறுகள் | 4:24 | நேர்மையற்ற பேச்சு |
| பரஸ்திரீ | 5:3 | ஒழுக்கங்கெட்ட பெண் |
| ஜீவ மார்க்கம் | 5:6 | வாழ்வுக்குச் செல்லும் வழி |
| விகாரப்படும் | 5:6 | வித்தியாசப்படும் |
| பாய்வதாக | 5:16 | பாய வேண்டுமோ? |
| ஊற்றுகண் | 5:18 | ஆண்மை |
| பிணைப்பட்டு | 6:1 | பொறுப்பேற்று |
| பேலியாளின் | 6:12 | துஷ்டத்தனத்தின் |
| ஆகடியம் பேசித்திரிகிறான் | 6:12 | பொய் பேசி அலைகிறான் |
| போதனை செய்கிறான் | 6:13 | ஏமாற்றுகிறான் |
| திரியாவரமுண்டு | 6:14 | திருட்டும், புரட்டும் உண்டு |
| பிணைத்து | 6:14 | திட்டமிட்டு |
| ஆறு காரியங்களை--- ஏழும் அவருக்கு அருவருப்பானவை | 6:16 | ஏழு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார். அவைகளை அவர் சகித்துக்கொள்ளுவதில்லை |
| பிணைக்கும் | 6:18 | வகுக்கும், தீட்டும் |
| அபத்தம் | 6:19 | பொய் |
| போதக சிட்சை | 6:23 | கண்டித்து கற்று கொடுத்தல் |
| ஜீவ வழி | 6:23 | நல்வாழ்வுக்கு வழி |

| | | |
|---|---|---|
| ஒரு அப்பத்துணிக்கையையும் இரக்க வேண்டியதாகும் | 6:26 | பிச்சைக்காரன் ஆவாய் |
| வாதையையும் இலச்சையையும் | 6:33 | தண்டனையையும் அவமானத்தையும் |
| பலகணி | 7:6 | பின்னல் தட்டி, குறுக்கும் நெடுக்குமான சட்டங்கள் உள்ள ஜன்னல் |
| விசித்திரமான | 7:16 | வினோதமான |
| சம்போகமாயிருப்போம் | 7:18 | அன்பிலே நீடிப்போம் |
| மதுரவாக்கு | 7:21 | இனிய சொற்கள் |
| நடைகூடம் | 8:3 | முற்றம் |
| மேம்பாடான | 8:6 | மேலான, முக்கியமான, நல்ல, உயரிய, சிறந்த |
| அதிகாலையில் | 8:17 | (ஆவலோடு) அதிகாலையில் |
| தமது கிரியைகளுக்கு முன் கொண்டிருந்தார் | 8:22 | கர்த்தர் என்னை ஆரம்ப காலத்திலே உண்டாக்கினார் |
| விலாசத்தை | 8:27 | அடிவானத்தை |
| வட்டணிக்கையிலும் | 8:27 | வட்டம் வரைந்து அமைக்கையிலும் |
| தன் ஏழு தூண்களையும் | 9:1 | தன் வீட்டைத் தாங்கின ஏழு தூண்களையும் |
| பரிசுத்தரின் அறிவே அறிவு | 9:10 | பரிசுத்தரைப் பற்றிய அறிவே அறிவு |
| உனக்கென்று ஞானியாவாய் | 9:12 | அதினால் வரும் பலன் உனக்கே உரியதாகும் |
| கொடுமையோ துன்மார்க் கனுடைய வாயை அடைக்கும் | 10:11 | துன்மார்க்கனுடைய பேச்சில் கொடுமை மறைந்திருக்கும் |
| விளைவோ | 10:16 | வருமானமோ |
| கண்டனையை | 10:17 | கண்டனத்தை கடிந்து கொள்ளுதலை |
| அபேட்சையோ | 10:28 | எதிர்பார்ப்போ, நம்பிக்கையோ, விருப்பமோ |
| மாறுபாடுள்ள நாவோ | 10:31 | வஞ்சகம் பேசும் நாவோ |
| சுமுத்திரையான | 11:1 | முத்திரையிடப்பட்ட |
| மாயக்காரன் | 11:9 | கடவுள் பக்தியற்றவன் |
| கையோடு கைகோத்தாலும் | 11:21 | என்னதான் முயன்றாலும் |
| தன் வீட்டைக் கலைக்கிறவன் காற்றை சுதந்தரிப்பான் | 11:29 | தன் ஆஸ்தியை அழிக்கிறவன் காற்றை சுதந்தரிப்பான் |

| | | |
|---|---|---|
| சரிக்கட்டப்படுமே | 11:31 | நீதிமானுக்கு அவன் நீதிக்குத்தக்க பலன் பூமியிலேயே கிடைக்குமாகில் |
| துன்மார்க்கனுக்கும் பாவிக்கும் எத்தனை அதிகம் | 11:31 | எத்தனை அதிகமாக பூமியிலே துன்மார்க்கன் தண்டிக்கப்படுவான் என்பது எவ்வளவு நிச்சயம் |
| நிலைவரப்படான் | 12:3 | நிலைத்து நிற்பதில்லை, பாதுகாப்படையான் |
| இலச்சை | 12:4 | அவமானம் |
| பணிவிடைக்காரனுள்ளவன் | 12:9 | உழைத்து சாப்பிடுகிறவன் |
| இலச்சையை | 12:16 | அவமதிப்பை |
| மூடுகிறவனோ | 12:16 | புறக்கணிக்கிறவனோ |
| பகுதி கட்டுவான் | 12:24 | அடிமை ஆவான் |
| தன் அயலானைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவன் | 12:26 | தன் நண்பனுக்கு வழிகாட்டியாயிருக்கிறான் |
| பொருளோ அருமையானது | 12:27 | தன்னுடைய பொருட்களை பாதுகாக்கிறான் |
| ஆத்துமாவோ புஷ்டியாகும் | 13:4 | (ஜாக்கிரதையுள்ளவர்கள்) உண்டு கொழுக்கிறார்கள் |
| மிரட்டுதலைக் கேளாதிருக்கிறான் | 13:8 | பயப்படாதிருக்கிறான் |
| நீதிமான்களின் வெளிச்சம் சந்தோஷிப்பிக்கும் | 13:9 | நீதிமான்களின் வாழ்க்கை பிரகாசமான ஒளியைப்போலிருக்கிறது |
| அகந்தையினால் வாது பிறக்கும் | 13:10 | பெருமை சண்டையை பிறப்பிக்கும் |
| கைப்பாடாய் | 13:11 | கஷ்டப்பட்டு |
| திருவசனம் | 13:13 | அறிவுரை |
| நியாயம் கிடைக்காமல் கெட்டுப்போகிறவர்களும் உண்டு | 13:23 | ஆனால் அநீதி செய்கிறவன் அதை அபகரிக்க ஏழைகள் ஒன்றும் இல்லாமற் போகிறார்கள் |
| அவனை ஏற்கனவே கண்டிக்கிறான் | 13:24 | அவனை சிட்சிப்பதில் கவனமாயிருக்கிறான் |
| நிதானமாய் | 14:2 | நேர்மையாய் |
| அகந்தைகேற்ற மிலாறுண்டு | 14:3 | (மூடனுடைய) பெருமையான பேச்சு அவன் முதுகுக்கு பிரம்படி கொண்டுவரும் |

| | | |
|---|---|---|
| வரத்துண்டு | 14:4 | விளைச்சல் உண்டு |
| பாவத்தைக் குறித்து பரியாசம் பண்ணுகிறார்கள் | 14:9 | பாவநிவாரணம் செய்வதைக் குறித்து கேலி பண்ணுகிறார்கள் |
| மூர்க்கங்கொண்டு துணிகரமாயிருக்கிறான் | 14:16 | பின்விளைவைப்பற்றி கவலைப்படாமல் முட்டாள் தனமாய் இருக்கிறான் |
| சகல பிரயாசத்தினாலும் | 14:23 | கடும் உழைப்பினால் |
| பிரயோஜனம் உண்டு | 14:23 | லாபம் உண்டு |
| உதடுகளின் பேச்சோ | 14:23 | பேசிப்பேசி நேரத்தைப் போக்கினால் |
| ஞானிகளுக்கு முடி அவர்கள் செல்வம் | 14:24 | ஞானிகள் புகழ்ச்சி அடைகிறார்கள். அதுதான் அவர்கள் செல்வம் |
| மூடரின் மதியீனம் மூடத்தனமே | 14:24 | (மூடருடைய) மதியீனம், மதியீனத்தையே பிறப்பிக்கிறது |
| சொஸ்தமனம் | 14:30 | மனச் சமாதானம் |
| பிரதியுத்தரம் | 15:1 | பதில் |
| மாறுபாடோ | 15:4 | வஞ்சகப் பேச்சோ |
| ஆவி முறிந்துபோம் | 15:13 | உள்ளம் உடைந்துபோகும் |
| தீங்குள்ளவைகள் | 15:15 | போராட்டம்தான் |
| இலைக்கறியே | 15:17 | மரக்கறியே |
| ஆலோசனையில்லாமையால் | 15:22 | நல்ல திட்டங்கள் இல்லாமல் போனதால் |
| சித்தியாமற்போம் | 15:22 | நிறைவேறாது |
| தன் வீட்டைக் கலைக்கிறான் | 15:27 | தன் வீட்டாருக்குத் துன்பத்தை வருவிக்கிறான் |
| ஆவிகளை | 16:2 | உள்ளத்தை |
| உண்டாக்கினார் | 16:4 | குறித்து வைத்திருக்கிறார் |
| கையோடே கைகோத்தாலும் | 16:5 | என்னதான் முயன்றாலும் |
| திவ்விய வாக்கு | 16:10 | நியாயமான தீர்ப்பு, கடவுளுக்கு உகந்த தீர்ப்பு |
| நிறைகோல் | 16:11 | நியாயமான நிறுவை |
| அவருடைய செயல் | 16:11 | அவரால் ஆசீர்வதிக்கப்பட்டவைகள். (வியாபாரத்தில் உண்மையுள்ளவனாயிருந்தால் நீ ஆசீர்வதிக்கப்படுவாய்) |

| | | |
|---|---|---|
| ஆற்றுவான் | 16:14 | தணித்து விடுவான் |
| முகக்களை | 16:15 | முகமலர்ச்சி |
| உதடுகளின் மதுரம் | 16:21 | உதடுகளின் இனிய பேச்சு |
| ஔஷதம் | 16:24 | நன்மை பயக்கும் நல்மருந்து |
| பிரயாசப்படுகிறவன் . . . . . . . . . . . . . . . . . வருந்திக் கேட்கும் | 16:26 | தொழிலாளி, பசியை ஆற்ற கஷ்டப்பட்டு உழைக்கிறான் |
| பேலியாளின் மகன் | 16:27 | கடவுள் பக்தியற்றவன் |
| சீட்டு மடியிலே போடப்படும் | 16:33 | நாம் முடிவு எடுக்கிறோம் |
| குகை | 17:3 | உலோகத்தை உருக்கும் சூளை |
| குரூர தூதன் | 17:11 | ஈவு இரக்கமில்லாத அதிகாரி |
| தன் வாசலை உயர்த்திக் கட்டுகிறவன் | 17:19 | தன் செல்வத்தை வெளிக் காட்டுகிறவன் |
| வாதுப்பிரியன் | 17:19 | சண்டைப்பிரியன் |
| பூமியின் கடையாந்தரங்களில் செல்லும் | 17:24 | நாற்புறமும் செல்லும் |
| தண்டம் பிடிக்கிறதும் | 17:26 | தண்டிக்கிறதும் |
| குளிர்ந்த மனமுள்ளவன் | 17:27 | உணர்ச்சிவசப்படாதவன் |
| பிரிந்து போகிறவன் | 18:1 | சுயநலக்காரன் |
| எல்லா ஞானத்திலும் தலையிட்டுக் கொள்ளுகிறான் | 18:1 | எல்லாருக்கும் நியாயமாய்த் தோன்றுவது அவனுக்கு நியாயமாய்த் தெரியாது |
| ஆத்துமாவுக்கே கண்ணி | 18:7 | உயிருக்கே ஆபத்து |
| அழிம்பனுக்கு | 18:9 | எல்லாவற்றையும் அழிப்பவனுக்கு |
| மனுஷனுடைய ஆவி | 18:14 | மனவலிமை |
| பரிசோதிக்கிறான் | 18:17 | பரிசோதிக்கும்போது உண்மை வெளிப்படும் |
| அதிக சொந்தமாய் | 18:24 | மேலாக |
| கால் துரிதமானவன் | 19:2 | பொறுமையை இழப்பவன் |
| தப்பி நடக்கிறான் | 19:2 | கஷ்டத்துக்குள்ளாவான் |
| கட்டளைகளை | 19:16 | கர்த்தருடைய கட்டளைகளை |

| | | |
|---|---|---|
| தன் வழிகளை அவமதிக்கிறவன் | 19:16 | கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதவன் |
| என்றாலும் அவன் மனம் கர்த்தருக்கு விரோதமாய்த் தாங்கலடையும் | 19:3 | ஆனால், அவன் கடவுளைக் குறை கூறுகிறான் |
| தயை | 19:22 | விரும்பத்தகுந்தது |
| வாசி | 19:22 | கெட்டிக்காரன் |
| கலத்திலே | 19:24 | சாப்பாட்டுத்தட்டிலே |
| பேலியாளின் சாட்சிக்காரன் | 19:28 | கடவுள் பக்தியற்றவன் |
| அக்கிரமத்தை விழுங்கும் | 19:28 | தீங்கை இரசிக்கும் |
| உறுக்குதல் | 20:2 | கோபம் |
| மரக்கால் | 20:10 | அளவு கருவியும் |
| போய்விட்ட பின்போ | 20:14 | வீட்டுக்கு போன பின்போ |
| மெச்சிக் கொள்வான் | 20:14 | வாங்கின பொருளைப் பற்றி உயர்வாகப் பேசுவான் |
| அந்நிய ஸ்திரியினிமித்தம் அவன் கையில் ஈடு வாங்கிக் கொள் | 20:16 | சீர்கெட்ட பெண்ணுக்காக பிணைப்பட்டால் அது ஆபத்தானது |
| பருக்கைக் கற்களால் நிரப்பப்படும் | 20:17 | ஜல்லிக்கற்களால் நிரப்பப்படும் (ஆசீர்வாதமாய் இராது) |
| நடைகள் | 20:24 | வாழ்க்கை |
| பரிசுத்தமானதை விழுங்குகிறதும் | 20:25 | கடவுளுக்குக் காணிக்கை என்று அர்ப்பணம் செய்தபின்பு அதை செலுத்தாது இருத்தலும் |
| நீர்க்கால்கள் | 21:1 | வாய்க்கால்கள் |
| துன்மார்க்கர் போடும் வெளிச்சம் பாவமே | 21:4 | துன்மார்க்கர் காட்டும் இரக்கமும் பாவமே |
| பதறுகிறவனுடைய நினைவுகள் | 21:5 | பதற்றப்படுதல் |
| எண்ணெயையும் | 21:17 | நறுமணப் பொருளையும் (ஆடம்பர வாழ்க்கையையும்) |
| நீதிமானுக்குப் பதிலாக துன்மார்க்கனும் | 21:18 | நீதிமானுக்கு செய்ய நினைத்த தீங்குக்காக துன்மார்க்கனும் |
| செம்மையானவனுக்குப் பதிலாக துரோகியும் | 21:18 | நேர்மையானவனுக்கு நினைத்த தீங்குக்கு பதிலாக துரோகியும் |
| மீட்கும் பொருளாவார்கள் | 21:18 | தீங்குக்கு உள்ளாவார்கள் |

| | | |
|---|---|---|
| இடும்பும் | 21:24 | கர்வமும் |
| அவன் ஆசை | 21:25 | அவன் அதிகத்துக்கு ஆசைப்படுதல் |
| செவிகொடுக்கிறவனோ எப்பொழுதும் பேசத்தக்கவனாவான் | 21:28 | உண்மை பேசுகிறவனோ எப்பொழுதம் நம்பப்படுவான் |
| ஒருவரையொருவர் சந்திக்கிறார்கள் | 22:2 | பணக்காரனுக்கும் ஏழைக்கும் பொதுவான ஒன்று உண்டு |
| நெடுகப் போய் | 22:3 | ஆபத்துக்கு எதிரே போய் |
| தனக்குக் குறைச்சல் உண்டாகவே ஐசுவரியவானுக்கு கொடுப்பான் | 22:16 | தரித்திரன் ஆவான் |
| உன் இனிய சொற்களை இழந்துபோவாய் | 23:8 | நீ அவனைப் புகழ்ந்த புகழ்ச்சி வீணாகும் |
| உள்ளிந்திரியங்கள் | 23:16 | உள்ளம் |
| நீ....... சயனித்திருக்கிறவன்..... ..........போலும் இருப்பாய் | 23:34 | நீ நடுக்கடலில் பாய்மரக்கப்பலின் கம்பத்தின் உச்சியில் கட்டியுள்ள கயிறுகளை படுக்கையாக்கி, ஆபத்தை உணராமல் அதில் தூங்குபவனைப் போலும் இருப்பாய். |
| அவர்கள் இருவரின் சங்காரத்தையும் | 24:22 | கர்த்தரும் ராஜாவும் கொடுக்கும் தண்டனையை |
| வெளியில் உன் வேலையை | 24:27 | வீட்டுக்கு வெளியே நீ செய்யவேண்டிய வேலையை |
| எத்தனப்படுத்தி | 24:27 | செய்துமுடிக்க தீர்மானித்து |
| வயலில் அதை ஒழுங்காக்கி | 24:27 | வயலிலே விளைச்சல் உண்டாக்கி வீட்டைக் கட்ட உனக்கு போதிய செல்வம் இருக்கிறதா என்று யோசனை செய்து |
| காஞ்சொறி | 24:31 | களைகள் |
| பேர்த்தெழுதின | 25:1 | தொகுத்து எழுதின |
| உடைமை | 25:4 | பொருள் |
| காரியத்தை மறைப்பது | 25:2 | மறை பொருளாக வைப்பது |
| அபரஞ்சிப் பூஷணம் | 25:12 | அழகிய தங்க ஆபரணம் |
| கட்கத்துக்கும் | 25:18 | வாளுக்கும் |

| | | |
|---|---|---|
| வெடியுப்பின் மேல் வார்த்த காடியைப் போலவும் இருப்பான் | 25:20 | வெந்த புண்ணில் வேல் எடுத்துக் குத்துபவனைப் போலும் இருப்பான் |
| விடாய்த்த ஆத்துமா | 25:25 | வறண்ட தொண்டை |
| துன்மார்க்கருக்கு முன்பாக நீதிமான் தள்ளாடுவது | 25:26 | கடவுள் பக்தியுள்ள மனிதன் துன்மார்க்கரை அனுசரித்து நடந்து கொள்ளுதல் |
| ஆவியை | 25:28 | இச்சையை |
| மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி | 26:5 | சில சமயங்களில் மூடனுக்கு அவன் முட்டாள்தனத்தை உணர்த்தும்படி |
| நிஷ்டூரமுள்ளது | 27:4 | அழிக்கத்தக்கது |
| அந்நிய ஸ்திரீக்காக ஈடு வாங்கிக்கொள் | 27:13 | அந்நிய பெண்ணுக்காக பிணைப்படுகிறவனிடம் ஈடு வாங்கிக்கொள் |
| கருக்கிடும் | 27:17 | கூர்மையாக்கும் |
| மனுஷனும் தன் சிநேகிதனுடைய முகத்தை கருக்கிடுகிறான் | 27:17 | ஒருவனுடைய அறிவு அவன் நன்பனின் அறிவைக் கூர்மையாக்குகிறது |
| நொய்யோடே நொய்யாகக் குத்தினாலும் | 27:22 | தானியத்தோடே தானியமாகக் குத்தினாலும், உரலில் இட்டு இடித்தாலும் |
| புல் முளைக்கும், பச்சிலைகள் தோன்றும், மலைப்பூண்டுகள் சேர்க்கப்படும் | 27:25 | புல்லை அறுத்தபின் இளம்புல் முளைக்கும். மலையில் முளைத்துள்ள புல்லை சேர்த்து வை |
| நற்சீர் | 28:2 | சட்டமும், ஒழுங்கும் |
| திரியாவரக்காரன் | 28:6 | புரட்டும் திருட்டும் உள்ளவன் |
| பயந்திருக்கிறவன் | 28:14 | கடவுளுக்கு பயப்படுகிறவன் |
| வீணர் | 28:19 | காலத்தை வீணாக்குகிறவர்கள் |
| வன்கண்ணன் | 28:22 | பொறாமைக் கண்ணோடுப்பார்க்கிறவன் |
| பதறுகிறான் | 28:22 | துடிக்கிறான், அவசரப்படுகிறான் |
| அங்கீகாரம் பெறுவான் | 28:23 | பாராட்டப் படுவான் |
| பாழ்க்கடிக்கிற | 28:24 | கொள்ளையிடுகிற |
| தோழன் | 28:24 | ஒப்பானவன் |

| | | |
|---|---|---|
| பெருநெஞ்சன் | 28:25 | பேராசைக்காரன், பெருமையுள்ளவன் |
| வழக்கைக் கொளுவுகிறான் | 28:25 | சண்டையை மூட்டுகிறான் |
| தொந்திப்பானவனோ | 29:3 | தொடர்புள்ளவனோ |
| பரியாசக்காரர் | 29:8 | புண்படும் வகையில் கிண்டல் செய்பவர்கள் |
| சினந்தாலும் சிரித்தாலும் | 29:9 | மூடன் சினந்தாலும் சிரித்தாலும் |
| ஒருவரையொருவர் சந்திக்கிறார்கள் | 29:13 | பொதுவானது ஒன்று உண்டு |
| தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள் | 29:18 | கர்த்தரின் வழிநடத்துதல் இல்லாவிடில் மக்கள் சட்டம் ஒழுங்கை மதிக்கமாட்டார்கள் |
| வேதத்தைக் காக்கிறவனோ | 29:18 | வேதத்தின் சட்டத்திற்குக் கீழ்ப்படிகிறவனோ |
| அடிமையானவன் | 29:19 | வேலைக்காரன் |
| அவைகளை அவன் அறிந்தாலும் உத்தரவு கொடான் | 29:19 | சொல்லுவதை புரிந்து கொண்டாலும் அதை பொருட்படுத்த மாட்டான். ஆகையால் அவனை கீழ்ப்படியச் செய்ய வேறு வழியைக் கையாள வேண்டும். |
| வார்த்தைகளில் பதறுகிற | 29:20 | பேசத் துடிக்கிற |
| சாபத்தை அவன் கேட்டாலும் | 29:24 | அவன் சபிக்கப்பட்டாலும் |
| காரியத்தை வெளிப்படுத்தமாட்டான் | 29:24 | உண்மையைச் சொல்ல அவனுக்கு தைரியமில்லை |
| மாயை | 30:6 | வஞ்சனை |
| தெறிப்புமானவைகள் | 30:13 | ஆணவம் கொண்டவைகள் |
| தா,தா--- மூன்றுண்டு | 30:15 | அட்டையைப்போல் ஒருபோதும் திருப்தியடையாதவைகள், இரண்டுண்டு, இல்லை மூன்றுண்டு |
| பகைக்கப்படத்தக்கவள் | 30:23 | வெறுக்கப்பட்டவள் |
| வினோதமாய் ---- நாலுண்டு | 30:29 | வினோத நடையுள்ளவைகள் மூன்றுண்டு, இல்லை நான்குண்டு |
| சவுரியமானதும் | 30:30 | பலம் உள்ளதும் |
| பின்னிடையாததுமான | 30:30 | பயப்படாததுமான |
| லேமுவேல் | 31:1 | மாசாவின் அரசனாகிய லேமுவேல் |

| | | |
|---|---|---|
| இராட்டினம் | 31:19 | நூல் சுற்றும் உருளை |
| கதிரை | 31:19 | கம்பளியை, கம்பளி நூலாக்கும் உபகரணத்தை (தக்ளியை) |
| இரட்டைப்புரை | 31:21 | பெரிய கம்பளிப் போர்வை |
| இரத்தாம்பரமும் | 31:22 | கருஞ்சிவப்பு நிற உடையும் |
| அவள் உடை பலமும் அலங்காரமுமாய் இருக்கிறது | 31:25 | அவள் ஆற்றலை அணிகலனாகப் பூண்டவள் |
| தயையுள்ள | 31:26 | அன்புள்ள |
| சௌந்தரியம் | 31:30 | கவர்ச்சி |
| அவள் கைகளின் பலனை அவளுக்குக் கொடுங்கள் | 31:31 | அவள் செயல்களின் நற்பயனை எண்ணி அவளை வாழ்த்துங்கள் |
| வாசல்களில்அவளைப் புகழக்கடவது | 31:31 | அவளுடைய உழைப்புக்காக எங்கும் எல்லாராலும் போற்றப்படுவாளாக |

# பிரசங்கி

(சாலொமோன் அரசனின் சிந்தனைகள்)

| | | |
|---|---|---|
| மாயை | 1:2 | பலனற்றது, பிரயோஜனமற்றது, நிலையாதது |
| ராஜசம்பத்து | 2:8 | மன்னர்களின் செல்வம் |
| திரவிய சம்பன்னனுமானேன் | 2:9 | பணக்காரனுமானேன் |
| ஞானியின் கண்கள் அவன் முகத்தில் இருக்கிறது | 2:14 | ஞானி எல்லாவற்றையும் காண்கிறான் |
| சம்பிரமமாய் | 2:25 | ஆடம்பரமாய் |
| அவர் சகலத்தையும்------ மனுஷன் கண்டுபிடியான் | 3:11 | கர்த்தர் ஒவ்வொன்றும் அதனதன் காலத்தில் நிறைவேறுமாறு செய்கிறார். நித்தியத்தைப் பற்றிய உணர்வையும் மனிதனுக்கு தந்திருக்கிறார். ஆனாலும் ஆரம்பம் முதல் முடிவுவரை கர்த்தர் செய்வதை அவன் அறிந்து கொள்ளமுடியாது |
| அமைச்சலோடு | 4:6 | அமைதியோடு |
| செவிகொடுக்கச் சேர்வதே நலம் | 5:1 | போதனைக்குச் செவிசாய்ப்பதே நலம் |
| மனம் பதறி | 5:2 | சிந்தித்துப்பாராமல் |
| வார்த்தையின் திரட்சியினால் மூடனுடைய சத்தம் பிறக்கும் | 5:3 | சொல் மிகுதியினால் மூடத்தனம் வெளியாகும் |

| | | |
|---|---|---|
| அது புத்திப்பிசகினால் செய்தது என்று தூதனுக்கு முன் சொல்லாதே | 5:6 | அறிவில்லாமல் நேர்ந்து கொண்டேன் என்று ஆசாரியனிடம் சொல்லாதே |
| விக்கினத்தால் | 5:14 | எதிர்பாராமல் வந்த விபத்தினால் |
| கையில் யாதொன்றும் இல்லை | 5:14 | அவன் கையில் கொடுக்க அவனுக்கு யாதொன்றும் இல்லை |
| காற்றுக்குப் பிரயாசப்பட்டதினால் | 5:16 | அவன் கடின உழைப்பு காற்றுக்காக உழைத்த கதை ஆகிவிட்டது |
| பிண்டம் | 6:3 | முதிர்ச்சியடையாத கரு |
| அமைச்சல் | 6:5 | அமைதி, ஓய்வு |
| ஜீவனுள்ளோருக்கு முன்பாக நடந்துகொள்ளும் படி அறிந்த | 6:8 | வாழ்க்கையை எப்படி சமாளிப்பது என்று அறிந்த |
| ஆசையானது அலைந்து தேடுகிறதைப் பார்க்கிலும் | 6:9 | ஆசையால் அலைக்கழிக்கப்படுதலைப் பார்க்கிலும் |
| கண் கண்டதே நலம் | 6:9 | போதுமென்ற மனதே நல்லது |
| அவன் மனுஷன் என்று தெரிந்திருக்கிறது | 6:10 | ஒவ்வொரு மனிதனும் எப்படி இருப்பான் என்று நெடுங்காலத்துக்கு முன்னரே தெரிந்திருக்கிறது |
| மனுஷருக்குப் பிரயோஜனம் என்ன? | 6:11 | அதிகம் அலப்புவதில் ஒரு பிரயோஜனமும் இல்லை |
| படபடப்பு | 7:6 | படபடவென்று வெடிப்பது |
| தனக்குப்பின் வருவதொன்றையும் | 7:14 | அடுத்து என்ன நடக்கும் என்பதை |
| ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார் | 7:14 | மாறி மாறி வரவிடுகிறார் |
| இன்னும் ஒன்றை | 7:28 | இன்னும் ஒரு உண்மையை |
| ஒரு புருஷனைக் கண்டேன் | 7:28 | ஞானமுள்ள ஒரு மனிதனைக் கண்டேன் |
| இவர்களெல்லாருக்குள்ளும் ஒரு ஸ்திரீயை நான் காணவில்லை | 7:28 | ஞானமுள்ள பெண்கள் இதிலும் குறைவாகக் காணப்படுகிறார்கள் |
| தாற்பரியத்தை | 8:1 | விளக்கிச் சொல்லும் ஞானத்தை |
| அவர்கள் அப்படிச் செய்து வந்த பட்டணத்திலேயே மறக்கப்பட்டுப் போனார்கள் | 8:10 | அவர்கள் துன்மார்க்கம் மறக்கப்பட்டுப் போனது |
| வகையறுக்கும்படிக்கு | 9:1 | ஆராயும்படிக்கு |

| | | |
|---|---|---|
| தேவனுடைய கைவசமாய் இருக்கிறார்கள் | 9:1 | கர்த்தரால் அடக்கி ஆளப்படுகிறார்கள் |
| தனக்குமுன் இருக்கிறவர்களைக் கொண்டு விருப்பையாவது வெறுப்பையாவது அறியான் | 9:1 | ஒருவனும் தனக்கு என்ன நேரிடுமென்று அறியான் |
| சவுரியவான்கள் | 9:11 | வீரர்கள் |
| சுவுரியம் | 9:11 | தைரியம் |
| சமயமும் தேவச் செயலும் நேரிட வேண்டும் | 9:11 | காலமும் சமயமும் சரியாக வாய்க்க வேண்டும் |
| ஞானியின் இருதயம்...... | 10:2 | நல்லதை செய்வதை ஞானிகள் நாடுவார்கள். தீமையைச் செய்வதையே மூடர்கள் நாடுவார்கள்உன் ஸ்தானத்தை |
| விட்டு விலகாதே | 10:4 | வேலையை விட்டு விடாதே, விலகாதே |
| குதிரைகள்மேல் ஏறிப் போகிறதையும் | 10:7 | உயர்த்தப்படுகிறதையும் |
| தரையிலே நடக்கிறதையும் | 10:7 | தாழ்த்தப்படுகிறதையும் |
| மோசப்படுவான் | 10:9 | ஆபத்துக்குள்ளாவான் |
| தடை கட்டப்படாத | 10:11 | வாய் கட்டப்படாத |
| ராஜ குலமகன் | 10:17 | உயர்குடிப்பிறந்தவன் |
| நெகிழ்வினாலே | 10:18 | சோம்பேறித்தனத்தினாலே |
| உன் ஆகாரத்தை தண்ணீர்கள்மேல் போடு | 11:1 | அயல் நாட்டு வியாபாரத்தில் ஈடுபடு |
| காலையிலே விதை, மாலையிலே உன் கையை நெகிழவிடாதே | 11:6 | காலையிலும் மாலையிலும் விதை |
| அதுவோ, இதுவோ இரண்டும் சரியாய் பயன் படுமோ என்றும் நீ அறியாயே | 11:6 | எது பயன் தரும் என்று நீ அறியாய், ஒருவேளை இரண்டும் நல் விளைச்சலைத் தரலாம் |
| மேகங்கள் திரும்பத்திரும்ப வராததற்கு முன்னும் | 12:3 | எப்பொழுதும் இருட்டாய் தோன்றாதற்கு முன்னும் |
| வீட்டுக் காவலாளிகள் | 12:3 | கைகள் |
| பெலசாலிகள் | 12:3 | கால்கள் |

| | | |
|---|---|---|
| ஏந்திரம் அரைக்கிறவர்கள் | 12:3 | பற்கள் |
| பலகணி | 12:3 | கண்கள் |
| எந்திரசத்தம் தாழ்ந்ததினால் | 12:4 | திரிகல்லில் மாவு அரைக்கும் சத்தத்தை கேட்கமுடியாமலும் |
| குருவியின் சத்தத்துக்கு எழுந்திருக்கவேண்டியதாகி | 12:4 | பறவைகள் அதிகாலையில் பாடும் நேரத்தில் நீ எழுந்தாலும் |
| தெருவாசலின் கதவுகள் அடைபட்டு | 12:4 | தெருச்சத்தம் கேட்காமலும் |
| கீதவாத்தியக் கன்னிகைகள் அடங்கிப்போகாததற்கு முன்னும் | 12:4 | இசையை இரசிக்கமுடியாமற் போகுமுன்னும் |
| வாதுமை மரம் பூப்பூத்து | 12:5 | ஆல்மண்ட் மரத்தின் வெள்ளைப் பூக்களைப்போல தலைமுடி வெண்மையாகி |
| வெட்டுக்கிளியும் பாரமாகி | 12:5 | வெட்டுக்கிளியைப்போல காலை இழுத்து, இழுத்து நடந்து |
| துக்கம் கொண்டாடுகிறவர்கள் | 12:5 | உனக்காக அழுது புலம்புகிறவர்கள் |
| திரியாததற்கு முன்னும் | 12:5 | வராததற்கு முன்னும் |
| வெள்ளிக்கயிறு கட்டு விட்டு | 12:6 | வெள்ளிக்கயிறாகிய உயிர்பிரியும் முன்பும் |
| பொற்கிண்ணி நசுங்கி | 12:6 | எலும்புகளை இணைக்கும் கிண்ணி உடையும் முன்னும் |
| ஊற்றின் அருகே சால் உடைந்து | 12:6 | உயிர் ஊற்றாகிய வாழ்க்கை உன்னும் குடம் உடையும் முன்னும் |
| துரவண்டையில் உருளை நொறுங்கி | 12:6 | கிணற்றின்மேல் கட்டப்பட்ட உருளை நொறுங்கிப்போனது போல் உலகத்தின் வாழ்க்கைச் சக்கரம் நொறுங்கி, மாம்ச இச்சைகள் மறைந்து |
| தாற்றுக்கோல்கள் | 12:11 | உழவன் தன் காளைகளைத் தூண்ட உபயோகிக்கும் கோல் |
| சங்கத் தலைவர்கள் | 12:11 | அறிவாளிகள் |
| அறையப்பட்ட ஆணிகள் போலவும் | 12:11 | பசுமரத்தாணியாய் உன் நெஞ்சில் பதிவன போலும் |
| ஒரே மேய்ப்பனால் | 12:11 | கர்த்தரால் |

# உன்னதப்பாட்டு

(பாடல்களில் மிகவும் அழகான பாடல்)

| | | |
|---|---|---|
| ஆத்தும நேசர் | 1:7 | நெஞ்சத்தைக் கொள்ளை கொண்டவர் |
| பரிகள் | 1:9 | பெண் குதிரைகள் |
| ஆபரணாதிகள் | 1:10 | ஆபரணங்கள் |
| கிச்சிலி | 2:3 | ஆப்பிள் |
| மரைகள் | 2:7 | மான்கள் |
| கிராதி | 2:9 | பின்னல் தட்டி |
| பரிமளிக்கிறது | 2:13 | மணம் தருகின்றது |
| தூப ஸ்தம்பம் | 3:6 | புகைத்தூண் |
| தட்டை | 3:10 | மேற்பகுதியை |
| முடியோடு | 3:11 | கிரீடத்தோடு |
| சிவிங்கிகள் | 4:8 | சிறுத்தைப் புலிகள் |
| முத்திரிக்கப்பட்ட | 4:12 | முத்திரையிடப்பட்ட |
| நளதச் செடி | 4:13 | வாசனைத் தைலம் தாயாரிக்கப்பயன்படும் செடி |
| தூபவர்க்க | 4:14 | நறுமண |
| கந்தவர்க்க | 4:14 | சுகந்த வாசனையுள்ள |
| கந்தப்பிசின் வடிய | 4:16 | நறுமணம் பரவ |
| வடிவமும் | 6:4 | அழகும் அமைப்பும் |
| கெடியுமானவள் | 6:4 | என் இருதயத்தை சிறை பிடிக்கிறவள் |
| திர்சாவைப்போல் | 6:4 | திர்சா பட்டணத்தைப்போல |
| அளகபாரம் | 6:5 | கூந்தல் |
| அம்மினதாபின் இரதங்களுக்கு ஒப்பாயிருக்கிறது | 6:12 | இளவரசனின் இரதத்தில் செல்வதுபோல் உணர்ந்தேன் |
| சூலமித்தி | 6:13 | சூலாம் ஊர் பெண் |
| அவள் இரண்டு சேனையின் கூட்டத்துக்கு சமானமானவள் | 6:13 | அவள் சிறைபிடிக்கும் சேனைகளுக்குச் சமமானவள் |

| | | |
|---|---|---|
| வட்ட கலசம் | 7:2 | திராட்ச இரசம் குடிப்பதற்கு பயன்படுத்திய கைப்பிடியில்லாத குவளை |
| நடைக்காவணங்களில் | 7:5 | அடுக்கடுக்காக உயர்த்திக் கட்டப்பட்ட கூந்தலில் |
| பனைமரத் தொழுங்கு | 7:7 | பேரீச்சை மரத்தின் மடல் |
| மடல்கள் | 7:8 | பழக்குலைகள் |
| உன் தொண்டை, என் நேசர் குடிக்கையில் | 7:9 | உன் வாய் என் நேசர் குடிக்கையில் |
| வலிது | 8:6 | பலமானது |
| அசட்டை பண்ணப்படும் | 8:7 | ஏளனம் செய்யப்படும் |
| அவள் ஒரு மதிலானால் கேதுருப் பலகைகளை அதற்கு இணைப்போம் | 8:9 | அவளுக்கு ஸ்தனங்கள் இல்லை என்றால் ----- அவளை அழகுபடுத்தி பாதுகாப்போம் |
| நான் மதில்தான், என் ஸ்தனங்கள் கோபுரங்கள் | 8:10 | என் ஸ்தனங்கள் மதிலின்மேல் கட்டப்பட்ட அழகான கோபுரங்கள் போல இருக்கின்றன |
| அவருடைய கண்களில் கடாட்சம்பெறலானேன் | 8:10 | ஆதலால் அவருடைய கண்களில் எனக்கு தயவு கிடைத்தது |
| ஒவ்வொருவன் ஆயிரம்வெள்ளிக் காசு கொண்டுவரும் படி விட்டார் | 8:11 | அதற்கு வாடகையாகஆயிரம் வெள்ளிக்காசு கொடுக்கிறார்கள் |
| இருநூறும் சேரும் | 8:12 | இருநூறு வெள்ளிக்காசும் பங்காகக் கிடைக்கும் |

## ஏசாயா

(யூதாவின் இறைவாக்கினன், ஏறத்தாழ கி.மு. 740 - 680 வரை)

( யூதசட்டங்களின் தொகுப்பாகிய டால்மட்டில் ஏசாயா வாளால் அறுப்புண்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது)

**(ஏசாயா – யெகோவா அவரது மக்களை மீட்பார்)**

| | | |
|---|---|---|
| முன்னணை | 1:3 | தீனித் தொட்டி |
| அடிக்கப்படவேண்டும் | 1:5 | தண்டிக்கப்பட வேண்டும் |
| பலட்சயம் | 1:5 | பலவீனம் |
| நொதிக்கிற இரணம் | 1:6 | திறந்த புண் |
| குச்சு | 1:8 | குடிசை |

| | | |
|---|---|---|
| கொஞ்சம் மீதியை | 1:9 | சிலரை மீதியாக |
| உண்மையுள்ள நகரம் | 1:21 | எருசலேம் |
| நீதிபுரம் | 1:26 | நீதியின் நகர் |
| வெந்து போம் | 1:31 | எரிந்து போகும் |
| கை நெகிழ்ந்தீர் | 2:6 | கைவிட்டீர் |
| வீராப்பு | 2:11 | ஆணவம் |
| மேட்டிமை | 2:11 | பெருமை |
| ஓங்கலும் | 2:13 | கம்பீரமும் |
| மூஞ்சூறு | 2:21 | நீள மூக்குடைய எலிவகையைச் சார்ந்த சின்ன பிராணி |
| துரிஞ்சில் | 2:21 | வௌவால் |
| சாஸ்திரி | 3:2 | குறி சொல்லுபவன் |
| சாமார்த்தியமுள்ளவனையும் | 3:3 | புத்திசாலியாகிய மந்திரவாதியையும் |
| இடும்பு செய்வான் | 3:5 | அவமதிப்பான் |
| கழுத்தை நெறித்து | 3:16 | பெருமையாய் |
| மருட்டிப் பார்த்து | 3:16 | ஓரக் கண்ணால் பார்த்து |
| ஒய்யாரமாய் நடந்து | 3:16 | சின்ன எட்டு எடுத்து நடந்து |
| சுட்டிகளையும் | 3:18 | தலையின்மேல் உள்ள அலங்காரங்களையும் |
| பிறைச்சிந்தாக்குகளையும் | 3:18 | பிறைச் சந்திரன் வடிவமான ஆபரணங்களையும் |
| சிரபூஷணங்களையும் | 3:20 | குல்லாய்களையும், ரிப்பனைகளையும் |
| பாதசரங்களையும் | 3:20 | கொலுசுகளையும் |
| மார்க்கச்சைகளையும் | 3:20 | மார்பை சுற்றிக்கட்டும் அழகான துணிகளையும் |
| சுகந்த பரணிகளையும் | 3:20 | வாசனைத் திரவியப் பெட்டிகளையும் |
| வினோத வஸ்திரங்களையும் | 3:22 | ஆடம்பர ஆடைகளையும் |
| குப்பிகளையும் | 3:22 | மணங்கமழும் குப்பிகளையும் |
| சல்லாக்களையும் | 3:23 | மறைத்தும் மறைக்காத மெல்லிய லினன் துணிகளையும் |
| குல்லாக்களையும் | 3:23 | தொப்பிகளையும் |

| | | |
|---|---|---|
| துப்பட்டாக்களையும் | 3:23 | முத்திரைகளையும் |
| சுகந்தம் | 3:24 | நறுமணம் |
| துர்க்கந்தம் | 3:24 | துர்நாற்றம் |
| கச்சை | 3:24 | இடைக் கச்சை |
| இரட்டுக் கச்சும் | 3:24 | கந்தைத் துணியும் |
| கருகிப்போகுதலும் | 3:24 | அவலட்சணமான தழும்புகளும் |
| முறைப்பாடு | 5:7 | அழுகை |
| பத்தேர் நிலம் ஒரு குருணி விளையும் | 5:10 | (பத்து ஏக்கர் நிலம் 22லிட்டர் திராட்ச இரசம் தரும் 220லிட்டர் விதை விதைத்தால் 22லிட்டர் தானியம் மட்டுமே விளையும்) |
| வண்டியின் வடங்களால் | 5:18 | மிகப்பெரிய கயிறுகளால் |
| பயில்காட்டி | 5:26 | விசில் அடித்து |
| உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில் | 6:1 | ஏறத்தாழ கி.மு. 742 ல் |
| இலையற்றுப் போனபின்பு | 6:13 | வெட்டப்பட்டுப் போனாலும் |
| அதின் அடிமரம் பரிசுத்த வித்தாயிருக்கும் | 6:13 | பரிசுத்தமாக வாழும் மக்கள் அங்கு இருப்பார்கள் |
| சேயார் யாசூப் | 7:3 | (மிஞ்சின ஒரு பகுதி திரும்பும்) |
| தலை | 7:8 | தலைநகர் தமஸ்கு |
| தலை | 7:8 | தலைவன் |
| அதின் இரண்டு ராஜாக்களால் விட்டுவிடப்படும் | 7:16 | நீங்கள் பயப்படும் இரண்டு ராஜாக்களின் (இஸ்ரவேல் ராஜா, சீரியா ராஜா) நாடுகளும் பாழக்கப்படும் |
| மகேர்சாலால் அஷ்பாஸ் | 8:3 | உன்னுடைய எதிரிகள் அதிசீக்கிரத்தில் அழிக்கப்படுவார்கள் |
| சாட்சி ஆகமத்தை -- முத்திரையிடு | 8:16 | என்னுடைய போதனைகளை எழுதி, எதிர்காலத்தில் கர்த்தருக்குப் பயப்படும் மனிதருக்குப் பயன்படும்படி ஒரு மனிதனிடம் கொடு. நான் சொல்வதையும் செய்யப்போகிறவைகளையும் எழுதி, பக்தியுள்ள ஒரு மனிதனிடம் பின்வரும் சந்ததிகளில் பக்தியுள்ள என் மக்களுக்காக முத்திரையிட்டு கொடு |
| கூட்டிக் கலப்பார் | 9:11 | சேர்ந்து கொள்ளச் செய்வார் |

| | | |
|---|---|---|
| நெரிஞ்சில் | 9:18 | கூர்மையான முள் |
| நெருங்கிய | 9:18 | அடர்த்தியான |
| மனாசே, எப்பிராயீம் | 9:21 | யூதாவின் கோத்திரங்கள் |
| கட்டுண்டவர்களின்கீழ் முடங்கி-னாலொழிய கொலைசெய்யப் பட்டவர்களுக்குள் விழுவார்கள் | 10:4 | கைதிகளாக இழுத்துச் செல்லப்படுவார்கள், (அல்லது) கொலை செய்யப்படுவார்கள் |
| நெஞ்சின் வினை | 10:12 | சிந்தனை |
| இளைப்பை | 10:16 | உடலை உருக்கும் வியாதியை |
| தகித்து | 10:17 | எரித்து |
| மத்மேனா வலசை வாங்கிப்போம் | 10:31 | மத்மேனா மக்கள் பெருமூச்சு விட்டு தலைதெறிக்க ஓடிப்போவார்கள் |
| ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து | 11:1 | தாவீது அரசனின் வம்சத்திலிருந்து |
| ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள் | 11:10 | பிற இனத்தவர் தேடி வருவார்கள் |
| எகிப்திலும் | 11:11 | தெற்கு எகிப்திலும் |
| பத்ரோசிலும் | 11:11 | வடக்கு எகிப்திலும் |
| சிநேயாரிலும் | 11:11 | பாபிலோனிலும் |
| காற்றின் வலுமையினால் | 11:15 | வறண்ட காற்றினால் |
| நதியின் மேல் | 11:15 | யூப்ரட்டீஸ் நதியின்மேல் |
| பாரம் | 13:1 | இறைவாக்கு |
| வானங்கவிழ்ந்த | 13:5 | நீலவானும், நீலக்கடலும் சந்திக்கும் |
| கல்தேயர் | 13:19 | பாபிலோனுக்கும் பாரசீக வளைகுடாவுக்கும் இடையில் வாழ்ந்த செமட்டிக் இனத்தைச் சேர்ந்தவர்கள். கி.மு. 630 அளவில் அசீரியர்களுக்கு விரோதமாய் எழும்பி, 25 வருடங்களுக்குள் ஐரோப்பாவுக்கு கிழக்கே அநேக இடங்களில் ஆதிக்கம் செலுத்தினர். பாபிலோனியர் என்றும் அழைக்கப்பட்டார்கள் |
| மந்தையை மறிப்பதுமில்லை | 13:20 | மந்தையை மறித்து ஓய்வெடுக்கச் செய்வதுமில்லை |
| ஓரிகள் | 13:22 | கழுதைப் புலிகள் |
| செல்விக்கையான | 13:22 | ஆடம்பரமான |
| ஜாதிகளை ஈனப்படுத்தினவனே | 14:12 | நாடுகளின் வலிமையை முறிய அடித்தவனே |

| | | |
|---|---|---|
| அகாதமான பாதாளத்திலே | 14:15 | படு குழியிலே |
| அறையிலே | 14:18 | கல்லறையிலே |
| வியர்த்தமாக்குவான் | 14:27 | நடக்காதபடி செய்வான் |
| திருப்புவான் | 14:27 | மடக்குவான் |
| அக்களிப்பாயிராதே | 14:29 | சந்தோஷப்படாதே |
| மேடைகளாகிய | 15:2 | தொழுகை ஸ்தலங்களாகிய |
| துறைகளிடத்தில் | 16:2 | கடக்கும் இடங்களில் |
| மிதிக்கிறவர்கள் | 16:4 | அழிக்கிறவர்கள் |
| அனுகூலப்படமாட்டான் | 16:12 | பயன் அடையான் |
| ஓங்கின | 17:5 | விளைந்த |
| நிழலிடும் செட்டைகள் உள்ள | 18:1 | வெட்டுக்கிளிகள் உள்ள |
| தேசம் | 18:2 | எத்தியோப்பியா |
| சிரைக்கப்பட்டதும் | 18:2 | மெல்லிய தோல் உள்ளவர்களும் |
| கெடியாயிருந்ததும் | 18:2 | பயப்படுத்தியவர்களும் |
| அளவிடப்பட்டதும் | 18:2 | நதிகளால் பிரிக்கப்பட்டதும் |
| மிதிக்கப்பட்டதும் | 18:2 | மற்ற நாடுகளை மிருகத்தனமாய் மிதித்துத் தள்ளுகிறதுமான |
| கப்புக் கவர்களை | 18:5 | கிளைகளை |
| முழுகிப்போகப்பண்ணுவேன் | 19:3 | அழிப்பேன் |
| கொறுக்கை | 19:6 | நீர்ச்செடி |
| நாணுவார்கள் | 19:9 | செய்வதறியாது திகைப்பார்கள் |
| எகிப்தில் தலை,வால் ஒன்றுமிராது | 19:15 | எகிப்தை ஒருவராலும் காப்பாற்ற முடியாது |
| கானான் பாஷையைப் பேசி | 19:18 | எபிரேய பாஷையைப் பேசி |
| கர்த்தரை முன்னிட்டு ஆணையிடும் | 19:18 | கர்த்தரைப் பணிந்து கொள்ளும் |
| நிர்மூலமான பட்டணம் | 19:18 | நேபுகாத் நேச்சாரால் நிர்மூலமாக்கப்பட்ட ஹீலியோ பாலிஸ் என்ற சூரியனின் நகரம் (எரே.43:13) |
| குடிவிலக்கப்போகிற | 20:4 | கைதிகளாக்கப்போகிற |

| | | |
|---|---|---|
| அண்டினவன் | 20:6 | உதவிக்காக நாம் நாடினவன் (எத்தியோப்பியர) |
| கடல் வனாந்தரத்தின் பாரம் | 21:1 | கடற்கரையிலுள்ள பாலைநிலத்தில் இருக்கும் பாபிலோனைப் பற்றிய இறைவாக்கு |
| உளைவு கொண்டு | 21:3 | பயந்து |
| தூமா | 21:11 | ஏதோம் |
| விடியற்காலமும், இராக்காலமும் | 21:12 | நீதித் தீர்ப்பு கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு விடியற்காலமும், துன்மார்க்கருக்கு இராக்காலமாகவும் இருக்கும் |
| தரிசனப் பள்ளத்தாக்கு | 22:1 | எருசலேம் |
| ஆர்ப்பரிக்கும் | 22:5 | சத்தமிட்டு அழும் |
| மகா வடிவான | 22:7 | மிகவும் செழிப்பான |
| மறைவை | 22:8 | பாதுகாப்பை |
| உருண்டை | 22:18 | பந்து |
| கடாவுவேன் | 22:23 | அடிப்பேன் |
| சமுத்திரக் கோட்டை | 23:4 | சீதோன் |
| பல பாட்டுகளைப்பாடு | 3:16 | வேசியைப் போல ஆடிப்பாடி நாடுகளை மயக்கு |
| பணையத்துக்கு | 23:17 | முந்தின தொழிலுக்கு |
| அம்பாயத்தில் | 26:17 | கொடிய வேதனையில் |
| தேசத்தில் ஒரு இரட்சிப்பையும் செய்யமாட்டாதிருக்கிறோம் | 26:18 | தேசத்தின் விடுதலைக்காக ஒன்றும் செய்யமுடியவில்லை |
| விழுகிறதுமில்லை | 26:18 | பிறக்கப் போவதும் இல்லை |
| சினம் கடந்து போகுமட்டும் | 26:20 | கர்த்தரின் கோபம் உன் எதிரிகளின் மேல் கடந்து போகுமட்டும் |
| லிவியாதான்,வலுசர்ப்பம் | 27:1 | இஸ்ரவேலை கொடுமைப்படுத்தின நாடுகள் |
| கொண்டல் காற்று | 27:8 | கிழக்கேயிருந்துவரும் புயல்காற்று |
| நிந்தனைக்காரரே | 28:14 | இகழ்வோரே |
| வாதை | 28:18 | பகைவன் |
| தூலம் | 28:27 | கனத்த இரும்பு (சம்மட்டி) |
| அரியேல் | 29:1 | இரத்தத்தில் தோய்ந்த பலிபீடம், எருசலேம், சாலேம்,மக்தேஷ் (செப்.1:11) |

| | | |
|---|---|---|
| தெற்றுகள் | 29:3 | காவற் கோபுரங்கள் |
| கசுகு சென்று உரைக்கும் | 29:4 | மெல்லிய குரலில் உரைக்கும் |
| முத்திரிக்கப்பட்ட | 29:11 | புதை பொருளாக முத்திரையிடப்பட்ட |
| நிர் நிமித்தமாய் | 29:21 | பொய்யாய், காரணமில்லாமல் |
| அடைவிக்கிறதுமான | 30:6 | வேதனை உண்டாக்குகிற |
| சும்மாயிருப்பதே அவர்களுக்கு பெலன் | 30:7 | எகிப்து உதவி செய்ய மனமில்லாமல் சும்மாயிருக்கும் வலுசர்ப்பம் என்கிறேன் |
| முறம் | 30:24 | சுளகு |
| தூற்றப்பட்ட | 30:24 | பதர் பறக்கடிக்கப்பட்ட |
| கப்பிகளை | 30:24 | தீவனத்தை |
| அவர் ஊற்று சுவாசம் | 30:28 | அவர் அனுப்பும் காற்று |
| தோப்பேத் | 30:33 | அசீரிய ராஜாவுக்காக சிதை |
| வீரனுடைய பட்டயம் அல்லாத பட்டயத்தாலே | 31:8 | கர்த்தரின் வாளினாலே |
| எருசலேமிலே சூளையையும் உடைய கர்த்தர் | 31:9 | எருசலேமில் கனன்று புகையும் தகனபலிகள் உடைய கர்த்தர் |
| விபரீதம் பேசி | 32:6 | தவறாகப் பேசி |
| நிர்விசாரமான | 32:9 | கவலையில்லாத, மற்றவர்களைப்பற்றி அக்கரையில்லாத |
| ஜனங்கள் | 33:12 | உன்னுடைய படைவீரர் |
| கேளுங்கள் | 33:13 | கவனியுங்கள் |
| சீயோனுடைய வழக்கினிமித்தம் | 34:8 | ஏதோம் இஸ்ரவேலுக்கு செய்த அநீதியை பழிவாங்கும்படி |
| கூளிகள் | 34:15 | பருந்துகள் |
| சேர்க்கும் | 34:16 | ஒன்று சேர்க்கும் |
| கர்த்தருடைய புஸ்தகத்தை | 34:16 | கர்த்தருடைய ஏட்டுச் சுருளில் எழுதப்பட்டதை |
| கடுவெளி | 35:1 | பாலைநிலம் |
| நமுட்டு | 38:14 | ஒரு சிறிய பறவை |
| மேற்போட்டுக்கொள்ளும் | 38:14 | உதவி செய்யும் |

| | | |
|---|---|---|
| எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும் | 39:6 | இந்த இறைவாக்கு எருசலேமின் வீழ்ச்சிக்கு 100 வருடங்களுக்கு முன் சொல்லப்பட்டது |
| சுவிசேஷகி | 40:9 | நல்ல செய்தியை அறிவிப்பவள் |
| துலாக்கோல் | 40:12 | தராசு |
| ஏற்றச்சால் | 40:15 | விவசாயிகள் விவசாயத்துக்கு பயன்படுத்தும் பெரிய ஆழமான கிணற்றில் நீர் இறைக்க பயன்படுத்திய வாளி |
| துளி | 40:15 | ஒரு சொட்டு தண்ணீர் |
| அடைகல் | 41:7 | பட்டரைக்கல் |
| இளக்கரிப்பதுமில்லை | 42:4 | சோர்வடைவதில்லை |
| அவருடைய வேதத்துக்கு | 42:4 | கர்த்தரின் போதனைக்கு |
| திட்டுகள் | 42:15 | மண்மேடுகள் |
| பின்னிடைந்து | 42:17 | கேவலப்பட்டு |
| எகிப்தையும் எத்தியோப்பாவையும், சேபாவையும் கொடுத்தேன் | 43:3 | உன் சுதந்தரத்துக்காக எகிப்தையும், எத்தியோப்பாவையும், சேபாவையும் கோரேசுக்குக் கொடுத்தேன். நீ தாக்கப்படவில்லை |
| வலிய தண்ணீர்கள் | 43:16 | பொங்கி எழும் தண்ணீர்கள் |
| முன்னின்று பேசுகிறவர்கள் | 43:27 | தலைவர்கள் |
| கவராசம் | 44:13 | வட்டம் வரையும் கருவி |
| வகுத்து | 44:13 | சரிபார்த்து |
| கோரேஸ் | 45:1 | சையரஸ் |
| இடைக்கட்டுகளை அவிழ்க்கும்படிக்கும் | 45:1 | ஆயுதங்களை அழிக்கும்படிக்கும் |
| இடைக்கட்டு கட்டினேன் | 45:6 | பலப்படுத்தினேன் |
| பேல், நேபோ | 46:1 | பாபிலோனிய தெய்வங்கள் |
| அவைகள் தப்புவிக்கமாட்டாது | 46:2 | பாபிலோனிய தெய்வங்களை அவைகள் காப்பாற்ற முடியாது |
| உராய்ஞ்சுகிற | 46:11 | வேகமாய்ப் பறந்து பறிக்கும், கடும்பசியுள்ள |
| நாயகி | 47:5 | எஜமாட்டி, தலைவி |
| ஸ்தம்பன வித்தை | 47:9 | மந்திர வித்தை, வசிய மந்திரம் |
| விக்கினம் | 47:11 | அழிவு, ஆபத்து, தீங்கு |

| | | |
|---|---|---|
| அநுசரித்து நில் | 47:12 | கடைப்பிடி |
| மீறுகிறவன் | 48:8 | கலகக்காரன் |
| குகை | 48:10 | உலை |
| நீங்கள் ..........அனுப்புகிறார் | 48:16 | இந்த வசனம் திரித்துவத்தை சித்தரிக்கிறது |
| துலக்கமான | 49:2 | கூர்மையான |
| என் பலன் | 49:4 | எனக்கான வெகுமதி |
| என் நியாயம் | 49:4 | என்னுடைய பங்கு |
| சீனீம் தேசம் | 49:12 | அஸ்வான் (தெற்கு எகிப்து) |
| கொடுங்கை | 49:22 | புஜம் |
| நாயகிகள் | 49:23 | அரசிகள் |
| கைத்தாய்கள் | 49:23 | தாதிகள், செவிலித்தாய்கள் |
| நீதியாய் | 49:24 | அநீதியாய், அநியாயமாய் |
| வெட்டி எடுக்கப்பட்ட கன்மலை யையும், துரவின் குழியையும் | 51:1 | நீங்கள் நேர்மையாக நடந்து கர்த்தருக்கு கீழ்ப்படிய விரும்பினால் ஆபிரகாமுடைய மாதிரியைப் பின்பற்றுங்கள். உங்கள் மூதாதையரே நீங்கள் உண்டாக்கப்பட்ட பாறையும் ஊற்றும் |
| வண்டல் | 51:17 | மண்டி |
| அந்தக்கேடு | 52:14 | அவலட்சணம், விகாரம் |
| தெளிப்பார் | 52:15 | சுத்தம் செய்வார் |
| புயம் | 53:1 | மீட்கும் வல்லமை, புய பலம் |
| அவருடைய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும் | 53:8 | அவர் சிலுவையில் மரித்து மீட்டுக்கொண்ட எண்ணிமுடியாத மக்களின் தொகையை யாரால் சொல்லிமுடியும் |
| கொள்ளையாக | 53:12 | உரிமையாக |
| அனாத ஸ்திரி | 54:1 | கைவிடப்பட்ட பெண் (எருசலேம்) |
| கொண்டுபோகப்படுவீர்கள் | 55:12 | நடத்திச் செல்லப்படுவீர்கள் |
| அண்ணகன் | 56:3 | அலி, அரவாணிகள், திருநங்கைகள் |
| தள்ளுண்டவர்களை | 56:8 | சிதறிப் போனவர்களை |
| காவற்காரர் | 56:10 | கடவுளுக்காக காவல் செய்ய வேண்டிய தலைவர்கள், மேய்ப்பர்கள் |

| | | |
|---|---|---|
| தன் தன் மூலையிலிருந்து | 56:11 | எல்லா வழிகளின் மூலமாகவும் |
| பொழிவை | 56:11 | ஆதாயத்தை |
| ராஜாவினிடத்தில் | 57:9 | மோளேகைத் தொழுதுகொள்ள |
| கணங்கள் | 57:13 | விக்கிரகங்கள் |
| பிணையல்கள் | 58:6 | கட்டுகள், சங்கிலிகள் |
| விரல் நீட்டுதல் | 58:9 | குற்றஞ்சாட்டுதல் |
| நிபச்சொல் | 58:9 | வீணான பேச்சு |
| மாயையை நம்பி | 59:4 | வெறுமையான வாதங்களை நம்பி |
| சீரா | 59:17 | தலைச்சீரா |
| எழும்பிப்பிரகாசி | 60:1 | என் ஜனமாகிய இஸ்ரவேல் மக்களே எழும்பி பிரகாசியுங்கள் |
| ஜாதிகளின் ----- உண்டு | 60:16 | மற்ற நாடுகளின் செல்வத்தை அனுபவித்து |
| கண்காணிகள் | 60:17 | ஆளுனர்கள் |
| தண்டற்காரர் | 60:17 | வேலைவாங்குபவர்கள் |
| அனுக்கிரக வருஷத்தையும் | 61:2 | கருணைக்காட்டும் காலத்தையும் |
| எப்சிபா | 62:4 | அவளில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் |
| பியூலா | 62:4 | மகிழ்ச்சியாக மணமுடித்தவள் |
| ஆலையை மிதிக்கிறவன் | 63:2 | திராட்சை இரசம் எடுக்கும் ஆலையில் வேலை செய்பவன் |
| ஆசீர்வாதம் உண்டு | 65:8 | பிரயோஜனம் உண்டு |
| காத் | 65:11 | செல்வம் என்னும் தெய்வம் |
| மேனி | 65:11 | விதி என்னும் தெய்வம் |
| காணிக்கையை | 66:3 | தானியக் காணிக்கையை |
| அருவருப்புகளின் மேல் | 66:3 | பாவங்களின்மேல் |
| அவர்களுடைய பூச்சி | 66:24 | அவர்களைத் தின்னும் புழு |
| அவர்களுடைய அக்கினி அவியாமலும் | 66:24 | அவர்களை எரிக்கும் அக்கினி அணையாமலும். |

# எரேமியா

(எருசலேமைக் காக்க கர்த்தரின் கடைசி முயற்சி. எருசலேம் ஏறத்தாழ கி.மு. 587ல் பாபிலோனியரால் அழிக்கப்படுமுன் எரேமியா அங்கு பிரசங்கித்தார்)

| | | |
|---|---|---|
| வாதுமை மரத்தின் கிளையைக் காண்கிறேன் | 1:11 | வாதுமை மரத்தின் கிளையிலிருந்து செய்யப்பட்ட ஒரு சவுக்கைக் காண்கிறேன் |
| என் வார்த்தையை தீவிரமாய் நிறைவேற்றுவேன் | 1:11 | நான் யூதாவை விரைவில் தண்டிப்பேன் |
| பொங்குகிற பானை, அதன் வாய் வடக்கேயிருந்து நோக்குகிறது | 1:13 | கொதிக்கும் தண்ணீர் உள்ள பானை. வடக்கேயிருந்து வரும் பாபிலோனிய படை. (யூதாவைத் தாக்கும் படைகள் எப்பொழுதும் வடக்கேயிருந்து வந்தன) |
| இஸ்ரவேல் | 2:3 | இங்கு யூதா என்று பொருள்படும் |
| மாயையை | 2:6 | விக்கிரகங்களை |
| கித்தீமின் தீவுகள் | 2:10 | மேற்கே உள்ள சைப்ரஸ் கடற்கரை மக்களிடமும் |
| கேதாருக்கு ஆள் அனுப்பி | 2:10 | கிழக்கே சிரியா, அரேபியாவில் உள்ள பாலைவன மக்களிடம் ஆள் அனுப்பி |
| வீணானவைகளுக்காக | 2:11 | பிரயோஜனம் இல்லாத விக்கிரகங்களுக்காக |
| தங்கள் மகிமையை மாற்றினார்கள் | 2:11 | தங்கள் மகிமையுள்ள கடவுளை மாற்றிக் கொண்டார்கள் |
| நோப், தகபானேஸ் | 2:16 | எகிப்தின் பட்டணங்கள் |
| சீகோர் | 2:18 | நைலின் கிளை நதி |
| உனக்குப் பிரயோஜனம் என்ன | 2:18 | நேச நாடுகளைத் தேடுவதினால் உனக்கு ஒரு பிரயோஜனமும் இராது |
| சவுக்காரம் | 2:22 | சோப்பு, சலவை செய்யப் பயன்படும் |
| தாறுமாறாய் ஓடுகிற | 2:23 | ஆண் ஒட்டகத்தைத் தேடி ஓடும் |
| காற்றை உட்கொள்ளுகிற | 2:24 | ஆண் கழுதைக்காக மோப்பம் பிடிக்கும் |
| அதின் மாசத்தில் | 2:24 | புணர்ச்சி காலத்தில் |
| நயப்படுத்துகிறதென்ன | 2:33 | திறமையாய் திட்டம் பண்ணுவது ஏன்? |
| வேசித்தனம் பண்ணாத இடம் | 3:2 | கல்லாலும் மரத்தாலும் செய்யப்பட்ட மற்ற தெய்வங்களை நாடாத இடம் |
| அரபியன் காத்துக்கொண்டி-ருக்கிறதுபோல | 3:2 | அரபியன் கொள்ளையடிக்கயாராவது வருவானா என்று காத்திருப்பது போல |

| | | |
|---|---|---|
| கள்ளத்தனமாய் | 3:10 | பொய்யாய், போலியாய், ஏமாற்று வேலையாய் |
| இலச்சையிலே | 3:25 | மானக்கேட்டிலே |
| அது தூற்றவுமாட்டாது, சுத்திகரிக்கவுமாட்டாது | 4:11 | அது அறுவடையிலே பதரைப் பறக்கடித்து, தானியத்தை களத்திலே விழச் செய்யும். மெதுவாக வீசும் காற்றாக இருக்காது |
| என் காரியமாய் வரும் | 4:12 | என் கட்டளையின்படி |
| அசுப்பிலே | 4:20 | திடீரென |
| விடப்பட்டிருக்கும் | 4:29 | கைவிடப்பட்டிருக்கும் |
| சோர நாயகர் | 4:30 | காதலர் (உன்னோடு சேர்ந்த நாடுகள்) |
| சிவிங்கி | 5:6 | சிறுத்தைப்புலி |
| சளுக்கு பண்ணுகிறார்கள் | 5:28 | மினுக்குகிறார்கள் |
| போயேறும்படிக்கு | 6:4 | தாக்கும்படி |
| அழிம்பு | 6:7 | அழிவு |
| செவி விருத்தசேதனமில்லாதது | 6:10 | காது அடைபட்டிருக்கிறது |
| பரிச்சேதம் | 6:15 | கொஞ்சமும் |
| குடியானவனும் அவனுக்கடுத்தவனும் | 6:21 | அயலகத்தாரும் நண்பர்களும் |
| ஜனமாகிய குமாரத்தியே | 6:26 | எருசலேமே |
| துருகமாகவும் அரணாகவும் வைத்தேன் | 6:27 | பாதுகாப்பாக வைத்தேன் |
| துருத்தி வெந்தது | 6:29 | அடுப்பிலே தீ மிகவும் உஷ்ணத்தோடு எரிந்தது |
| பிரயாசம் விருதாய்ப்போயிற்று | 6:29 | முயற்சி வீணாயிற்று, உலோகம்கழிவு நீக்கப்படவில்லை. தீயவர்கள் இன்னும் நீக்கப்படவில்லை |
| தள்ளுபடியான வெள்ளி | 6:30 | செல்லாக் காசு |
| வான ராக்கினி | 7:18 | வானத்தரசி |
| நெகிழ விட்டார் | 7:29 | கை விட்டார் |
| வேதபாரகரின் கள்ள எழுத்தாணி அதை அபத்தமாக்குகிறது | 8:8 | வேத பண்டிதன் கர்த்தரின் சட்டங்களை மாற்றி எழுதுகிறான் |
| கட்டிக் கொள்பவர்கள் | 8:10 | அபகரிப்பவர்கள் |

| | | |
|---|---|---|
| மூச்செறிதல் | 8:16 | சீறல் |
| கரிகறுத்திருக்கிறேன் | 8:21 | புலம்புகிறேன் |
| பதிவிடை | 9:8 | கண்ணி |
| உடுமானம் | 10:9 | உடைகள் |
| தாவுமாக்குவேன் | 10:22 | தங்கும் இடமாக்குவேன் |
| திடச்சாட்சியாய் | 11:7 | மீண்டும், மீண்டும், திரும்பத்திரும்ப, அடிக்கடி |
| துர்ச்சனர் | 11:15 | தீயோர் |
| பரிசுத்த மாம்சத்தை உன்னை விட்டு தாண்டிப்போகப் பண்ணுவார்கள் | 11:15 | உனக்கு வரப்போகும் தீமையை நீ செலுத்தும் பலிகள் அகற்றிவிடுமா? |
| பட்டயத்தாலே | 11:22 | யுத்தத்தாலே |
| நீர் அவர்கள் வாய்க்குச் சமீபமும் | 12:2 | அவர்கள் உம்மைப் புகழுகிறார்கள். ஆனால் உதட்டளவினாலே, அவர்கள் உள்ளந்திரியங்களுக்கோ தூரமாயிருக்கிறீர் |
| காலாட்களோடே ஓடும்போதே | 12:5 | உன் சொந்த ஊரான (ஆனதோத்) சாதாரண மனிதரை எதிர்க்கும் போதே |
| குதிரைகளோடே எப்படி சேர்ந்து ஓடுவாய் | 12:5 | அரசனோடே, அவனுடைய பிரபுக்களோடே, அவனுடைய கெட்ட ஆசாரியரோடே எப்படி எதிர்த்து நிற்பாய் |
| சமாதானமுள்ள தேசத்தில் | 12:5 | திறந்த வெளியில் |
| அடைக்கலம் தேடினால் | 12:5 | இடறி விழுந்தால் |
| யோர்தான் பிரவாகித்து வரும்போது | 12:5 | யோர்தான் கரையோரம் உள்ள காடுகளில் ஓடும்போது |
| சேர்க்கையாயிருக்கிறதுபோல | 13:11 | ஒட்டியிருக்கிறதுபோல |
| குடிவிலக்கப்பட்டுப்போம் | 13:19 | நாடு கடத்தப்படும் |
| சமூலமாய் | 13:19 | முழுமையாய் |
| கரி கறுத்து | 14:2 | துக்கித்து |
| விடாய்த்துப்போன | 14:9 | திகைப்புக்கு ஆளான |
| தங்கள் கால்களை அடக்கிக்கொள்ளாமல் | 14:10 | தங்களை அடக்கி ஆளாமல் |
| அலைய | 14:10 | வழி விலகி அலைய |
| கிரயமில்லாமல் சூறையிடுவிப்பேன் | 15:13 | இலவச கொள்ளை பொருளாக்குவேன் |

| | | |
|---|---|---|
| நீ திரும்பினால் | 15:19 | நீ என்னை நம்பினால் |
| நீ தீழ்ப்பானதிலிருந்து விலையேறப் பெற்றதைப் பிரித்தெடுத்தால் | 15:19 | நீ முட்டாள்தனமாக பேசாமல் நான் சொல்வதை மாத்திரம் பேசினால் |
| என் வாய் போலிருப்பாய் | 15:19 | என் இறைவாக்கினனாக இருப்பாய் |
| நீ அவர்களிடத்தில் திரும்பாமல் | 15:19 | நீ அவர்களால் வசப்படுத்தப்படாமல் |
| அவர்கள் உன்னிடம் திரும்புவார்களாக | 15:19 | அவர்கள் நீ பேசுவதற்கு இணங்குவார்களாக |
| இப்படிச் செய்திருக்கிறது | 17:2 | இப்படி கட்டி வைத்திருக்கிறார்கள் |
| கறளையாய்ப் போன | 17:6 | வளர்ச்சி குன்றிய |
| திருக்குள்ளதும் | 17:9 | வஞ்சகம் உள்ளதும் |
| அதை விட்டு | 17:11 | அதை இழந்து |
| திரிகையினாலே | 18:3 | சக்கரத்தில் |
| வனைந்து கொண்டிருந்தான் | 18:3 | மண்பாண்டங்களை செய்துகொண்டிருந்தான் |
| மாகோர் மீசாபீப் | 20:3 | திகிலில் வாழும் மனிதன் |
| என்னை இணங்கப்பண்ணினீர் | 20:7 | உமது கட்டளைகளை ஏற்றுக்கொள்ளப் பண்ணினீர் |
| பாழ்க்கடிப்பு | 20:8 | அழிவு |
| அவதூறைக் கேட்டேன் | 20:10 | அச்சுறுத்தலைக் கேட்டேன் |
| அறிவியுங்கள், அப்பொழுது நாங்கள் அதை அறிவிப்போம் | 20:10 | குற்றஞ்சாட்டுங்கள் நாங்கள் அவன்மேல் பழி சுமத்துவோம் |
| தவறி விழும்படி | 20:10 | தவறு செய்யும்படி |
| இணங்குவான் | 20:10 | அகப்பட்டுக் கொள்வான் |
| சாட்டிவிட்டேன் | 20:12 | விட்டுவிட்டேன் |
| சூலுமாய் | 20:17 | கருவுமாய் |
| பறி கொடுத்தவனை | 21:12 | ஏமாற்றம் அடைந்தவனை |
| கொடுமுடி | 22:6 | மலைஉச்சி |
| ஜாதிலிங்கவர்ணம் | 22:13 | சிவப்பு நிறம் |
| தற்பொழிவு | 22:17 | லாபம் |

| | | |
|---|---|---|
| முறிந்தார்கள் | 22:20 | நொறுக்கப்பட்டார்கள் |
| அவர்கள் ஓட்டம் பொல்லாதது | 23:10 | அவர்கள் தீமை செய்யத் தீவிரிக்கிறார்கள் |
| பெலன் | 23:10 | அதிகாரம் |
| மாயக்காரராயிருக்கிறார்கள் | 23:11 | என் நாமத்தினால் பேசுவதாக ஏமாற்றுகிறார்கள் |
| சுமரும் பாரம் | 23:33 | வரும் துக்கசெய்தி |
| உங்களைத் தள்ளிவிடுவேன் என்பதே பாரம் | 23:33 | நீங்கள் எனக்குப் பாரமாயிருக்கிறீர்கள், உங்களை வெறுத்து ஒதுக்கிவிடுவேன் என்பதே என் செய்தி |
| எகொனியா | 24:1 | யோயாக்கீன், கோனியா |
| கந்தாயத்து அத்திப்பழங்கள் | 24:2 | முதன்முதலில் பழுத்த அத்திப்பழங்கள் |
| ஈசல் போடுதலாகவும் | 25:9 | நிந்தையாகவும் |
| எழுபது வருஷம் சேவிப்பார்கள் முறியடித்தான். | 25:11 | ஆச்சரியமான இறைவாக்கு, பாபிலோனிய ஆதிக்கம் 70 வருடங்கள் நீடித்தது (ஏறத்தாழ கி.மு. 606 முதல் கி.மு.536 வரை) பின்னர் பாரசீக அரசன் கோரேஸ் பாபிலோனை பாபிலோனியரால் சிறைபிடிக்கப்பட்ட யூதர்களை தாய்நாடு திரும்ப அனுமதித்தான் |
| தாபரத்துக்கு விரோதமாக | 25:30 | மக்களுக்கு விரோதமாக |
| மேய்ப்பர்களே | 24:34 | தலைவர்களே |
| உச்சிதமான பாத்திரம் | 25:34 | விலையேறப் பெற்ற மென்மையான பாத்திரம் |
| சீலோவா | 26:6 | ஏலி காலத்தில் உடன்படிக்கைப் பெட்டி சீலோவாவில் இருந்தது. இந்த நகரம் பெலிஸ்தியர்களால் அழிக்கப்பட்டது |
| கற்பிக்கவேண்டுமென்று | 27:4 | கட்டளையிட வேண்டுமென்று |
| அவனுடைய தேசத்துக்குக் காலம் வருகிற வரையில் | 27:7 | அவனுடைய தேசம் வீழ்ச்சி அடையும் காலம் வரை |
| அசூரின் ..............தீர்க்கதரிசி | 28:1 | கள்ள தீர்க்கதரிசி |
| புறப்பட்டுப்போன பிற்பாடு | 29:1 | கைதிகளாக புறப்பட்டுப்போன பின்பு |
| சொப்பனம் காணப்பண்ணுகின்ற | 29:8 | உங்களைக் கனவு உலகில் சஞ்சரிக்கப்பண்ணுகிற பொய்க் காட்சியாளர்களுக்கு செவி கொடாதீர்கள் |
| நினைவுகளை | 29:11 | திட்டங்களை |
| பிரமை கொண்டு | 29:26 | பைத்தியமாகி |

| | | |
|---|---|---|
| விசாரிப்புக்காரராயிருக்கும்படிக்கும் | 29:26 | பொறுப்பாளராய் இருக்கும்படிக்கும் |
| தொழுவிலும் போடும்படிக்கு | 29:26 | காலில் இரும்பு வளையம் மாட்டி விலங்கிடப்படும்படிக்கு |
| ஏற்படுவாரில்லை | 30:13 | உதவி செய்பவர் இல்லை |
| ஔஷதம் | 30:13 | மருந்து |
| விசாரிப்பாரற்ற சீயோன் | 30:17 | ஒருவரும் விரும்பாத எருசலேம் |
| தள்ளுண்டவள் | 30:17 | ஒதுக்கி வைக்கப்பட்டவள் |
| அவர்களுடைய பிரபு | 30:21 | அவர்களுடைய தலைவன் |
| அவர்களுடைய அதிபதி | 30:21 | அவர்களை ஆளுபவர் |
| அவரை சமீபித்து வரப்பண்ணுவேன் ......... என்னிடத்தில் சேரும்படி தன் இருதயத்தைப் பிணைப்படுத்துகிற இவர் யார்? | 30:21 | அவரை என்னுடைய ஆலயத்தில் குருவாக இருக்க அழைப்பேன். பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பியபின், இஸ்ரவேலராகிய மக்கபேயர் குருக்களாகவும், அரசர்களாகவும் இருப்பார்கள். வேற்று நாட்டவர் ஆட்சி செய்வதில்லை. நான் அழைத்தவரைத் தவிர, தன் இருதயத்தை என்னோடு ஐக்கியப்படுத்தி, என்னிடத்தில் கிட்டிச்சேர்ந்து, என் ஆலயத்தில் குருவாக ஊழியம் செய்ய வேறு யாரால் முடியும்? இது கிறிஸ்துவால் உண்டாகும் கடைசி மீட்பைக் குறிக்கிறது |
| கோராவாரிக் காற்று | 30:23 | சகலத்தையும் அழிக்கும் சுழல் காற்று |
| தரிசனையானார் | 31:3 | தரிசனமானார் |
| பிள்ளைத்தாய்ச்சிகள் | 31:8 | பேறுகாலப் பெண்கள் |
| திருப்பும் | 31:18 | உம்மண்டை திருப்பும் |
| ராமாவிலே | 31:15 | ராகேல் அடக்கம் பண்ணப்பட்ட ராமாபிரதேசத்திலே |
| ராகேல் | 31:15 | இஸ்ரவேலருக்கு தாய்க்கு ஒப்பான ராகேல் |
| தன் பிள்ளைகள் | 31:15 | இஸ்ரவேலர் |
| குறிப்படையாளங்களை நிறுத்து | 31:21 | நீ நாடு கடத்தப்படும்போது இஸ்ரவேலுக்குத் திரும்புவதற்கு சாலையோர அடையாளங்களை வை. நீ இங்குள்ள பட்டணங்களுக்குத் திரும்புவாய் |
| ஸ்திரியானவள் புருஷனைச் சூழ்ந்து கொள்ளுவாள் | 31:22 | இஸ்ரவேல் தன் நாயகனாகிய கர்த்தரை நாடுவாள் |
| நிரப்புவேன் | 31:25 | திருப்தியாக்குவேன் |

| | | |
|---|---|---|
| நாயகர் | 31:32 | தலைவர் |
| கோடிமட்டும் | 31:40 | மூலை மட்டும் |
| பிடுங்கப்படுவதுமில்லை | 31:40 | முற்றுகையிடப்பட்டு பிடிக்கப்படுவதுமில்லை |
| அடுத்தது என்று | 32:7 | அதிகாரம் உண்டு என்று |
| திறந்திருக்கிற பிரதி | 32:11 | முத்திரை போடப்படாத நகல் |
| கொள்ளப்படும் | 32:15 | சொந்தமாக்கிக் கொள்ளப்படும் |
| கொள்ளப்படும் | 32:43 | வாங்கப்படும் |
| எதிர்க் கொத்தளங்களினாலும் | 33:4 | பாபிலோனின் முற்றுகை மேடைகளுக்கும் வாள்களுக்கும் எதிராக எருசலேமின் மதில்களை பலப்படுத்துவதற்காக கோட்டை அருகே இருந்த வீடுகளையும் யூதா ராஜாக்களின் அரண்மனைகளையும் இடித்துத்தள்ளப்பட்டு அழிக்கப்பட்ட மேடைகளையும் குறித்து கர்த்தர் சொல்லுகிறது இதுவே. |
| இவர்கள் | 33:9 | பூமியின் எல்லா மக்களும் |
| அவாந்தர வெளி | 33:10 | பாழ்நிலம் |
| நீதியின் கிளையை | 33:15 | நீதியின் தளிரை |
| என் முகத்துக்குமுன் பண்ணின உடன்படிக்கையின் ............ மனுஷரை | 34:18 | நீங்கள் உங்கள் அடிமைகளை விடுதலை செய்யும்படி என் முகத்துக்கு முன்பாக பண்ணின உடன்படிக்கையின் அல்லது ஒப்புதலின் வார்த்தைகளை நிறைவேற்றாமல் அதை மீறின மனுஷரை |
| நான் துண்டங்களின் நடுவாக கடந்துபோகும்படி செய்து, அவர்களை இரண்டாகத் துண்டித்த கன்றுக்குட்டியைப் போலாக்குவேன் | 34:18 | உடன்படிக்கைக்கு அடையாளமாக ஒரு கன்றுக்குட்டியை இரண்டு துண்டுகளாக வெட்டி அதின் நடுவே நடந்தீர்கள். உடன்படிக்கையை மீறியதால் நான் உங்களை இரண்டாக பிளக்கப்பட்ட கன்றுக்குட்டியைப்போல் ஆக்குவேன் |
| அடைக்கப்பட்டவன் | 36:5 | அடைக்கப்பட்டிருக்கிறேன் |
| சம்பிரதி | 36:12 | எழுத்தர் |
| கணப்பு | 36:22 | உஷ்ணம் உண்டாக்கும் அடுப்பு |
| எகிப்திலிருந்து புறப்பட்டது | 37:5 | எருசலேமை விடுவிக்க எகிப்திலிருந்து புறப்பட்டு வந்தது |
| எருசலேமைவிட்டு நீங்கிப் போனார்கள் | 37:5 | கல்தேயர் எகிப்தியரோடு சண்டை போடும்படி எருசலேமின் முற்றுகையை கைவிட்டார்கள் |
| பென்யமீன் தேசத்துக்குப்போக | 37:12 | தான் வாங்கின சொத்தைப் பார்க்க பென்யமீன் நாட்டுக்குப்போக |
| காவற்சேர்வையின் அதிபதி | 37:13 | மெய்க்காப்பாளரின் தலைவன் |

| | | |
|---|---|---|
| நிலவறை | 37:16 | நிலத்துக்கு அடியில் உள்ள இருட்டான உள்ளறை |
| அவர்கள் தானே | 38:22 | எகிப்தியர்கள் தானே |
| போதனைச் செய்து | 38:22 | துர்ப்போதனை செய்து |
| இராணுவச் சேர்வைக்காரர் | 40:7 | இராணுவத் தலைவர்கள் |
| சேவகர் | 41:16 | யுத்தவீரர் |
| பிரதானிகள் | 41:16 | அதிகாரிகள் |
| பேட்டையில் | 41:18 | குடியிருப்பில் |
| பழிப்பாகவும் | 42:18 | பழிச் சொல்லாகவும் |
| காவற்சேனாதிபதி | 43:5 | மெய்க்காப்பாளர்களின் தலைமை அதிகாரி |
| ராஜகூடாரம் | 43:10 | அரசாட்சி |
| பெத்ஷிமேசின் | 43:13 | ஹீலியோபாலிஸ் பட்டணத்தின் |
| சிலைகளை | 43:13 | வணங்கப்பட்ட தூண்களை |
| ஸ்திரப்படுத்தினது | 44:25 | செய்து முடித்தது |
| ஆண்டவருடைய ஜீவனாணை | 44:26 | வாழும் ஆண்டவர்மேல் ஆணை |
| கீலேயாத் | 46:11 | யோர்தானுக்கு கிழக்கே மருந்துக்காக பயன்படும் மூலிகை செடிகள் உள்ள இடம்(8:22) |
| அவிழ்தங்களை கூட்டுகிறது | 46:11 | மருந்துகளை தயார் செய்வது (உபயோகிப்பது) |
| பட்டயம் | 46:14 | நேபுகாத்நேச்சாரின் பட்டயம் |
| விழுகிறான் | 46:16 | இடறிவிழுந்தார்கள் |
| கடகடப்பையும் | 47:3 | இரைச்சலையும் |
| நோக்கிப் பாராதிருப்பார்கள் | 47:3 | பிள்ளைகளைக் கைவிட்டு ஜீவன் தப்ப ஓடுவார்கள் |
| கீறிக் கொள்ளுவாய் | 47:5 | துக்கித்துப் புலம்புவாய் |
| பெத்தரிக்கம் | 48:2 | புகழ்ச்சி, பெருமை |
| லூகித்துக்கு | 48:5 | லூகித்து மலைக்கு |
| ஓரொனாயிமுக்கு | 48:5 | ஓரொனாயீம் பட்டணத்துக்கு |
| வண்டல்களின் மேல் அசையாமல் இருந்தது | 48:11 | மண்டியை அடியில் கொண்ட பழைய திராட்சரசம் போல பாதுகாப்பாக இருந்தது |

| | | |
|---|---|---|
| பெத்தேலாலே | 48:13 | கன்றுக்குட்டி விக்கிரத்தாலே |
| நாகசுரம் போல் துயரமாய் தொனிக்கும் | 48:36 | ஒருவன் துக்கவீட்டில் துயரத்தோடு வாசிக்கும் புல்லாங்குழல் போல ஒலிக்கும் |
| ஏகப் புலம்பல் | 48:38 | ஒரே புலம்பல் |
| வல்லடி | 48:45 | வன்முறை |
| வலசை வாங்கி | 49:5 | ஜீவன் தப்ப பெருமூச்சுவிட்டு |
| பாத்திரத்தில் நிச்சயமாய் குடிப்பாய் | 49:12 | குற்றமற்றவர்கள் தண்டனையின் பாத்திரத்தில் குடித்தால், நீ எவ்வளவு அதிகமாய் தண்டிக்கப்பட வேண்டும் |
| பிரமித்து | 49:17 | ஆச்சரியம் அடைந்து |
| ஈசல் போடுவான் | 49:17 | கேலி செய்வான் |
| எனக்கு மட்டுக்கட்டுகிறவன் | 49:19 | என்னைத் தடுத்து நிறுத்துபவன் |
| இடிந்து விழும் | 49:21 | ஏதோம் இடிந்து விழும் |
| ஒரு கழுகைப் போல | 49:22 | எதிரி ஒரு கழுகைப்போல |
| எழும்பி | 49:28 | புறப்பட்டு |
| மெரொதாக் | 50:2 | பாபிலோனிய தெய்வம் |
| கடாக்களைப்போல் இருங்கள் | 50:8 | கடாக்களைப்போல் வேகமாக வெளியேறுங்கள் |
| வலிய ரிஷபம் போல் முக்காரம் போடுகிறீர்களே | 50:11 | பலம் வாய்ந்த காளையைப்போல உறுமுகிறீர்களே |
| அம்புச் செலவை | 50:14 | இராணுவச் செலவை |
| அது கையளித்தது | 50:15 | பாபிலோன் சரணடைந்தது |
| தெறிப்பட்டுப்போன | 50:17 | விரட்டி சிதறடிக்கப்பட்ட |
| சர்வ பூமியின் சம்மட்டி | 50:23 | பூமி முழுவதையும் பாழாக்கின பாபிலோன் |
| அஸ்திராயுதங்கள் | 50:25 | படைக்கருவிகள் |
| இடும்புள்ளவனே | 50:31 | இறுமாப்பு உள்ளவனே |
| ஓரிகளும் | 50:39 | கழுதைப் புலிகளும் |
| திட்டஞ் சொல்பவன் | 50:44 | சவால் விடுகிறவன் |
| அழிக்கும் காற்றை | 51:1 | அழிக்கும் ஒருவனை |

| | | |
|---|---|---|
| தூற்றுவாரை | 51:2 | தானியத்தை புடைக்கிறதுபோல புடைத்தெடுக்கும் மனிதரை |
| தளகர்த்தனுக்குப் பட்டங்கட்டுங்கள் | 51:27 | சேனாதிபதியை நியமியுங்கள் |
| மின்னி | 51:27 | துன்மார்க்கம் மிகுந்த பாபிலோன் அழிவதற்கு காரணமாக இருந்த அரசுகளில் ஒன்று. பிற்காலத்தில் ஆர்மீனியா என்று அழைக்கப்பட்டது |
| சுணையுள்ள | 51:27 | முள் உடம்புள்ள |
| பேடி | 51:30 | கோழை |
| நாணல்கள் | 51:31 | சதுப்பு நிலங்கள் |
| சுவறவும் | 51:36 | காய்ந்து போகவும் |
| சேசாக்கு | 51:41 | பாபிலோன் |
| பிரமிப்பானது | 51:41 | ஆச்சரியத்துக்குள்ளானது |
| பேலைத் | 51:44 | பாபிலோனின் பேல் என்ற தெய்வத்தை |
| கரகம் | 52:19 | கப் |
| சேனாதிபதி | 52:19 | மெய்க்காப்பாளர் தலைவன் |
| நிறையில்லை | 52:20 | நிறுக்கமுடியாதபடி கனமாக இருந்தன |

## எரேமியாவின் புலம்பல்

(எருசலேமின் அழிவைக் குறித்து புலம்பல்)

| | | |
|---|---|---|
| இடுக்கமான இடங்களிலே | 1:3 | அவளுடைய துயரத்திலே |
| தொடர்ந்து பிடித்தார்கள் | 1:3 | வளைத்துப் பிடித்தார்கள், மேற்கொண்டார்கள் |
| சத்துவமில்லாமல் நடந்து போனார்கள் | 1:6 | பலம் இல்லாமல் தப்பி ஓடினார்கள் |
| முடிவை | 1:9 | தண்டனையை |
| இன்பமான எல்லாவற்றின் மேலும் | 1:10 | பொக்கிஷங்களின்மேலும் |
| எண்ணமற்றவளானேனே | 1:11 | புறக்கணிக்கப்பட்டவளானானே |
| கவை | 1:12 | அக்கறை |
| பலட்சயப்பட்டுப்போகிறேன் | 1:13 | பலவீனம் அடைகிறேன் |
| மந்தாரத்தினால் மூடினார் | 2:1 | அவமதிப்புக்குள்ளாக்கினார் |

| | | |
|---|---|---|
| பாதபீடம் | 2:1 | தேவாலயம் |
| அழிக்காதபடி | 2:8 | அழிப்பதிலிருந்து |
| ஈசற்போட்டு | 2:15 | பகடி செய்து |
| முதற் ஜாமத்தில் | 2:19 | மாலை 6 மணிமுதல் இரவு 9 மணிவரை |
| கும்புகளை | 2:22 | அநேக விருந்தினரை |
| எனக்குத் திகில்களை | 2:22 | (என்னுடைய எதிரிகளை) |
| முற்றலாக்கினார் | 3:4 | பலவீனம் ஆக்கினார் |
| அம்பறாத்தூணி | 3:13 | அம்புகள் வைக்கும் பை |
| எட்டியும் | 3:19 | காடியும் |
| பிச்சுமாகிய | 3:19 | கசப்புமாகிய |
| நுமுந்துவானாக | 3:29 | கவ்வுவானாக, புதைப்பானாக |
| கைச்செய்கை இல்லாமல் | 4:6 | கடவுளால் |
| நசரேயர் | 4:7 | இளவரசர்கள் |
| மேனியுமாயிருந்தார்கள் | 4:7 | அழகாயிருந்தார்கள் |
| அறியப்படார்கள் | 4:8 | தெருக்களில் ஒருவரும் அவர்களை அடையாளம் கண்டு கொள்ளமுடியாது |
| குத்துண்டு கரைந்துபோகிறார்கள் | 4:9 | குத்துண்டவர்களைப் போல மடிகிறார்கள் |
| அடிச்சுவடுகளை வேட்டையாடினார்கள் | 4:18 | தொடர்ந்தார்கள் |
| கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் | 4:20 | பாபிலோனுக்குக் கி.மு. 586இல் கொண்டுபோகப்பட்ட யூதாவின் கடைசி ராஜா சிதேக்கியாவாக இருக்கலாம் |
| கையளித்தோம் | 5:6 | வேண்டிக்கொண்டோம் |
| ஏறத் தூக்கினார்கள் | 5:12 | தூக்கிலிட்டார்கள் |

# எசேக்கியேல்

(எசேக்கியேல் என்றால் ஆண்டவர் ஆற்றல் அளிப்பார் என்று அர்த்தம்)

ஆசாரியனும் இறைவாக்கினனுமான எசேக்கியேல் ஏறத்தாழ கி.மு. 598ல் பாபிலோனியரால் நாடு கடத்தப்பட்ட யூத மக்களுக்கு இறைவாக்கு கூறினான். ஓசியாவுக்கு ஏறத்தாழ 150 வருடங்களுக்குப் பின்பு

| | | |
|---|---|---|
| முப்பதாம் வருஷம் | 1:1 | என்னுடைய 30 – ம் வயதிலே |
| சொகுசா | 1:4 | பிரகாசிக்கும் வெண்கலம் |

| | | |
|---|---|---|
| வச்சிரப்பிரகாசமான | 1:22 | கண் கூசச் செய்யும் |
| வச்சிரக்கல் | 3:9 | கடினமான வைரக்கல் |
| என் ஆவியின் உக்கிரத்தினால் | 3:14 | என்மேல் இறங்கின கர்த்தரின் ஆவியின் பெலத்தினால் |
| பிரமித்தவனாய் | 3:15 | அதிர்ச்சியுற்றவனாய் |
| ஒருக்களித்துப் படுத்து | 4:4 | ஒரு பக்கமாய் சரிந்துபடுத்து |
| ஹின் என்னும் படியில் ஆறிலொரு பங்கு | 4:11 | 0.6 லிட்டர் |
| கஷ்டத்தின் வறட்டி | 4:12 | காய்ந்த வறட்டி |
| அதிகரிக்கிறவர்களாகிய | 5:7 | அதிக துஷ்டத்தனம் உள்ளவர்களாகிய |
| கண்டனைகளாலும் | 5;15 | கண்டிப்புகளாலும், திட்டுதலாலும் |
| பிரமிப்பு | 5:15 | திகில் |
| மேடைகளை | 6:3 | பலிபீடங்களை |
| காலால் தட்டி | 6:11 | காலை உதறி |
| மதுரவாசனை | 6:13 | நறுமணத்தூப வாசனை |
| உன் அருவருப்புக்குத் தக்கது உன் நடுவில் வந்திருக்கும் | 7:4 | உன் அருவருப்புக்குத் தக்கதாக உன்னைத் தண்டிப்பேன் |
| ஏகமான தீங்கு | 7:5 | அழிவுக்கு மேல் அழிவு |
| அந்த நாள் | 7:10 | நியாயத்தீர்ப்பு நாள் |
| மிலாறு பூக்கிறது | 7:10 | அநியாயம், அநீதி, துன்மார்க்கம் அதிகரித்துவிட்டது |
| கும்பிலும் | 7:11 | கூட்டத்திலும் |
| அந்த நாள் கிட்டுகிறது | 7:12 | அழிவின் நாள் நெருங்குகிறது |
| கொள்ளுகிறவன் சந்தோஷப் படாமலும் விற்கிறவன் துக்கப் படாமலும் இருப்பானாக | 7:12 | வாங்குவதும் விற்பதும் இல்லாம் போகும் |
| விற்கப்பட்டதற்கு | 7:13 | விற்ற நிலத்துக்கு |
| தரிசனம் திரும்பாது | 7:13 | (அக்கிரமக்காரரைப் பற்றிய) இந்தக் காட்சி மாறாது |
| திடப்படுத்தமாட்டான் | 7:13 | பாதுகாத்துக் கொள்ளமுடியாது |
| அந்தரங்க ஸ்தலத்தை | 7:22 | பரிசுத்த ஸ்தலத்தை |

| | | |
|---|---|---|
| விக்கினம் | 7:26 | ஆபத்து |
| ஆறாம் வருஷம் | 8:1 | யோயாக்கீன் அரசன் சிறைபிடிக்கப்பட்ட 6ம் வருஷம் |
| நடையிலே | 8:5 | நுழைவு வாசலிலே |
| சித்திரம் தீரப்பட்டிருந்தன | 8:10 | சித்திரம் செதுக்கப்பட்டிருந்தன |
| தம்மூஸ் | 8:14 | சுமேரிய தெய்வம். அவன் இலையுதிர் காலத்தில் மரித்து, வசந்த காலத்தில் மீண்டும் உயிர் பெறுவான். அப்பொழுது நிலவளம் பெருகும். பெண்கள் குழந்தைகளைப் பெறுவார்கள் என்றும் நம்பினர். அவன் இஷ்தார் தேவதையின் கணவன் |
| திராட்சக்கிளையை தங்கள் நாசிக்கு நேரே பிடிக்கிறார்கள் | 8:17 | கிளைகளையும், இலைகளையும் வணங்கி என்னை நிந்திக்கிறார்கள் |
| சணல் நூல் | 9:3 | லினன் நூல், நார்ப்பட்டு |
| உருவப்போய் | 9:4 | ஊடாகப் போய் |
| துவக்கம் பண்ணினார்கள் | 9:6 | ஆரம்பித்தார்கள் |
| உட்பிரகாரத்தை | 10:3 | உள் முற்றத்தை |
| படிகப்பச்சை | 10:9 | மரகதக்கல் |
| இந்த நகரம் பானை, நாங்கள் அதிலுள்ள இறைச்சி | 11:3 | இறைச்சியை பானை பாதுகாப்பதுபோல, நம்முடைய நகரம் நம்மை பாதுகாக்கும் |
| நியாயங்கள் | 11:19 | நீதி நெறிகள் |
| ஏக இருதயம் | 11:19 | இருமனமற்ற இருதயம், ஒருமனம் |
| பரதேசம் | 12:3 | அந்நிய தேசம் |
| சுமரும் பாரம் | 12:10 | நடக்கப்போவதைப்பற்றி இறைவாக்காக சொல்லப்படும் செய்தி |
| அதிபதி | 12:12 | (சிதேக்கியா ராஜா) |
| மனுபுத்திரன் | 12:22 | மனிதன், மானிடன் |
| அபத்தத்தையும் | 13:6 | பொய்யையும் |
| பொய்க் குறியையும் தரிசித்து | 13:6 | பொய்யாய் குறி சொல்லி |
| காரியத்தை நிர்வாகம் புண்ணலாமென்று | 13:6 | தங்கள் வார்த்தைகள் நிறைவேறுமென்று |
| சமாதானம் | 13:10 | அமைதியான வாழ்க்கை |

| | | |
|---|---|---|
| தழுவணை | 13:18 | காப்புக் கயிறு |
| தலையணை | 13:18 | முக்காடு |
| சிரங்கு | 13:19 | கைப்பிடி அளவு |
| வீணாய் முறியப்பண்ணின படியினாலும் | 13:22 | வஞ்சகமாய் அதைரியப்படுத்தினபடியினாலும் |
| சாஸ்திரம் பார்ப்பதுமில்லை | 13:23 | குறி சொல்லுவதுமில்லை |
| உத்தரவு கொடுப்பேன் | 14:4 | தண்டனை கொடுப்பேன் |
| திரட்சிக்குத் தக்கதாக | 14:4 | ஏராளமான எண்ணிக்கைக்குத் தக்கதாக |
| பேதலித்துப் போனார்கள் | 14:5 | பிரிந்து போனார்கள் |
| எத்தப்பட்டு | 14:9 | ஏமாற்றப்பட்டு |
| தங்கள் ஆத்துமாக்களை | 14:14 | தங்களை |
| மார்க்கத்தையும் | 14:22 | நடத்தையையும் |
| கிரியைகளையும் | 14:22 | செயல்களையும் |
| தேற்றரவாயிருப்பார்கள் | 14:23 | ஆறுதலாயிருப்பார்கள் |
| தூக்கி வைக்கும்படி | 15:3 | தொங்கப்போடும்படி |
| எமோரியன் – ஏத்தித்தி | 16:3 | இஸ்ரவேலருக்கு முன்னால் விக்கிரகங்களை வணங்கின கானானியர் |
| கடகங்களையும் | 16:11 | காப்புகளையும் |
| நெற்றிப்பட்டம் | 16:12 | நெற்றி ஆபரணம் |
| அவைகளோடே வேசித்தனம்பண்ணி | 16:17 | அவைகளை வணங்கி |
| வழி முகனையிலும் | 16:25 | தெருவின் மூலைகளிலும் |
| வேசித்தனம் பண்ணி | 16:26 | (உடன்படிக்கை பண்ணி) |
| மார்க்கத்தை | 16:27 | வழியை |
| களைத்துப் போயிருக்கிறது | 16:31 | கீழ்த்தரமாயிருக்கிறது |
| பணையத்தை | 16:31 | ஊதியத்தை |
| ஆகாரத் திரட்சியும் | 16:49 | அளவுக்குமேல் உணவும் |
| நிர்விசாரமான சாங்கோ பாங்கமும் | 16:49 | கவலையற்ற சோம்பேறித்தனமும், உல்லாச வாழ்க்கையும் |

| | | |
|---|---|---|
| சிறுமையும் எளிமையுமானவனுடைய கையைபலப்படுத்தவில்லை | 16:49 | ஏழைக்கு உதவி செய்யவில்லை |
| சிறையிலிருக்கிற சிறையிருப்பையும் திருப்பும்போது | 16:53 | அவர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவரும்போது |
| அவர்கள் நடுவே நீ சிறையிருக்கிற உன்னுடைய சிறையிருப்பையும் திருப்புவேன் | 16:53 | உன்னையும் நல்ல நிலைக்குக் கொண்டு வருவேன் |
| நீ அவர்களுக்கு ஆறுதலாய் இருந்து | 16:54 | உன்னுடைய அவமானத்தைக்கண்டு அவர்கள் ஆறுதல் அடைவார்கள் |
| சீருக்கு | 16:55 | நிலைமைக்கு |
| அவமானம் பண்ணினபோது உன் பொல்லாப்பு வெளியாயிற்றே | 16:56 | உன் பொல்லாப்பு வெளிப்பட்டபோது சீரியரும் பெலிஸ்தரும் உன்னை அவமதித்தார்களே |
| உனக்குக் குமாரத்திகளாகக் கொடுப்பேன் | 16:61 | நீ ஆண்டுக் கொள்ளும்படி செய்வேன் |
| உடன்படிக்கையைப் பார்த்துக் கொடுப்பதில்லை | 16:61 | உடன்படிக்கையை மீறி இந்த கருணைக்கு நீ தகுதியற்றவளா-யிருந்தாலும் உனக்கு கருணைக் காட்டுவேன் |
| வர்த்தகருடைய நகரம் | 17:4 | பாபிலோன் |
| நடவாகிய | 17:7 | நடப்பட்ட |
| கொண்டல் காற்று | 17:10 | கிழக்குக் காற்று |
| தாற்பரியம் | 17:12 | அர்த்தம் |
| பாபிலோன் ராஜா | 17:12 | நேபுகாத்நேச்சார் |
| எருசலேமின் ராஜா | 17:12 | யோயாக்கீன் ஆக இருக்கலாம் |
| ராஜவம்சத்தில் ஒருவனை | 17:13 | சிதேக்கியா ராஜாவாக இருக்கலாம் |
| அணைபோட்டு | 17:17 | முற்றுகை போட்டு |
| கையடித்துக் கொடுத்திருந்தும் | 17:18 | உடன்படிக்கை பண்ணியிருந்தும் |
| திராட்சக் காய்கள் | 18:2 | புளித்த திராட்சைப்பழங்கள்; |
| பிதாக்கள் புளித்த திராட்சப் பழங்களைத் தின்றார்கள். பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின | 18:2 | பெற்றோருடைய பாவங்களுக்காகப் பிள்ளைகள் தண்டிக்கப்பட்டார்கள் |

| | | |
|---|---|---|
| பொலிசை | 18:8 | கடும்வட்டி, தொடர் வட்டி |
| தாய்ச்சிங்கம் | 19:2 | இஸ்ரவேல் நாடு |
| குட்டிகளில் ஒன்று | 19:3 | யோவகாஸ் ஆக இருக்கலாம் |
| குட்டிகளில் வேறொன்று | 19:5 | யோயாக்கீன் ஆக இருக்கலாம். |
| அக்கினி புறப்பட்டு அதின் கனியைப் பட்சித்தது | 19:14 | அந்தக் கொப்பு அழுகிவிட்டது |
| ஏழாம் வருஷத்து ஐந்தாம் மாதம் பத்தாம் தேதியிலே | 20:1 | யோயாக்கீனும் மற்றவர்களும் சிறைபிடிக்கப்பட்டு பாபிலோனுக்கு கொண்டுபோகப்பட்ட ஏழாம் வருடத்து எபிரேய ஐந்தாம் மாதமாக (கி.மு. 591) ஆக இருக்கலாம் |
| கர்த்தரிடம் விசாரிக்கும்படி | 20:1 | கர்த்தரின் சத்தத்தை அறிய |
| இரண்டகம் பண்ணினார்கள் | 20:8 | துரோகம் பண்ணினார்கள் |
| பாமா | 20:29 | தெய்வங்களுக்கு பலிசெலுத்தும் மேடு |
| ஜன சதளங்கள் | 20:35 | நாடோடிக் கும்பல்கள் |
| வழக்காடினதுபோல | 20:36 | தண்டித்ததுபோல |
| கோலின்கீழ் செல்லும்படி செய்து | 20:37 | என்னுடைய உடன்படிக்கைக்கு கீழ்ப்படியச் செய்வேன். (அக்காலத்தில் ஆடுகளை நீட்டப்பட்ட கோலின் கீழ் கடந்துபோகச் செய்து அவைகளை எண்ணினார்கள்.) |
| தென் திசைக்கு | 20:46 | எருசலேமுக்கு |
| மனமெல்லாம் தியங்கி | 21:7 | உற்சாகமற்று, பலவீனமாகி |
| அலைவுண்ணும் | 21:7 | ஆடும், அலம்பும்/தளும்பும் |
| கோல் | 21:10 | செங்கோல் |
| சங்காரம் செய்வதற்கு | 21:10 | படுகொலை செய்வதற்கு |
| விருட்சங்களையும் | 21:10 | ஆட்சிகளையும் |
| கையாடும்படி | 21:11 | உபயோகப்படுத்தும்படி |
| துலக்கப்பட்டுமிருக்கிறது | 21:11 | மினுக்கப்பட்டுமிருக்கிறது |
| இனிச் சோதனையால் தீருகிறதென்ன? | 21:13 | இனி நான் அவர்களைத் தண்டிக்கும்போது அவர்கள் மனந்திரும்பாவிட்டால் நடக்கப்போவதென்ன? |
| பதமிடப்பட்டது | 21:15 | பதப்படுத்தப்பட்டது |
| ஒரே தேசத்திலிருந்து வரவேண்டும் | 21:19 | பாபிலோனிலிருந்து வரவேண்டும் |

| | | |
|---|---|---|
| வழியின் மூலையில் அந்த இடத்தை தெரிந்துகொள் | 21:19 | வழிகள் பிரியும் இடத்தில் வழிகாட்டும் கம்பம் ஒன்றை நிறுத்து |
| உசாவி | 21:21 | கேட்டு, விசாரித்து |
| ஆர்ப்பரிக்கிறதற்கும் | 21:22 | கெம்பீரமாய் சத்தமிடுகிறதற்கும் |
| நிமித்தம் பார்க்குதல் | 21:22 | குறி கேட்டல் |
| எருசலேமைக் குறித்து நிமித்தம் பார்க்குதல் அவனுடைய வலது புறத்தில் உண்டாயிருக்கும் | 21:22 | எருசலேம் என்று எழுதப்பட்ட அம்பை எடுக்கிறான் |
| ஆணையிட்டவர்களுக்கு | 21:23 | ஒப்பந்தம் செய்தவர்களுக்கு, உடன்படிக்கை செய்தவர்களுக்கு |
| கைப்பிடியாய் பிடிக்கப்படுவீர்கள் | 21:24 | கைதிகளாகப் பிடிக்கப்படுவீர்கள் |
| துன்மார்க்க அதிபதியே | 21:25 | சிதேக்கியாவே |
| அதைக் கவிழ்ப்பேன் | 21:27 | எருசலேமைக் கவிழ்ப்பேன் |
| உரிமைக்காரனானவர் | 21:27 | மேசியா |
| உன் பட்டயத்தை அதின் உறையிலே போடு | 21:30 | மற்றவர்களைத் தண்டிக்கும் உன் காலம் முடிந்தது. ஆகையால் உன் வாளை அதின் உறையிலே போடு |
| இரத்தம் சிந்தின நகரம் | 22:2 | எருசலேம் |
| அபாண்டம் பேசுகிறவர்கள் | 22;9 | பொய்யாய் குற்றஞ்சாட்டுகிறவர்கள் |
| நான் கைகொட்டுகிறேன் | 22:13 | கோபத்தில் என் கையை உனக்கு விரோதமாக நீட்டுகிறேன் |
| களிம்பாய்ப் போனார்கள் | 22:18 | உலோகக் கழிவாய்ப் போனார்கள் |
| களிம்பு | 22;18 | உலோகம் உருக்கின பின்பு உள்ள கழிவு, பிரயோஜனமற்றது |
| எருசலேமுக்குள் சேர்ப்பேன் | 22:19 | எருசலேம் என்னும் வலைக்குள் சேர்ப்பேன் |
| மோக விகாரம் | 23:11 | காமவெறி |
| நீலாம்பரம் | 23:6 | அழகான நீல நிற ஆடை |
| ஜாதிலிங்கத்தால் சித்திரம்தீர்த்த | 23:14 | சிவப்பாக வரையப்பட்ட |
| சிநேக சம்போகத்துக்கு | 23:17 | காம உடலுறவுக்கு |
| கழுதை மாம்சமும் | 23:20 | கழுதையின் பாலியல் உறுப்பும் |
| இந்திரியம் | 23:20 | விந்து |
| வண்டில்களோடும் | 23:24 | கூரையுள்ள வண்டிகளோடும் |
| தீக்கடக்கப்பண்ணினார்கள் | 23:37 | தீயிலே போட்டார்கள் |

| | | |
|---|---|---|
| கடகங்களையும் | 23:42 | காப்புகளையும் |
| முறைகேடுகள் | 23:48 | விபசாரம், துன்மார்க்கம், வேசித்தனம், காமவெறி, விக்கிரக வணக்கம், சிலை வழிபாடு |
| சுமத்துவார்கள் | 23:49 | தண்டனை அனுபவிக்கும்படி செய்வார்கள் |
| சுமந்து | 23:49 | அனுபவித்து |
| பாவங்களை | 23:49 | பாவங்களின் பலனை |
| சம்பாரங்கள் | 24:10 | வாசனைப் பொருட்கள் (மசாலை) |
| வருத்தத்தை | 24:12 | மிகுந்த உஷ்ணத்தை |
| மனஸ்தாபப்படுவதும் | 24:14 | மனம் வருந்துவதும் |
| தப்பி வந்த ஒருவன்(அதி.25 முதல் 32வரை உள்ள அதிகாரங்கள் அம்மோன், மோவாப், ஏதோம், பெலிஸ்தியா, தீரு, எகிப்து, லீபனோன் ஆகிய இவைகளுக்கு எதிரான செய்திகளை கொண்டுள்ளன) | 24:26 | எருசலேமிலிருந்து தப்பிவந்த ஒருவன் |
| கொட்டகையும் | 25:5 | மேய்ச்சல் நிலமாகவும் |
| காலால் தட்டி | 25:6 | குதித்து கும்மாளம் போட்டு |
| நியாயங்களைச் செய்வேன் | 25:11 | தண்டிப்பேன் |
| பதினோராம் வருஷம் | 26:1 | நேபுகாத்நேச்சாரால் எருசலேம் பிடிபட்ட பதினோராம் வருடம் (கி.மு. 587 ஆக இருக்கலாம்) |
| ஜன சதளங்களின் | 26:2 | நாடுகளின் |
| ஒலிமுக வாசலாயிருந்த | 26:2 | வர்த்தக மையமாக இருந்த |
| நகரி | 26:2 | நகரம் |
| கொத்தளங்களை | 26:4 | காவல் கோபுரங்களை |
| பிரமிப்பார்கள் | 26:16 | ஆச்சரியத்தால் நடுங்குவார்கள் |
| கடலரசர் | 26:16 | கடற்கரை தலைவர்கள் |
| கடல் சஞ்சாரிகள் | 26:17 | கடற்கரை நாட்டு மக்கள் |
| சேனீர் | 27:5 | எர்மோன் மலை |

| | | |
|---|---|---|
| தேவதாரு மரத்தால் | 27:5 | பைன் மரத்தால் (ஊசி இலைகள் உள்ள மரம்) |
| ஆஷூர் மரம் | 27:6 | சைப்ரஸ் மரம் (சவுக்கு போன்றது) |
| வாரிப்பலகைகள் | 27:6 | கப்பலின் மேல்தளத்துப்பலகைகள் |
| விதானமாயிருந்தது | 27:7 | கப்பல் தளத்தில், வீடுகளில், கடைகளின் முன் பகுதியில், கதவுகளில், ஜன்னல்களில் வெயிலிலும், மழையிலுமிருந்து பாதுகாக்கப் பயன்படுத்திய அலங்காரமான சாய்வுப் பந்தலாயிருந்தது |
| சாஸ்திரிகள் | 27:8 | திறமைசாலிகள் |
| கம்பத்துப் பார்க்கிறவர்கள் | 27:9 | கப்பலின் உள் கடல்நீர் கசியாதபடி, கப்பலின் கரைகளில் கீல் பூசப்பட்ட துணிகளைத் திணித்து, கப்பலை நல்ல நிலையில் வைக்கிறவர்கள் |
| கம்மாத்தியர் | 27:11 | கம்மாத் என்ற இடத்தில் உள்ளவர்கள் |
| யாவான் ஜாதியார் | 27:13 | கிரேக்கர் |
| உன்னை பூரணப்படுத்தி | 27:25 | அநேக பொருட்களால் உன் கப்பல்களை நிரப்பி |
| பூரணப்படுத்தி | 27:25 | ஏராளமான பொருட்களை சேகரித்து வைத்து |
| தண்டு வலிக்கிறவர்கள் | 27:26 | மாலுமிகள் |
| சமுத்திரத்தின் நடுவே | 28:2 | மத்தியதரைக்கடல் அருகே |
| தேவாசனத்தில் | 28:2 | சிம்மாசனத்தில் |
| ஜாதிகளில் மகா பலவான் களாகிய மறுதேசத்தார் | 28:7 | பாபிலோனியர் |
| பத்ரோஸ் | 29:14 | தெற்கு எகிப்து |
| கூலி கிடைக்கவில்லை | 29:18 | ஒன்றும் கிடைக்கவில்லை |
| கடும் ஊழியம் வாங்கினான் | 29:18 | கடும் வேலை வாங்கினான் |
| கலந்த கூட்டம் | 30:5 | அரபியர் |
| கூபியர் | 30:5 | லிபியா தேசத்தவர் |
| பத்தை வைத்து | 30:21 | துணிகள் வைத்துக்கட்டி, கழுத்தில் தொங்கு தொட்டில் மாட்டி |
| நீ உன் மகத்துவத்திலே யாருக்கு ஒப்பாயிருக்கிறாய் | 31:2 | மகத்துவத்திலே உன்னை யாரோடு ஒப்பிடமுடியும் |
| அசீரியன்--- கேதுரு விருட்சமாயிருந்தான் | 31:3 | அசீரியன் ஒரு காலத்தில் அடர்ந்த கிளைகளுடன் உயர்ந்து வளரும் லெபனானின் கேதுரு மரத்தைப் போலிருந்தான். அதை நினைத்துப்பார் |

| | | |
|---|---|---|
| ஆழம் | 31:4 | தரைக்கடி தண்ணீர் |
| தேவனுடைய வனத்திலுள்ள கேதுருக்கள் --------- | 31:8 | ஏதேன் தோட்டத்திலிருந்த மரங்களும் அதற்கு நிகரல்ல |
| அந்நிய தேசத்தார் | 31:12 | பாபிலோனியர் |
| எல்லா ஆண்களினருகே முறிந்தன | 31:12 | மக்கள் வசித்த பள்ளத்தாக்குகளில் விழுந்தன |
| கொம்புகளின் மேல் | 31:13 | கொப்புகளுக்கு இடையில் |
| தண்ணீர் ஓரமாய்----- இப்படிச் செய்வேன் | 31:14 | ஒரு நாடும் அதைப்போல பெருமை பாராட்டாதபடி இப்படிச் செய்வேன் |
| ஆழத்தை மூடிப்போட்டு | 31:15 | சமுத்திரம் துக்கம் அடையும்படி செய்து |
| ஆறுகளை | 31:15 | அலைகளை |
| ஏதேனின் விருட்சங்களில் நீ எதற்கு ஒப்பானவன் | 31:18 | ஏதேனின் விருட்சங்களைவிட நீ மகத்துவமானவன் |
| விருத்தசேதனம் இல்லாதவர் களின் நடுவில் | 31:18 | நுனித்தோல் அறுவை செய்யாதவர்களின் நடுவில் |
| ஜீவப்பிரமாணங்களில் நடந்தால் | 33:18 | வாழ்வளிக்கும் நியமங்கள், ஜீவனுக்கேதுவான சட்டங்களின்படி நடந்தால் |
| நசல் கொண்டவைகள் | 34:4 | சுகம் இல்லாதவைகள், வியாதியுள்ளவைகள் |
| மடக்குவேன் | 34:15 | இளைப்பாறச் செய்வேன் |
| நீயாயந்தீர்ப்பேன் | 34:17 | நீதி வழங்குவேன் |
| என் தாசனாகிய தாவீது அவர்கள் அதிபதியாயிருப்பார் | 34:24 | என் தாசனாகிய தாவீதைப் போன்ற ஒரு ராஜா அவர்களை அரசாளுவார் |
| சேயீர் மலைக்கு | 35:2 | ஏதோமுக்கு |
| புற ஜாதிகள் | 36:4 | கடவுளை அறியாத பிற இனத்தவர் |
| நித்திய மேடுகள் | 36:2 | ஆதிகாலத்து மலைகள் |
| சதையான | 36:26 | அன்பான |
| ஒரே மேய்ப்பர் இருப்பார் | 37:24 | மேசியாவாகிய ஒரே மேய்ப்பர் இருப்பார் |

37ம் அதிகாரம். உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு, யூதா மக்கள் உலர்ந்த எலும்புகள் போல் இருந்தாலும், கர்த்தர் அவைகளை ஒன்று சேர்த்து, தேசத்தை உயிர்ப்பிப்பார்.

| | | |
|---|---|---|
| மாகோகு தேசத்தானாகிய கோகு | 38:2 | தேவனுக்கு எதிராக போராடும் சாத்தானோடு சேரும் மக்களின் தலைவன் |

| | | |
|---|---|---|
| உராஞ்சுகிற | 39:4 | ஊன் தின்னும் |
| பிரேதங்கள் | 39:14 | எலும்புக் கூடுகள் |
| ஆமோனா | 39:16 | திரள் கூட்டம் |
| மகா யாகம் | 39:17 | பெரிய பலி |
| ஆறு முழ நீளமான அளவுகோல் | 40:5 | 10 1/2 அடி நீளமான அளவு கோல் |
| வாசலின் மண்டபத்தை | 40:9 | நுழைவு மண்டபத்தை |
| கோல் அளவாக அளந்தார் | 40:9 | ஒரு கோல் அளவு இருந்தது |
| அதின் தூணாதாரங்களை | 40:9 | நுழைவு மண்டபத்தைத் தாங்கும் தூண்களை |
| ஒடுக்கமான ஜன்னல்கள் | 40:16 | குறுகிய துவாரங்கள் |
| சங்கீதக்காரரின் | 40:44 | இசைக்குழுவினரின், பாடகரின் |
| அறை வீடுகள் | 40:44 | ஒவ்வொரு அறையாக பல அறைகள் வரிசையாகக் கட்டப்பட்ட கட்டடங்கள் |
| ஆலயக் காவலைக் காக்கிற | 40:45 | ஆலயத்துக்குப் பொறுப்பான |
| பிரத்தியேகமான இடம் | 41:12 | ஆலய முற்றம் |
| நடை காவணங்கள் | 41:15 | அடுக்கடுக்காகக் கட்டப்பட்ட மேடை இருக்கைகள் |
| கோடிகளும் | 41:22 | முனைகளும் |
| விளிம்புகளும் | 41:22 | அடிப்பக்கப் பகுதிகளும் |
| பரிசுத்த ஸ்தலத்துக்கு | 41:23 | மகா பரிசுத்த ஸ்தலத்துக்கு |
| உத்திரங்கள் வைத்திருந்தது | 41:25 | மரப்பலகைகளால் ஆன கூரைபோன்ற சாய்ப்பு இறக்கப்பட்டிருந்தது |
| சுற்றுக் கட்டுகள் | 41:26 | பக்கச் சுவர்கள் |
| மாளிகை | 42:1 | கட்டடம் |
| அகலக்கட்டையாயிருந்தது | 42:5 | குறுகியதாயிருந்தன |
| திட்டங்களிலும் | 42:11 | வெளியே செல்லும் வாசல்களிலும் |
| வெளிப் பிரகாரத்துக்கு | 42:14 | வெளிமுற்றத்திற்கு, பொது மக்கள் ஆலயத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதிக்கு |
| வித்தியாசம் பண்ணும்படிக்கு | 42:20 | பிரிக்க |
| பிரேதங்களினாலும் | 43:7 | (உயிரற்ற சிலைகளினாலும்) |

| | | |
|---|---|---|
| பிரமாணம் | 43:12 | சட்டம் |
| சுற்றாதாரம் | 43:13 | அடிப்பகுதி |
| கீழ்நிலை | 43:14 | கீழ் விளிம்பு |
| பெரிய நிலை | 43:14 | மேல் விளிம்பு |
| சிகரம் | 43:15 | மேல்பகுதி |
| சட்டத்தின் | 43:17 | விளிம்பின் |
| கிட்டாமலும் | 44:13 | நெருங்காமலும், கிட்ட வராமலும் |
| இலச்சையையும் | 44:13 | வெட்கக் கேட்டையும் |
| சல்லடங்கள் | 44:18 | உள்ளாடைகள் |
| தங்கள் வஸ்திரங்களாலே ஜனங்களை பரிசுத்தப் படுத்தலாகாது | 44:19 | வேறு எவரும் அவர்களுடைய பரிசுத்த ஆடைகளைத் தொட்டு, தீங்குக்கு உட்பட இடம் இருக்காது |
| ஏழுநாள் எண்ணப்பட வேண்டும் | 44:26 | ஏழு நாட்கள் காத்திருக்க வேண்டும் |
| அர்ப்பிதமாக | 45:1 | அர்ப்பணமாக, பிரத்தியேகப் படுத்தவேண்டிய, தனியாக பிரித்து ஒதுக்கி வைக்க வேண்டிய |
| உத்தண்டங்கள் | 45:9 | வசூலிப்புகள் |
| போஜனபலி | 46:5 | தானியப் படைப்புகள் |
| ஈவையும் | 46:5 | விரும்பும் அளவையும் |
| நீச்சாழம் | 47:5 | நீந்தினால் மாத்திரம் கடக்கக் கூடிய ஆழம் |
| உளையான பள்ளங்களும் | 47:11 | சேறுள்ள நிலங்களும் |
| மடுக்களும் | 47:11 | சதுப்பு நிலங்களும் |
| ஆரோக்கியமாகாமல் | 47:11 | வளம் பெறாமல் |
| அவிழ்தத்துக்குமானவைகள் | 47:12 | மருந்துக்கு உதவுவகைகள் |
| கீழ்க்கடல் | 47:18 | தரைமட்டத்துக்கு 423 மீட்டர் அடியிலுள்ள சவக்கடல் (உப்புக்கடல்) |
| காணி | 48:20 | சொத்து |
| அதிபதி | 48:21 | தலைவன், அரசாளுபவன் |

| | | |
|---|---|---|
| ஈசஷார் | 48:25 | இசக்கார் |
| யேகோவா ஷம்மா | 48:35 | கர்த்தர் இங்கே இருக்கிறார், (கர்த்தரின் பட்டணம்) |

## தானியேல்

(எருசலேம் பிடிபட்டபோது தானியேல் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படுதல்)

| | | |
|---|---|---|
| முற்றிக்கை போட்டான் | 1:1 | நேபுகாத் நேச்சார் ஏறத்தாழ கி.மு. 586 இல் எருசலேமை எரித்துப்போட்டான் |
| சினேயார் தேசம் | 1:2 | பாபிலோன் |
| பிரதானிகளின் தலைவன் | 1:7 | அதிகாரிகளின் தலைவன் |
| கோரேஸ்....முதலாம் வருடம் | 1:21 | ஏறத்தாழ கி.மு. 539 |
| தலையாரிகளுக்கு | 2:14 | காவலர்களுக்கு |
| சேர்வைக்காரன் | 2:15 | அதிகாரி |
| சிலை | 2:31 | கிரேக்க பேரரசு |
| வெண்கலமும் | 2:32 | (அலக்சாந்தருக்கு வெண்கலக்கிரீடம் அணிவிக்கப்பட்டது) |
| உருண்டு வந்த கல் | 2:34 | பரலோக ராஜ்யம் |
| உரமும் | 2:42 | வல்லமையும் |
| நெரிசலுமாயிருக்கும் | 2:42 | பலவீனமாயிருக்கும் |
| கொலுமண்டபம் | 2:49 | அரச அவை |
| அறுபது முழ உயரமும் ஆறுமுழ அகலமுமான | 3:1 | 90 அடி (20மீ) உயரம், 9அடி (2.7மீ) அகலமுமான |
| கட்டியக்காரன் | 3:4 | பறைசாற்றுவோன் |
| சால்வைகளோடும் | 3:21 | அங்கிகளோடும் |
| நிசார்களோடும் | 3:21 | உள்ளாடைகளோடும் |
| ஏழு காலங்கள் | 4:16 | ஏழு வருடங்கள் |
| விசாரணையும் | 4:17 | தண்டனையும் |
| கர்த்தத்துவம் | 4:22 | ஆட்சி |

| | | |
|---|---|---|
| வியார்த்தி பண்ணுகிறதும் | 5:12 | அர்த்தத்தைத் தெரிவிக்கிறதும் |
| மட்டிட்டு | 5:26 | கணக்கிட்டு |
| மூன்றாம் அதிகாரியாயிருப்பான் | 5:29 | தன் தகப்பன் நெபோனிதாசுக்காக ஆட்சி செய்துகொண்டிருந்த பெல்ஷாத்சார், தானியேல் ராஜ்யத்தில் மூன்றாம் அதிகாரியாக இருப்பான் என்று கட்டளையிட்டான் |
| பறைமுறையிடவும் | 5:29 | பறை சாற்றவும் |
| ராஜ்யத்தைக்கட்டிக் கொண்டான் | 5:31 | பாபிலோனைப் பிடித்தான் |
| தாக்கீது செய்ய வேண்டுமென்று | 6:7 | உறுதியான கட்டளை பிறப்பிக்க வேண்டுமென்று |
| முதலாம் வருடத்திலே | 7:1 | பெல்ஷாத்சார் பாபிலோனிய பேரரசை ஆண்ட முதலாம் வருடத்திலே |
| சிங்கத்தைப் போலிருந்தது | 7:4 | (பாபிலோன் பேரரசு) |
| கரடிக்கு ஒப்பாகிய | 7:5 | (பாரசீக பேரரசு) |
| சிவிங்கியைப் போல் | 7:6 | சிறுத்தைப் புலியைப்போல (கிரேக்கப் பேரரசு) |
| நாலாம் மிருகம் | 7:7 | (ரோமப் பேரரசு) |
| நியாய சங்கம் | 7:10 | நீதிமன்றம் |
| ராஜரீகம் | 7:18 | அரசுரிமை |
| பத்து கொம்புகள் | 7:20 | ரோமப் பேரரசு பத்து பகுதிகளாக உடைவதைக் குறிக்கலாம் |
| ஒரு காலமும், காலங்களும் அரைக்காலமும் | 7:25 | மூன்றரை ஆண்டுகள் (ஒரு காலம் - ஒரு வருடம், காலங்கள் -இரண்டு வருடங்கள், அரைக்காலம் - அரை வருடம்) |
| கர்த்தத்துவங்களும் | 7:27 | அரசுகளும் |
| ஏலாம் தேசத்திலுள்ள சூசான் அரமனையில் | 8:2 | பாபிலோனின் ஏலாம் மாநிலத்தில் உள்ள முக்கிய நகரமாகிய சூசான் நகரின் அரமனையில் |
| இரண்டு கொம்புகளுள்ள ஒரு ஆட்டுக்கடா | 8:3 | மேதிய பாரசீக பேரரசு |
| வெள்ளாட்டுக்கடா | 8:5 | கிரேக்க பேரரசு |
| கால் பாவாமல் | 8:5 | கால் படாமல் |
| விசேஷித்த ஒரு கொம்பு | 8:5 | அலக்சாந்தர் |

| | | |
|---|---|---|
| நாலு கொம்புகள் | 8:8 | (1) எகிப்தின் டாலமி 1, (2) பாபிலோனியாவின் செலுக்கஸ், (3) சிரியா, சின்ன ஆசியாவின் அந்திகோனஸ், (4) மசிடோனியா, கிரீஸ் தேசத்து அன்டிபேட்டர் ஆகிய நான்கு பேர் அலக்சாந்தருக்குப் பின்பு அவன் சாம்ராஜ்யத்தை பங்கு போட்டு அரசாண்டனர் |
| சிங்காரமான தேசம் | 8:9 | இஸ்ரவேல் |
| தள்ளுண்டது | 8:11 | தீட்டுப்பட்டது |
| அழிம்புண்டாக்கி | 8:24 | அழிவு உண்டாக்கி |
| பரிசுத்த ஜனங்களையும் அழிப்பான் | 8:24 | அந்தியோகஸ் எபிபனஸ் ஆக இருக்கலாம். அவன் யூத மார்க்கத்தை ஒழித்துக்கட்ட முயன்றான் |
| ஆணையாக்கினையும் | 9:11 | கேடும், ஆணையாகச் சொல்லப்பட்ட தண்டனையும் |
| சொறியப்பட்டன | 9:11 | இறங்கின |
| உம்முடைய நிமித்தமாக | 9:19 | உமக்கு மகிமை உண்டாகும்படி |
| எழுபது வாரங்கள் | 9:24 | ஏழு எழுபது வருடங்கள் (490 வருடங்கள்) |
| மேசியா | 9:25 | அபிஷேகம் பண்ணப்பட்டவர் (கிறிஸ்து) |
| ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும் | 9:25 | ஏழு, ஏழு வாரங்களும் (49 வருடங்களும்) ஏழுஅறுபத்திரண்டு வாரமும் (434 வருடங்களும் செல்லும்) |
| இடுக்கமான காலங்களில் இப்படியாகும் | 9:25 | ஆபத்தான காலங்களில் இப்படியாகும். (எருசலேம் கி.பி.70ஆம் ஆண்டில் ரோமப் பேரரசன் தீத்துவால் அழிக்கப்பட்டது. அதற்குப்பின் உள்ள மூன்றரை வருடங்களில் 1,000,000 யூதர்கள் கொல்லப்பட்டனர்) |
| அநேகருக்கு உடன் படிக்கையை உறுதிப்படுத்தி | 9:27 | மக்களோடே ஏழு வருட உடன்படிக்கைபண்ணி |
| அந்த வாரம் பாதி சென்றபோது | 9:27 | அதில் பாதி காலம் கடந்தபின் |
| அருவருப்பான செட்டைகளோடு | 9:27 | வெகு வேகமாக |
| பாழாக்குகிறவன் | 9:27 | அந்தியோகஸ் எபிபானஸ் |
| தீருமட்டும் | 9:27 | நடந்து தீருமட்டும் |
| சொரியும் | 9:27 | ஊற்றப்படும் |
| ஒரு வாரமளவும் | 9:27 | ஏழு வருடங்கள் |

| | | |
|---|---|---|
| பாழாக்குகிறவன் | 9:27 | படையெடுத்து வரவிருக்கும் அரசன். அவன் பாழாக்கும் அருவருப்பான சிலையை தேவாலயத்தின் மிகுந்த உயரமான இடத்தில் வைப்பான். (24-27ல் சொல்லப்பட்ட வருடங்கள் தொடர்ச்சியாக நடைபெறும் வருடங்களாகக் கணக்கிடுவதற்கில்லை. எத்தனையோ ஆண்டுகள் இடைவெளியில் இவை நடக்கும். முத்திரையிடப்பட்டு புதை பொருளாக வைக்கப்பட்ட வார்த்தைகளை அறிய வல்லவன் யார்? |
| நித்திரை போகிறவனாய் | 10:9 | மயக்கம் போட்டு |
| நாலாம் ராஜா | 11:2 | கிரேக்க நாட்டுக்கு விரோதமான அகாஸ்வேரு ஆக இருக்கலாம் |
| பராக்கிரமமுள்ள ஒரு ராஜா | 11:3 | மகா அலக்சாந்தர் |
| பகுக்கப்படும் | 11:4 | பிரிக்கப்படும் |
| தென்திசை ராஜா | 11:5 | எகிப்து ராஜா (டாலமி - 2) |
| வடதிசை ராஜா | 11:6 | சிரியா ராஜா |
| புயபலம் இல்லாமற்போகும் | 11:6 | செல்வாக்கு நீடிக்காது |
| ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் | 11:6 | கைவிடப்படுவார்கள் |
| அவளுடைய வேர்களின் கிளையாகிய ஒருவன் | 11:7 | அவளுடைய சகோதரன் டாலமி - 3 |
| தென்திசை ராஜா | 11:5 | (வடதிசை ராஜா)சிரியாவின் ராஜாவாகிய செலுகஸ் - 2 |
| அவன் ராஜ்யத்துக்கு விரோதமாக வந்து | 11:9 | எகிப்தின் மேல் படை எடுத்து |
| அவனுடைய குமாரர் | 11:10 | சீரியா ராஜாவின் புதல்வர்கள் |
| தன்னுடைய அரண்மட்டும் யுத்தம் கலந்து சேருவான் | 11:10 | எகிப்து ராஜாவின் கோட்டைமட்டும் போரிடுவார்கள் |
| தென்திசை ராஜா | 11:11 | டாலமி - 4 |
| வடதிரை ராஜா | 11:13 | மகா அந்தியோகஸ் ஆக இருக்கலாம் |
| தரிசனத்தை நிறைவேற்ற | 11:14 | இறைவாக்கு நிறைவேறும்படி |
| துண்டிரிக்ககாரரின் புத்திரர் | 11:14 | வன்முறையாளர்கள் |
| தரிசனத்தை நிறைவேற்ற | 11:14 | இறைவாக்கு நிறைவேறும்படி |
| செம்மைமார்க்கத்தார் | 11:17 | ராஜ விசுவாசமுள்ளவர்கள் |
| செழிப்பான ராஜ்யத்தில் | 11:20 | இஸ்ரவேலில் |
| தண்டல்காரனை திரியப் பண்ணுகிற ஒருவன் | 11:20 | வரிவசூலிப்பவனை அனுப்பும் ஒருவன் ( சிரியாவின் செலுகஸ்-4) |

| | | |
|---|---|---|
| அவமதிக்கப்பட்ட ஒருவன் | 11:21 | அந்தியோகஸ் 4வது எபிபனஸ் ஆக இருக்கலாம் |
| கட்டிக் கொள்ளுவான் | 11:21 | பிடிப்பான் |
| உடன்படிக்கையின் தலைவன் | 11:22 | தலைமை குரு |
| முறிக்கப்படுவான் | 11:22 | நீக்கப்படுவான் |
| ஸ்திரத்தையும் எழுப்புவான் | 11:25 | துணிவான் |
| இரண்டு ராஜாக்கள் | 11:27 | அந்தியோகஸ் - 4ம் டாடலி 4ம் |
| அவன் | 11:28 | சிரீயா ராஜா |
| கித்தீமின் கப்பல்கள் | 11:30 | மேற்கத்திய கடற்கரை நாடுகளின் கப்பல்கள் |
| தள்ளினவர்களை அநுசரிப்பான் | 11:30 | தள்ளினவர்களுடைய ஆலோசனையை ஏற்று நடப்பான் |
| பரிசுத்தக் குலைச்சலாக்கி | 11:31 | பலிபீடத்தில் பன்றிகளை பலியிட்டு |
| தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் | 11:32 | மக்க பேயராக இருக்கலாம் |
| திடன்கொண்டு அதற்கேற்றபடி செய்வார்கள் | 11:32 | பலப்பட்டு பெரிய காரியங்களைச் செய்வார்கள் |
| அவன் ஸ்திரீகளின் சிநேகத்தையும் மதியாமலும் | 11:37 | பெண்களால் நேசிக்கப்பட்ட தம்மூஸ் அடோனிஸ் என்ற பாபிலோனிய தெய்வத்தையும் மதியாமலும் |
| முட்டுக்கு நிற்பான் | 11:40 | தாக்குதல் நடத்துவான் |
| சூறைக்காற்று | 11:40 | சூறாவளிக்காற்று |
| சமுத்திரங்களுக்கு இடையிலுள்ள | 11:45 | மத்திய தரைக்கடலுக்கும் தேவாலயம் இருக்கும் சீயோன் மலைக்கும் இடையில் உள்ள |
| எழும்புவான் | 12:1 | எழும்பி பரலோகத்தில் சாத்தானுடைய கூட்டத்துக்கு விரோதமாக சண்டையிடுவான் |
| இரண்டு பேர் | 12:5 | இரண்டு தூதர்களாக இருக்கலாம் |
| ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள் வரை | 12:12 | கடைசி வரை |
| இளைப்பாறிக் கொண்டிருந்து | 12:13 | இறந்து அமைதி பெறுவாய் |
| சுதந்தர வீதத்துக்கு | 12:13 | முழுப்பங்கையும் பெற்றுக்கொள்ள |

## ஓசியா

| | | |
|---|---|---|
| யெஸ்ரயேல் | 1:1 | இஸ்ரவேல் |
| யெரொபெயாம் | 1:1 | யெரொபெயாம்-2 |
| விசாரித்து | 1:4 | தண்டித்து |
| இஸ்ரவேலின் வில்லை முறிப்பேன் | 1:5 | 25 வருடங்களுக்குப் பின்னர் அசீரியர் (சனகெரீப்) இஸ்ரவேலை முறியடிப்பார்கள் என்ற இறைவாக்கு கூறப்பட்டது |
| லோருகாமா | 1:6 | கருணை பெறாதவள் |
| அவர்களுடைய தேவனாகிய கர்த்தராலே | 1:7 | நானே |
| லோகம்மீ | 1:9 | என் மக்கள் அல்ல |
| நாள் பெரிதாயிருக்கும் | 1:11 | கர்த்தர் இஸ்ரவேலை ஆசீர்வதிக்கும் நாள் மாபெரும் நாள் |
| அம்மீ | 2:1 | என் மக்கள் |
| ருகாமா | 2:1 | எனக்குப் பிரியமானவர்கள் |
| பாகாலி | 2:16 | எஜமான், தலைவர் |
| ஈஷி | 2:16 | கணவர் |
| அதிபதி | 3:4 | இளவரசன் |
| சிலை இல்லாமலும், ஏபோத் , தேராபீம் இல்லாமலும் | 3:4 | கடவுளின் வழிகாட்டுதல் இல்லாமலும் (பலிபீடம் இல்லாமலும், குருத்துவ உடை இல்லாமலும், குல தெய்வச் சிலைகள் இல்லாமலும்) |
| அஞ்சிக்கையாய் | 3:5 | பயபக்தியாய் |
| மிஞ்சிமிஞ்சிப் போகிறார்கள் | 4:2 | ஏராளமாய் பாவஞ்செய்கிறார்கள் |
| தொய்ந்து போகும் | 4:3 | சாகும் |
| ஒருவனும் நியாயத்தைக் காண்பிக்கக்கூடாது | 4:4 | ஒருவனும் குற்றம் சாட்ட வேண்டாம் |
| ஆசாரியனோடே | 4:4 | குருவே, நானே உன்னைக் குற்றம் சாட்டுகிறேன் |
| பாவத்தைத் தின்று | 4:8 | பாவத்தை இரசித்து |
| மேய்ந்து அலையப் பண்ணுவார் | 4:16 | எப்படி மேய்க்க முடியும்? (மேய்க்க முடியவில்லை) |
| மதுபானம் புளித்தது | 4:18 | மதுபானத்தினால் வெறித்திருக்கிறார்கள் |
| வதை செய்கிறார்கள் | 5:2 | கொலை செய்கிறார்கள் |

| | | |
|---|---|---|
| பெத் ஆவேன் | 5:8 | கர்த்தரின் வீடு என்று அழைக்கப்பட்ட பெத்தேலுக்கு துஷ்டத்தனத்தின் வீடு என்ற மறுபெயர் |
| கதறுங்கள் | 5:8 | போர் முழக்கம் செய்யுங்கள் |
| தகாத கற்பனை | 5:11 | விக்கிரக வணக்கம் |
| மூன்றாம் நாளில் | 6:2 | சீக்கிரத்தில் |
| பறிக்காரர் | 7:1 | வழிப்பறிக்காரர் |
| சரசக்காரர் | 7:5 | ஏளனம் செய்பவர்கள் |
| அந்நிய ஜனங்களோடு கலந்திருக்கிறான் | 7:8 | இஸ்ரவேலர் அக்கம் பக்கம் உள்ள நாடுகளை சார்ந்திருக்கிறார்கள் |
| தெளித்திருக்கிறது | 7:9 | காணப்படுகிறது |
| பேதையான புறா | 7:11 | அங்கும் இங்கும் பறக்கும் அறிவில்லாத புறா |
| அவர்களுடைய சபையில் கேள்வியானதின் படியே | 7:12 | அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட எச்சரிக்கையின்படியே |
| சுத்தாங்கம் | 8:5 | தூய்மை |
| கொஞ்ச காலத்துக்குள்ளே | 8:10 | சிறிது காலத்தில் |
| அகப்படுவார்கள் | 8:10 | துயரம் அடைவார்கள் |
| பணையத்தை நாடுகிறாய் | 9:1 | விலைமகளைப் போல கூலியை நாடுகிறாய் (வேசிகளைப் போல நடந்து கொள்ளுகிறீர்கள்) |
| கிபியாவின் நாட்களில் நடந்தது போல | 9:9 | (நியாயாதிபதிகள் 19ம் அதிகாரம் 14 வசனம் முதல் 30வரை) |
| கண்டு பிடித்தேன் | 9:10 | கண்டு சந்தோஷப்பட்டேன் |
| பாகால் | 9:10 | பேயோரின் தெய்வம் |
| பேயோர் | 9:10 | மோவாபின் ஒரு பட்டணம் (அங்குள்ள மக்கள்) |
| பொல்லாப்பெல்லாம் | 9:15 | பாகால் வழிபாடு எல்லாம் |
| பிரிக்கப்பட்டிருக்கிறது | 10:2 | வஞ்சனையால் நிறைந்திருக்கிறது |
| படைச்சால்களில் | 10:4 | வரப்புகளில் |
| தன் ஆலோசனையினாலே | 10:6 | அந்தக் கன்றுக் குட்டியை நம்பினதால் |
| அந்த நிலையிலே நிற்கிறார்கள் | 10:9 | அவர்களி லே ஒரு முன்னேற்றமும் காணப்படவில்லை |
| இரண்டு வித பாவங்களினிமித்தம் | 10:10 | ஏராளமான பாவங்களினிமித்தம் |

| | | |
|---|---|---|
| பரம்படிப்பான் | 10:11 | கடினமான நிலத்தை பண்படுத்துவான் |
| என்னுடைய குமாரனை | 11:1 | இஸ்ரவேலை |
| எகிப்துக்கு திரும்பிப்போவதில்லை | 11:5 | என்னிடம் திரும்பாமல் எகிப்தை நம்பினார்கள் அதில் பிரயோஜனம் இல்லை. இப்போது அசீரியன் அவர்களுக்கு ராஜா |
| அத்மா, செபோயீம் | 11:8 | சோதோம் கொமாராவோடு அழிந்த சமவெளிப் பட்டணங்கள் |
| காற்றை மேய்ந்து | 12:1 | சுழல் காற்றை விரட்டிப்பிடிக்க முயல்பவன் போல் இருக்கிறான். அது ஆபத்தான விளையாட்டு |
| நாம சங்கீர்த்தனம் | 12:5 | பெயர் |
| அவன் வியாபாரி | 12:7 | அவன் ஏமாற்றும் வியாபாரி |
| பீடங்கள் | 12:11 | பலிபீடங்கள் |
| அக்கிரமம் கட்டி வைத்திருக்கிறது | 13:12 | (அவன்) பாவங்கள் தண்டனைக்காக கட்டி வைத்திருக்கிறது |
| பேறுகாலமட்டும் அவன் நிற்கவில்லை | 13:13 | அவன் கர்ப்பத்தைவிட்டு வெளியே வர மறுக்கும் குழந்தையைப் போல விவேகமில்லாத பிள்ளை |
| சுவறிப்போகும் | 13:15 | வற்றிப்போகும் |
| உதடுகளின் காளைகளை | 14:2 | ஸ்தோத்திர பலியை |
| லீபனோனுடைய வாசனையைப்போல | 14:6 | லெபனான் வனத்தின் நறுமணம் போல |

## யோவேல்

(ஆண்டவரின் நாள் அருகிலுள்ளது)

| | | |
|---|---|---|
| பச்சைக்கிளி | 1:4 | துள்ளும் வெட்டுக்கிளி |
| பயிர் முதிர்ந்தது | 3:13 | நியாயத்தீர்ப்பு நாள் வந்தது |

## ஆமோஸ்

(ஆண்டவர் இஸ்ரவேலை தண்டிக்கப் போகிறார்)

| | | |
|---|---|---|
| பூமி அதிர்ச்சி | 1:1 | ஏறத்தாழ கி.மு. 760 இல் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியைக் குறிக்கலாம் |
| மேய்ப்பரின் தாபரங்கள் | 1:2 | மேய்ப்பரின் மேய்ச்சல் நிலங்கள் |
| மூன்று பாதகங்களினிமித்தமும் நாலு பாதகங்களினிமித்தமும் | 1:3 | மீண்டும் மீண்டும் செய்த திரளான பாதகங்களினிமித்தமும் |

| | | |
|---|---|---|
| ஆக்கினையைத் திருப்பமாட்டேன் | 1:3 | தீர்ப்பை மாற்ற மாட்டேன் |
| அடைமானமாய் வாங்கின வஸ்திரங்கள் | 2:8 | கொடுத்தக் கடனுக்கு ஈடாக வாங்கின வஸ்திரங்கள். (ஈடாக வாங்கப்பட்ட வஸ்திரத்தை இரவிலே வைத்துக்கொள்வது, மோசேயின் சட்டப்படி சட்டவிரோதமானது. (யாத்.22:26) |
| தெண்டம் பிடிக்கப்பட்டவர்களுடைய மதுபானத்தை | 2:8 | கடன்பட்டவர்களுக்கு அபராதம் விதித்துக் கிடைத்த மதுபானத்தை |
| இருத்துகிறதுபோல | 2:13 | அழுத்துவது போல |
| இருத்துவேன் | 2:13 | நசுக்குவேன் |
| அறிந்து கொண்டேன் | 3:2 | தேர்ந்தெடுத்தேன் |
| விசாரிப்பேன் | 3:14 | அழிப்பேன் |
| அரமனைக்கு சுமந்து கொண்டு போவதை எறிந்துவிட்டு | 4:3 | உங்கள் அழகான வீடுகளுக்குபோகமுடியாமல் இழுக்கப்பட்டு |
| புறப்பட்டுப் போவீர்கள் | 4:3 | மதிலின் பக்கத்து திறப்புகள் வழியாக வெளியே வீசப்படுவீர்கள் |
| கருக்காயினாலும் | 4:9 | உஷ்ணக் காற்றினாலும் |
| எடுப்பாரில்லை | 5:2 | தூக்கி விடுவார் ஒருவரும் இல்லை |
| கர்த்தர் அறுமீனையும், மிருக சீரிஷத்தையும் உண்டாக்கினவர் | 5:8 | அவர் உண்டாக்கின நட்சத்திரங்களை வணங்காதீர் |
| அரணான ஸ்தலத்தின்மேல் பாழ்க்கடிப்பு வரத்தக்கதாக | 5:9 | எல்லா அரண்களையும் அழித்து பலம் பொருந்தியவர்கள்மேல் அழிவைக் கொண்டு வரும்படி |
| யோசேப்பிலே மீதியானவர்களுக்கு | 5:15 | யோசேப்பிலே மீந்திருப்பவர்களுக்கு (வட ராஜ்யமாகிய இஸ்ரவேலில்) |
| புலம்பல் உண்டாயிருக்கும் | 5:17 | புலம்பல் உண்டாகும். ஏனெனில் நான் உங்கள் நடுவே கடந்து போவேன் |
| குடியோட்டுவேன் | 5:27 | சிறைபிடிக்கப்பட்டவர்களாக அனுப்புவேன் |
| தீங்கு நாள் தூரமென்றெண்ணி கொடுமையின் ஆசனம் கிட்டி வரச்செய்து இருக்கிறீர்கள் | 6:3 | நியாயத்தீர்ப்புநாளை மறந்து ஈவு இரக்கம் இல்லாமல் |
| யோசேப்புக்கு நேரிட்ட ஆபத்துக்கு கவலைப்படாமற்போகிறார்கள் | 6:6 | தங்கள் சகோதருடைய கஷ்டத்தைப்பற்றி கவலைப்படுவதில்லை |

| | | |
|---|---|---|
| தகிக்கிறவனாவது | 6:10 | எரிக்கிறவனாவது |
| அவன் இல்லை என்பான் | 6:10 | கர்த்தருக்கு நன்றி; வேறே பிரேதம் இல்லை என்பான் |
| கர்த்தருடைய நாமத்தை சொல்லலாகாது | 6:10 | கர்த்தருடைய நாமத்தைச் சொன்னால் இன்னும் ஆபத்து நேரிடலாம் |
| கொம்புகளை உண்டாக்கி | 6:13 | பட்டணங்களைப் பிடித்து (கொம்புகள் வல்லமைக்கு அடையாளம்) |
| வீண் காரியத்தில் மகிழுகிறார்கள் | 6:13 | அற்பமான அவர்கள் சின்ன காரியத்தில் மகிழுகிறார்கள் |
| கந்தாயத்துப் புல் | 7:1 | ராஜாவுக்கு உரிய பங்காகிய முதல் அறுவடைத் தானியம் |
| தூக்கு நூலை விடுவேன் | 7:8 | தூக்கு நூலால் சரிபார்க்கும் போது அவர்கள் சாய்ந்தமதில் போல் நேர்மையற்றவர்களாகக் காணப்படுகிறார்கள் |
| இஸ்ரவேல் சிறை பிடிக்கப்படுவான் | 7:11 | இஸ்ரவேலர் அசீரியரால் சிறைபிடிக்கப்படுவார்கள் என்று அது நிறைவேறுவதற்கு 30 வருடங்களுக்கு முன்னமே ஆமோஸ் இறைவாக்கு கூறினான் |
| பழுத்த பழங்களுள்ள ஒரு கூடை | 8:1 | நீதித் தீர்ப்புக்கு தயாராக இருந்த இஸ்ரவேலர் |
| மத்தியானத்திலே சூரியனை அஸ்தமிக்கப்பண்ணி | 8:9 | கி.மு. 763 ம் வருடம் ஏற்பட்ட சூரிய கிரகணத்தைக் குறிக்கிறது |
| போதிகை | 9:1 | வாசல் நிலைமேல் உள்ள உத்திரம், தூணின் உச்சிப்பகுதி |
| எத்தியோப்பியர் | 9:7 | எத்தியோப்பியரைவிட முக்கியமானவர்கள் என்று நினைக்கிறீர்களோ? |
| சலித்தரிக்கும்படி | 9:9 | சலிப்பது போல |
| என் நாமம் விளங்கிய | 9:11 | என்னைத் தேடின |
| தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து | 9:12 | தாவீதின் சிங்காசனத்தை மீண்டும் உயர்த்தி |

## ஒபதியா

(இஸ்ரவேலின் அருகாமையில் உள்ள ஏதோம் தண்டிக்கப்படவேண்டும்)

| | | |
|---|---|---|
| எருசலேமின்பேரில் சீட்டுப் போட்ட காலத்தில் | 11 | மறுதேசத்தார் எருசலேமின்செல்வத்தை, தங்களுக்குள்ளே பங்கிட்ட காலத்தில் |
| தென் தேசத்தார் | 19 | தெற்கேயுள்ள நெகேப் பாலைநிலத்தில் வசிக்கும் இஸ்ரவேலர். |
| ஏசாவின் பர்வதத்தை | 21 | ஏதோம் நாட்டை |
| நியாயந்தீர்ப்பதற்காக | 21 | ஆளுவதற்காக |

## யோனா

(கர்த்தர் அவரை அறியாத நினிவேக்கும் இறங்குகிறார்)

| | | |
|---|---|---|
| தர்ஷீஸ் | 1;3 | ஸ்பெயின் நாட்டில் இருந்தது |
| பொய்யான மாயையை | 2:8 | விக்கிரகங்களை |
| தங்களுக்கு வரும் கிருபையை | 2:8 | கர்த்தரால் தங்களுக்கு வரும் இரக்கத்தை |
| போக்கடிக்கிறார்கள் | 2:8 | வீணாக்குகிறார்கள் |
| வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத மனுஷரும் | 4:11 | ஆன்மிக வாழ்க்கை இன்னதென்று தெரியாத அப்பாவி மக்களும் |

## மீகா

(எருசலேமின் அழிவைக்குறித்து எச்சரிக்கிறான்)

| | | |
|---|---|---|
| வேசிப்பணையத்தால் சேர்க்கப்பட்டது | 1:7 | கோவில் வேசிகளுக்கு கிடைத்த பணத்தினால் செய்யப்பட்ட விக்கிரகங்கள் |
| திரும்ப வேசிப்பணையமாய்ப் போகும் | 1:7 | அந்த விக்கிரகங்களில் உள்ள வெள்ளியும், பொன்னும் அந்நியரால் வேசிகளுக்குப் பணையமாய் கொடுக்கப்படும் |
| இஸ்ரவேலின் மகிமையாகிய அதுல்லாம் | 1:15 | இஸ்ரவேலில் பிரசித்திபெற்ற அதுல்லாம் குகை (1 சாமு.22:1) |
| நீங்கள் கழுத்தை நீக்க மாட்டீர்கள் | 2:3 | உங்கள் கழுத்துகள் கண்ணியிலே மாட்டும். நீங்கள் அதினின்று தப்ப முடியாது |
| கட்டுவிக்கிற | 3:10 | நிரப்புகிற |
| அம்பாயப்பட்டு | 4:10 | வேதனைப்பட்டு, புழுவாய் துடித்து |
| பாபிலோன் வரைக்கும் போவாய் | 4:10 | இது நடப்பதற்கு 100 வருடங்களுக்கு முன்னால்சொல்லப்பட்ட இறைவாக்கு |
| தண்டு தண்டாகக் கூடிக்கொள் | 5:1 | படைகளைத் திரட்டு |
| எப்பிராத்தா (பெத்லகேம்) | 5:2 | கிறிஸ்துவின் பிறப்பையும், அவர் பிறக்கும் இடத்தையும் இறைவாக்காகக் கூறுகிறார் |
| நீ பதனம் பண்ணியும் தப்புவிப்பதில்லை | 6:14 | நீ முயற்சி செய்தும் மிச்சப்படுத்துவதில்லை |
| ஆலையாடினபோதும் | 6:15 | ஆலைகளில் பிழிந்தும் |
| எண்ணெய் பூசிக்கொள்வதும் இல்லை, இரசம் குடிப்பதும் இல்லை | 6:15 | உனக்கு ஒலிவ எண்ணெய் கிடைப்பதில்லை, திராட்ச இரசமும் கிடைக்காது |

| | | |
|---|---|---|
| எடுப்பிக்கும் நாள் | 7:11 | மீண்டும் எடுத்துக் கட்டப்படும் நாள் |
| பிரமாணம் | 7:11 | உன் எல்லை |

## நாகூம்

(யூதாவுக்கு எதிரான நினிவேயின் அழிவு)

| | | |
|---|---|---|
| நினிவேயின் பாரம் | 1:1 | நினிவேயைப் பற்றி கடவுளின் செய்தி |
| நினிவே | 1:1 | இஸ்ரவேலை வெகுகாலம் கொடுமைப்படுத்திய அசீரியாவின் தலைநகரான நினிவேயை பாபிலோனிய மேதிய படைகள் ஏறத்தாழ கி.மு. 612ல் அழித்தன |
| வெறுமையாக்குகிறவர்கள் | 2:2 | இஸ்ரவேலைக் கொள்ளையடிப்பவர்கள் |
| இரதங்கள் ஜீவாலிக்கிற கட்கங்களை உடையதாயிருக்கும் | 2:3 | இரதங்களில் இருந்து தீப்பொறி பறப்பதுபோல் இருக்கும் (இரதங்கள் பிரகாசிக்கும்) |
| பிரபலஸ்தரை நினைவு கூறுவான் | 2:5 | படைத்தலைவர்களை அழைப்பான் |
| அவன் சிறைபட்டுப்போக தீர்மானமாயிற்று | 2:7 | அவள், அதாவது அரசி அணிகள் களையப் பெற்று நாடுகடத்தப்படுகின்றாள் |
| நினிலே பூர்வகாலமுதல் தண்ணீர்த் தாடகம் போல் இருந்தது | 2:8 | கால்வாய்களின் தண்ணீர் நினிவேயைச் சுற்றிலும் இருந்ததால் நினிவே தண்ணீர்த் தடாகம் போல காணப்பட்டது |
| இப்போதோ அவர்கள் ஓடிப்போகிறார்கள் | 2:8 | இப்போதோ குளம் உடைந்தவுடன் தண்ணீர் வேகமாக வெளியேறுவது போல அவளுடைய போர்வீரர் ஓடிப்போகிறார்கள் |
| இரத்தப்பழிகளின் நகரம் | 3:1 | நினிவே |
| தன் வேசித்தனங்களால் | 3:4 | பொய்யான தெய்வங்களின் வழிபாட்டை மற்றவர்களுக்குப் போதித்து |
| விற்கிற | 3:4 | ஏமாற்றும் |
| நோ அம்மோன் | 3:8 | தீப்ஸ் (தீப்ஸ் அசீரியர்களால் பிடிப்பட்டது. தீப்ஸ் எகிப்தின் தலைநகராக இருந்தது) |
| எத்தியோப்பாவும், எகிப்தும் அதற்குப் பெலனாக இருந்தது | 3:9 | நினிவே சூடானையும் எகிப்தையும் ஆண்டது |
| பூத்தும் லூபீமும் அதற்கு சகாயமாயிருந்தது | 3:9 | லிபியா அதற்கு உதவினது |
| குடிவிலக்கப்பட்டு | 3:10 | தோற்கடிக்கப்பட்டு, குடியுரிமை பறிக்கப்பட்டு |
| வெறி கொண்டு ஒளித்துக் கொள்வாய் | 3:11 | குடிவெறியில் மயங்கிக்கிடப்பாய் |

| | | |
|---|---|---|
| ஜனங்கள் பேடிகள் | 3:13 | உன் படைவீரர் பலமற்றவர்கள் |
| மகுட வர்த்தனர் | 3;17 | காவல் வீரர் |
| தள கர்த்தர் | 3:17 | அரசு அலுவலர் |
| பெருங்கிளிகளுக்கும் | 3;17 | வெட்டுக்கிளிகளின் கூட்டத்துக்கும் |
| உறங்குவார்கள் | 3:18 | புழுதியிலே செத்துக்கிடப்பார்கள் |
| மேய்ப்பர்கள் | 3:18 | ஆட்சி செய்பவர்கள், குருக்கள் |
| நொறுக்குதலுக்கு | 3:19 | காயத்துக்கு |
| பரிகாரம் | 3:19 | மருந்து |

## ஆபகூக்

(யூதாவின் இறைவாக்கினனுக்கும் தேவனுக்கும் இடையே நடந்த உரையாடல்)

| | | |
|---|---|---|
| பரவுவார்கள் | 1:8 | பாய்ந்து வருவார்கள் |
| ஆகடியம் | 1:10 | ஏளனம் |
| பறியிலே | 1:15 | சுருக்கு வலையிலே |
| விசுவாசத்தினால் | 2:4 | என்னை விசுவாசிப்பதால் |
| கடிப்பவர்கள் | 2:7 | கடன் கொடுத்தவர்கள் |
| உன் மகிமையின்மேல் இலச்சையான வாந்திபண்ணு | 2:16 | அதிசீக்கிரத்தில் உன் மேன்மை வெட்கக் கேடாய் மாறும் |
| நடைகள் | 3:6 | வழிகள் |
| கூஷான், மீதியான் | 3:7 | அரேபிய பாலைவன மக்கள், (இஸ்ரவேலின் எதிரிகள்) |
| வருத்தத்தில் | 3:7 | வேதனையில் |
| திரைகள் | 3:7 | கூடாரங்கள் |
| நடந்தன | 3:11 | மங்கிக் காணப்பட்டன |
| வெட்டினீர் | 3:13 | வல்லமையை ஒன்றுமில்லாமல் ஆக்கினீர் |
| உக்கல் உண்டாயிற்று | 3:16 | கெட்டுப் போனது, உளுத்துப்போனது |
| முதலற்றுப் போனாலும் | 3:17 | அழிந்து போனாலும் |

## செப்பனியா

(யூதாவின் மேலும், சுற்றியுள்ள நாடுகளின் மேலும் வரும் நியாயத்தீர்ப்பு)

| | | |
|---|---|---|
| மல்காம் | 1:5 | மில்காம் (மோளேகு) |
| இரண்டாம் பாகம் | 1:10 | புதிய பாகம் |
| மேடுகள் | 1:10 | குன்றுகள் |
| வருத்தப்படுத்துவேன் | 1:17 | துன்பம் அடையச் செய்வேன் |
| சொறியப்படும் | 1:17 | ஊற்றப்படும் |
| உய்த்து | 2:2 | நன்கு ஆராய்ந்து |
| ஆட்டுத் தோழங்கள் | 2:6 | ஆட்டுத் தொழுவங்கள் |
| நகரத்துக்கு | 3:1 | எருசலேமுக்கு |
| அவர்கள் பாஷையை சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன் | 3:9 | அவர்கள் உதடுகளை சுத்தமாக்குவேன் |

## ஆகாய்

| | | |
|---|---|---|
| சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் | 2:7 | மேசியா |
| ஒன்பதாம் மாதம் | 2:10 | கிஸ்லேவ், (நவம்பர் மத்தி முதல் டிசம்பர் மத்தி வரை) |

## சகரியா

| | | |
|---|---|---|
| சேபாத் மாதம் | 1:7 | எபிரேய பதினோராம் மாதம், (ஜனவரி மத்தி முதல் பெப்ருவரி மத்தி வரை) |
| பரம்பியிருக்கும் | 1:17 | நிரம்பியிருக்கும் |
| தேற்றரவு பண்ணுவார் | 1:17 | தேற்றுவார் |
| கர்த்தர் | 3:2 | ஆண்டவரின் தூதர் |
| காவலைக் காத்தால் | 3:7 | கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தால் |

| | | |
|---|---|---|
| அடையாளமாயிருக்கிற புருஷர் | 3:8 | நிகழப் போகும் காரியங்களுக்கு அடையாளமாய் இருக்கும் மனுஷர் |
| ஏழு கண்களும் | 3:9 | ஏழு பக்கங்களும் |
| குத்து விளக்கு | 4:2 | தேவாலயத்துக்கு அடையாளம் |
| பெரிய பர்வதமே | 4:7 | பிரச்சனையே |
| இரண்டு ஒலிவ மரங்கள் | 4:11 | கர்த்தரின் ஆவிக்கு அடையாளம் |
| மரக்கால் | 5:6 | அளக்கும் கூடை |
| கண்ணோக்கம் | 5:6 | தீச்செயல் |
| சிநெயார் தேசம் | 5:11 | பாபிலோன் |
| நிலையிலே | 5:11 | மேடையிலே |
| சிறையிருப்பின் மனுஷராகிய | 6:10 | நாடு கடத்தப்பட்ட மனிதராகிய |
| நினைப்பூட்டுதலுக்கென்று | 6:14 | நினைவுச் சின்னமாக |
| நாலு ஆவிகள் | 6:5 | நான்கு இரதங்களில் பறந்து பூமியைக் கண்காணிக்கும் நாலு வானலோக ஆவிகள் |
| வைரமாக்கினார்கள் | 7:12 | கடினமாக்கினார்கள் |
| நெருக்கிடை | 8:10 | உபத்திரவம் |
| பிரலாபிக்கும் | 9:5 | பயத்தினால் நடுங்கும் |
| உன் உடன்படிக்கையின் | 9:11 | உன்னோடு நான் செய்த உடன்படிக்கையின் |
| நம்பிக்கையுடைய சிறைகளே | 9:12 | நம்பிக்கையுடன் காத்திருக்கும் கைதிகளே |
| அரணுக்கு | 9:12 | பாதுகாப்பான இடமாகிய என்னிடம் |
| கவண்கற்களால் கீழ்ப்படுத்திக் கொள்வார்கள் | 9:15 | கவண்கற்களைக் கொண்டுத் தாக்கி எதிரிகளை மிதித்துப் போடுவார்கள் |
| குடித்து களிப்பினால் ஆர்ப்பரிப்பார்கள் | 9:15 | அவர்கள் வெற்றியை ருசிபார்த்து வெற்றிக்களிப்பினால் ஆர்ப்பரிப்பார்கள் |
| பலிபீடத்தின் கோடிகளைப் போலவும் | 9:15 | இரத்தத்தால் நனைந்த பலிபீடத்தின் கொம்புகள் போலவும் |
| பதிந்திருப்பார்கள் | 9:16 | பதிக்கப்பட்ட நவரத்தின கற்களைப் போலிருப்பார்கள் |
| மேய்ப்பருக்கு | 10:3 | குருக்களுக்கு |
| கடாக்களை | 10:3 | தலைவர்களை |

| | | |
|---|---|---|
| விசாரித்து | 10:3 | கண்காணித்து |
| கோடிக் கல்லும், கூடார முளையும், யுத்தவில்லும் | 10:4 | பலம் பொருந்திய தலைவர்களும் |
| பயில்போட்டு | 10:8 | சத்தம் கொடுத்து |
| இறைத்த பின்பு | 10:9 | சிதறடித்த பின்பு |
| இடுக்கமென்கிற | 10:11 | உபத்திரவம் என்கிற |
| அடிப்பார் | 10:11 | பணியச் செய்வார் |
| அனுக்கிரகம் | 11:7 | தயவு (கர்த்தரின் தயவு) (தெய்வீக உடன்படிக்கை) |
| நிக்கிரகம் | 11:7 | கர்த்தரின் தயவு இல்லாமல்போகுதல். (ஆதலால் சிதறடிக்கப்பட்ட கர்த்தரின் மக்கள் தங்கள் நாட்டுக்கு மீண்டும் திரும்பி ஐக்கியமாகுதல், கால தாமதமாகும்) |
| சகோதரக் கட்டை | 11:14 | சகோதர ஐக்கியத்தை |
| இன்னும் எடுத்துக்கொள் | 11:15 | மீண்டும் எடுத்துக்கொள் |
| தலைச்சன் பிள்ளை | 12:10 | முதலாவது பிறந்த பிள்ளை |
| ஆதாத் ரிம்மோனின் புலம்பலைப்போல | 12:11 | மேகிதோன் பள்ளத்தாக்கிலே பார்வோனுக்கு எதிராக நடந்த யுத்தத்தில் கொல்லப்பட்ட கடவுள் பக்தியுள்ள யோசியா ராஜாவுக்காக ஆதாத் ரிம்மோனில் கேட்கப்பட்ட புலம்பலைப்போல |
| திறக்கப்பட்ட ஒரு ஊற்று | 13:1 | தூய்மையாக்கும் ஒரு ஊற்று |
| மயிர்ப் போர்வையை | 13:4 | முரடான உடையை |
| சிறுவர்மேல் திரும்ப வைப்பேன் | 13:7 | என் ஆட்டுக்குட்டிகளைத் தேற்றுவேன் (அடுத்த தலைமுறையின் பிள்ளைகளை சேர்த்துக்கொள்வேன்) |
| உன்னிலே கொள்ளையானது | 14:1 | எருசலேமில் கொள்ளையானது |
| உசியாவின் நாட்களின் பூமி அதிர்ச்சி | 14:5 | ஏறத்தாழ கி.மு. 760 இல் நடந்தது |
| ஆத்சால் | 14:5 | எருசலேமுக்குக் கிழக்கே உள்ள குக்கிராமம் |
| கையைப் பிடிப்பான் | 14:13 | ஒருவரோடொருவர் கைச்சண்டை இடுவார்கள் |
| கர்த்தருக்குப் பரிசுத்தம் | 14:20 | கர்த்தருக்குச் சொந்தம் |
| அந்தப் பாளையங்களில் | 14:15 | எதிரிகள் தங்கும் இடங்களில் |
| கர்த்தருக்குப்பரிசுத்தமாயிருக்கும் | 14:21 | பலி பீடத்தின் முன் உள்ள பாத்திரங்களைப்போல பரிசுத்தமாயிருக்கும் |
| அவைகளில் சமைப்பார்கள் | 14:21 | கர்த்தரைத் தொழுது கொள்ள வருகிற யாவரும் தங்களுடைய பலிகளை அவைகளுக்காக பணம் கொடுக்காமல் அவைகளில் சமைப்பார்கள் |
| கானானியனும் | 14:21 | பேராசை பிடித்த வியாபாரியும் |

# மல்கியா

| | | |
|---|---|---|
| தாவும் | 1:3 | தங்கும் இடமும் |
| கர்த்தருடைய பந்தி | 1:7 | கர்த்தருடைய பலிபீடம் |
| எண்ணமற்றுப் போயிற்று | 1:7 | அலட்சியப் படுத்தப்பட்டது |
| அசுத்தமான அப்பம் | 1:7 | தீட்டான உணவு |
| நசல் பிடித்ததையும் | 1:8 | சுகம் இல்லாததையும் |
| அசுத்தமானது | 1:12 | தீட்டுப்பட்டது |
| அதின் ஆகாரமாகிய அதின் பலன் அற்பமானது | 1:12 | கர்த்தருடைய பலிபீடத்தின் மேல் படைக்கப்பட்ட போஜனபலியில் முக்கியத்துவம் ஒன்றும் இல்லை |
| எவ்வளவு வருத்தம் | 1:13 | எவ்வளவு தொல்லை |
| திரணமாய்ப் பேசி | 1:13 | இழிவாய்ப் பேசி |
| கபடஸ்தன் | 1:14 | எத்தன்,பொய்யன் |
| இறைப்பேன் | 2:3 | பூசுவேன் |
| லேவியின் உடன்படிக்கையைக் கெடுத்துப் போட்டீர்கள் | 2:8 | உங்களுடைய மூதாதை லேவியுடன் நான் பண்ணின உடன்படிக்கையை மீறினீர்கள் |
| அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள் | 2:11 | மற்ற தெய்வங்களை வணங்கும் அருவருப்பான பாவத்தைச் செய்தீர்கள் |
| கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் | 2:16 | கொடுமையை தன் மேலாடையைக்கொண்டு மூடி மறைக்கிறான் |
| லேவியின் புத்திரர் | 3:3 | லேவி பரம்பரையினர் |
| ஞாபகப் புஸ்தகம் | 3:16 | கர்த்தருக்குப் பயந்தவர்கள் யார், யார் என்றுஞாபகப்படுத்தும் புஸ்தகம் |
| சம்பத்தை | 3:17 | சொத்தை,செல்வத்தை |
| கடாட்சிக்கிறது போல | 3:17 | கருணை காட்டுவது போல |
| ஓரேபிலே | 4:4 | சீயோன் மலையிலே |
| எலியா தீர்க்கத்தரிசியை | 4:5 | எலியா இறைவாக்கின்ன்போல் ஒரு இறைவாக்கினனை |

# புதிய ஏற்பாடு

கிரேக்க மொழியில் நூறு வருடங்களுக்குள் (கி.பி. 50 முதல் 150க்குள்)
புதிய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பட்டன
(புதிய உடன்படிக்கை)

## மத்தேயு எழுதின நற்செய்தி (சுவிசேஷம்)

| | | |
|---|---|---|
| இயேசு | 1:21 | ஜனங்களுடைய பாவங்களை நீக்கி இரட்சிப்பார் |
| இம்மானுவேல் | 1:23 | தேவன் நம்மோடிருக்கிறார் |
| ஏரோது ராஜா | 2:1 | பெரிய ஏரோது ராஜா 2:15; (ஓசியா 11:1;2:17-எரேமியா 31:15; 3:3-ஏசாயா 40:3; 4:4-உபா.8:3) |
| விளக்கி | 3:12 | சுத்தப்படுத்தி |
| எல்லா நீதியையும் நிறைவேற்றுவது | 3:15 | இப்படி கர்த்தர் விரும்பும் எல்லாக் காரியத்தையும் நாம் நிறைவேற்றுவது |
| உப்பரிகை | 4:5 | கோபுரம் |
| நாடுகளின் | 4:13 | இடங்களின் |
| இருளில் இருக்கும் ஜனங்கள் | 4:15 | இருளில் நடக்கிற ஜனங்கள்; (ஏசாயா. 9:2) |
| மரண இருளின் திசையிலிருக்-கிறவர்களுக்கு | 4:15 | மரண இருளில் உள்ளவர்களுக்கு |
| சந்திரரோகிகள் | 4:24 | வலிப்பு நோய் உள்ளோர் |
| தெக்கப்போலி | 4:25 | பத்து பட்டணங்கள் அடங்கிய பிரதேசம் |
| திமிர்வாதக்காரர் | 4:42 | முடக்கு வாதம் உள்ளோர் |
| சாரமற்றுப் போனால் | 5:13 | உவர்ப்பற்றுப் போனால் |
| மரக்காலால் | 5:15 | பாத்திரத்தால் |
| பரிசேயர் | 5:20 | சட்டத்தின் உட்கருத்தை ஏற்றுக் கொள்ளாது சட்டத்தில் எது சொல்லப்பட்டதோ அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தவர்கள் |
| ஆலோசனை சங்கம் | 5:22 | தலைமை சங்கம் (யூத உச்ச நீதிமன்றம்) |
| பரிச்சேதம் | 5:34 | ஒரு பொழுதும் |
| தாரை ஊதுவியாதே | 6:2 | தம்பட்டம் அடிக்காதே |

| | | |
|---|---|---|
| அஞ்ஞானிகள் | 6:7 | அந்நியர் |
| அதிக வசனிப்பினால் | 6:7 | அதிக வார்த்தைகளால் |
| ராஜ்யம் | 6:10 | ஆளுகை |
| நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும் | 6:34 | கடவுள் நாளையத்தினமும் வேண்டிய உதவியை உங்களுக்குச் செய்வார் |
| அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும் | 6:34 | ஒவ்வொரு நாளும் அந்த நாளை மாத்திரம் நினையுங்கள் |
| நாய்களுக்கு | 7:6 | தகுதியற்றவர்களுக்கு |
| பரிசுத்தமானதை நாய்களுக்கு கொடாதேயுங்கள் | 7:6 | கர்த்தருக்கு உரியவைகளை நாய்களுக்கு கொடாதேயுங்கள். அவைகள் திரும்பி உங்களைக் கடிக்கும். உங்கள் முத்துக்களை பன்றிகள்முன் போடாதேயுங்கள். போட்டால் அவை அவற்றை மிதித்துவிடும் |
| நல்ல ஈவுகளை | 7:11 | நல்ல வெகுமதிகளை |
| வேத பாரகர் | 7:28 | வேதத்தில் அறிவாளிகள், வேதநிபுணர்கள், வேத பண்டிதர்கள், வேதத்தைக் கற்றறிந்தவர்கள் |
| அநேகர் கிழக்கிலும் மேற்கிலும் இருந்து | 8:11 | அநேக புறஜாதியார் உலகம் முழுவதிலுமிருந்து வந்து |
| ராஜ்யத்தின் புத்திரரோ | 8:12 | இஸ்ரவேல் மக்களோ |
| அதற்கு இயேசு மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும் நீ என்னை பின்பற்றி வா பின்பற்றி வா | 8:22 | அதற்கு இயேசு: இப்பொழுது நீ என்னைப் பின்பற்றி வா. ஆன்மீகப் பிராகாரமாக மரித்தவர்கள் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும் என்றார். (மரிப்பவர்கள் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும். நீ என்னைப் என்றார்). |
| மரித்தோர் | 8:22 | ஆவிக்குரியவைகளில் மரித்தவர்கள் |
| தேவ தூஷணம் | 9:3 | கடவுளை பழித்துரைத்தல் |
| ஆயத்துறையில் | 9:9 | சுங்கச் சாவடியில் |
| ஆயக்காரர் | 9:10 | வரி வசூலிப்பவர்கள் |
| கோடித்துண்டை | 9:16 | புதிய துணியை |
| துருத்தி | 9:17 | தோல் பை |
| பெரும்பாடுள்ள | 9:20 | மிகவும் அதிக இரத்தப்போக்கு உள்ள |

| | | |
|---|---|---|
| தாரை | 9:23 | குழல் |
| பிசாசுகளின் தலைவன் | 9:34 | பெயல்செபூல் |
| ராஜ்யத்தின் சுவிசேஷத்தை | 9:35 | விண்ணரசின் நற்செய்தியை |
| தொய்ந்து போனவர்கள் | 9:36 | சோர்ந்து போனவர்கள் |
| பாத்திரனாயிருக்கிறான் | 10:10 | தகுதி வாய்ந்தவனாயிருக்கிறான் |
| வினாவுள்ளவர்களும் | 10:16 | கவனமுள்ளவர்களும் |
| எச்சரிக்கையாயிருங்கள் | 10:17 | ஜாக்கிரதையாயிருங்கள் |
| நிலைத்திருப்பவனே | 10:22 | தைரியமாயிருப்பவனே |
| சீஷன் தன் போதகனைப் போலவும் வேலைக்காரன் தன் எஜமானைப் போலவும் இருப்பது போதும் ............... ............... நிச்சயமல்லவா? | 10:25 | சீடன் தன் போதகனைப்போல ஆகட்டும். அதுவே போதும். எஜமானுக்கு என்ன நேரிடுகிறதோ, வேலைக்காரனுக்கும் அதுவே நடக்கிறது. என்னையே பெயல்செபூல் என்று (பிசாசுகளின் தலைவன்) என்று அழைத்தால் உங்களை அப்படிச் செய்வது அதிக நிச்சயம் |
| என்னிடத்தில் இடறலடையா திருக்கிறவன் | 11:6 | என்னை சந்தேகிக்காதவன் |
| பலவந்தம் பண்ணப்படுகிறது | 11:12 | முற்றுகையிடப்படுகிறது |
| பலவந்தம் பண்ணுகிறவர்கள் | 11:12 | ஆர்வமுள்ளவர்கள் |
| வருகிறவனாகிய எலியா இவன்தான் | 11:14 | எலியாவின் வேலையை நிறைவேற்ற வருகிறவன் இவன்தான் |
| ஞானமானது அதன் பிள்ளை களால் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் | 11:19 | இவர்களைப் போன்ற ஞானிகளால் நீதியற்றவை, நீதியுள்ளதென்று ஏற்றுக்கொள்ளப்படும் |
| தீரு, சீதோன் | 11:21 | கடல் வர்த்தகத்தின் மூலம் தீரு வல்லமை அடைந்து மிகுந்த செல்வத்தை சம்பாதித்தது. பாபிலோனிய நேபுகாத்நேச்சார் 13 வருடங்கள் முற்றுகையிட்டு ஏறத்தாழ கி.மு.573ல் தீருவை அழித்தான். பின்பு பாரசீகர் இதை அழித்தனர். அதன் பின்பு கிரேக்க அலெக்சந்தர் இதை அழித்தான். ரோமர் ஆட்சியில் மீண்டும் ஓரளவு நல்ல நிலைமை அடையுமட்டும் தீரு மீனவர் வலைவிரிக்கும் இடமாக மாறியது. (எசே.26:4,ஏசாயா.23:17) நேபுகாத்நேச்சார், தீருவைப் பிடித்தபொழுது சீதோனையும் பிடித்தான். சீதோன் தீருவுக்கு 20 மைல் வடக்கே இருக்கிறது. தீருவும், சீதோனும் மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியில் லெபனானில் இருக்கின்றன |

| | | |
|---|---|---|
| வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே | 11:23 | மோட்சம் போவோம் என்று நினைக்கும் கப்பர்நகூம் மக்களே |
| பாலகருக்கு | 11:25 | தன்னை ஏற்றுக்கொண்ட பாமர மக்களுக்கு |
| பயிர்வழியே | 12:1 | வயல்கள் வழியே |
| சகல பூண்டுகளிலும் பெரிதாகி | 13:32 | இறையாட்சி சின்னஞ்சிறு கடுகுபோல் விதைக்கப்பட்டாலும் சகல செடிகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதில் வந்து கூடுகட்டும் அளவுக்குப் பெரிதாகும் |
| அடக்கி வைத்தாள் | 13:33 | பிசைந்து வைத்தாள் |
| இடறல்களையும் | 13:41 | தடையாயிருக்கிறவர்களையும் |
| இடறலடைந்தார்கள் | 13:57 | ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள் |
| காற்பங்கு தேசாதிபதி | 14:1 | நாலு மாநிலங்களின் மன்னர்களில் ஒருவன், கலிலேயாவின் (குறுநில) மன்னன், பெரிய ஏரோதுவின் மகனாகிய ஏரோது அந்திப்பாஸ் |
| தாலத்திலே | 14:8 | தட்டிலே |
| நாலாம் ஜாமம் | 14:25 | காவல் நேரம் இரவு 3 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் |
| இடறலடைந்தார்கள் | 15:12 | மனவேதனை அடைந்தார்கள் |
| வெளிப்படுத்த வேண்டும் | 15:15 | விளக்க வேண்டும் |
| கானானிய ஸ்திரீ | 15:22 | பலஸ்தீனா பெண் |
| நாய்க்குட்டிகளுக்கு | 15:26 | யூதர் புறஜாதியாரை நாய்கள் என்று எண்ணினர் |
| வெளிவாங்கும் | 16:2 | வானிலை நன்றாக இருக்கும் |
| நிதானிக்க | 16:3 | ஆராய்ந்து அறிய |
| புளித்த மாவு | 16:6 | பொய்யான உபதேசம் |
| இடறலாயிருக்கிறாய் | 16:23 | தடையாயிருக்கிறாய் |
| ஜீவனை | 16:26 | ஆன்மாவை |
| எலியா முந்தி வரவேண்டும் | 17:10 | எலியா மேசியாவுக்கு முன்னால் வந்து எல்லாவற்றையும் சரிப்படுத்த வேண்டும் |
| அவனை அறியாமல் | 17:12 | அவனை யார் என்று அடையாளம் காணாமல் |
| தங்கள் இஷ்டப்படி அவனுக்கு செய்தார்கள் | 17:12 | அவனை மரியாதையின்றி நடத்தினார்கள் |

| | | |
|---|---|---|
| மனுஷ குமாரனும் | 17:12 | மேசியாவாகிய நானும் |
| இந்த ஜாதிப்பிசாசு | 17:21 | இவ்வகைப் பிசாசு |
| இடறலாயிராதபடிக்கு | 17:27 | வெறுப்பு உண்டாக்காதபடி |
| இடறல் உண்டாக்குகிறவன் | 18:6 | பாவத்தில் விழச் செய்கிறவன் |
| ஏந்திரக்கல்லை | 18:6 | திரிகல் கல்லை |
| இடறல்கள் வருவது அவசியம் | 18:7 | பாவத்தில் விழுவதைத் தவிர்க்கமுடியாது |
| நிலைவரப்படும்படி | 18:16 | உறுதி செய்யப்படும்படி |
| ஏழெழுபது தரம் | 18:22 | உங்கள் மன்னிப்புக்கு அளவே இருக்கக்கூடாது |
| பதினாயிரம் தாலந்து | 18:24 | ஐந்து கோடி வெள்ளி நாணயங்கள் |
| நிர்வாகம் இல்லாதபடியால் | 18:25 | இயலாதபடியால் |
| உபாதிக்கிறவர்களிடத்தில் | 18:34 | வதைக்கிறவர்களிடத்தில் |
| வசனத்தை | 9:11 | உண்மையை |
| அண்ணகர்கள் | 19:12 | திருமண உறவுக்கு தகுதியற்றவர்கள் |
| ஜீவனில் பிரவேசிக்க | 19:17 | வாழ்வடைய, நித்திய ஜீவனைப் பெற |
| மறுஜென்ம காலத்தில் | 19:28 | புதிய வானமும், புதிய பூமியும் படைக்கப்படும் காலத்தில் |
| ஒரு பணம் கூலி | 20:2 | ஒரு நாள் கூலி |
| வன்கண்ணனாயிருக்கலாமா | 20:15 | பொறாமைப்படலாமா |
| அவைகள்மேல் | 21:7 | குட்டியின் மேல் |
| ஓசன்னா | 21:9 | எங்களை விடுவித்தருளும்; (காலப்போக்கில் துதி உண்டாவதாக, வாழ்க, என்றும் பொருள்பட்டது) |
| இந்த மலை | 21:21 | ஒலிவ மலை |
| கோபுரத்தையும் | 21:33 | காவல் கோபுரத்தையும் |
| தோட்டக்காரர் | 21:34 | குத்தகைக்காரர் |
| கல்யாண வஸ்திரமில்லாமல் | 22:12 | கடவுள் எதிர்பாக்கும் தகுதியில்லாதவனாய் |
| இராயன் | 22:17 | சீசர், ரோம பேரரசன் |
| சதுசேயர் | 22:23 | உயிர்த்தெழுதல் இல்லை என்றும், தேவதூதர்கள், ஆவிகள் இல்லை என்றும் சாதிப்பவர்கள் |

| | | |
|---|---|---|
| நான் ஆபிரகாமின் தேவனும்.. ....தேவனும் .................. ...........தேவனாயிருக்கிறார் | 22:31,32 | ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும் கர்த்தருடைய சமுகத்தில் உயிரோடு இருக்கிறார்கள். அப்படியில்லாவிட்டால் கர்த்தர் தான் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் தேவனாயிருந்தேன் என்று சொல்லியிருப்பார் |
| காப்பு நாடாக்கள் | 23:5 | நெற்றியிலும் கையிலும் தேவ வசனங்கள் எழுதப்பட்ட நாடாக்கள் |
| அவன் கடனாளி | 23:16 | (அதை நிறைவேற்ற) கடமைப்பட்டவன் |
| ஒற்தலாம் | 23:23 | புதினா |
| மாயத்தினாலும் | 23:28 | கபடத்தினாலும் |
| துன்பப்படுத்துவீர்கள் | 23:34 | விரட்டுவீர்கள் |
| தேவாலயத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடி | 24:2 | ரோமர் கி.பி. 70ல் எருசலேமை முற்றிலும் அழித்தார்கள் |
| இடறலடைந்து | 24:10 | விசுவாசத்தைக் கைவிட்டு |
| பாழக்கும் அருவருப்பு | 24:15 | சிலை |
| நீங்கள் ஓடிப்போவது | 24:20 | எதிரியிடம் இருந்து தப்பும்படி நீங்கள் ஓடிப்போவது |
| மாரி காலத்திலாவது, ஓய்வு நாளிலாவது சம்பவியாதபடி | 24:20 | மழையும் குளிரும் உள்ள மாரி காலத்திலாவது, அரை மைல் தூரத்துக்கு மேலாக ஓய்வு நாளில் நீங்கள் பிரயாணம் பண்ணக்கூடாது என்ற கட்டளை இருப்பதால் |
| பிணம் எங்கேயோ, அங்கே கழுகுகள் வந்து கூடும் | 24:28 | ஒரு இடத்துக்கு மேலே கழுகுகள் வட்டமிட்டால், அங்கே பிணம் கிடக்கிறது என்று திட்டவட்டமாய் தெரியும். அதேபோல மனுஷகுமாரனுடைய வருகையும் பூமியின் ஒருமுனை தொடங்கி மறுமுனைவரை பிரத்தியட்சமாகத் தெரியும் |
| இந்த சந்ததி | 24:34 | மனிதவர்க்கம் |
| இன்ன ஜாமத்தில் | 24:43 | இரவில் எந்த நேரத்தில் |
| மாயக்காரர் | 24:51 | மாய்மாலக்காரர் |
| பங்கை | 24:51 | தண்டனையை |
| ஆண்டவரே, ஆண்டவரே | 25:11 | ஐயா, ஐயா |
| ஐந்து தாலந்து | 25:15 | 5,000 வெள்ளிக்காசுகள் |
| தெளிக்காத இடத்தில் | 25:24 | விதை தூற்றாத இடத்தில் |
| சேர்க்கிறவருமான | 25:24 | விளைச்சலை சேகரிக்கிறவருமான |
| பரணி | 26:7 | வாசனைக் குப்பி |

| | | |
|---|---|---|
| எத்தனமான செய்கை | 26:12 | ஆயத்தப்படுத்தும் செய்கை |
| இன்னானிடத்திற்குப் போய் | 26:18 | நான் முன்னால் சொன்ன மனிதனிடத்திற்குப் போய் |
| நவமானதாய் | 26:29 | புதியதாய் |
| என்னிமித்தம் இடறலடைவீர்கள் | 26:31 | என்னைவிட்டு ஓடிப்போவீர்கள் |
| லேகியோன் | 26:53 | ரோம இராணுவத்தில் 6,000 போர்வீரர் அடங்கிய ஒரு படைப்பிரிவு |
| கற்பித்தபடி | 27:10 | கட்டளையிட்டப்படி |
| கபாலஸ்தலம் | 27:33 | மண்டை ஓடு மலை |
| காடி | 27:34 | வேதனையை மறக்கச் செய்யும் கசப்புபொருள் கலந்த திராட்சரசம் |
| ஆறாம்மணி முதல் ஒன்பதாம் மணி வரை | 27:45 | நண்பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை |
| துய்யதான | 27:59 | சுத்தமான |
| மற்ற மரியாளும் | 27:61 | வேறொரு மரியாளும் |
| சம்மதப்படுத்தி | 28:14 | நம்ப வைத்து |

## மாற்கு

| | | |
|---|---|---|
| லேவி | 2:14 | மத்தேயு |
| ஏரோதியர் | 3:6 | ரோம அரசாட்சியை விரும்பிய யூத அரசியல்வாதிகள் |
| வீட்டுக்குப் போனார்கள் | 3:20 | அவர் தங்கியிருந்த வீட்டுக்குப் போனார்கள் |
| பிடித்துக் கொள்ளும்படி | 3:21 | அவர் மயக்கமாயிருக்கிறார் என்று சொல்லி அவருக்குப் பொறுப்பு எடுத்துக் கொள்ளும்படி |
| பெயல்சேபூல் | 3:22 | பிசாசுகளின் தலைவன் |
| பின்னணியத்தில் | 4:38 | பிற்பகுதியில் |
| வருத்தப்பட்டு | 5:26 | துன்பப்பட்டு |
| யோசே | 6:3 | யோசேப்பு |
| இடறலடைந்தார்கள் | 6:3 | எரிச்சலடைந்தார்கள் |
| தரியாதிருக்கவும் | 6:9 | கொண்டு போகாதிருக்கவும் |
| அவர்களுக்கு சாட்சியாக | 6:11 | அவர்களுக்கு எதிரான சாட்சியாக |
| தனிமையாய் | 6:32 | இரகசியமாய் |
| வனாந்தரமான | 6:32 | தனிமையான |

| | | |
|---|---|---|
| கடையிலிருந்து | 7:4 | பொது இடங்களிலிருந்து |
| மணைகளையும் | 7:4 | சாப்பிட உட்காரும் இடங்களையும் |
| வியர்த்தமாக்கினது | 7:9 | புறக்கணித்தது |
| நன்றாயிருக்கிறது | 7:9 | வேடிக்கையாயிருக்கிறது |
| கொர்பான் | 7:11 | கடவுளுக்குக் காணிக்கை |
| தம்முடைய ஆவியில் பெருமூச்சு விட்டு | 8:12 | மிகுந்த மனவேதனையோடு |
| மரங்களைப்போல | 8:24 | நடக்கிற மரங்களைப்போல |
| சீஷரிடத்தில் | 9:14 | மற்ற சீடரிடத்தில் |
| அவர்கள் புழு | 9:48 | அவர்களைத் தின்னும் புழு |
| உப்பிடப்படுவான் | 9:49 | உப்புப்பதனம் செய்யப்படுவான் (கிறிஸ்துவின் அடியார் தங்கள் விசுவாசத்தினிமித்தம் கஷ்டப்படுவார்கள்) |
| சாரமற்றுப் போனால் | 9:50 | சத்தை இழந்தால் |
| உப்புடையவர்களாயிருங்கள் | 9:50 | நற்குணம் உடையவர்களாயிருங்கள் |
| வழியிலே | 10:52 | சாலை வழியாக |
| ஸ்தோத்திரிக்கப்பட்டவர் | 11:9 | ஆசீர்வதிக்கப்பட்டவர் |
| இராயனுக்கு | 12:14 | சீசருக்கு, ரோமப் பேரரசருக்கு |
| மாயத்தை | 12:15 | வேடத்தை |
| முந்தி | 13:10 | முதலில் |
| பாழாக்குகிற அருவருப்பு | 13:14 | தீட்டுப்படுத்தும் சிலை |
| நிற்தத்தகாத இடத்தில் | 13:14 | தேவாலயத்தி உயர்ந்த பகுதியில் |
| சத்துவங்களும் | 13:25 | சக்திகளும் |
| சந்ததி | 13:30 | இனம், உலகம் |
| எத்தனமாக | 14:8 | அடையாளமாக |
| இடறலடைவீர்கள் | 14:27 | ஓடிப்போவீர்கள் |
| நாட்டிலிருந்து | 15:21 | வயல் வெளியிலிருந்து |

# லூக்கா

| | | |
|---|---|---|
| இரட்சணியக்கொம்பு | 1:75 | விடுதலைக் கிடைக்கச் செய்பவர் |
| உலகமெங்கும் | 2:1 | ரோமப்பேரரசு முழுவதும் |
| குடிமதிப்பு | 2:1 | ஜனத்தொகை கணக்கெடுப்பு |
| இராயன் | 2:1 | ரோமப் பேரரசன், சீசர் |
| சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின | 2:31 | சகல மக்களுக்காக நீர் ஆயத்தம்பண்ணின |
| இரட்சணியத்தை | 2:32 | மீட்பரை |
| இஸ்ரவேலில் அநேகர் விழுகி-தற்கும் எழுந்திருக்கிறதற்கும் | 2:34 | இஸ்ரவேலில் அநேகருடைய வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாவதற்கும் |
| தேசாதிபதி | 3:1 | ஆளுனர் |
| காற்பங்கு தேசாதிபதி | 3:1 | ரோமப் பேரரசின் ஒரு பிரிவின் ஆளுனர் |
| நொறுங்குண்டவர்களை | 4:18 | ஒடுக்கப்பட்டவர்களை |
| அநுக்கிரக வருஷம் | 4:19 | மக்களுக்கு கர்த்தர் காட்டும் தயவின் காலம் |
| கிருபையுள்ள வார்த்தைகளை | 4:22 | ஆச்சரியமான கருணையுள்ள வார்த்தைகளை |
| சரெப்தா | 4:26 | சாரிபாத் |
| நிறுத்திக் கொண்டார்கள் | 4:42 | தடுக்க முயன்றார்கள் |
| பரிசேயரின் சீஷரும் | 5:33 | பரிசேயரைப் பின்பற்றுகிறவர்களும் |
| துருத்தி | 5:37 | தோல்பை |
| செலோத்தே | 6:15 | தீவிரவாதி |
| உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்து தீர்ந்தது | 6:24 | நீங்கள் எல்லாவற்றையும் அனுபவித்து விட்டீர்கள் |
| இருதயத்தின் நினைவினால் | 6:45 | இருதயத்தில் இருப்பதையே |
| இடறலடையாதிருக்கிறவன் | 7:23 | ஏற்றுக் கொள்ளுகிறவன் |
| ஆனாலும் ஞானமானது அதன் பிள்ளைகளெல்லாராலும் நீதியுள்ளது என்று ஒப்புக் கொள்ளப்படும் என்றார் | 7:35 | ஆனாலும் மாறுபாடான பேச்சை மக்கள் நியாயமான பேச்சு என்று ஏற்றுக் கொள்ளுவார்கள். இதுவே, அவர்களுடைய ஞானம் என்றார் (மத்.11:19) |
| நிர்வாகம் | 7:42 | திறமை |

| | | |
|---|---|---|
| காரியக்காரன் | 8;3 | அரண்மனை நிர்வாகி |
| மாறுபாடான சந்ததியே | 9;41 | தவறு செய்வதில் நீடிக்கும் சந்ததியே |
| அனுப்புவித்து கொண்டுவரும்படி | 9;61 | விடை பெற்று வரும்படி |
| வினவவும் | 10;4 | வாழ்த்தவும் |
| விசாரித்துக் கொள் | 10:35 | கவனித்துக்கொள் |
| தேவனுடைய விரலினாலே | 11:20 | கடவுளுடைய வல்லமையினாலே |
| நெருக்கவும் | 11:53 | எதிர்க்கவும் |
| ஏவவும் | 11:54 | கேள்விகள் கேட்கவும் |
| மாயம் | 12:1 | மாய்மாலம் |
| துரைத்தனத்தார்கள் | 12:11 | ஆளுபவர்கள் |
| வீதத்தை | 12:13 | பங்கை |
| இரண்டாம் ஜாமம் | 12:38 | காவல் நேரம் இரவு 9 மணி முதல் 12 மணி வரை |
| மூன்றாம் ஜாமம் | 12:38 | இரவு 12 மணிமுதல் 3 மணிவரை |
| பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன் | 12:49 | நான் உலகத்தை முற்றிலும் மாற்ற வந்தேன். அது இப்பொழுதே நடந்துமுடிய வேண்டுமென்று விரும்புகிறேன் |
| நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு | 12:50 | நான் பாடனுபவிக்கவேண்டும் |
| இதுமுதல் ஒரே வீட்டில் ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள் | 12:52 | இதுமுதல் குடும்பத்தில் மூன்றுபேர் என் பட்சத்திலும், இரண்டு பேர் எனக்கு விரோதமாகவும் இருப்பார்கள் |
| தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும் ........ விரோதமாய்ப் பிரிந்திருப்பார்கள் | 12:53 | தகப்பன் என்னைப்பற்றி ஒரு முடிவு எடுப்பான். மகன் வித்தியாசமாக முடிவு எடுப்பான். தாய்க்கும் மகளுக்கும் கருத்து வேறுபாடு இருக்கும். மாமியின் கருத்தை மருமகள் புறக்கணிப்பாள். மக்கள் தாங்கள் எந்தப்பக்கம் என்பதை முடிவு செய்யவேண்டும் |
| நீர்க்கோவை வியாதி | 14:2 | திரவத்தன்மை அதிகரிப்பால் உடல் வீங்குவது |
| அகத்தியமாய் | 14:18 | கட்டாயமாய் |
| உக்கிராணக்காரன் | 16:1 | வீட்டுக்குப் பொறுப்பாயிருப்பவன் |
| இரக்கவும் | 16:3 | உதவி கேட்கவும் |
| அதிக புத்திமான்களா யிருக்கிறார்கள் | 16:8 | நேர்மையற்றவர்களாய் நடந்து கொள்வதில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள் |

| | | |
|---|---|---|
| நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக் கொள்வாருண்டாகும்படி அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள் | 16:9 | (அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள் என்று நானும் உங்களுக்குச் சொல்லுவேனோ, நீங்கள் மரிக்கும்போது அது உங்களை மோட்சத்தின் நித்திய வீடு கொண்டு சேர்க்குமோ?) |
| மெய்யான பொருளை | 16:11 | பரலோக செல்வத்தை |
| வழங்கி வந்தது | 16:16 | வழிகாட்டியாக அறிவிக்கப்பட்டது |
| சம்பிரமமாய் | 16:19 | விருந்துண்டு மகிழ்ச்சியாய் |
| இடறல்கள் | 17:1 | பாவத்தில் இடறி விழுதல் |
| அப்பிரயோஜனமான | 17:10 | அற்ப பிரயோஜனமான |
| ஏழைகளுக்கு கொடுக்கிறேன் | 19:8 | ஏழைகளுக்குக் கொடுப்பேன் |
| ராஜ்யத்தை | 19:12 | தன்னுடைய ஆட்சி உரிமையை |
| ஊரார் | 19:14 | குடிமக்கள் |
| சீலையிலே | 19:20 | துணியிலே |
| வைக்காததை எடுக்கிறவரும் | 19:21 | மற்றவர்கள் சம்பாதித்ததை பிடுங்கிக் கொள்ளுகிறவரும் |
| விதைக்கிறதை | 19:21 | மற்றவர்கள் விதைத்ததை |
| வாசகத்தில் | 20:37 | நூற்பகுதியில் |
| சத்துவங்கள் | 21:26 | கோள்கள் |
| பெருந்திண்டி | 21:34 | பெருந்தீனி |
| லவுகீக | 21:34 | உலக |
| சேனைத்தலைவர்களிடத்திலும் | 22:4 | தேவாலய காவலாளிகளின் தலைவர்களிடத்திலும் |
| நாட்டிலிருந்து | 23:26 | வயல்வெளியிலிருந்து |
| ஆண்டவரே | 23:42 | இயேசுவே |
| பின் சென்றுவந்த | 23:49 | பின்னாலே வந்த |
| ஆயத்த நாளாயிருந்தது | 23:54 | அது வெள்ளிக்கிழமையாய் இருந்தது |
| ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று | 23:54 | ஓய்வு நாளாகிய சனிக்கிழமையும் ஆரம்பமாயிற்று |
| வாரத்தின் முதல்நாள் | 24:1 | ஞாயிற்றுக்கிழமை |
| சீலை | 24:12 | துடைக்கும் துணி |
| மந்த இருதயமுள்ளவர்களே | 24:25 | நம்பத் தயங்கும் இருதயம் உள்ளவர்களே |

# யோவான்

| | | |
|---|---|---|
| ஆதியிலே வார்த்தை இருந்தது | 1:1 | உலகத்தை உண்டாக்குவதற்கு முன்னேயே கிறிஸ்து இருந்தார் |
| அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார் | 1:11 | அவர் தாம் தெரிந்துக்கொண்ட யூதர்கள் மத்தியிலே வந்தார் |
| பெத்தாபரா | 1:28 | பெத்தானியா |
| பத்துமணி | 1:39 | மாலை 4 மணி |
| ஸ்திரியே, எனக்கும் உனக்கும் என்ன | 2:4 | அம்மா, என் நினைவுகள் உந்தன் நினைவுகள் அல்ல. |
| என் வேளை இன்னும் வரவில்லை | 2:4 | நான் அற்புதம் செய்யும் நேரம் இன்னும் வரவில்லை |
| இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே | 2:20 | சாலொமோன் கட்டின தேவாயல வேலை ஏழு வருடங்கள் பிடித்தது. அவன் மரித்த பின் சீஷாக் என்ற எகிப்திய மன்னன் அங்கிருந்த எல்லா பொன்னையும் அபகரித்தான். இந்த ஆலயம் 400 வருடங்கள் நீடித்தது. (ஏறத்தாழ கி.மு. 976 - 586) பாபிலோனியர் இதை அழித்தார்கள்.<br><br>யூதர்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பியபின் சத்துருக்களின் எதிர்ப்பினால் ஆலயவேலை 16 வருடங்கள் தடைபட்டது. ஆகாய், சகரியா போன்ற இறைவாக்கினரின் தூண்டுதலினால் 4 வருடங்களில் புதிய தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது. (கி.மு. 520- 516) செருபாபோல் கட்டிய இந்த ஆலயம் 500 ஆண்டுகள் நீடித்தது. பெரிய ஏரோது யூதர்களைப் பிரியப்படுத்த இரண்டாவது தேவாலயத்தை விரிவாக்கி, பளிங்குக் கற்களாலும், தங்கத்தாலும் அழகுபடுத்தினான். புதுப்புது வேலைகளுக்கு 46 வருடங்கள் ஆயிற்று. இந்த ஆலயத்துக்குத்தான் கிறிஸ்து வந்தார். இது 90 வருடங்கள் நீடித்தது. இதை ரோம அரசன் தீத்து கி.பி.70-ல் அழித்தான்) |
| நம்பி இணங்கவில்லை | 2:24 | அப்படியிருந்தும், இயேசு மனம் மாறும் மனிதரை நன்கு அறிந்திருந்தபடியால் அவர்களை அவர் நம்பவில்லை |
| ஆவியில் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் | 3:8 | பரிசுத்த ஆவியால் பிறந்தவர்களுக்கு இது பொருந்தும் |
| உலகத்தில் | 3:16 | பாவியிடத்தில் |
| பரலோகத்திலிருந்து ஒருவனுக்கு கொடுக்கப்பட்டாலொழிய | 3:27 | உன்னதத்தில் உள்ள கர்த்தரிடத்திலிருந்து ஏதாவது ஒன்று பெற்றுக் கொண்டால் தவிர ஒருவனும் ஒன்றும் செய்யமுடியாது |
| ஆவியாயிருக்கிறார் | 4:24 | உருவம் இல்லாதவராய் இருக்கிறார் |

| | | |
|---|---|---|
| கனம் | 4:44 | மதிப்பு |
| தரித்திருக்கிறதுமில்லை | 5:38 | நிலைப்பதுமில்லை |
| முத்திரித்திருக்கிறார் | 6:27 | அதிகாரம் கொடுத்திருக்கிறார் |
| இடறலாயிருக்கிறதோ | 6:61 | (இந்த உபதேசம் உங்களுக்கு) அதிர்ச்சி கொடுக்கிறதோ |
| உம்முடைய சீஷரும் பார்க்கும்படி | 7:3 | அநேகம் மனிதர்களும் பார்க்கும்படி |
| ஒரே கிரியையை | 7:21 | ஓய்வுநாளில் ஒரு மனிதனை சுகமாக்கும் வேலையைத்தானே செய்தேன் |
| மகிமைப்படாதிருந்தபடியினால் | 7:39 | பரலோகத்தின் மாட்சிமைக்குத் திரும்பாததினால் |
| தேவர்களாயிருக்கிறீர்கள் | 10:34 | நீங்கள் தேவர்கள் (சங்.82:6) |
| வேதத்தில் | 10:34 | சட்டத்தில் |
| இடறமாட்டான் | 11:9 | பாதுகாப்பாக நடப்பான் |
| பிரதான ஆசாரியன் | 11:51 | தலைமை குரு |
| புயம் | 12:38 | புய பலம் |
| தேற்றரவாளன் | 14:16 | ஆறுதல் அளிப்பவர்; உதவியாளர் |
| இடறலடையாதபடிக்கு | 16:1 | நம்பிக்கை இழந்துவிடாதபடி |
| என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் | 16:14 | என்னுடைய மகிமையை உங்களுக்கு எடுத்துக் கூறுவதால் |
| வினாவ வேண்டியதில்லை | 16:30 | சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை |
| வசனத்தைக் கைக்கொண்டு இருக்கிறார்கள் | 17:6 | வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தார்கள் |
| வார்த்தையை | 17:14 | கட்டளையை |
| தகாதவிதமாய் | 18:23 | தப்பிதமாய் |
| தகாததை ஒப்புவி | 18:23 | தப்பிதமாய் பேசினதைச் சொல்லு |
| தகுதியாய் | 18:23 | சரியாய் |
| சத்தியவான் எவனும் | 18:37 | உண்மையை விரும்பும் எவனும் |
| பெரிய ஓய்வுநாளுக்கு | 19:31 | ஓய்வுநாளும், பஸ்கா பண்டிகை நாளும் சேர்ந்த ஓய்வுநாளுக்கு |
| அவர்கள்மேல் ஊதி | 20:22 | அவர்கள் புது சிருஷ்டியாக மாறும் ஆவியை அவர்கள்மேல் ஊதி |

| | | |
|---|---|---|
| திபேரியா கடற்கரையிலே | 21:1 | கலிலேயா ஏரிக் கரையோரம் |
| நீ என்னை நேசிக்கிறாயா? | 21:17 | (பேதுரு கிறிஸ்துவை மூன்றுதரம் மறுதலித்தான். கிறிஸ்து மூன்றுதரம் நீ என்னை நேசிக்கிறாயா என்று அவனிடம் கேட்டார்) |
| அரை கட்டிக்கொண்டு | 21:18 | இடையைக் கட்டிக்கொண்டு (நன்றாக உடுத்தி |

## அப்போஸ்தலர் நடபடிகள்
## (நற்செய்தித் தொண்டர்கள் ஊழியம்)

| | | |
|---|---|---|
| முதலாம் பிரபந்தம் | 1:2 | லூக்கா நற்செய்தி |
| ஆதீனத்திலே | 1:7 | அதிகாரத்திலே |
| யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் | 1:13 | யாக்கோபின் மகன் யூதாவும் |
| கண்காணிப்பை | 1:20 | பதவியை |
| அப்போஸ்தலப் பட்டம் | 1:24 | அப்போஸ்தலப் பதவி (திருத்தூதுவன் பதவி) |
| பெந்தேகோஸ்தே நாள் | 2:1 | பஸ்கா பண்டிகைக்கு அடுத்த 50ம் நாள் |
| கரடுகள் | 3:7 | கணுக்கால்கள் |
| பரலோகம் அவரை ஏற்றுக் கொள்ளவேண்டும் | 3:21 | அவர் பரலோகத்தில் இருக்கவேண்டும் |
| அனுக்கிரகஞ் செய்தருளும் | 4:30 | உதவியருளும் |
| யூத மார்க்கத்தமைந்தவன் | 6:5 | யூத மார்க்கத்துக்கு மாறினவன் |
| தேசங்களில் | 8:1 | பிரதேசங்களில் |
| தேவ வசனத்தை | 8:14 | இயேசுவின் செய்தியை, போதனைகளை |
| அவர் தம்மைத்தாழ்த்தினபோது | 8:33 | அவர் அவமதிப்புக்குள்ளானபோது |
| அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது | 8:33 | அவருக்கு நீதி கிடைக்கவில்லை |
| அவருடைய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும் | 8:33 | அவர் காலத்தில் வாழ்ந்த மக்களின் தீச்செயலை யாராலே சொல்லிமுடியும் |
| தேவ எத்தனமாய் | 10:22 | கர்த்தராலே |
| மன நிர்ணயமாய் | 11:23 | முழு மனதாய் |
| ஏரோது ராஜா | 12:1 | ஏரோது, அகிரிப்பா-1 (பெரிய ஏரோதுவின் பேரன்) |

| | | |
|---|---|---|
| திரும்பி வந்தார்கள் | 12:25 | அந்தியோகியாவுக்குத் திரும்பிவந்தார்கள் |
| நீகர் | 13:1 | கருப்பன் |
| முதலாளிகள் | 13:50 | முக்கிய மனிதர் தலைவர்கள் |
| எடுத்துவிட்டு | 13:50 | தூண்டிவிட்டு |
| பர்னபாவை யூப்பித்தர் என்றும் பவுலை மெர்குரி என்றும் எண்ணினர். | 14:12 | கிரேக்கர் யூப்பித்தரை (ஜூப்பிட்டரை) மிகப்பெரிய தெய்வமாகக் கருதினர். மெர்குரி (கெர்மீஸ்) ஜூப்பிட்டரின் வேலையாள் என்று பிரசங்கத்தை பவுல் நடத்தினபடியால் அவனை மெர்குரி என்றும் (பெரிய கடவுளின் வேலைக்காரன்) என்றும் பர்னபாவை ஜூப்பிட்டர் (பெரிய கடவுள் ) என்றும் சொன்னார்கள் (வான சாஸ்திரிகள் சூரியனை சுற்றும் மிகப்பெரிய கோளத்துக்கு ஜூப்பிட்டர் என்றும் சூரியனுக்கு மிக அருகாமையில் உள்ள மிகச்சிறிய கோளத்துக்கு மெர்குரி என்றும் பெயரிட்டனர். |
| தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு | 14:26 | அருள் வழங்கும் கடவுளின் பணிக்கு அர்பணிக்கப்பட்டு |
| நாடுகளை | 16:6 | பகுதிகளை |
| நூறு கலம் | 17:18 | நூறு மூடை |
| எப்பிக்கூரர், ஸ்தோயிக்கர் | 17:18 | எப்பிக்கூரர், 'நன்றாக சாப்பிடு, நன்றாக குடி, சந்தோஷமாக வாழ், ஏனெனில், நீ நாளைக்கே சாகலாம்,' என்றார்கள்<br><br>ஸ்தோயிக்கர், மனிதன் ஆசையை அடக்கவேண்டும். மனசாட்சியினால் நடத்தப்பட வேண்டும் என்றார்கள் |
| மார்ஸ் மேடைக்கு | 17:19 | யுத்த கடவுளாகிய மார்ஸ் மலையில் உள்ள அரியபேகஸ் மன்றத்துக்கு |
| ஒரு பிரார்த்தனை உண்டாயிருந்தபடியால் | 18:18 | ஒரு பொருத்தனை இருந்ததால் |
| விசுவாசிகளானபோது | 19:2 | இயேசுவை ஏற்றுக்கொண்டபோது |
| வித்தியாசாலை | 19:9 | பிரசங்க அறை, பள்ளிக்கூடம் |
| உறுமால்கள் | 19:12 | அங்க வஸ்திரங்கள், மேல் அங்கிகள் (இந்தி - ரூமால்) |
| அகாயா | 19:12 | கிரீஸ் (கிரேக்க நாடு) |
| நிருணயம் பண்ணிக்கொண்டு | 19:21 | திட்டமிட்டு |
| பட்டணத்து சம்பிரதி | 19:35 | நகர ஆணையர் |

| | | |
|---|---|---|
| தியானாள் | 19:35 | டயானா, ஜுப்பிட்டரின் மகள், அப்பொல்லோ என்ற தெய்வத்தின் சகோதரி, இவள் வேட்டையாடும் தேவதை, இவள் ஆர்டெமிஸ் என்றழைக்கப்பட்டாள் |
| கோவிற்பரிசாரகி | 19:35 | கோவில் காவலாளி |
| மக்கெதோனியா | 20:1 | கிரீஸ் நாட்டுக்கு வடக்கே உள்ள மாசிடோனியா நாடு |
| ஊர்த்துறையில் | 20:16 | துறைமுகத்தில் |
| சோதனைகளோடும் | 20:19 | துன்பங்களோடும் |
| ரோது தீவு | 21:1 | ரோட்ஸ் தீவு |
| பலிசெலுத்தி | 21:26 | காணிக்கைச் செலுத்தி |
| எடுத்துவிட்டு | 21:27 | தூண்டி விட்டு |
| அவன்மேல் கைபோட்டு | 21:27 | அவனைப் பிடித்து |
| சர்ப்பனை | 23:16 | சதி |
| ஈட்டிக்காரர் | 23:23 | ஈட்டி எறியும் வீரர் |
| ஆசியா | 24:18 | சின்ன ஆசியா, துருக்கி |
| திறமுள்ளவர்கள் | 25:5 | தலைவர்கள் |
| பெர்னிக்கேயாள் | 25:13 | இரண்டாம் ஏரோது அகிரிப்பாவின் சகோதரி; இவள் கணவர் இறந்தபின் அவன் சகோதரன் மனைவியானாள் |
| சொஸ்த புத்தியுள்ளவன் | 26:25 | ஞானமுள்ளவன் |
| அபயமிடாதிருந்தானானால் | 26:32 | மேல்முறையீடு செய்யாதிருந்தால் |
| ஒதுக்கிலே | 27:4 | கரையோரத்திலே |
| கிரேத்தா தீவு | 27:12 | கிரீட் தீவு |
| ஆதிரியாக் கடலிலே | 27:27 | ஏட்ரியாட்டிக் கடலிலே |
| விழுது விட்டு | 27:28 | ஆழத்தை அளந்து பார்த்து |
| இருபது பாகம் | 27:28 | (120 அடி ஆழம்) கிட்டத்தட்ட 37மீட்டர் |
| பதினைந்து பாகம் | 27:28 | (90 அடி ஆழம்) ஏறத்தாழ 27 மீட்டர் |
| கப்பலாட்கள் | 27:30 | மாலுமிகள் |
| முன்னணியம் | 27:30 | முன்புறம் |

| | | |
|---|---|---|
| போடப்போகிற பாவனையாய் | 27:30 | போடுவதுபோல நடித்து |
| மெலித்தா தீவு | 28:1 | மால்டா தீவு |
| சீரகூசா | 28:12 | சைரகூஸ் (சிசிலியில் உள்ளது) |
| முறைமைகள் | 28:17 | மரபுகள் |
| நம்பிக்கைக்காகவே | 28:20 | நம்பிக்கையாகிய அவருக்காகவே |

# ரோமர்

நிருபம் - கடிதம்

(ரோமாபுரியில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு)

| | | |
|---|---|---|
| தேவப்பிரியரும் | 1:2 | கடவுளால் நேசிக்கப்பட்டவர்களும் |
| சுதனென்று | 1:5 | மகன் என்று |
| ரூபிக்கப்பட்ட | 1:5 | நிரூபிக்கப்பட்ட |
| அப்போஸ்தல ஊழியம் | 1:7 | நற்செய்தித் தொண்டன் வேலை |
| என் ஆவியோடு | 1:9 | என் முழு மனதோடு |
| நல்ல பிரயாணம் | 1:12 | நல்ல வாய்ப்பு |
| தேவ பெலன் | 1:16 | கடவுளுடைய வல்லமை |
| தேவனைக் குறித்து அறியப்படுவது | 1:19 | தேவனைக் குறித்த ஞானம் |
| தேவத்துவம் | 1:20 | தெய்வீகம் |
| போக்குச் சொல்ல | 1:20 | சாக்குப் போக்கு சொல்ல |
| வீணரானார்கள் | 1:21 | அறிவீனரானார்கள் |
| சிருஷ்டிகர் | 1:25 | படைத்தவர் |
| சுபாவ அநுபோகம் | 1:26 | இயற்கையான அநுபவம் |
| சிருஷ்டி | 1:25 | படைக்கப்பட்டது |
| இச்சை ரோகங்களுக்கு | 1:26 | வெட்கக் கேடான காம இச்சைகளுக்கு |
| விரகதாபத்தினாலே | 1:27 | தீவிர உணர்ச்சியினாலே, வேட்கையினாலே |
| துராகிருதம் பண்ணுகிறவர்கள் | 1:30 | திமிர் பிடித்தவர்களும், முரடர்களும் |
| பிணைக்கிறவர்களுமாய் | 1:30 | உண்டாக்குகிறவர்களுமாய் |

| | | |
|---|---|---|
| சத்தியத்தின்படியே | 2:2 | நீதியின்படியே |
| குணப்படும்படி | 2:4 | மனந்திரும்பும்படி |
| கிரியைகளுக்கு | 2:6 | செய்கைகளுக்கு |
| அழியாமையையும் | 2:7 | சாவில்லாமையையும் |
| சத்தியத்திற்கு | 2:8 | நியாயத்திற்கு |
| சுபாவமாய் | 2:14 | இயல்பாய் |
| வேத எழுத்தும் | 2:27 | திருச்சட்டமும் |
| புறம்பாக யூதனானவன் | 2:28 | தோற்றத்தில் யூதனானவன் |
| புறம்பாக | 2:28 | சரீரத்தளவில் |
| எழுத்தின்படி | 2:29 | எழுதப்பட்ட சட்டத்தின்படி |
| மிகுதியாயிருக்கிறது | 3:2 | லாபகரமாயிருக்கிறது |
| வாக்கியங்கள் | 3:2 | வாக்குத் தத்தங்கள், வாக்குகள் |
| விசேஷித்த மேன்மையாமே | 3:2 | சிறப்புத்தன்மை உள்ளதாயிருக்கிறது |
| உண்மையை | 3:3 | வாக்குத்தத்தங்களை |
| அவமாக்குமோ | 3:3 | இல்லாதவை ஆக்குமோ, பயனற்றது ஆக்குமோ |
| நீர் உம்முடைய வசனங்களில் | 3:4 | நீர் பேசும்போது |
| நீதிபரர் | 3:4 | நீதியை நிலைநாட்டுபவர் |
| உம்முடைய நியாயம் விசாரிக்கப் படும் போது | 3:4 | நீர் நியாயந்தீர்க்கும்போது (சங்கீதம்.51:4) |
| சத்தியபரர் | 3:4 | உண்மையுள்ளவர் |
| அநீதி | 3:5 | நீதியற்ற நடத்தை |
| விளங்கப்பண்ணினால் | 3:5 | வெளிப்படுத்தினால் |
| கோபாக்கினையைச் செலுத்துகிற | 3:5 | கோபம் கொண்டு தண்டிக்கிற |
| நிர்ப்பந்தம் | 3:16 | அழிவு |
| நீதிமானாக்குகிறவருமாய் | 3:25 | கடவுளுக்கு உகந்தவனாய், கடவுளுக்கு ஏற்புடையவனாய் ஆக்குகிறவருமாய் |
| கிருபாதார பலியாக | 3:26 | பாவப்பரிகாரமாக (துயவாக இரத்தம் சிந்தி பாவம் போக்கும் பலியாக) |
| கிரியாப்பிரமாணத்தினாலேயா | 3:27 | சட்டத்துக்கு கீழ்ப்படிந்து நடப்பதன் மூலமாகவா? |

| | | |
|---|---|---|
| விசுவாசப் பிரமாணத்தினாலேயே | 3:27 | கடவுள்மேல் உள்ள நம்பிக்கையினாலேயே |
| நீதிமானாக்கப்படுகிறான் | 3:28 | கடவுளுக்கு ஏற்புடையவன் ஆகிறான்(ஆப.2:4) |
| தீர்க்கிறோம் | 3:28 | திட்டவட்டமாய் சொல்லுகிறோம் |
| ஏதுவுண்டு | 4:2 | காரணமுண்டு |
| கிரியை செய்கிறவனுக்கு | 4:4 | வேலை செய்கிறவனுக்கு |
| கிருபை | 4:4 | வெகுமதி |
| கடனென்றெண்ணப்படும் | 4:4 | அவனுடைய உரிமை என்று எண்ணப்படும் |
| இல்லாதவைகளை இருக்கிற-வைகளைப்போல் அழைக்கிறவர் | 4:17 | எதிர்கால நிகழ்வுகளை கடந்த கால நிகழ்ச்சிகளைப் போல திட்டவட்டமாய் பேசுகிறவருமாயிருக்கிறவர் |
| நம்பிக்கையோடே | 4:18 | தயங்காமல் |
| ஒப்புக் கொடுக்கப்பட்டும் | 4:25 | சாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டும் |
| நீங்கலாக | 5:9 | தப்பி |
| மீறுதலின் பலன் | 5:15 | பாவத்தின் விளைவு |
| பாவம் எண்ணப்படமாட்டாது | 5:13 | பாவமாகக் கருதப்படவில்லை |
| கிருபைவரத்தின் பலன் | 5:15 | தயவாய்க் கிடைத்த வெகுமதியின் பயன் |
| ஒரே நீதியினாலே | 5:18 | ஒருவருடைய ஏற்புடைய செயலினாலே |
| மீறுதல் பெருகும்படிக்கு ........ நியாயப்பிரமாணம் வந்தது | 5:20 | கர்த்தர் தம்முடைய கட்டளைகளுக்கு மக்கள் கீழ்ப்படியாமல் போனதை எல்லாரும் அறியும்படி பத்துகட்டளைகள் கொடுக்கப்பட்டன. நாம் நம்முடைய பாவத்தை அதிக அளவில் உணரும்போது, கர்த்தர் நம்மை எவ்வளவாய் மன்னிக்கிறார் என்பதைப் பார்க்கிறோம் |
| புருஷனைப் பற்றிய பிரமாணத் தினின்று | 7:2 | திருமணச் சட்டத்தினின்று |
| பெலன் செய்தது | 7:5 | கிரியை செய்தது |
| கற்பனையினாலே, சமயம் பெற்று | : 7:8 | கட்டளை தந்த வாய்ப்பைப் பயன்படுத்தி |
| கற்பனையும் | 7:12 | சட்டமும் |
| பாவமாகவே விளங்கும்படிக்கும் | 7:13 | பாவமானது அதனுடைய உண்மையான சுபாவத்தை வெளிப்படுத்தும்படிக்கும் |
| சம்மதியில்லை | 7:15 | புரியவில்லை |

| | | |
|---|---|---|
| நிர்ப்பந்தமான மனிதன் | 7:24 | பரிதபிக்கப்பட வேண்டிய மனிதன் |
| பாவப்பிரமாணத்துக்கும் | 7:25 | பாவத்துக்கும், ஊன் இயல்புகளுக்கும், மாம்ச இச்சைகளுக்கும் |
| அடிமைத்தனத்தின் ஆவி | 8:15 | அடிமைத்தனத்தின் மனப்பான்மை |
| புத்திர சுவிகாரத்தின் ஆவி | 8:15 | கடவுளை அப்பா என்று அழைக்கும் உரிமையும், மனப்பான்மையும் |
| கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே | 8:17 | கிறிஸ்துவுடனே கூட பங்காளிகளுமாமே, வாரிசுகளுமாமே |
| தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்கு | 8:19 | கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை உயிர்ப்பிக்கிற நாளுக்காக |
| மாயைக்கு | 8:21 | நிலையாமைக்கு |
| புத்திர சுவிகாரம் வருகிறதற்கு | 8:23 | கடவுள் நம்மைத் தம் பிள்ளைகளாக்கப்போகும் நாளுக்கு |
| வாக்குக்கடங்காத | 8:26 | சொற்களினால் வருணிக்க முடியாத |
| முதற்பேறானவர் | 8:29 | எல்லாரிலும் மூத்தவர் |
| முன்னறிந்தாரோ | 8:29 | தெரிந்து கொண்டாரோ |
| கிறிஸ்துவை விட்டு | 9:3 | கிறிஸ்துவைப் பிரிந்து |
| பிதாக்கள் | 9:5 | புகழ் பெற்ற பிதாக்கள் |
| தீர்மானம் | 9:11 | நோக்கம் |
| நிலைநிற்காமல் | 9:11 | நிறைவேறாமல் |
| உருக்கமாயிருக்க | 9:15 | தயவு காட்ட |
| நிலை நிறுத்தினேன் | 9:17 | உயர்த்தினேன் |
| குற்றம் பிடிக்கிறார் | 9:19 | குற்றம் சுமத்துகிறார் |
| கனமான | 9:21 | பிரத்தியேகமான |
| கனவீனமான | 9:21 | சாதாரணமான |
| எத்தனமாக்கின | 9:23 | ஆயத்தமாக்கின |
| கிருபாபாத்திரங்கள் மேல் | 9:23 | இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளுகிறவர்கள்மேல் |
| கோபாக்கினைப் பாத்திரங்கள்மேல் | 9:23 | தண்டனைக்குரியவர்கள்மேல் |
| மீதியாயிருப்பவர்கள் | 9:27 | ஒரு சிலரே |

| | | |
|---|---|---|
| மீதியாயிருப்பவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் | 9:27 | ஒரு சிலரே இரட்சிக்கப்படுவார்கள் |
| தவறுதற்கான கன்மலை | 9:33 | தடுக்கி விழச் செய்யும் கற்பாறை |
| தேவனுடைய நீதியை | 10:3 | கடவுள் தம்முடைய மக்களை தமக்கு ஏற்றவர்களாக்கும் நீதியை |
| முடிவாயிருக்கிறார் | 10:4 | நிறைவாயிருக்கிறார் |
| நீதியுண்டாக விசுவாசிக்கப்படும் | : 10:10 | விசுவாசத்தினாலே கடவுளுக்கு ஏற்றவர்கள் ஆகி நீதிமான்கள் ஆகலாம் |
| ஐசுவரிய சம்பன்னர் | 10:12 | அதிகமாக ஆசீர்வதிப்பவர் |
| கேள்வியினாலே | 10:17 | நற்செய்தியைக் கேட்பதினாலே |
| வெளியரங்கமானேன் | 10:20 | வெளிப்பட்டேன், வெளிப்படுத்தினேன் |
| பந்தி | 11:9 | ஆசீர்வாதங்கள் |
| பதிலுக்கு பதிலளித்தலுமாகக்கடவது | 11:9 | தண்டனைக்கு ஏதுவாகக்கடவது |
| வைராக்கியத்தை | 11:11 | ஆர்வத்தை |
| சுமக்கிறது | 11:18 | தாங்குகிறது |
| சுபாவக்கிளை | 11:21 | இயற்கையாய் வளர்ந்த கிளை |
| தயவிலே நிலைத்திருப்பாயானால் | 11:22 | அவரை நம்பி அவரைத் தொடர்ந்து நேசிப்பாயெனில் |
| நிலைத்திராவிட்டால் | 11:22 | கீழ்ப்படியாவிட்டால் |
| கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார் | 11:32 | கீழ்ப்படியாமைக்கு உட்படுத்தினார் |
| பிரபஞ்சத்துக்கு | 12:2 | உலகத்திற்கு |
| ஜாக்கிரதையாயிருக்கக்கடவன் | 12:8 | கவனமாய்த் தலைமை தாங்கட்டும் |
| விசுவாசப்பிரமாணத்துக்கு | 12:6 | நம்பிக்கையின் அளவுக்கு |
| தரித்திருக்கக்கடவன் | 12:8 | நிலைத்திருக்கக்கடவன் |
| வஞ்சனையில்லாமல் | 12:8 | தாராளமாய் |
| முதலாளியானவன் | 12:8 | தலைவன் |
| மாயமற்றதாயிருப்பதாக | 12:9 | உண்மையானதாயிருப்பதாக |
| அசதியாயிராமல் | 12:11 | (கடவுள்மேல் உள்ள ஆர்வத்தில்) தளர்ந்து விடாமல் |
| தாழ்மையானவர்களுக்கு | 12:16 | சாதாரணமக்களோடு, பாமரரோடு |

| | | |
|---|---|---|
| இணங்குங்கள் | 12:16 | பழகுங்கள் |
| கோபாக்கினை | 13:5 | தண்டனை |
| தொகையாய் | 13:9 | முழுமையாய், மொத்தமாய் |
| மன ஐயங்களை | 14:1 | சந்தேகங்களை,கருத்து வேறுபாடுகளை |
| ஸ்தோத்திரஞ்செலுத்துகிறான் | 14:6 | நன்றி கூறுகிறான் |
| நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் | 14:6 | கர்த்தரை ஆராதிக்க சில நாட்களை நியமித்துக் கொள்ளுகிறவன் |
| இடறலுண்டாக | 14:20 | மற்றவனுக்கு தடுமாற்றம் உண்டாக, இடையூறு உண்டாக |
| தீமையாயிருக்கும் | 14:20 | தடையாயிருக்கும் |
| உன் மட்டும் | 14:22 | உனக்கு மாத்திரம் |
| நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான் | 14:22 | தன் விசுவாசத்தைக்குறித்து பெருமை பாராட்டாதவன் பாக்கியவான்.நல்லதென்று எடுத்தமுடிவில் மனச்சாட்சியால் வாதிக்கப்படாதவன் பாக்கியவான் |
| சமுசயப்படுகிறவனாய் | 14:23 | சரியா, தப்பா என்று சந்தேகப்படுகிறவனாய் |
| அனுக்கிரகஞ் செய்வாராக | 15:6 | அருள் புரிவாராக |
| விருத்தசேதனம் | 15:8 | சுன்னத்து, விருத்தி செய்யும் உறுப்புக்கு சேதம் |
| ஸ்பானியா | 15:24 | ஸ்பெயின் தேசம் |
| திருப்தியடைந்த பின்பு | 15:24 | இளைப்பாறின பின்பு |
| பொருள் சகாயம் | 15:26 | பொருள் உதவி |
| நயவசனிப்பினாலும் | 16:18 | இன் சொல்லாலும், பேச்சுத் திறமையினாலும் |
| இச்சகப் பேச்சினாலும் | 16:18 | முகஸ்துதியினாலும் |
| உக்கிராணக்காரன் | 16:23 | பொக்கிஷத்துக்குப் பொறுப்பாயிருக்கிறவன், பொருளாளர் |
| அடக்கமாயிருந்து | 16:25 | இரகசியமாய் வைக்கப்பட்டு, மறைக்கப்பட்டு |
| அநாதிதேவன் | 16:25 | எப்பொழுதும் வாழும் கடவுள் |

# 1 கொரிந்தியர்

(கொரிந்து - கிரேக்க துறைமுகம்)

| | | |
|---|---|---|
| சீர் பொருந்தியிருக்கவும் | 1:10 | உறுதியாய் இணைந்திருக்கவும் |
| நயவசனமுள்ளதாயிராமல் | 2:5 | கவர்ச்சியாயிராமல் |
| தேறினவர்களுக்குள்ளே | 2:6 | ஆன்மீகத்தில் முதிர்ந்தவர்களுக்குள்ளே |
| நிதானிக்கப்படுகிறவைகளானதால் | 2:14 | அறிந்துக்கொள்ளப்படுகிறவைகள் ஆனதால் |
| பேதகங்களும் | 3:3 | பிரிவினைகளும் |
| ஒன்றாயிருக்கிறார்கள் | 3:8 | ஒன்றுபோல் இருக்கிறார்கள் |
| ஞானியாகும்படிக்கு பைத்தியக்காரனாகக்கடவன் | 3:18 | பரத்திலிருந்து வரும் ஞானத்தைப்பெற தன்னை ஒன்றும் அறியாதவன் என்று எண்ணக்கடவன் |
| தந்திரத்திலே | 3:19 | புத்திக் கூர்மையிலே |
| மனுஷரைக் குறித்து | 3:21 | மனித ஞானத்தைப் பற்றி |
| எல்லாம் உங்களுடையதே | 3:21 | கர்த்தர் உங்களுக்கு வேண்டியதையெல்லாம் கொடுத்திருக்கிறாரே |
| இரகசியங்களின் உக்கிராணக்காரன் | 4:1 | இரகசியங்களை விளக்கிக்கூறும் வேலையாள் |
| நியாய நாளின் | 4:3 | நீதிமன்றத்தின் |
| என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை | 4:3 | என்னைப் பற்றி கவலைப்படவில்லை |
| இறுமாப்பு | 4:6 | பெருமை |
| திருஷ்டாந்தமாக | 4:6 | உதாரணமாக |
| திருப்தியடைந்திருக்கிறீர்களே | 4:8 | உங்களுக்கு வேண்டிய எல்லா ஆன்மீக உணவையும் பெற்றுக் கொண்டதாக நினைக்கிறீர்களே |
| எங்களையல்லாமல் ஆளுகிறீர்களே | 4:8 | நீங்கள் மாத்திரம் ஆளுகை செய்யலாமா |
| நீங்கள் ஆளுகிறவர்களானால் நலமாயிருக்கும் | 4:8 | உண்மையிலே நீங்கள் மாத்திரம் ஆளுகிறவர்களானால் நல்லது (பவுல் கொரிந்தியர் பெருமை பாராட்டலை கடிந்து கொள்ளுகிறார்) |
| அவர்களுடைய பெலத்தையே அறிந்து கொள்வேன் | 4:19 | அவர்களுக்கு தேவபெலன் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளுவேன் |
| பெலத்தினாலே உண்டாயிருக்கிறது | 4:20 | தேவ பெலத்தில் செயல்படுவதிலேயே உண்டாயிருக்கிறது |

| | | |
|---|---|---|
| பிரம்போடு வரவேண்டுமோ? | 4:21 | கடுமையாக நடந்து கொள்ளவேண்டுமோ? |
| தகப்பனுடைய மனைவியை | 5:1 | மாற்றாந்தாயை |
| சொல்லப்படாத | 5:1 | நடக்காத |
| உதாசினனாயாவது | 5:11 | அவதூறு பேசுகிறவனாய் ஆவது |
| தகுதியாயிராது | 6:12 | நன்மை பயக்காது |
| விரதத்துவம் | 7:5 | தன்னடக்கம் |
| விரத்தர் | 7:9 | இச்சைகளை அடக்கக்கூடியவர்கள் |
| வேகிறதைப் பார்க்கிலும் | 7:9 | மோகத்தினால் உருகுவதைப்பார்க்கிலும் |
| காரியம் | 7:19 | முக்கியம் |
| அனுசரித்துக்கொள் | 7:21 | ஏற்றுக்கொள் |
| இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறதே | 7:31 | நாம் அறிந்திருக்கும் இந்த உலகத்தின் அழகு மாறிப்போகும் |
| கர்த்தாக்களும் | 8:5 | ஆண்டவர்களும் |
| தடுக்கல் | 8:9 | இடறல் |
| முத்திரை | 9:2 | அத்தாட்சி |
| சரீர நன்மை | 9:11 | உலகப் பிரகாரமான நன்மை |
| உக்கிராண உத்தியோகம் | 9:17 | பொறுப்பு |
| மேகத்தினாலும் | 10:2 | மேகஸ்தம்பத்தினாலும் |
| சமுத்திரத்தினாலும் | 10:2 | சிவந்த சமுத்திரத்தினாலும் |
| கிறிஸ்துவை | 10:9 | கடவுளை |
| நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் | 10:16 | கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி நாம் கேட்டு குடிக்கிற திருவிருந்து பாத்திரம் |
| விசாரிக்க வேண்டியதில்லை | 10:25 | கேள்வி கேட்க வேண்டியதில்லை |
| இடறலற்றவர்களாயிருங்கள் | 10:33 | இடையூராய் இராதீர்கள் |
| தூதர்களினிமித்தம் | 11:10 | தூதர்கள் சந்தோஷப்படும்படி |
| மார்க்க பேதங்களும் | 11:19 | தவறான உபதேசங்களும் |
| ஒப்புவித்ததை | 11:23 | உபதேசித்ததை |

| | | |
|---|---|---|
| ஏவப்பட்டபடியே | 12:2 | மனம்போன போக்கின்படியே |
| வியாக்கியானம் பண்ணு | 12:10 | அர்த்தம் சொல் |
| தாகந்தீர்க்கப்பட்டோம் | 12:13 | நிரப்பப்பட்டோம் |
| கவலையாயிருக்கும்படிக்கு | 12:25 | அக்கறை காட்டும்படி |
| அற்புதங்களையும் | 12:28 | அற்புதங்களை செய்பவர்களையும் |
| குணமாக்கும் வரங்களையும் | 12:28 | குணமாக்கும் வரங்களைப் பெற்றவர்களையும் |
| ஊழியங்களையும் | 12:28 | மற்றவர்களுக்கு உதவி செய்பவர்களையும் |
| ஆளுகைகளையும் | 12:28 | தலைவர்களையும் |
| பாஷைகளையும் | 12:28 | பலவித பாஷைகளைப் பேசும் வரங்களையும் |
| தற்பொழிவை | 13:5 | சுய நலத்தை |
| விசுவாசம் | 13:13 | நம்பிக்கை |
| நம்பிக்கை | 13:13 | நன் நம்பிக்கை (கடவுளிடம் நம்பிக்கை) |
| மறு பாஷைக்காரராலும் மறு உதடுகளாலும் | 14:21 | நமக்குத் தெரியாத பாஷைகளைப் பேசும் அந்நியர்களாலும் |
| வேதத்தில் | 14:21 | சுருள் ஏட்டில் |
| கலகத்திற்கு | 14:32 | குழப்பத்திற்கு |
| அகாலப்பிறவி போன்ற | 15:8 | கிறிஸ்துவின் ஊழிய காலத்தில் இரட்சிக்கப்படாத, ஆரம்ப அப்போஸ்தல ஊழியத்தில் பங்கு பெறாத, இதற்கெல்லாம் பிந்திப் பிறந்தது போன்ற |
| கெட்டிருப்பார்களே | 15:18 | நித்திய ஜீவனை இழந்திருப்பார்களே |
| முதற்பலனானார் | 15:20 | ஒரு நாள் மீண்டும் உயிர்பெறும் கோடிக்கணக்கான மக்களுக்கு முன்னோடியாக முதல்முதலாக உயிருடன் எழுந்தார் |
| துரைத்தனத்தையும் | 15:24 | ஆட்சியையும் |
| பரிகரித்து | 15:24 | அழித்து |
| மேலும் மரித்தோர்....... மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள் | 15:29 | மரித்தவர்கள் மீண்டும் உயிர்பெறாவிட்டால் மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுவதில் அர்த்தம் இல்லை.மரித்தவர்கள் ஒரு நாள் உயிர்த்தெழுவார்கள் என்று நாம் நம்பினால் ஒழிய, நாம் ஏன் அவர்களுக்காக ஞானஸ்நானம் பெறவேண்டும்? (கொரிந்து சபையில் சிலர் மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெற்றார்கள். பவுல் இதைக் கண்டிக்கிறார்.) |

| | | |
|---|---|---|
| ஏதுவாயிருக்கிறோம் | 15:30 | உள்ளாகிறோம் |
| மனுஷர் வழக்கமாய் | 15:32 | மனிதர் சொல்லுவது போல |
| இனி உண்டாகும் மேனியை | 15:37 | இனி உண்டாகும் உருவை |
| மேனிகளுமுண்டு | 15:40 | உருவங்களும் உண்டு |
| விதைக்கப்படும் | 15:42 | புதைக்கப்படும் |
| மரணமே உன் கூர் எங்கே | 15:55 | சாவே உன் கொடுக்கு எங்கே? (சாவு தோற்றுப் போனது) |
| பாதாளம் | 15:55 | சாவு |
| மரணத்தின் கூர் பாவம் | 15:56 | பாவமே சாவின் கொடுக்கு |
| பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம் | 15:56 | பாவம் சட்டத்துக்கு அதிகாரம் கொடுத்தது. நம்முடைய பாவங்களை நியாயந்தீர்க்க வல்லமையுள்ள சட்டம் இனிமேல் நம்மை நியாயந்தீர்க்காது |

## 2 கொரிந்தியர்

| | | |
|---|---|---|
| திவ்விய உண்மையோடே | 1:12 | கடவுளிடமிருந்து பெற்றநேர்மையோடே |
| இரண்டாந்தரமும் பிரயோஜன முண்டாகும்படி | 1:15 | இரட்டிப்பான ஆசீர்வாதம்கிடைக்கும்படி |
| வீணாக யோசித்தேனோ? ஆம், ஆம் ----- அல்ல, அல்ல ---- மாம்சத்தின்படி யோசிக்கிறேனோ? | 1:17,18 | நான் என் திட்டத்தை மாற்றி விட்டேனோ? முடியாது என்று என் மனதில் வைத்துக்கொண்டு, சரி, பார்க்கலாம் என்று சொல்லும் உலகப்பிரகாரமான மனிதனைப்போல் இருக்கிறேனோ? நாங்கள் சரி என்றால் என்றைக்கும் சரி தான். அதற்கு தேவனே சாட்சி |
| எங்களால் தேவனுக்கு மகிமை உண்டாகும்படி ---- ஆமென் என்றும் இருக்கிறதே | 1:20 | தேவனுடைய வாக்குத்தத்தங்களை எல்லாம் இயேசு நிறைவேற்றுகிறார். இயேசு எவ்வளவு உண்மை உள்ளவர் என்று தேவனுக்கு மகிமை உண்டாகும்படி இதை நாங்கள் பறைசாற்றுகிறோம் |
| நம்மை முத்திரித்து | 1:22 | நம்மேல் தமக்குச் சொந்தம் என்னும் தமது முத்திரையைப் பதித்து |
| அச்சாரத்தையும் | 1:22 | நமது மீட்பை உறுதிப்படுத்தும் ஆவியென்னும் அடையாளத்தையும் |
| உங்களைத் தப்பவிடும்படிக்கே | 1:23 | உங்களைக் கடுமையாகக் கடிந்து கொள்ளாதபடிக்கே |
| கோருகிறேன் | 1:23 | கூப்பிடுகிறேன் |
| துக்கத்துடனே | 2:1 | மனவருத்தத்துடனே |
| துக்கமுண்டாக்கினவன் | 2:5 | ஒருவன் எனக்கு மனவருத்தம் உண்டாக்கினால் |

| | | |
|---|---|---|
| அநேகரால் உண்டான இந்த தண்டனையே போதும் | 2:6 | அவனுடைய குற்றத்தை அநேகர் சுட்டிக்காட்டினீர்கள். இந்த தண்டனையே போதும் |
| அனுப்புவித்துக்கொண்டு | 2:13 | விடைபெற்றுக்கொண்டு |
| நற்கந்தம் | 2:15 | நறுமணம் வீசும் வாசனைத்திரவியம் |
| கலப்பாய் பேசாமல் | 2:17 | ஆதாயம் நாடாமல் |
| துப்புரவாகவும் | 2:17 | நேர்மையாகவும் |
| உபசார நிருபங்களை | 3:1 | சிபாரிசு கடிதங்களை |
| புது உடன்படிக்கையின் | 3:6 | மக்களை மீட்கும் பொருட்டு உண்டான புது உடன்படிக்கையின் |
| எழுத்து கொல்லுகிறது | 3:6 | சட்டங்களுக்கும், பத்து கட்டளைகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும், அல்லது சாவீர்கள் என்று சட்டம் சொல்லுகிறது |
| ஆவியோ | 3:6 | பரிசுத்த ஆவியோ |
| சாவுக்கினமான | 4:11 | சாவுக்குரிய |
| வீடு | 5:1 | உடம்பு |
| நிர்வாணிகளாய் | 5:3 | உறைவிட மற்றவர்களாய் |
| போர்வை தரித்தவர்களாய் | 5:4 | மோட்சம் உடையவர்களாய் |
| நெருக்கி ஏவுகிறது | 5:14 | ஆட்கொள்ளுகிறது |
| ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம் | 5:16 | ஒருவனையும் தோற்றத்தின்படி மதிப்பீடு செய்வதில்லை |
| நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும் | 5:16 | நாங்கள் கிறிஸ்துவையும் எங்களைப்போன்ற ஒரு மனிதன் என்று தப்பிதமாக நினைத்திருந்தாலும் |
| இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம் | 5:16 | இனி ஒருக்காலும் அப்படி நினைப்பதில்லை |
| தேவனுடைய நீதியாகும்படி | 5:21 | தேவனோடு ஒப்புரவாகும்படி |
| திவ்விய பலத்திலும் | 6:7 | கடவுளுடைய வல்லமையிலும் |
| எங்கள் உள்ளம் உங்களைக் குறித்து நெருக்கமடையவில்லை | 6:12 | நாங்கள் உங்களிடம் அன்பு காட்டாமல் இல்லை |
| உங்கள் உள்ளமே எங்களைக் குறித்து நெருக்கமடைந்து இருக்கிறது | 6:12 | நீங்களோ எங்களிடம்அன்பு காட்டவில்லை |
| பூரிப்பாகுங்கள் | 6:13 | உங்கள் இருதயத்தில் எங்களுக்கு இடங்கொடுங்கள் |
| மனஸ்தாபப்பட்டிருந்தும் | 7:8 | வருத்தப்பட்டிருந்தும் |

| | | |
|---|---|---|
| தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்கள் | 7:9 | மனந்திரும்பி தேவனிடம் திரும்பினீர்கள் |
| லௌகீக | 7:10 | உலகப்பிரகாரமான |
| ஜாக்கிரதை | 7:12 | ஆர்வம் |
| அமைந்து | 7:15 | கீழ்ப்படிந்து |
| ஜாக்கிரதையாயிருந்து | 8:17 | கவனமாயிருந்து |
| தெரிந்து ஏற்படுத்தப்பட்டவனாயும் | 8:19 | தேர்ந்தெடுக்கப்பட்டவனாயும் |
| திருஷ்டாந்தப்படுத்துங்கள் | 8:24 | எடுத்துக் காட்டுங்கள் |
| ஈவு | 9:15 | வெகுமதி |
| பரம யோசனையும் | 10:10 | ஆழமான கருத்தும் |
| வந்தெட்டாதவர்களாய் | 10:14 | கிறிஸ்துவைப்பற்றிய செய்தியை உங்களிடம் கொண்டு வராதவர்களாய் |
| அளவுக்கு மிஞ்சிப்போகிறதில்லை | 10:14 | பெருமை பாராட்டுகிறவர்களாய் இருப்பதில்லை |
| உங்களை | 11:2 | தேவபிள்ளைகளாகிய உங்களை |
| நன்றாய் சகித்திருப்பீர்கள் | 11:4 | முழுமையாய் நம்புவீர்கள் |
| கைவசப்படுத்தினாலும் | 11:20 | பயன்படுத்தினாலும் |
| ஒன்றுக்குறைய ---- அடிபட்டேன் | 11:24 | 195 தடவை அடிபட்டேன் |
| நெருக்குகிறது | 11:28 | அழுத்துகிறது |
| நாள்தோறும் நெருக்குகிறது | 11:28 | எந்நாளும் எனக்கு சுமையாயிருக்கிறது |
| சேனைத்தலைவன் | 11:32 | ஆளுனர் |
| காவல் வைத்துக் காத்தான் | 11:32 | காவலாளிகளை ஏற்படுத்தினான் |
| பேசப்படாததும் | 12:3 | பேச முடியாததும் |
| அப்போஸ்தலனுக்குரிய | 12:12 | கிறிஸ்துவின் தூதனுக்குரிய |
| ஊன்றக் கட்டவே | 13:10 | பலமாகக் கட்டவே |
| கண்டிதம் பண்ணாதபடிக்கு | 13:10 | கண்டிப்பாக நடந்து கொள்ளாதபடி |
| நற்சீர் பொருந்துங்கள் | 13:11 | உங்கள் நடத்தையைச் சீர்ப்படுத்துங்கள் |

# கலாத்தியர்

(கிறிஸ்தவ விசுவாசத்தின் மகா சாசனம்)

| | | |
|---|---|---|
| புறங்களில் | 1:21 | பகுதிகளுக்கு |
| எண்ணிக்கையுள்ளவர்களுக்கே | 2:2 | தலைவர்களுக்கே |
| மாயம் பண்ணினார்கள் | 2:13 | வெளிவேடம் போட்டார்கள் |
| புத்தியில்லாத கலாத்தியரே | 3:1 | கலாத்தியர் நியாயப்பிரமாணத்தின்படி வாழ வாஞ்சித்து கிரியையினால் இரட்சிப்பை சம்பாதிக்க விரும்பினார்கள். ஆகையால் புத்தியில்லாத கலாத்தியர் என்று அழைக்கப்பட்டார்கள் |
| விசுவாசக்கேள்வி | 3:2 | கேட்டதை நம்புதல் |
| உபாத்தி | 3:24 | ஆசிரியர் |
| வீட்டு விசாரணைக்காரருக்கும் | 4:2 | வீட்டுக் காரியங்களுக்கு பொறுப்பாயிருக்கிறவர்களுக்கும் |
| காரியக்காரர் | 4:2 | பாதுபாவலர் |
| பயந்திருக்கிறேன் | 4:11 | கவலைப்படுகிறேன் |
| ஆனந்த பாக்கியம் | 4:15 | மகிழ்ச்சி |
| மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள் | 4:26 | மோட்சலோகத்தில் உள்ள எருசலேமோ யூத சட்டங்களுக்குக் கட்டுபட்டவள் அல்ல |
| உப்பப்பண்ணும் | 5:9 | புளிக்கப்பண்ணும் |
| இடறல் | 5:11 | தடை |
| சீர்பொருந்தப்பண்ணுங்கள் | 6:1 | திருத்துங்கள் |
| விசுவாச குடும்பத்தார்களுக்கும் | 6:10 | நம்பிக்கை கொண்டோரின் குடும்பங்களுக்கும் |
| நல்வேஷமாய் காணப்பட | 6:12 | நல்லவர்களாய் நடிக்க |
| வருத்தம் உண்டாக்காதிருப்பானாக | 6:17 | இவைகளைப் பற்றி என்னோடு தர்க்கிக்க வேண்டாம் |
| அச்சடையாளங்களை | 6:17 | இயேசுவினுடைய அடிமை நான் என்று காட்டும் சவுக்கடிகள் மற்றும் காயங்களின் தழும்பை |

# எபேசியர்

| | | |
|---|---|---|
| நியமத்தின்படி | 1:9 | திட்டத்தின்படி |
| அச்சாரமாயிருக்கிறார் | 1:14 | அடையாளமாயிருக்கிறார் |

| | | |
|---|---|---|
| ஈவு | 2:8 | தயவு |
| இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும் | 2:12 | கர்த்தரின் பிள்ளைகளுக்கு எதிரிகளும் |
| இரு திறத்தாரையும் | 2:16 | யூதரையும், பிற இனத்தவரையும் |
| நியமமும் | 3:2 | திட்டமும் |
| அனாதி | 3:9 | ஆரம்பகால |
| துரைத்தனங்களுக்கும் | 3:10 | ஆட்சியாளர்களுக்கும் |
| அனந்த ஞானம் | 3:10 | பல வகைகளில் காணப்படும் ஞானம், பூரண ஞானம் |
| நாமகாரணராகிய | 3:14 | காரண கர்த்தாவாகிய, பிதாவாகிய |
| அனு க்கிரகம் பண்ணவேண்டுமென்று | 3:19 | கொடுக்க வேண்டுமென்று |
| சிறைப்பட்டவர்களை சிறையாக்கி | 4:8 | கிறிஸ்து சாத்தானை ஜெயித்து, வெற்றி வாகை சூடி, மரணபயத்திற்கு அடிமையானவர்களை விடுவித்து, அவர்களை தம்முடைய மக்களாக்கி, உன்னதத்திற்கு ஏறினார் |
| சீர்பொருந்தும் பொருட்டு | 4:12 | முழு நிறைவடையும்படி |
| கணுக்களினாலும் | 4:16 | தசை நார்களினாலும் |
| சத்துவத்தின் வல்லமையிலும் | 6:10 | ஆற்றலிலும் |
| மார்க்கவசம் | 6:14 | மார்புக் கவசம் |
| வாக்கு | 6:20 | வாக்குவரம் |

## பிலிப்பியர்

(சந்தோஷத்தைப்பற்றிய செய்தி

| | | |
|---|---|---|
| கண்காணிகளுக்கும் | 1:1 | மேற்பார்வையாளர்களுக்கும் (பிஷப்) |
| உதவிக்காரருக்கும் | 1:1 | உதவி குருக்களுக்கும் (டீக்கன்) |
| உடன்பட்டவர்களானபடியால் | 1:3 | பங்காளிகளானபடியால் |
| உத்தரவு சொல்லி | 1:7 | போராடி |
| திடப்படுத்திவருகிறதிலும் | 1:7 | நிலைநாட்டுவதிலும் |
| இடறலற்றவர்கள் | 1:11 | குற்றமற்றவர்கள் |
| விரோதத்தினாலும் | 1:15 | போட்டி மனப்பான்மையினாலும் |

| | | |
|---|---|---|
| கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் | 1:21 | நான் வாழ்ந்தால் கிறிஸ்துவுக்காகவே வாழ்வேன். நான் இறந்தால் அது எனக்கு நன்மைதான் |
| நான் தெரிந்து கொள்ள வேண்டியது இன்னதென்று அறியேன் | 1:22 | நான் தெரிந்து கொள்ளவேண்டியது சாவா, வாழ்வா என்று அறியேன் |
| வர்த்தனைக்காகவும் | 1:26 | அபிவருத்திக்காகவும் |
| மருளாதிருக்கிறீர்கள் | 1:27 | கலங்காதிருக்கிறீர்கள் |
| வாதினாலாவது | 2:3 | தன்னலம் கலந்த பேராசையினாலாவது |
| கொள்ளையாடின பொருளாக | 2:6 | உரிமையாக |
| நாய்களுக்கு | 3:2 | தீமை செய்யும் மனிதராகிய நாய்களுக்கு |
| சுன்னத்துக்காரர் | 3:2 | மீட்கப்பட கண்டிப்பாக விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்பவர்கள் |
| மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்காமல் | 3:4 | மாம்சத்தில் செய்யப்படும் சடங்கில் (விருத்தசேதனத்தில்) நம்பிக்கை வைக்காமல் |
| பின்னானவைகளை மறந்து | 3:13 | கடந்ததை மறந்து |
| அடைந்தும் | 4:9 | பெற்றும் |
| என்னை விசாரிப்பதற்கு | 4:10 | என்னில் அக்கறை கொள்ள |
| மனமலர்ந்தபடியினால் | 4:10 | விரும்பினதினாலே |
| குறைச்சலினால் | 4:11 | குறைவினால் |
| உடன்பட்டது | 4:14 | பங்கு பெற்றது |
| உடன்பட்டதேயல்லாமல் | 4:15 | உதவினீர்களேயல்லாமல் |
| உபகாரத்தை | 4:17 | நன்கொடையை |

## கொலோசெயர்

| | | |
|---|---|---|
| அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும் | 1:15 | கண்ணுக்குப் புலப்படாத தேவனுடைய சாயலும் |
| கர்த்தத்துவங்களானாலும் | 1:16 | விண்ணிலுள்ள அதிகாரங்களானாலும் |
| துரைத்தனத்தங்களானாலும் | 1:16 | பூமியிலுள்ள அதிகாரங்களானாலும் |
| அதிகாரங்களானாலும் | 1:16 | அரசாட்சிகளானாலும் |

| | | |
|---|---|---|
| தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் | 1:20 | தமக்குள் கொண்டு வரவும் |
| குறைவானதை | 1:24 | மீதியானதை |
| தேறினவனாக | 1:28 | முதிர்ச்சி அடைந்தவனாக |
| நய வசனிப்பினாலும் | 2:4 | திறமையான பேச்சினாலும் |
| உலக வழிபாடுகளையும் | 2:8 | உலக தத்துவங்களையும் |
| தேவத்துவத்தின் | 2:9 | இறைத்தன்மையின் |
| கையெழுத்தைக் குலைத்து | 2:14 | மோசேயின் சட்டத்துக்குக் கீழ்ப்படியாமை என்ற குற்றச்சாட்டுகளின் பட்டியலை அழித்து |
| வெளியரங்கமான கோலமாக்கி | 2:15 | அவைகளை வெளிப்படையாய் இகழ்ச்சிக்குள்ளாக்கி |
| மாதப்பிறப்பையும் | 2:16 | அமாவாசையையும் |
| முன்னிலையாக | 3:17 | மூலமாக |
| சரீர முழுவதையும் ஆதரிக்கிற தலையை பற்றிக்கொள்ளாமல் | 3:18 | கிறிஸ்துவின் சரீரமாகிய நாமெல்லாரும் நமக்குத் தலையாய் நம்மை ஆதரிக்கிற கிறிஸ்துவை பற்றிக் கொள்ளாமல் |
| திடனற்றுப் போகாதபடி | 3:21 | மனந்தளர்ந்து போகாதபடி |
| வேலைக்காரருக்கு | 4:1 | அடிமைகளுக்கு |
| இரகசியத்தை | 4:3 | மறைபொருளை |
| வசனம் | 4:6 | சம்பாஷனை, பேச்சு |
| கிருபை பொருந்தினதாயும் | 4:6 | இனியதாயும் |
| உப்பால் சாரமேறினதாயும் | 4:6 | சுவையுடையதாயும் |

# 1 தெசலோனிக்கேயர்

(தெசலோனிக்கேயா கிரீஸில் உள்ளது)

| | | |
|---|---|---|
| உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் | 1:9 | உங்களிடத்தில் நாங்கள் பெற்ற வரவேற்பு |
| பிரவேசம் | 1:9 | வரவேற்பு |
| பிரவேசித்தது | 2:1 | வந்தது |
| அத்தேனே | 3:1 | ஏதென்ஸ் |
| கனமாயும் | 4:5 | மேன்மையுள்ளதாயும் |

| | | |
|---|---|---|
| அமைதலுள்ளவர்களாய் இருக்கும்படி | 4:12 | அமைதியான வாழ்க்கை வாழ்கிறவர்களாய் இருக்கும்படி |
| தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம் | 5:6 | மனதையடக்கி ஆள்பவர்களாய் இருக்கக்கடவோம் |
| விசாரணை செய்கிறவர்களாயிருந்து | 5:12 | உங்களைப் போதித்து, வழி நடத்துகிறவர்களாய் இருந்து |

## 2 தெசலோனிக்கேயர்

| | | |
|---|---|---|
| கேட்டின் மகனாகிய | 2:3 | நெறி கெட்டவனாகிய |

## 1 தீமோத்தேயு

| | | |
|---|---|---|
| அடங்காதவர்களுக்கும் | 1:9 | கட்டுப்பாட்டுக்கு அடங்காதவர்களுக்கும் |
| அசுத்தருக்கும் | 1:9 | தூய்மையற்றோருக்கும் |
| சீர்கெட்டவர்களுக்கும் | 1:9 | முற்றிலும் பயபக்தியற்றவர்களுக்கும் |
| நித்தியானந்த தேவன் | 1:11 | பேரின்ப கடவுள் |
| ஆரோக்கியமான | 1:11 | மகிமையான, நலந்தரும் |
| கண்காணிப்பை விரும்புகிறவன் | 3:1 | சபையின் தலைமையை விரும்புகிறவன் |
| நூதன சீஷன் | 3:6 | புதியதாய் விசுவாசத்திற்குள் வந்தவன் |
| புறம்பானவர்களால் | 3:7 | திருச்சபைக்கு வெளியே உள்ளவர்களால் |
| உதவிக்காரரும் | 3:8 | உதவி குருக்களும் |
| விசுவாசத்தின் இரகசியத்தை | 3:9 | அவர்கள் விசுவாசத்தின் ஊற்றும் மறைபொருளுமாய் இருக்கும் கிறிஸ்துவை |
| சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்கிறவர்களாயும் இருக்கவேண்டும் | 3:9 | உண்மையாய், முழுமனதோடு ஏற்றுக்கொண்டவர்களாய் இருக்கவேண்டும் |
| யாவரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே | 3:16 | சந்தேகத்துக்கு இடமில்லாமல் |
| விளங்கப்பட்டார் | 3:16 | நிரூபிக்கப்பட்டார் |
| மனச்சாட்சியில் சூடுண்ட | 4:1 | மனச்சாட்சி மழுங்கிப்போன |
| விசுவாசத்தை | 4:1 | கிறிஸ்துவின் உபதேசங்களை |
| வீணலுவற்காரிகளாயும் | 5:13 | தேவையற்ற காரியங்களில் தலையிடுபவர்களாயும் |

| | | |
|---|---|---|
| நோய் கொண்டவனுமாய் இருக்கிறான் | 6:4 | கேடு விளைவிக்கும் ஆர்வம் கொண்டவனுமாயிருக்கிறான் |
| நல்ல அறிக்கை பண்ணினவனுமாய் | 6:12 | விசுவாசத்தை சிறப்பாக அறிக்கை பண்ணினவனுமாய் |
| பிரசன்னமாகும்வரை | 6:13 | தோன்றும் வரை |
| ஆதாரத்தை | 6:19 | அடித்தளத்தை |

## 2 தீமோத்தேயு

| | | |
|---|---|---|
| வெளியரங்கமாக்கினார் | 1:10 | வெளிப்படுத்தினார் |
| இளைப்பாற்றினாள் | 1:16 | ஆகாரங்கொடுத்து உற்சாகப்படுத்தினாள் |
| சேவகமெழுதிக் கொண்டவனுக்கு | 2:4 | தளபதிக்கு |
| வார்த்தை | 2:11 | செய்தி |
| சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாயும் | 2:15 | கடவுளுடைய வார்த்தையை சரியாகப் போதிக்கிறவனாயும் |
| அரிபிளவை | 2:17 | சதை அழுகல் நோய் |
| முத்திரையாயிருக்கிறது | 2:19 | ஆணித்தரமாக எழுதப்பட்டிருக்கிறது |
| அயுக்தமுமான | 2:23 | முட்டாள்தனமான |
| ஜாக்கிரதையாய் | 4:2 | ஆர்வமுடன், ஆவலுடன் |
| செவித்தினவுள்ளவர்களாகி | 4:3 | காதுகள் எதைக்கேட்க துடிக்கின்றதோ அதையே விரும்பி, காதுக்கு இன்பம் தேடுகிறவர்களாகி |
| சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன் | 4:17 | சிங்கங்களின் கூட்டுக்குள் நான் எறியப்படாமல், கர்த்தர் என்னைக் காப்பாற்றினார் |

## தீத்து

| | | |
|---|---|---|
| சுத்தமுள்ளவர்களுக்கு | 1:15 | விசுவாசத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு |
| ஆகாதவர்கள் | 1:16 | தகுதியற்றவர்கள் |
| விகற்பமில்லாதவனும் | 2:8 | ஞானமுள்ளவனும் |

| | | |
|---|---|---|
| ஆனந்த பாக்கியத்துக்கும் | 2:13 | ஆசீர்வாதமான நாளுக்கும் |
| மறு ஜென்ம முழுக்கினாலும் | 3:5 | புதுப் பிறப்பினாலும் |
| வேதப்புரட்டன் | 3:10 | சபையில் பிரிவினையை உண்டாக்குகிறவன் |
| நியாய சாஸ்திரி | 3:13 | வழக்கறிஞன் |

## பிலேமோன்

| | | |
|---|---|---|
| இளைப்பாறினபடியால் | 7- | மனமகிழ்ச்சி அடைந்தபடியால் |
| உங்களுக்கு அனுக்கிரகிக்கப்படுவேன் | 22- | உங்களை சந்திக்க மீண்டும் அனுப்பப்படுவேன் |

## எபிரெயர்

(யூத கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது)

| | | |
|---|---|---|
| பங்கு பங்காகவும் | 1:1 | கொஞ்சம் கொஞ்சமாகவும் |
| வகை வகையாகவும் | 1:1 | பல விதமாகவும் |
| திருவுளம் பற்றின | 1:1 | பேசின |
| முதற்பேறானவரை | 1:6 | மைந்தனை |
| குமாரனை நோக்கி; தேவனே | 1:8 | (தெய்வீக முறைப்படி குமாரனுக்கு பிதா தேவனாகவும், பிதாவுக்கு குமாரன் தேவனாகவும் இருக்கிறார்) |
| அதை அவர் தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை | 2:5 | இனிவரும் உ லகம் தூதர்களால் அடக்கி ஆளப்படுவதில்லை |
| ஒரு இடத்திலே | 2:6 | சங்கீத புத்தகம் 8:4ல் |
| உத்தரித்ததினிமித்தம் | 2:9 | சகித்ததினிமித்தம் |
| பரிசுத்தம் செய்கிறவரும் | 2:11 | இயேசு கிறிஸ்துவும் |
| ஒருவராலே | 2:11 | பிதாவினாலே |
| அவருடைய வீட்டுக்கு மேற்பட்டவரான | 3:6 | கடவுளுடைய குடும்பத்தாருக்கு மேற்பட்டவரான |
| அவருடைய வீடாயிருப்போம் | 3:6 | அவருடைய குடும்பமாயிருப்போம் |
| என்னுடைய இளைப்பாறுதலில் | 3:11 | வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இளைப்பாறுதலின் நாட்டில் |
| வகையறுக்கிறதாயும் | 4:12 | ஆராய்ந்து அறிவதாயும் |
| பூரணரான பின்பு | 5:9 | முழு நிறைவு அடைந்தபின்பு |

| | | |
|---|---|---|
| கேள்வியில் மந்தமுள்ளவர் களானபடியால் | 5:11 | புரிந்துகொள்வதற்கு கஷ்டப்படுபவர்கள் ஆனபடியால் |
| ஞானேந்திரியங்கள் | 5:14 | அறிவும் ஆற்றலும் |
| பூரண வயதுள்ளவர்கள் | 5:14 | முதிர்ச்சி அடைந்தோர் |
| மூல உபதேச வசனங்கள் | 6:1 | அடிப்படை போதனைகள் |
| பரம ஈவை | 6:4 | மோட்சத்தின் நன்மைகளை |
| ஆலோசனையின் மாறாத நிச்சயத்தை | 6:17 | திட்டத்தின் மாறாத தன்மையை |
| நிலையும் | 6:19 | நிலையானதும் |
| உறுதியும் | 6:19 | உறுதியானதும் |
| திரைக்குள்ளாகப் போகிறதுமான | 6:19 | மோட்சத்தின் பரிசுத்த திரைகளை ஊடுருவிப் போகிறதுமான |
| முன்னோடினவராகிய | 6:20 | நமக்கு முன்னோடியான |
| மெல்கிசேதேக்கு | 7:1 | பரிசுத்த ஆவியானவருக்கு நிழலாட்டமானவர் |
| சாலேமின் ராஜா | 7:1 | சமாதானத்துக்கு ராஜா (சாலேம் பட்டணத்துக்கு ராஜா) |
| கொள்ளையிடப்பட்ட பொருட்களில் | 7:4 | போரில் கைப்பற்றிய பொருட்களில் |
| அரையிலிருந்து | 7:5 | மரபிலிருந்து, சந்ததியிலிருந்து |
| பிழைத்திருக்கிறான் என்று சாட்சி பெற்றவன் | 7:8 | வாழ்பவர் என்று சான்று பெற்றவர் |
| லேவியானவன் | 7:9 | பத்தில் ஒரு பங்கு வாங்கும் லேவியும் (யூதருள் ஆசாரியராயிருந்த -வர்களுக்குமூதாதையான லேவியும்) (ஆசாரியர்கள் மக்கள் சம்பாத்தியத்தில் பத்தில் ஒரு பங்கைப் பெற்றார்கள். ஆகையால் ஆபிரகாம் மெல்கிசேதேக்கு தசமபாகம் செலுத்தினபோது, லேவியும் மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் செலுத்தினான் என்று சொல்லலாம்.) |
| தன் தகப்பனுடைய அரையிலிருந்த படியால் | 7:9 | தன் மூதாதையாகிய ஆபிரகாமுக்குள் இருந்தபடியால், பிறக்கவில்லை என்பதால் |
| மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல் | 7:16 | மனித இயல்புக்கு ஏற்ப லேவி கோத்திரத்தார் ஆசாரியராய் இருப்பார்கள் என்ற கட்டளைப்படி ஆசாரியராகாமல் |
| மெல்கிசேதேக்கின் முறைமையின்படி | 7:17 | முடிவில்லா வாழ்க்கை உள்ள மெல்கிசேதேக் ஸ்தானத்தில் என்றென்றைக்கும் புதிய தலைமை ஆசாரியராயிருக்கிறீர் |

| | | |
|---|---|---|
| என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக | 7:17 | சங்கீதம் 110:4 இல் சொல்லியபடி |
| முந்தின கட்டளை | 7:18 | மோசேயின் கட்டளை |
| பூரணப்படுத்தவில்லை | 7:19 | ஒருவனையும் கடவுளுக்கு ஏற்புடையவன் ஆக்கவில்லை |
| ...அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது | 7:19 | ..... அதிக நன்மையான நம்பிக்கையைக் கொடுக்கும் கிறிஸ்து நம்மை கர்த்தருக்கு உகந்தவராக்குகிறார் |
| பிணையாளியானார் | 7:22 | உறுதிப்படுத்துபவர் ஆனார் |
| ஆசாரியத்துவமுள்ளவராய் இருக்கிறார் | 7:24 | குருத்துவப் பணியை உடையவராய் இருக்கிறார் |
| பாவிகளுக்கு விலகினவரும் | 7:26 | பாவிகளிடமிருந்து பிரித்து எடுக்கப்பட்டவரும் |
| ஆணையோடே விளங்கிய வசனமோ | 7:28 | ஆணையிட்டு கூறப்பட்ட வாக்குத்தத்தமோ |
| பூரணரான குமாரனை | 7:28 | பரிசுத்தமாக்கப்பட்ட குமாரனை, குறைவற்ற குமாரனை |
| விசேஷித்த உடன்படிக்கைக்கு | 8:6 | புது உடன்படிக்கைக்கு |
| மத்தியஸ்தராயிருக்கிறாரோ | 8:6 | உறுதிப்படுத்துகிறவராயிருக்கிறாரோ |
| முதலாம் கூடாரத்தில் | 9:6 | கூடாரத்தின் முதல் பகுதியிலே |
| இரண்டாம் கூடாரத்திலே | 9:7 | கூடாரத்தின் இரண்டாம் பகுதியிலே |
| பூரணப்படுத்தக் கூடாதவைகளாம் | 9:9 | சுத்திகரிக்கக் கூடாதவைகளாம் (9:13 சாம்பற் புதன்கிழமையில் நெற்றியில் சாம்பல் பூசும் வழக்கம் இதனால் உண்டானது) |
| சிவப்பான ஆட்டு மயிரோடும் | 9:19 | சிவப்பான கம்பளி நூலோடும் |
| தெளிக்கப்பட்ட இருதயம் | 10:22 | கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்பட்ட இருதயம் |
| விரோதிகளை | 10:27 | கடவுளை எதிர்ப்பவர்களை |
| பிரகாசமாக்கப்பட்ட | 10:31 | ஞானமடைந்த |
| ஈடேற | 10:39 | முன்னேற |
| நோவா ---- விசுவாசத்தினால் உண்டாகும் நீதிக்கு சுதந்தரவாளியானான் | 11:7 | விசுவாசத்தினால் நோவா கர்த்தருக்கு உகந்தவனான் |
| பாவனையாகத் திரும்ப பெற்றுக்கொண்டான் | 11:19 | திரும்பவும் பெற்றுக்கொண்டான் என்று ஒரு விதத்தில் சொல்லலாம் |
| வாளால் அறுக்கப்பட்டார்கள் | 11:37 | ஏசாயா வாளால் அறுக்கப்பட்டதாக தால்மட் பாரம்பரியம் சொல்லுகிறது |

| | | |
|---|---|---|
| பரீட்சை பார்க்கப்பட்டார்கள் | 11:37 | தங்கள் விசுவாசத்தை மறுதலித்தால் விடுவிக்கப்படுவார்கள் என்று சொல்லியும் விசுவாசத்தில் உறுதியாயிருந்தார்கள் |
| பாத்திரமாயிருக்கவில்லை: | 11:38 | தகுந்ததாய் இருக்கவில்லை |
| அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடி | 11:40 | ஏனென்றால் நம்மோடு அவர்கள் நிறைவுபெறும்படி |
| விபரீதங்களை | 12:3 | எதிர்ப்புகளை, அவமதிப்புகளை, விரோதங்களை |
| ஆவிகளின் பிதா | 12:9 | ஆன்மீகப் பிரகாரமான தந்தை |
| நீதியாகிய சமாதானம் | 12:11 | நேர்மையான வாழ்வின் மூலம் கிடைக்கும் சமாதானம் |
| நெகிழ்ந்த கைகளையும் | 12:12 | பலம் இழந்த கைகளையும் |
| தளர்ந்த முழங்கால்களையும் | 12:12 | தள்ளாடும் முழங்கால்களையும் |
| தீட்டுப்படாதபடிக்கும் | 12:15 | கெட்டுப் போகாதபடிக்கும் |
| சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும் | 12:23 | எண்ணிலடங்கா தேவதூதர்களின் கூட்டத்திற்கும் |
| பூமியிலே பேசினவருக்கு | 12:25 | மோசேக்கு |
| விலகினவர்கள் | 12:25 | இஸ்ரவேலர் |
| அப்பொழுது | 12:26 | சீனாய் மலையிலிருந்து |
| அசைவுள்ளவைகள் | 12:27 | பூமியிலுள்ளவைகள் |
| பரம எருசலேம் | 12:32 | விண்ணுலகம் |
| போஜன பதார்த்தங்களில் முயற்சி செய்கிறவர்கள் | 13:9 | இவைகளை உண்ணலாம், இவைகளை உண்ணக்கூடாது என்ற உணவு விதிகளைக் கடைப்பிடிக்கிறவர்கள் |
| சீர்பொருந்தினவர்களாக்குவாராக | 13:21 | ஸ்திரப்படுத்துவாராக |

## யாக்கோபு

(உலகெங்கும் சிதறுண்டு வாழும் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது)

| | | |
|---|---|---|
| தேவன் பொல்லாங்கினால் சோதிக்கிறவரல்ல | 1:13 | தேவனை ஒருபொழுதும் தீமை சோதிக்கமுடியாது |
| சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை | 1:25 | பாவத்தினின்று நிறைவான விடுதலை அளிக்கும் கடவுளுடைய சட்டத்தை |
| உற்றுப்பார்த்து | 1:25 | ஆராய்ந்து |

| | | |
|---|---|---|
| பட்சபாதத்தோடே பற்றிக் கொள்ளாதிருப்போமாக | 2:1 | ஆள்பார்த்து ஒருவனை ஒருவிதமாகவும் இன்னொருவனை வேறுவிதமாகவும் நடத்தாதிருப்போமாக |
| பேதகம் பண்ணி | 2:4 | பாரபட்சம் காட்டி |
| நிதானிக்கிறவர்களாய் இருப்பீர்களல்லவா | 2:4 | முடிவு எடுக்கிறவர்களாய் இருப்பீர்கள் அல்லவா |
| ராஜரீகப்பிரமாணம் | 2:8 | தேவனுடைய ராஜ்யத்தின் சட்டம் |
| தீர்க்கப்படுவீர்கள் | 2:9 | நியாயந்தீர்க்கப்படுவீர்கள் |
| மேன்மை பாராட்டும் | 2:13 | மேன்மை பாராட்டப்படும் |
| கிரியைகளினாலே | 2:18 | நற்செயல்களினாலே |
| முயற்சி செய்து | 2:22 | சேர்ந்து உழைத்து |
| தூதர்களை | 2:25 | வேவுகாரர்களை |
| ஆயுள் சக்கரத்தை | 3:6 | ஆயுள் முழுவதையும் |
| சத்தியத்திற்கு விரோதமாய் | 3:14 | உண்மைக்கு எதிராக |
| பெருமை பாராட்டாதிருங்கள் | 3:14 | ஞானிகள் என்று பெருமை பாராட்டாதிருங்கள் |
| செலவழிக்க வேண்டுமென்று | 4:3 | செய்யவேண்டுமென்று |
| நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார் | 4:5 | நம்மை மிகுந்த ஆவலுடன் கவனிக்கிறார் |
| வீம்புகளில் | 4:16 | பெருமை பாராட்டுதலில் |
| நிர்பந்தங்கள் | 5:1 | துன்பங்கள் |
| பொட்டரித்துப் போயின | 5:2 | பூச்சிகளால் கெட்டுப் போயின |
| கடைசி நாட்களிலே பொக்கிஷத்தை சேர்த்தீர்கள் | 5:3 | நியாயத்தீர்ப்பு நாளில் பெற்றுக்கொள்ள இதையா சேர்த்து வைத்தீர்கள் |
| சம்பிரமமாய் | 5:5 | ஆடம்பரமாய் |

## 1 பேதுரு

(சின்ன ஆசியாவில் உள்ள கிறிஸ்தவ சபைகளுக்கு எழுதப்பட்டது)

| | | |
|---|---|---|
| பரதேசிகளுக்கு | 1:2 | உலகத்திலே அந்நியராக எண்ணப்பட்டவர்களுக்கு |
| ஜீவனுள்ள நம்பிக்கை | 1:4 | நித்திய வாழ்வை சுதந்தரிப்போம் என்ற நம்பிக்கை |
| உற்றுப்பார்க்க | 1:12 | அறிந்து கொள்ள |

| | | |
|---|---|---|
| மூலைக்கல் | 2:6 | அஸ்திபாரம் (கிறிஸ்து) |
| சீயோனில் வைக்கிறேன் | 2:6 | திருச்சபையில் வைக்கிறேன் |
| ராஜரீக | 2:9 | அரசரின் |
| சந்திப்பின் நாளிலே | 2:12 | கடவுளை சந்திக்கும் நாளிலே |
| சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் | 2:16 | மோசேயின் சட்டத்திலிருந்து விடுதலைபெற்றவர்களாக இருந்தும் |
| துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல் | 2:16 | துர்க்குணத்தை மறைப்பதற்கு உபயோகிக்காமல் |
| பிரீதியாயிருக்கும் | 2:19 | உகந்ததாயிருக்கும் |
| நியாயமாய் தீர்ப்புச்செய்கிறவருக்கு | 2:23 | கடவுளுக்கு |
| கண்காணி | 2:25 | மேற்பார்வையாளர், அதிகாரி |
| பூர்வத்தில் | 3:5 | முற்காலத்தில் |
| கனத்தைச் செய்யுங்கள் | 3:7 | மதிப்பைக் கொடுங்கள் |
| உதாசனத்துக்கு | 3:9 | சபித்தலுக்கு |
| பரிசுத்தம் பண்ணுங்கள் | 3:15 | போற்றுங்கள் |
| அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக | 3:18 | அநீதியுள்ளவர்களுக்காக |
| ஒப்பனையாக | 3:21 | அடையாளமாக |
| அப்படிப்பட்ட சிந்தையை | 4:1 | பாடுபடுதலை |
| ஈவுகளை | 4:10 | நன்மைகளை |
| பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து | 4:12 | பாடுபடுதலைக் குறித்து |
| தேவனுடைய வீட்டில் | 4:17 | கடவுளுடைய சொந்த பிள்ளைகளிடத்தில் |
| கண்காணிப்பு செய்யுங்கள் | 5:3 | கவனம் செலுத்துங்கள் |
| விசாரிக்கிறவர் | 5:7 | அக்கறை கொண்டுள்ளவர் |
| பாபிலோனிலுள்ள சபையும் | 5:13 | (அக்கால கிறிஸ்தவர்கள் ரோமை பாபிலோனுக்கு ஒப்பிட்டார்கள்) ரோமாபுரியிலுள்ள சபையும் |

## 2 பேதுரு

| | | |
|---|---|---|
| திவ்விய | 1:3 | தெய்வீக |
| காருணியத்தினாலும் | 1:3 | தயவினாலும் |
| கண் சொருகிப்போன | 1:9 | கிட்டப் பார்வையுள்ள |

| | | |
|---|---|---|
| கனத்தையும் | 1:17 | மகிமையையும் |
| விடிவெள்ளி | 1:19 | கிறிஸ்து |
| முந்தி | 1:20 | முதலாவது |
| கர்த்தத்துவத்தை | 2:10 | கடவுளுடைய அதிகாரத்தை |
| மகத்துவங்களை | 2:10 | காணப்படாத உலகத்தில் உள்ள மேன்மைகளை |
| தூஷணமாய் | 2:11 | அவமதித்து |
| விருந்துண்கையில் | 2:13 | கிறிஸ்தவ அன்பின் விருந்தில் பங்கெடுக்கையில் |
| தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள் | 2:13 | உல்லாசமாய் வாழும் அவர்கள் நல்லவர்கள் போல் நடித்து உங்களை ஏமாற்றுகிறார்கள் |
| நினைப்பூட்டி எழுப்புகிறேன் | 3:2 | தூண்டி எழுப்புகிறேன் |
| பூதங்கள் | 3:10 | பஞ்ச பூதங்கள் |

# 1 யோவான்

| | | |
|---|---|---|
| நாம் பாவஞ்செய்யவில்லை என்போமானால், | 1:10 | கர்த்தர், நாம் எல்லாரும் பாவிகள் என்று சொல்லியிருக்க நாம் பாவஞ்செய்யவில்லை என்று சொல்லுவோமாகில், |
| நாம் அவரைப் பொய்யராக்குகிற வர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது | 1:10 | நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாக இருப்போம். அவருடைய வார்த்தையை நாம் நம்பவில்லை என்பது போலாகும் |
| என் பிள்ளைகளே | 2:1 | என் சபையின் மக்களே |
| கிருபாதாரபலி | 2:2 | பாவப்பரிகார பலி |
| அந்திக்கிறிஸ்து | 2:18 | எதிர்க்கிறிஸ்து, கிறிஸ்துவை எதிர்ப்பவன் |
| நிச்சயப்படுத்திக் கொள்ளலாம் | 3:19 | சுத்திகரித்துக் கொள்ளலாம் |
| ஆவியில் | 4:13 | ஆவியை |
| தேவனால் பிறந்திருக்கிறான் | 5:1 | கடவுளின் பிள்ளையாயிருக்கிறான் |
| ஆவி | 5:8 | நம்முடைய இருதயத்தில் பேசும் பரிசுத்த ஆவி |
| ஜலம் | 5:8 | கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தில் விண்ணிலிருந்து கேட்ட சத்தம் |
| இரத்தம் | 5:8 | கிறிஸ்துவின் மரணம் சமீபித்தபோது மறுரூபமலையில் விண்ணிலிருந்து கேட்கப்பட்ட சத்தம் |
| தைரியம் | 5:14 | உறுதியான நம்பிக்கை |

## 2 யோவான்

| | | |
|---|---|---|
| தெரிந்துகொள்ளப் பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் | 2 | பிரியமான சபைக்கும் |
| கொண்டு வராமலிருந்தால் | 10 | ஏற்காவிட்டால் |
| உம்முடைய சகோதரியின் பிள்ளைகள் | 13 | மற்ற சபையின் பிள்ளைகள், அம்மானாக்கும் : 2 சபைக்கும்; அவளுடைய பிள்ளைகளுக்கும்; 2 மற்றொரு சபைக்கும் |

## 3 யோவான்

(எல்லா கிறிஸ்தவர்களுக்கும் எழுதப்பட்டது)

| | | |
|---|---|---|
| தேவனுக்கு முன்பாக பாத்திரமானபடி | 6 | கடவுளுக்குப் பிரியமானபடி |
| எங்களை ஏற்றுக்கொள்ளவில்லை | 9 | நாங்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ளவில்லை |

## யூதா

(எல்லா கிறிஸ்தவர்களுக்கும் எழுதப்பட்டது)

| | | |
|---|---|---|
| ஒரு விசை | 3 | எல்லாக் காலத்துக்குமென ஒரே தரம் |
| சொப்பனக்காரராகிய | 8 | பொய்க் காட்சியாளர்களாகிய |
| கோராகு | 11 | தாத்தான், அபிராமோடு சேர்ந்து மோசேயையும் ஆரோனையும் எதிர்த்தவன் (எண். 16:1 - 35) |
| தற்பொழிவுக்காக | 16 | சுய நலனுக்காக |

## வெளிப்படுத்தல்

| | | |
|---|---|---|
| ஆசியாவிலுள்ள | 1:4 | சின்ன ஆசியாவிலுள்ள |
| திருவுளம் பற்றுகிறார் | 1:8 | சொல்லுகிறார் |
| அல்பாவும் ஒமேகாவும் | 1:8 | ஆரம்பமும் முடிவும் (கிரேக்க எழுத்துக்களில் முதலாம், கடைசி எழுத்துக்கள்) |
| பத்மு தீவு | 1:9 | இது ஏஜியன் கடலில் உள்ள பாறைகள் நிறைந்த தீவு |
| கர்த்தருடைய நாளில் | 1:10 | ஓய்வு நாளில் |
| நிலையங்கி | 1:13 | பாதம் வரை உள்ள அங்கி |

| | | |
|---|---|---|
| நிக்கொலாய் மதஸ்தர் | 2:6 | சீர்கேடான வாழ்க்கை நடத்தினார்கள், சிலை வணக்கத்தில் ஈடுபட்டனர், இஸ்ரவேலரை மாம்ச இச்சைகளில் விழப்பண்ணின பிலேயாமுடைய போதனையைப் பின்பற்றினவர்கள் |
| இரண்டாம் மரணம் | 2;11 | முதல் மரணம் உடலைவிட்டு உயிர்பிரிவது) இரண்டாம் மரணம் நித்திய தண்டனை |
| ஆழங்கள் | 2:24 | இரகசியங்கள் |
| கைக்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு | 2:26 | கைக்கொள்ளுகிறவர்கள் எவர்களோ அவர்களுக்கு |
| அவன் | 2:27 | அவர்கள் |
| ஆளுவான் | 2:27 | ஆளுவார்கள் |
| விடிவெள்ளி நட்சத்திரம் | 2:28 | கிறிஸ்து (22:16 இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று என்று அறிவிக்கும் விடிவெள்ளி) |
| திறந்த வாசலை | 3:8 | இயேசுவின் பிரசன்னத்தை அறிந்து கொள்ளும் வாசலை |
| புதிய எருசலேமின் நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன் | 3:12 | அவன் கர்த்தரின் நகரத்தின் பிரஜையாவான் |
| ஆமென் என்பவர் | 3:14 | இயேசு கிறிஸ்து, நம்பிக்கைக்குரியவர் |
| கலிக்கம் | 3:18 | மருந்து |
| பதினாயிரம் பதினாயிரமாகவும் ஆயிரமாகவும் இருந்தது | 5:11 | கோடிக்கணக்காயிருந்தது |

6ம் அதிகாரம் - இங்கு சொல்லப்பட்ட குதிரைகளின் மேல் ஏறியிருந்தவர்கள் (யுத்தம், சர்வ குழப்பம், பஞ்சம், சாவு) உலகம் எப்படி முடிவடையும் என்பதை எடுத்துக்காட்டுபவர்கள் போல் காணப்படுகிறார்கள்

| | | |
|---|---|---|
| இரவிலும் அப்படியேயாயிற்று | 8:12 | இரவும் மிகவும் இருட்டாயிற்று |
| ஒரு தூதன் | 8:13 | ஒரு கழுகு |
| ஒருமணி --- ஆயத்தமாக்கப் பட்டிருந்த நான்கு தூதர்கள் | 9:15 | குறிக்கப்பட்டிருந்த ஆண்டு, மாதம், நாள் மணிக்காக ஆயத்தமாக்கப்பட்டிருந்த நான்கு தூதர்கள் |
| இனி காலம் செல்லாது | 10:6 | இனி காலதாமதம் ஆகாது |
| மகா நகரம் | 11:8 | எருசலேம் |
| சூரியனை ஆடையாக அணிந்திருந்த பெண் | 12:1 | புதிய இஸ்ரவேல் ஆகிய திருச்சபையைக் குறிக்கிறது |
| வலு சர்ப்பம் | 12:4 | ஏரோது (பிசாசு) |

| | | |
|---|---|---|
| ஒரு மிருகம் | 13:1 | கிறிஸ்தவர்களை துன்புறுத்துபவர்கள் |
| ஆயிரத்தறுனூரு ஸ்தாதி | 14:20 | 300 கிலோ மீட்டர் (180 மைல்) |
| குதிரைகளின் கடிவாளங்கள் | 14:20 | கடிவாளங்கள் உயரத்திற்கு (2 மீட்டர்) |
| அர்மகெதோன் | 16:16 | மெகிதோ மலை (நியாயாதி.5:19; 2 இராஜா. 23:29,30) |
| தாலந்து நிறையான பெரிய கல்மழை | 16:21 | ஒவ்வொன்றும் 34 கிலோ எடையுள்ள கல்கள் கல்மழையாக விழுந்தன |
| மகா வேசி | 17:1 | கிறிஸ்தவர்களை துன்புறுத்தும் ரோம் |
| இரகசியம் | 17:5 | மர்மம் |
| மகா பாபிலோன் | 18:2 | ரோமப் பேரரசு |
| செல்வச் செருக்கு | 18:3 | செழிப்பு |
| இச்சித்த பழவர்க்கங்கள் | 18:14 | விரும்பிய கனிகள் |
| கொழுமையானவைகளும் | 18:14 | செல்வங்களும் |
| சம்பிரமமானவைகளும் | 18:14 | மகிமையானவைகளும் |
| சல்லாவும் | 18:16 | மெல்லிய லினனும் |
| உச்சிதமான | 18:19 | மேன்மையான |
| சம்பூரணத்தினால் | 18:19 | செல்வத்தினால் |
| ஏந்திரக்கல் | 18:21 | திரிகல் |
| சூனியம் | 18:23 | மந்திரவாதம் |
| அவருடைய மனைவி | 19:7 | தேவ பிள்ளைகள் |
| ஆவியாயிருக்கிறது | 19:10 | உயிர் மூச்சாய் இருக்கிறது |
| தொடையின் மேலும் | 19:16 | தொடையின் மேலுள்ள அவருடைய வஸ்திரத்திலும் |
| கோகு, மாகோகு | 20:8 | பூமியின் நான்கு மூலைகளிலும் உள்ள நாடுகள். சாத்தான் இவைகளை ஏமாற்றி, கடைசி காலத்தில் நடக்கவிருக்கும் போரில் கர்த்தருக்கு விரோதமாக ஒன்று சேரும் திரளான கூட்டத்தின் படைத் தலைவனாக இருப்பான் |
| அவைகளுக்கு இடங் காணப்படவில்லை | 20:11 | அவைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன |
| அல்பாவும் ஒமேகாவும் | 21:6 | ஆரம்பமும் முடிவும் (கிரேக்க எழுத்துக்களில் முதலாம், கடைசி எழுத்துக்கள்) |
| ஆயிற்று | 21:6 | எல்லாம் நிறைவேறிவிட்டது. |

| | | |
|---|---|---|
| பன்னீராயிரம் ஸ்தாதி | 21:16 | 2,200 கி.மீ. (1,400 மைல்) |
| நூற்று நாற்பத்து நான்கு முழம் | 21:17 | 200 அடி (65 மீட்டர்) உயரம் |
| அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை | 21:22 | கைவேலையாகிய தேவாலயத்தில் கர்த்தர் இனி வாசம் பண்ணுவதில்லை |
| நாய்களும் | 22:15 | கர்த்தரை விட்டு வழிவிலகிப் போனவர்களும் |
| மணவாட்டி | 22:17 | புதிய எருசலேமில் உள்ள தேவனின் மக்கள் |
| ஜீவ புத்தகத்திலிருந்தும் | 22:19 | ஜீவ விருட்சத்திலிருந்தும் |

## எமது வெளியீடுகள் :

| | | |
|---|---|---|
| 1. | ஆதியாகமம் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 2. | யாத்திராகமம் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 3. | லேவியராகமம் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 4. | எண்ணாகமம் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 5. | உபாகமம் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 6. | யோசுவா 850 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 7. | நியாயாதிபதிகள் & ரூத் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 8. | 1 சாமுவேல் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 9. | 2 சாமுவேல் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 10. | 1 இராஜாக்கள் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 11. | 2 இராஜாக்கள் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 12. | 1 நாளாகமம் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 13. | 2 நாளாகமம் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 14. | எஸ்றா, நெகேமியா, எஸ்தர் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 15. | யோபு 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 16. | சங்கீதம் 4000 கேள்வி பதில்கள் - பாகம் 1 - 4 | ரூ. 50/- |
| 17. | நீதிமொழிகள் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 18. | பிரசங்கி, உன்னதப்பாட்டு 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 19. | ஏசாயா 4000 கேள்வி பதில்கள் - பாகம் 1 - 4 | ரூ. 50/- |
| 20. | எரேமியா 4000 கேள்வி பதில்கள் - பாகம் 1- 4 | ரூ. 50/- |
| 21. | எசேக்கியேல் 2000 கேள்வி பதில்கள் - பாகம் 1 - 2 | ரூ. 50/- |
| 22. | தானியேல் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 23. | ஓசியா, யோவேல் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 24. | ஆமோஸ்,ஒபதியா,யோனா 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 25. | மீகா,நாகூம்,ஆபகூக்,செப்பனியா 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 26. | ஆகாய்,சகரியா,மல்கியா 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 27. | மத்தேயு 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 28. | மாற்கு 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 29. | லூக்கா 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 30. | யோவான் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 31. | அப்போஸ்தலர் நடபடிகள் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 32. | ரோமர் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 33. | 1 கொரிந்தியர் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |

| | | |
|---|---|---|
| 34. | 2 கொரிந்தியர் 800 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 35. | கலாத்தியர், எபேசியர், பிலிப்பிர் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 36. | கொலோசெயர், 1,2 தெசலோனிக்கேயர் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 37. | 1,2 தீமோத்தேயு,தீத்து,பிலேமோன் 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 38. | எபிரெயர் கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 39. | யாக்கோபு, 1,2 பேதுரு, 1,2,3 யோவான், யூதா 1000 கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 40. | வெளிப்படுத்தல் கேள்வி பதில்கள் | ரூ. 50/- |
| 41. | திருமறைப் புத்தகங்கள் - ஓர் அறிமுகம் | ரூ. 50/- |
| 42. | யார் இந்த இயேசு? - விடுதலையாளர் | ரூ. 50/- |
| 43. | வேதாகம விடுகதைகள் 200 - பாகம் 1 - 8 | ரூ. 30/- |
| 44. | பெண்கள் விடுகதைகள் 200 - பாகம் 1 | ரூ. 30/- |
| 45. | மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள் | ரூ. 300/- |
| 46. | The Book of Soul Winners | ரூ. 300/- |
| 47. | வில்லியம் கேரி | ரூ. 5/- |
| 48. | தியான வசன டைரி 2018 | ரூ. 20/- |
| 49. | ஜான்பன்யனின் ஜெபம் | ரூ. 30/- |
| 50. | ஏசாயா விளக்கவுரை | ரூ.80/- |
| 51. | சிறிய இறைவாக்கினர்கள் விளக்கவுரை | ரூ.50/- |
| 52. | தூய பவுலடியாரின் சிந்தனைகள் | ரூ.50/- |
| 53. | வட்டத்திற்குள் சிக்கிய வார்த்தைகள் | ரூ.50/- |
| 54. | வேதாகம சொல் அகராதி | ரூ.150/- |
| 55. | கிறிஸ்தவ அறிவுப்போட்டி காலண்டர் - 2019 | ரூ.40/- |
| 56. | ஆதியாகமம் - விதவிதமான கேள்விகள் - 1 | ரூ.50/- |

(துபால் செலவு தனி)

**வேதாகம நண்பன்**

எண்:9/3, வீரசாமி 2வது தெரு,அயனாவரம், சென்னை - 23.

தொலைபேசி : 044-26471115, 98841 20603, 94454 15147

குறிப்புக்காக

## **வேதாகம நண்பன்** - ஓர் அறிமுகம்

வேதாகமத்தை இனிமையாக, எளிமையாக, சுவையாக மற்றும் சுறுசுறுப்பாக படிக்க வேண்டும் என்பதற்கான புதிய முயற்சியில் புத்துணர்ச்சியுடன் செயல்படுவதே வேதாகம நண்பன் ஊழியமாகும்.

### இதுவரை :

சத்தியத்தின் சத்தத்தை சரியாகக் கேட்கவும், தெளிவாக புரிந்துகொள்ளவும் வேதத்தின் மகத்துவங்கள் வினாவிடையாக வெளியிடப்படுகின்றது.

- ❖ வேதாகமப் போட்டிகள்
- ❖ வேதாகமக் கண்காட்சிகள்
- ❖ வேதாகமக் கருத்தரங்குகள்
- ❖ வசனம் சொன்னால் பரிசு
- ❖ மிஷனெரி கண்காட்சிகள்
- ❖ வாலிபர் கூடுகைகள்
- ❖ சிறுவர்க் கூடுகைகள் போன்ற பல சிறப்பு நிகழ்வுகள் சிறப்புடன் நடைபெறுகின்றது.

எமது பணியில் இணையும் ஆர்வம் உங்களுக்கு ஏற்பட்டால் எம்மைத் தொடர்புகொள்ள தயங்க வேண்டாம், தாமதிக்கவும் வேண்டாம்.

## இப்பணியில் உங்கள் தீர்மானம்

வேதாகம நண்பன் ஊழியத்தில் இணைந்து, உங்கள் பங்களிப்பை மனப்பூர்வமாய் செயலில் காட்ட விரும்பினால் இறை வழிநடத்துதலோடு எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

வேதாகமத்தின் 66 புத்தகங்களையும் வினாவிடையில் கொண்டுவர வேண்டும் என்ற மாபெரும் இலட்சியத்தோடு இப்பணியை மேற்கொண்டு வருகிறோம். எங்களோடு இணைந்து இப்பணியை விரைவில் முடிக்க உங்கள் **பொருத்தனையின் காணிக்கைகளை** அனுப்பி இப்பணியைத் தாங்க அன்புடன் அழைக்கின்றோம்.

**Vethagama Nanban, A/c. No.2833101066566**

IFSC Code: CNRB0002833. Canara Bank,

Bain school branch / Chennai-10.

(வேதாகம நண்பன்) என்ற பெயருக்கு MO/ DDஅனுப்பலாம்.

## பேராசிரியர் J.D. பால் ஜெயராஜ்

சென்னையில் தன் கல்லூரிப் படிப்பை முடித்த நூலாசிரியர்,
கேப்டன் ஜே. டி. பால் ஜெயராஜ் அவர்கள்,
தூத்துக்குடி தேசிய மாணவர் படையின் துணைத் தளபதி,
வ. உ. சி. காமராஜ் கல்லூரியின் பேராசிரியர்,
போடி நாயக்கனூர் ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி முதல்வர்,
நெல்லைத் திருமண்டல அனைத்து மேல்நிலை, உயர்நிலை,
காது கேளாதோர், பார்வை இழந்தோர், தொழிற் பயிற்சிப் பள்ளி,
ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், தூய யோவான் கல்லூரி,
போப் கல்லூரி காரியதரிசி, தாளாளர், மேலாளர் என
பல சிறப்பான பொறுப்புகள் ஏற்றதோடு, திறம்படப் பணியாற்றிய
பெருமையும் இவருக்குண்டு.

இவர் வேதாகமத் துணை நூல், வேதாகம விளக்கம்,
ஏசாயா இறைவாக்கினன் புத்தகத்துக்கு ஒரு வழிகாட்டி,
சிறிய இறைவாக்கினர்கள் விளக்கவுரை
என்ற நூல்களின் ஆசிரியருமாவார்.

**வேதாகம நண்பன்**
5/3, வீரசாமி 3வது தெரு,
அயனாவரம், சென்னை-23.
044-26471115, 9884120603, 9445415147